பாலகுமாரன்

பந்தயப்புறா

பந்தயப்புறா

பாலகுமாரன்

மின்னூல் ஆக்கம்: தமிழ்வாசகன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை–600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559

முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1989

உரிமை : ஆசிரியருக்கு ©

PANDHAYAP PURA

By: **Balakumaran**

Seventh Edition : December 2007

No. of Pages: 304

Paper used: 11.6 N.S Book Print

விலை ரூ. 100.00

VISA PUBLICATIONS
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 9282152070

Printed at: Udayam offsets, Ph : 28454808

ஸ்நேகமான என் பத்து வயதில் ஆரம்பமான இலக்கியப் பாடம் இன்னும் தொடர்கிறது. இன்றைக்கும் என் அம்மா எனக்கு விசிறி. விமர்சகி.

முன்னுரை எழுதேன் என்றதும் என்ன சந்தோஷம், எத்தனை அக்கறை... எவ்வளவு வாஞ்சை... சின்ன ஸ்டூலில் முதுகு வலிக்க, கண்புரை அறுவை சிகிச்சைக்கு ஆட்பட்டும் தயங்காது தன்னை வருத்தி, என்னைப் பாராட்ட எவ்வளவு பெரிய முனைப்பு.

யம்மோய். என் எழுத்து அத்தனைக்கும் நீயே காரணம். எல்லோருக்கும் அம்மா அம்மா தான். எனக்கு நீ ஆசிரியை, தோழி. எல்லா வற்றையும் விட அற்புதமான மனுஷி.

எந்த எழுத்தாளனுக்கு அம்மா முன்னுரை எழுதிக் கொடுத்திருக்கிறாள். நீ எனக்குக் கிடைத்த வரம், நீ என் பலம்.

நீ நான்; நான் நீ.

-பாலகுமாரன்

சமர்ப்பணம்

எந்த எதிர்பார்ப்பும் இன்றி
தமிழ் இலக்கியத்துக்கு தன்னால் ஆன
பணியாற்றும் இலக்கியச் சிந்தனை அமைப்பிற்கு.

அம்மாவின் முன்னுரை

என் அன்பு மிக்க பாலகுமாரா.

ஆசிகள் மிகப் பல.

நேற்று மாலை நாங்கள் அனைவரும் நலமாய் வந்து சேர்ந்தோம்.

சென்ற இரண்டு மாதங்களும் என் இடக்கண் சிகிச்சைக் காக உன் வீட்டில் தங்கியிருந்தது மிக மகிழ்ச்சியான காலம். குழந்தை ஸ்ரீகௌரி மிகப் பொறுமைசாலி. அவள் மணி தவறாமல் கண்ணுக்கு மருந்து போட்டாள். மூன்று வேளையும் சாப்பிட்ட பிறகு மாத்திரைப் பெட்டியுடன் வந்து, எந்த வேளைக்கு எந்த மாத்திரை, எத்தனை மாத்திரை என்பவையெல்லாம் கவனமாக எடுத்துக் கொடுப்பாள். டாக்டர் வீட்டுக்கும் ரிக்ஷா அழைத்து வந்து, என்னைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று வண்டி யில் ஏற்றுவாள். டாக்டர் சொல்கின்றவற்றைக் கவனமாகக் கேட்டு ஞாபகம் வைத்து அதன்படியே செய்வாள். படுக்கை தட்டிப்போட்டு ஃபேன், லைட் போட்டு, ஜன்னல் திரைகள் இழுத்து விட்டு, கண்ணில் அதிகம் ஒளிபடாமல் கவனித்துக் கொள்வாள்.

எல்லாவற்றையும்விட, வாரம் தவறாமல், வரும் தொடர் கதைகளை அழகாகப் படித்துக் காட்டுவாள். இதுதான் மிக மிகச் சந்தோஷம். ஏனென்றால், நான் படிப்பது ஏறத்தாழ 15 தொடர் கதைகள்.

இந்தப் பதின்மூன்று வயதுக் குழந்தைக்கு இப்படித் தொந்தரவு கொடுக்கிறோமே என்றுகூட எனக்குத் தோன்றும். அவள் நல்ல சமத்துப் பெண்.

இந்த ''டீன் ஏஜ்'' பருவம் துவங்கும்போது அவளை அன்புடன் அரவணைத்துப் போக வேண்டும். அது உனக்குத் தெரியும்.

எனக்குக் கண்ணை மூடினால் கௌரி, சூர்யா இருவரும்தான் தோன்றுகிறார்கள். அவனும் என்னிடம் வந்து நிறையப் பேசுவான்; கதை கேட்பான். பாரதத்திலும், இராமாயணத்திலும் சின்னச்சின்ன கேள்விகள் கேட்பான். மிகக் குறும்பு. நிறைய வேடிக்கைப் பேச்சு. விளையாட்டு.

எத்தனை மிமிக்கிரி. எவ்வளவு அப்ஸர்வேஷன். ஏழு வயசுக்கு ஏகமாய்ப் பேச்சு. டெஸ்க் பிரித்துப் போட்டதும் அத்தனையும் விட்டுப் படிக்க உட்காருகிற கவனம். பொம்மைகள் வைத்துத் தானாய் விளையாடுவதை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்.

கமலாவும், சாந்தாவும் எப்படி இருக்கிறார்கள்? கமலா ஒவ்வொரு வேளைக்கும் வேண்டியபடி வெந்நீரும் தண்ணீரும் வைத்துக் கொடுத்து, சிற்றுண்டியும், உணவும் தக்கபடி விதவிதமாய்ச் செய்து பரிமாறி நன்றாகக் கவனித்துக் கொண்டாள். அவள் மாமியார் மெச்சிய மருமகள்.

சாந்தாவும் வேண்டிய உதவி செய்தாள். கமலா ஆபீஸ் போகும் நேரங்களில் கூடவே இருந்து கவனித்துக் கொண்டாள். இடையில் உன் கதைகளையும் காப்பி எடுத்துக் காட்டினாள். நல்ல பேச்சுத் துணையாயிருந்தாள். நாங்கள் நிறையவே பேசினோம், புத்தகம் பார்த்துப் புதுசு புதுசாய்ப் பண்டங்கள் செய்து போடுவதில் ரொம்ப நிறைவு அவளுக்கு.

ஒரு வரி நினைவுக்கு வருகிறது, பாலகுமாரா.

''மயலொடு இருபுறம் இருமாதர்
மருவிடும் மயில்மிசை வருவாயே''

நீ அதிர்ஷ்டகாரன்தானோ?

இவையெல்லாவற்றையும் விட, நான் அங்கு இருந்த போது, ''பயணிகள் கவனிக்க'', ''பந்தயப் புறா'' - கடைசி அத்தியாயங்கள், இவற்றை நீ எழுத எழுத உன் எழுத்தில் படித்தது மிகப் பரவசமான அனுபவம். அவை பற்றி உன்னுடன் பேசி, மகிழ்ந்ததும், கைவீசம்மாவின் கடைசி அத்தியாயமும் மறக்க முடியாதவை.

''பந்தயப் புறா'' நீ எழுதி முடித்ததும், அந்தக் கதை பக்கம் பக்கமாய் மனதில் ஓடிற்று.

அது சரி, ஒரு சமயம் நீ புறா பிடிக்கப் போய் மாடியில் தண்ணீர்த் தொட்டியின் மேலேறித் தவித்தாய். அது நினைவுக்கு வந்தது. இந்தப் புறாவை எங்கே பிடித்தாய்? சோழ நாட்டிலா? சோழியர் வீட்டிலா? சூளைமேட்டிலா? இல்லை சுகமான கற்பனையா...

பந்தயப் புறா- திருநிறைச் செல்வியா, திருவளர் செல்வியா, அவள் நெஞ்சில் பதிந்து நிறைந்து விட்டாள்.

பிற்பட்ட வகுப்பு (B.C.) கட்டுப்பாடான குடும்பத்துப் பெண் ஒருத்தி- மற்றவர்களின் வாழ்க்கை முறைகளையும், பறந்து திரிபவர்களையும் பார்த்து தானும்- மேலே மேலே பற பற... எனத் துடிப்பது- மீன் குழம்பும், மிளகு ரசமும் மட்டும் வாழ்க்கை அல்ல எனப் புரிந்து எழுவது? ஓர் அற்புதமான படைப்பு.

ஒரு கதாசிரியனின் கதைகளைப் படித்துவிட்டு ஆண் களுக்குள்- சிவசுவைப்போல- அகல்யா நாவலின் கதா நாயகன்- ஒருவன் இருப்பானா எனத் தேடுகிறாள்.

தன் வீட்டைவிட அண்ணி வீடு இன்னும் பயத்தைத் தருகிறது. எதிர் வீட்டு எத்திராஜுலு நாயுடு மனைவியை

"எச்சே" என்று அழைப்பதையும், அதன் பொருளையும் அறிந்தபோது மேலும் பயம், அத்தனை கேவலமும் பொறுத்துக்கொண்டு முதுகு சொரிந்துவிடும் காட்சி, ஆண்களைப் பற்றி ஓர் அலர்ஜியே உண்டாக்கி விடுகிறது.

ஆனால் செல்வியைப் போலவே அவள் அண்ணியின் பாத்திரப் படைப்பும் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவள் நல்லவள், பத்து வயது முதல் தாயில்லாத செல்வியை வளர்த்தவள். தன் குடும்ப கௌரவத்தில் அலாதியான பற்று. தனக்குக் குழந்தை பிறக்காது என அறிந்தபோது ஏற்பட்ட பெரிய பயம். தன் வீட்டைவிடத் தகப்பன் வீட்டுச் செல்வம் கொடுக்கும் கர்வம், மரியாதை, தன் நகைகளையும், சொத்துக்களையும் கொடுத்தேனும் தன் நாத்தியைக் கரையேற்ற வேண்டும் என்னும் ஜாதி என்ற பற்று. அவள் சாடுவதெல்லாம் அதன்பின் பிரதிபலிப்பே-நெகடிவ் அப்ரோச்.

அண்ணி ஆபரேஷனுடன் ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடந்தபோது, கவலையுடனும் ஆதுரத்துடனும் ஓடி ஓடி உழைக்கிறாள். வீட்டையும் கவனித்துக் கொண்டு வேளா வேளக்கு உணவு கொண்டு போகிறாள். கடைக்குப் போவது, சமைப்பது, பரிமாறுவது, துணி துவைப்பது, வீட்டைச் சுத்தம் செய்வது என்று இடுப்பு ஒடிய வேலை. அண்ணியைத் தங்கள் வீட்டுக்கே அழைத்து வருகிறாள். நாத்தினியிடம் அண்ணிக்குப் பரிவு பொங்குகிறது. மனம் குளிர்ந்து விடுகிறது. தன் வளையலைக் கழற்றிக் கொடுக் கிறாள். அது பணிவிடைக்குப் பரிசா? தனக்கு ஆதரவாய்ப் பேசுவதற்கு லஞ்சமா? குழந்தை பிறக்காதென்ற கவலையா? எனக்கும் இது சந்தேகம்.

செல்விக்குத் தன் பெரியண்ணன் மனைவியின் வேதனையும் துயரமும் உணர்ந்து கண்கலங்கிக் கண்ணீர் விடுகிறான், என்பதைப் பார்த்ததும் இவன் சிவசுவோ

என்ற வியப்பு. உடனே தனக்குக் கல்யாணம் வேண்டாம், இரண்டு வருஷம் வேலைக்குப் போகிறேன் என்றவுடன், "பொட்ட நாயே, நான் சொல்றவனுக்குக் கழுத்தை நீட்டு" என்று சொல்லிக் கன்னத்தில் அடித்ததும் பெரிய பயமும் வந்து விடுகிறது. உள்ளே துணிவும் துளிர் விடுகிறது, இதைவிடப் பெரிய காயம் ஒருநாள் பஸ்ஸில் ஏற்படுகிறது. அண்ணியை அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு, பஸ்ஸில் வீடு திரும்பும்போது வேலை செய்கிற பெண்களைப் பார்க் கிறாள். இரண்டு பேர் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு கையில் புத்தகங்களுடன் அருகில் அமர்கிறார்கள். செல்வி பேச்சுக் கொடுக்க, அலட்சியப்படுத்துகிறார்கள். தான் படிக்கும் கதாசிரியனைச் செல்விப் பாராட்ட, தமிழ்ப் பத்திரிகைக் கதைகளையும், கதாசிரியனையும் குப்பை எனக் கேலி செய்கிறார்கள். சாமர் செட்மாம்க்கு இதெல் லாம் ஈக்வலா என்கிறார்கள். இவள் பக்கத்தில் உட்காரு வதே கேவலம் போல. எழுந்து பின் ஸீட்டிற்குப் போய் உட்கார்ந்து சிரிக்கிறார்கள். செல்வியின் மனதில் மூர்க்கம் மண்டுகிறது- நானும் படிப்பேன்- நானும் வேலை செய் வேன். நானும் ஆங்கிலத்தை அலசுவேன் என்ற வேகம் வருகிறது. இது பெரிய காயம். பெரிய அவமானம். மனம் மேலே மேலே பறபற எனப் பறை கொட்டுகிறது.

ஆஹா பாலகுமாரா அண்ணனின் பாஷை சூளை மேட்டு வேளாளச் செல்வரின் மகள். ஜாதிக் கட்டுப் பாட்டில் ஊறிய பெண் பிள்ளையின் பேச்சு. சொல்வரிசை, எங்கே கேட்டாய்? எப்படி மனதில் தேக்கினாய்? எப்படி விலாவாரியாய் எழுதினாய்? நானும் உன் சினேகிதி ஒருத்தியும் திரும்பத் திரும்பப் படித்து வியந்தோம்.

அண்ணியின் எதிர்ப்பு செல்வியின் ஒவ்வோர் அடி முன்னேற்றத்திலும் சாட்டையடியாய் அல்லவா விழுகிறது?

செல்வியின் ஆக்ரோஷத்தைத் தூண்டிவிடும் மற்றொரு நிகழ்ச்சி, அண்ணி ஆங்காரப்பட்டு நடுமுற்றத்தில் கதாசிரியரின் புத்தகங்களைப் போட்டு மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தியது. அது பெரியண்ணன் மனதைக்கூட மாற்றி விட்டது. திருநா கோபப்பட்டுக் கடிதத்தைக் கிழித்தானே தவிர புத்தகம் எரிந்ததைப் பார்த்தபோது, உள்ளுக்குள் தவிப்பு வந்துவிட்டது.

அவன் அச்சாபீஸ்காரன், பதினாறு பதினாறு பக்கமாய் கம்போஸ் செய்து, ஏழு மடிப்பு மடித்து, பைண்ட் செய்து, ஓரம் வெட்டி, வண்ணமாய் ஓவியத்துடன் அட்டை போட்டு, பதிப்பாளனும் பெற்ற பெண் குழந்தையை உச்சிமோந்து தலையைத் தடவுவது போல புத்தகத்தைப் பிரித்து மோந்து, அட்டையைத் தடவி அநுபவிக்கும் சந்தோஷம் அவனுக்குத் தெரியும். அவனை நிச்சயம் தன் வீட்டு முற்றத்தில் புதிய புத்தகம் எரிந்தது பாதிக்கும். அந்தப் பாதிப்பே செல்வியின் பக்கம். சாய வைத்ததோ. அவள் மறுபடி புதுப் புத்தகம் வாங்கிவிட்டாள். தங்க வளையலை விற்றதாகச் சொல்லி, பிறகு வளையலை. எடுத்தெறிந்து விட்டு தங்கத்தைவிடப் புத்தகங்கள் மேன்மையான பொக்கிஷம் எனக் காட்டிவிட்டாள். இந்த இடத்தில் இதை நீயும் நிரூபித்து விட்டாய்.

பெரியண்ணன் தங்கையை வேலைக்கு அனுப்பத் தீர்மானித்து வழியும் கண்டுவிட்டது. பத்தொன்பதே வயது நிறைந்த செல்வி, வெளியுலகம் அறியாத மங்கை. மனம் நினைத்ததை முகம் காட்டும் வெகுளிப் பெண்ணை பெருமாள் புரிந்து கொள்கிறான். அவள் இயல்பும் பட படப்புமே அவளுக்கு வேலை தரக் காரணம் என்கிறான்.

எனக்கென்ன தோன்றுகிறதென்றால் திருநாவும், பெருமாளும் உதவி செய்யாவிட்டால்கூட, ஒருநாள் செல்வி எந்த விதத்திலாவது வேலை தேடிக் கொண்டிருப்பாள். ஓர்

உந்துதல் அவள் உள்ளத்தில் தோன்றி விட்டது, நீ இந்தப் பொண்ணுக்கு அவர்களும், தூண்டுதல், உதவி, பின்னா லிருந்து செலுத்தும் சக்தி என்பாய்.

அவள் பறக்தத் துடிக்கும் புறா, வீட்டில்தான் எதிர்ப்பு, பஸ்ஸில் கேலி, வேலைக்குப் போன இடத்திலுமா அவ மதிப்பு, கிண்டல், கேலி, எத்தனை இடங்களில் ஜெயிக்க வேண்டும்?

இவள் பேரைக் கேட்கச் சொல்லக்கூடக் கஷ்டம். நூற்றுக்கணக்கில் குப்பையாய்க் குவித்து கிடந்த சிவப்பு நிற டெலிவரி சலான்கள் அடுக்கும் வேலை, அவள் யாரென்றே விசாரிக்காமல் நிறுத்தி வைக்கும் அலட்சியம். அவர்களும் பெண்கள், கல்யாணியும், கிரிஜாவும் செய்யும் உதாசீனம், கடைசிவரை வாய் திறந்து பேசாத மங்களா, அவள் பரவா யில்லை. ஆனால் கிரிஜா செய்யும் வம்பு. தவறிப் போய் டேபுள் வெய்ட் என்று சொல்லி விட்டதை எப்படிப் பேசிச் சிரித்தார்கள்.

இத்தனையும் பாஸ் தனியாகக் கூப்பிட்டு பேசிய போது திசைமாறிவிட்டது. பிறகு என்ன நைச்சியம்- லஞ்ச் சாப்பிட அழைத்து புளிசாதம் ருசித்து, பாராட்டி சடக் கென்று '' பாஸ் என்ன சொன்னார்?'' என்ற வழுக்கல் வினா. ''திருடு பற்றிக் கேட்கவில்லையா?'' என்ற திருட்டு விசாரிப்பு. நல்ல வேலை இரண்டு மாதத்தில் செல்வி தேறிவிட்டாள். இரண்டு முகம் காட்டக்கற்று விட்டாள். இரண்டு லட்ச ரூபாய் ஜாக்கிரதையாய்க் கொண்டு வந்து கொடுத்த பொறுப்பு. பெருமாள் உண்மையாய் இரு என்று சொன்ன பாராட்டு. இனி நீ தான் ஸ்டேஷனரி என்று காட்டிய ப்ரமோஷன் செல்விக்கு உரம் தந்துவிட்டது. ஜெயிக்கக் கற்றுக் கொண்டதோடு- தக்க வைக்கவும் அறிந்துவிட்டாள்.

முதல்நாள் ஒரே ஆள் நகரக்கூடிய இடைவெளியில் பார்ட்ஸ் பார்த்துக் கொண்டே போடும்போது, உயரமாய் மீசை முறுக்குடன் இரண்டு பேண்ட் பாக்கெட்டிலும் கைவிட்டுக் கொண்டு தேவராஜன் வந்தபோது, அவள் முதுகில் எத்தனை வேர்வை வழிந்திருக்கும். நெஞ்சு எப்படி படபடத்திருக்கும். தன் எதிரே ஆண்கள் அதுவும் லேபர்கள் சட்டை பிடித்துச் சண்டையிட்டபோது எப்படிப் பதறிவிட்டாள்? குமரா, ஒன்று தோன்றுகிறது. இந்த ஆபீஸ் வேலையைவிடப் பள்ளிக்கூடம் நிம்மதியோ? அங்கும் கேலியும் கிண்டலும் உண்டு. கோ எஜுகேஷனா லும் எட்டு ஆண்களும் நாலு பெண்களுமாய் இருப் பார்கள். அலட்சியம் குறைவோ? வைத்திதான் எப்படி யெல்லாம் வருகிறார்.

''ப்ளஸ் டூவா? காமர்ஸா? ஏதோ கொஞ்சம் தெரியும்.''

''இப்போதைக்கு சலான் அடுக்கம்மா.''

''பென்ஸிலால் குத்தி விட்டாய். எங்கேயோ பிய்த்துக் கொண்டு கொட்டுகிறது'' இவை பாராட்டா? குத்தலா?

ஸ்டேஷனரி ஏற்றுக்கொள்ள நேர்ந்த போது, நிமிர்ந்து விட்டோம் என்ற நெஞ்சுரப்பு வந்து விட்டது.

''இப்போது வந்த உனக்கா இந்தப் பதவி. மங்களா, கல்யாணி ஸீனியர்'' என்ற பொருமலைக் கண்டு உள்ளே நகைப்பு. சாமான் லிஸ்ட் எழுதி- பொருள்களுடன் ஒப்பிட. லிஸ்ட் சரியாயில்லை என்றதும் கையெழுத்துப் போடத் தயங்கினாள். கிரிஜா போடச் சொன்னபோது, குறைந்த ஐடெம் எழுதி லெஸ் அபவ் த டெம் என்றெழு தினாள். கிரிஜா சீறினாள்.

கிரிஜா கடுப்பானாள். ''கெட்டிக்காரி ஆயிட்டியா.''

''நீ மாட்டாத போயிடுவியா?''

பென்ஸில் தராமல் பால்-பாயிண்ட் எடுத்துக் கொள் என்றபோது-

''அவ்வளவு திமிரா உனக்கு? டிட் ஃபார் டாட்டா'' செல்வி முன்னேறி விட்டாள். அதிகாரம் செய்ய, அதை அடக்கமாய்ச் செய்யக் கற்றுக் கொண்டு விட்டாள். ஹிப் ஹிப் ஹுர்ரே.

பஸ்ஸில் செல்லும் பெண்களுக்குத்தான் எத்தனை வேதனை. நெருக்கம், உரசல், இடிபாடு எல்லாவற்றுக்கும் மேல், பஸ்ஸிலிருந்து இறங்கிய பிறகும் விடாமல் தொடர்ந்து வந்து, ''ஹோட்டலுக்குப் போகலாம் வாரியாடி'' இப்படி பயங்கள், படிக்கப் போகலாம் என்ற ஆசையையே அடக்கி விடுமோ என்ற பயம். வீட்டில் மட்டுமா, ஆபீஸில் மட்டுமா வெளியிலும் தெருவிலும் கூட எதிர்ப்பு. இதையும் ஜயிக்க வேண்டும். இந்த ஈவ் டீ ஸிங் தொந்தரவு என்றைக்கு மாறும்?

ஆபீஸில் சக வேலையாட்களுடன் ஏற்பட்ட மோதல் அவளைக் கொஞ்சம் உள்ளே அலைக்கழிக்கிறது. கதாசிரியன் மனைவியுடன் உரையாடுகிறான். கொஞ்சம் தெளிகிறது. காசிநாதனைப் பார்க்கிறாள். அவனுடன் வீட்டுக்கு மொபெட்டில் உட்கார்ந்து வருகிறாள்.

செல்வி பொறுப்பாக வேலைக்குப் போய் வருவதும் பெருமாளின் பாராட்டும், செல்வி மேலே படிக்க ஆசைப் படுவதும், படிப்பால் நிதானம் வரும் என்று சொன்ன தெளிவும், என் மனைவியின் அநாவசியக் கூச்சலும் கூட பெரியண்ணனின் மனத்தைப் பதப்படுத்திவிட்டது. வகுப்பு முடிந்து ஒன்பது மணிக்குள் வீட்டுக்கு வந்துவிடு என் கிறான். ஏர்ப்போட்டுக்குத் தம்பியை அழைத்து வரப் போக வேண்டியிருந்த போது, மிகவும் தாமதமாகத் தெருமுனை யில் நிற்கிறான். செல்வி நடன காசிநாதனோடு மொபெட்

டின் பின்னால் உட்கார்ந்து வந்ததைப் பார்த்ததும் அதிர்ச்சி யடைந்து விட்டான். அப்போது கலங்கி விடுகிறானே, அது யதார்த்தம். உண்மை அண்ணியின் சாடல்களே உள்ளே உறுத்த, தம்பி வந்த சந்தோஷத்தில் மறைந்து விடுகிறது. மறந்துவிட்டான்.

நகையும், பணமும், விலை உயர்ந்த சாமான்களும் கண்டு வீடு இன்பத்தில் மூழ்குகிறது. அந்த நல்ல நேரத்தில் செல்வி மொபெட்டுக்கு அடி போடுகிறாள். செல்விக்குக் கல்யாணம் பண்ண வேண்டும் என்றபோது, துபாய் அண்ணன் ஜாதி பற்றி விளக்கம் தருகிறான். அண்ணியிடம் மந்தவெளி மாட்டுச் சந்தை விட்டு வெளியே போனால் தான் உலகம் புரியும். ஜாதியும் பழமை வாதங்களும் நீங்கும் என்று எடுத்துச் சொல்கிறான். மொபெட் வாங்க, கவலை யோடு பணம் கொடுக்கிறான். அண்ணிக்குத்தான் ஒன்றும் பிடிபடவில்லை.

பெரிய அண்ணனின் விட்டுக் கொடுத்தலும், ஊக்கமும், சின்ன அண்ணனின் பரந்த மனமும் பணம் கொடுத்த உதவியும், காசிநாதனின் களங்கமிலா நட்பும் செல்விக்குத் தைரியத்தையும் சந்தோஷத்தையும் அளவில்லாமல் கொடுத்தன. போதாக்குறைக்கு கதாசிரியரின் மனைவியின் அட்வைஸ்.

இஷ்டப்பட் மொபெட் வாங்கியாகிவிட்டது. ஓட்டக் கற்றுக் கொண்டாகிவிட்டது. பட்டப் படிப்பு படிக்கப் புத்தகங்கள் வாங்கியாகிவிட்டது. இன்னும் நாலு வருஷத் தில் மேலும் முன்னேறி விடலாம் என்பது நிச்சயமாகி விட்டது.

மேலே மேலே போகலாம், சிங்கப்பூர், ஜப்பான் போகலாம். ரிப்போர்ட்டிங் செய்ய வேண்டும், கதை எழுத வேண்டும். ''செல்வி தி கிரேட்'' என்று பேசப்பட

வேண்டும். கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். ஒரு நல்ல தலைமுறையை உருவாக்க வேண்டும். ஆசைகள் பறக்கின்றன. பந்தயத்தில் ஜயிக்கப் போகிறாள் செல்வி!

இதமாய்ப் பேசுவதும், உதவிக்கு ஓடுவதும், மரியாதை யாய் தூர நிற்பதும் இலக்கியம் தெரிந்த காசிநாதனுக்கும் இயல்பாயிருந்தது.

இப்போதுதான் அண்ணியின் வார்த்தைகள் ஞாபகத் துக்கு ஒவ்வொன்றாய் வருகின்றன.

மூஞ்சி தெரியாத பாப்பானுக்கு லெட்டர் எழுதினப் பவே நான் மடக்கித் தவடைல போட்டிருக்கணும். போடாதது என் தப்பு. அதைப் படிச்ச மயக்கத்துல, கடிதாசு எழுதின திமிர்ல வேலைக்குப் போறேன்றா.''

❑ ❑ ❑

என் வீடு இத எப்படிப் பேசுன்னு உனக்குத் தெரியாது. ஏன் மச்சினி வேலைக்குப் போறா? உன் புருஷனுக்குத் தங்கச்சிய கட்டிக் கொடுக்க வக்கில்லையான்னு கேட்பாங் களே, அதுக்குப் பதில் சொல்ல முடியாது.

❑ ❑ ❑

இது தாயில்லாப் பொண்ணேன்னு கட்டிக்கிட்டேன் பாரு, அது என் தப்பு. உன் கல்யாணத்தை என் பாரமா நினைச்சேன் பாரு, அது என் தப்பு.

❑ ❑ ❑

ஆயிரம் ரூபாதானே சம்பளம். இல்லை இரண்டு லட்சத்தை ஆளுக்குப் பாதியா பிரிச்சுக்கலாம்னுட் டாங்களா? எதுக்குத் துள்றே. அழுக்குத் துணியானாலும்,

ரத்ன கம்பளமானாலும், சுமக்கற கழுதைக்கு ஒன்றுதான், துள்ளாத நட...

❑ ❑ ❑

இப்பதான் விளக்கு வைக்கிற நேரத்துக்கு வர ஆரம்பிச் சிருக்கா. இன்னும் போகப்போக ஊரு அடங்கினதும் வருவா. இரண்டு நாள் தங்கிட்டு வருவா. எவனையாவது கூட்டிக்கிட்டு வந்து நிற்பா. அன்னிக்கித் தெரியும் பெண் டாட்டி பேச்சைக் கேட்காத போனமேன்னு. அன்னிக்கு நான் பேசறேன் பார். இது நடக்குதா இல்லையான்னு பாரு.

❑ ❑ ❑

படிப்பு கத்துக்கறதுக்கு எதிரும் புதிரும் உட்கார்ந்தாலே பத்திக்கும். நீங்க இடுப்பு பிடிச்சு மோட்டார் பைக் கத்துக்குவீங்க. சேத்துலே காலை வைச்சுட்டே காலைத் தூக்கினாக் கீழேதான் போவியேகண்டி கரையேறுவேன்னு எனக்குத் தோணலை.''

❑ ❑ ❑

அப்பாடா. இது போல எத்தனை அடிகள், ஏச்சுப் பேச்சுகள். எதிர்ப்புகள். ஒவ்வோரிடத்திலும். ஒவ்வொர் அடி முன் வைக்கும் போதும் செல்வி பறந்தாள். பயப் படாமல் வேகமாய் பறந்தாள். பறக்கிறாள். பாலகுமாரா, ஒரு காலத்தில் ஐம்பது வருஷத்து முன் நானும் பறக்க ஆசைப்பட்டேன், கட்டு இருந்தது. பெரியவர்கள் தடுக்க வில்லை. சின்னவர்கள் சிறகுகளை வெட்டிவிட்டார்கள்.

❑ ❑ ❑

நானா, வீடா என யோசித்து, பறப்பதா கூட்டி லடைவதா என நினைத்துக் கீழே விழுந்தேன்.

உன் வீட்டிலிருக்கும்போது உன்னைக் காணவரும் பெண்கள் பேச்சுகளையும் கேட்டேன்.

குமாரா, உன் எழுத்துக்கள், கதைகள், கூறும் தத்து வங்கள் இனிவரும் தலைமுறைக்கும், முக்கியமாகப் பெண் களுக்கு மிக்க ஊக்கத்தையும், தைரியத்தையும், மனோ திடத்தையும் கொடுக்கும் என்பது என் நம்பிக்கை.

இன்று உன்னைப் பார்த்து, நீ அங்கேயே பளிச் பளிச் என்று எழுதுகிற தத்துவங்களைப் படித்து உள்ளம் குளிர உன்னை வாழ்த்துகிறேன்.

மனம் கனிந்த
அன்புடன்,
ஆசிகளுடன்
அம்மா

20.6.89

மின்னூல் ஆக்கம்: தமிழ்வாசகன்

பந்தயப் புறா

1

திருவளர் செல்வி, பைண்ட் செய்யப்பட்ட அந்தத் தொடர்கதையின் கடைப் பக்கம் படித்து விட்டுக் கண் மூடிக் கொண்டாள். புத்தகத்தை நெஞ்சோடு அழுத்திக் கொள்ளத் தோன்றிற்று. 'ஐயோ... சிவசு' என்று கத்தத் தோன்றிற்று.

'இப்படி உண்டா' 'இப்படி உண்டா' என்று யாரிட மாவது கேட்கத் தோன்றிற்று. அந்த சிவசு நிஜம் தானா... அவன் சென்னையில் இருக்கிறானா... நான் நடந்த இடங் களில் அவனும் நடந்திருக்கிறானா... அவனைப் பார்க்க முடியுமா... பேச முடியுமா... அகல்யா செத்துப் போனது நிஜம்தானா... இதை அவனிடம் கேட்க முடியுமா...?''

ஒரு வேளை இது பொய்யோ... இந்த நாவல் பொய்யோ... சிவசு பொய்யோ... இது யார் கதையும் இல்லையோ?

சும்மா... ஒரு ஆள் எங்கேயோ பெஞ்சு போட்டு உட் கார்ந்து, இப்படி ஒரு கதை எழுதி உல்டா அடிக்கிறானா? பொய்யெனில் இப்படி எழுத முடியுமா? கொஞ்சம் கூட நிஜமில்லாது இப்படி ஒரு பொய் சொல்ல முடியுமா?

சிவசு பொய்யா... சிவசு மாதிரி ஒரு ஆள் கூட பார்த்த தில்லையே.

"ஏன் சாக ஆசைப்பட்டாய்... அகல்யா. ஏன் வெறுத்துப் போனாய் இப்படி... சட்டென்று உறவை முறித்துக் கொண்டாயே கண்ணம்மா...

எந்தப் புருஷனாவது, மனைவியைக் கண்ணம்மா என்று கூப்பிடுவானா? கூப்பிடுபவர்கள் உண்டா?

அண்ணன், அண்ணியை 'ஏய்' என்று தான் கூப்பிடு கிறார். அந்த 'ஏய்' கேட்ட உடனேயே அண்ணி குரல் வந்த திசைக்கு ஓடுவாள். 'ஏய்னு கூப்டா என்ன அர்த்தம். எனக்குப் பேரில்லையா?"- அண்ணி கேட்டதேயில்லை.

அண்ணன் பரவாயில்லை. எதிர்வீட்டு புரோக்கர் எத்திராஜுலு. மனைவியை 'எச்சே' என்றுதான் கூப்பிடு கிறார். வாசலில் நின்று பிள்ளைகள் கேட்க, உள்ளே திரும்பிப் பார்த்து கூப்பிடுகிறார். ஒருவேளை எச்.ஏ. என்று இன்ஷியலாய் கூப்பிடுகிறாரோ என்று செல்விக்கு முதலில் தோன்றியது. ஒருவேளை தெலுங்குப் பெயராகவும் இருக்க லாம் என்று நினைத்திருக்கிறாள்.

ஆனால், ஒருநாள் எத்திராஜுலு மனைவி அவரிடம் நாயாய் அடிபட்டு இந்த வீட்டுக் கூடத்தில் தலைவிரி கோலமாய் அழுதபோது, அவளை எச்சல் என்று கூப்பிடு கிறார் என்பது தெரிய வந்தது.

எச்சல்... ஏன் எச்சல் என்று கூப்பிட வேண்டும்.

எத்திராஜுலு மனைவியை அவள் தாய்மாமன் கட்டிக் கொள்வதாய் இருந்ததாம். நாலைந்து வருடம் அவன்தான் புருஷன் என்று நினைத்து, வெட்கப்பட்டு ஓடி ஒளி வாளாம். ஏதோ சீர் தகராறில் அந்தப் பேச்சு முறிந்துவிட, எத்திராஜுலுவுக்கு வாழ்க்கைப் பட்டாளாம். இவர், சகலமும் இவளிடம் முதலிரவில் கேட்டுத் தெரிந்து

கொண்டு, தெரிந்து கொண்ட நேரம் முதல்' மனைவியை எச்சல் என்றுதான் கூப்பிடுகிறார்.

இதுல என்ன எச்சல் வந்து விட்டது?

''நாலைஞ்சு வருஷமா உங்க மாமனைத்தான் புருஷன்னு நினைச்சுக்கிட்டிருந்தே. அவன் இல்லேன்னதும் என்கிட்ட தாலி கட்டிட்டுப் படுத்துக்கறியே... நீ எச்ச லில்லாத என்னா... அப்படித்தான் கூப்புடுவேன் இஷ்ட மிருந்தா இரு, இல்லாட்டி போ.''

''எனக்கு வேற வழி... நான் எங்க போவேன் சொல்லு.'' அவள் தலையை முடிந்து கொண்டு மறுபடி அழுதாள்.

''அது கிடக்கு வுடு. இந்த மாதிரி பேச்சு கேட்டுட்டு எங்க போயிட முடியுது பொம்பளையால. அப்படிப் பார்த்தா எந்த பொம்பளை எச்சலில்லை, சொல்லு.''

அண்ணி மறுத்துப் பேசினாள்.

புரியவில்லை. அப்போது புரியவில்லை, இப்போது புரிந்தது.

விதவையைத் திருமணம் செய்து கொள்ள முன் வந்து, மனசு இணைப்பு ஏற்பட்டுத் திருமணம் கனிந்து, வாழ்க்கை ரசனையாகி, லட்சியமாய் கிளைவிடும் நேரத்தில், புருஷன் சாகவில்லை, உயிரோடு இருக்கிறான் என்று தெரிய வர, அகல்யா பட்ட பாடு... அப்பா... எப்படி இவ்விதம் எழுத முடிகிறது.

இத்தனையும் தெரிந்த பிறகும் உன்னை விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன். அகல்யா பற்றிக் கொண்ட சிவசு கனவாய் கண்ணுக்குள் மிதந்தான்.

சிவசு நிஜமா... நிஜமில்லாதது எழுத முடியுமா? மனைவி செத்த போதும் வாய்விட்டு அழாது, மௌனமாய் துக்கம் காக்கிற புருஷன் உண்டா? இனி திருமணமே வேண்டாம்

என்று சேவை செய்ய யாராவது போக முடியுமா? தோளில் பை மாட்டிக் கொண்டு தொழுநோய் ஆஸ்பத்திரி வாசலில் போய் நிற்க முடியுமா?

பொய்... நாவல் பொய். சிவசு பொய், அகல்யா பொய், இதை எழுதியவன் பொய்யன். கனவை விற்பவன், இல்லாத ஒன்றுக்கு ஏங்குகிறான். இப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, இருக்க முடியாத ஆசையை நாவலில் இறக்கி வைக்கிற கைகாரன். இதைப் படித்து விட்டு சிவசு நிஜமா என்று கேள்வி கேட்க, பல் தெரிய சிரித்துவிட்டு ஜெயித்து விட்ட திமிரோடு போவான்.

சிவசு மாதிரி ஒருத்தன் இருக்க முடியாது. இதை எழுதியவனே கூட சிவசு மாதிரி இருக்க முடியாது. காசு சம்பாதிக்கணும்னு பத்திரிகை சொல்ற பொய்.

திருவளர் செல்வி புத்தகத்தைத் தூக்கி மூலையில் போட்டுவிட்டு மணி பார்த்தாள். மணி மூன்று பத்து. குழா பம்புல தண்ணி வருமா தெரியலை. நேத்திக்கு வரலை. இன்னிக்கு வரணும். ஒருநாள் தண்ணீர் வருகிறது. சில சமயம் இரவில் மட்டும் வருகிறது. சில சமயம் நாள் முழுக்கவும் வருகிறது, இரண்டு நாள் சேர்ந்தாற்போல் தண்ணீர் வராமலும் இருக்கிறது, குழாயில் தண்ணீர் வருவது கூட நிச்சயமில்லாமல் இருக்கிறது. நல்ல வாழ்க்கை யைப் பற்றி எப்படி ஒரு பெண் நிச்சயமாக இருக்க முடியும்.

ஒரு லெட்டர் எழுதலாம் இந்தக் கதை எழுதின ஆளுக்கு. இந்த சிவசு நிஜமா? இல்லை பொய்யா? கற்பனையா? இல்லை கண்ணில் கண்டதா? பதில் போடு வானா... இல்லை இதுக்கெல்லாம் போய் என்ன பதில் என்று விட்டுவிடுவானா... ஆனா சிவசு மாதிரி, மனைவி பக்கத்தில் உட்கார்ந்து கண்ணம்மா என்று கூப்பிடுபவனை

எப்படி நம்ப முடியும். முத மூணு மாசம் இந்த அம்மா, அந்த அம்மா என்று கொஞ்சி விட்டு, அதற்குப் பிறகு 'அடி செருப்பால' என்கிறவனை விட, முதலிரவிலிருந்தே 'எச்சே' என்று கூப்பிடுகிற எத்திராஜுலு மேல்.

என் புருஷன் என்னை 'எச்சே' என்று கூப்பிட்டால்...

திருவளர் செல்வி பம்பு அடிக்க ஆரம்பித்தாள். நிறுத்தி பம்புக்கு ஜலம் ஊற்றினாள். காற்று பம்புக்குள் அலை மோதியது 'மடேர் மடேர்' என்று வாஷர் இடி பட்டதும், முழங்கையும் நடுமுதுகும் வலித்தன. நாலு தவலை தண்ணீராவது வேண்டும். குடிப்பதற்கும் சமையலுக்கு மாவது வேண்டும்.

சிவசுவும், அகல்யாவும் பள்ளிக்கூடத்துக்கு சரவிளக்கு வாங்குகிறார்கள். இந்த வீட்டிலையும் ஒரு சரவிளக்கு போட முடியுமா? போடலாம். போட்டால் இடுப்பு உயரத் துக்கு இறங்கி நிற்கும். இடுப்பு உயரத்தில் நடுக்கூடத்தில் ஒரு சரவிளக்கு... நல்லாத்தான் இருக்கும்.

''ஏதுடி செல்வி சரவிளக்கு.''

''எங்கண்ணன் வாங்கியாந்தது.''

அண்ணனை 'சிவசு மாதிரி இரு' என்று சொல்வோமா... அந்த நாவலைப் படிக்கச் சொல்வோமா...

சிவசு அண்ணனா... புருஷனா... இரண்டும் வேணாம். அந்த ஆள் அந்த நாவல்லேயே நிக்கட்டும். வாசல்ல நின்னு எச்சன்னு கூப்பிடுறவனா எனக்குவராத இருந்தா போறும்.

வந்தவன் அப்படி கூட்டுட்டா... செல்வி பலம் கொண்ட மட்டும் பம்பு அடித்தாள்... ''ஏன்... கல்யாணத் துக்கு முன்னாடி நீ எவளையும் நினைச்சதில்லையா? உம் மனசு எச்சப்பட்ட தில்லையா... ஆமா நான் எச்சல்தான்... போடா.'' பம்பு வாஷர் உராய்ந்து சூடாயிற்று.

அண்ணன் பரவாயில்லை, வெளியே போனால் அண்ணியை ஏய்னு கூப்பிடாது. வீட்டுக்குள்ள தான் அதட்டல் எல்லாம். வெளி மனிதர்களிடம் பேசும் போது, அண்ணியை அவங்க இவங்கன்னுதான் குறிப்பிடும்.

''வீட்ல அவங்களுக்கு உடம்பு சரியில்லை. அதான் ஹோட்டல்ல. சாப்பாடு'' ரொம்ப நிதானமாய், கம்பீர மாய், பண்பாடாய் பேசும்.

இந்த மந்தவெளி மாட்டுச் சந்தில் அண்ணனுக்கு பெத்த பெயர் திருநாவுக்கரசு நல்ல புள்ளை... வம்பு தும்புக்குப் போகாத மனுஷன். அண்ணன் வம்பு தும்புக்குப் போகாதது நல்லதனத்தால் மட்டுமில்லை. பயம்... உடம்பு உதறுகிற பயம்.

சிவசுவுக்கு பயம் உண்டா... மனைவியைக் கண்ணம்மா என்று கூப்பிடுவது இருக்கட்டும். மனைவியை யாராவது தெருவில் கேலி பண்ண, தொட முயற்சி செய்ய, காலர் பிடித்து இரண்டு தட்டு தட்டும் வீரம் உண்டா சிவசுவுக்கு, தெரியவில்லை.

போன வாரம் ஒரு பகலில் உள்ளே நுழைந்ததும் அண்ணன், 'கதவு சாத்து, கதவு சாத்து என்று கத்தியது. தெரு பார்த்த ஜன்னல்களையும், கதவையும் அதுவே ஓடி ஓடி சாத்தியது. மூடின கொஞ்ச நேரத்தில் தெருவில் பெரிய சண்டை 'சிலீர் சிலீர்' என்று சோடா பாட்டில்கள் பறந்தன. 'தப தப' என்று ஆட்கள் ஓடுவது கேட்டது.

மெல்ல ஒரு ஜன்னல் கதவு வழியே அண்ணன் பார்த்துக் கொண்டிருந்தார். அருகே போய் மற்றொரு கதவு விலக்கி, வாசல் பக்கம் பார்க்க முயற்சிசெய்தபோது, அண்ணன் காட்டுக் கத்தலாய் கத்தியது.

''போடி அந்தாண்ட. திமிரா. நானே பயந்து பயந்து ஓடி யாந்தேன். பெரிய இவளாட்டம் கதவு திறந்து பார்க்கறா.

கண்ணாடி சில்லு வந்து முகரையைப் பேத்துதுன்னா... தெரியும்'' சொல்லி முடிக்கும் முன் ஒரு கல் ஒருக்களித்த ஜன்னல் கதவில் அடித்தது. அண்ணன் கதவு அறைந்து சாத்தினார். தாளிட்டார்.

''ஒரே அறைல கொன்னுடுவேன், உள்ள போ. வாச முழுக்க பொறுக்கிப் பயலுக. பொட்டக் கழுதை உனக் கென்ன பார்வை... ம் உள்ள போ.'' பதட்டமாய் கழுத்து நெட்டி சமையலறைக்குத் தள்ளினார். உருளை கட்டையை எடுத்துக் கொண்டு மூடின கதவுக்குப் பின்னால் நின்றபடி தெரு சப்தம் கேட்டார்.

அண்ணன் திட்டியதும், தள்ளியதும் நாலு வினாடி பாரமாய் அழுத்த, செல்வி அண்ணனை வெறித்துப் பார்த்தாள். பதட்டத்தோடு நிற்கிற அண்ணனைக் கண்டு சிரிப்பு வந்தது. கதவு எதற்கு? கதவு மூடின பிறகு உருளைக் கட்டை எதற்கு? இவ்வளவு பயம் எதற்கு? இந்தத் தெருவில் தினம் தினம் ஏதாவது சண்டை நடக்கிறது. இதற்கு ஏன் இத்தனை பதட்டம்.

அண்ணனுக்கு கம்பீரம் இல்லை. அண்ணன் சிவசு இல்லை. செல்வி புழக்கடையிலிருந்து பின் பக்கம் போனாள். முருங்கை மரத்தில் கால் வைத்து, அடுத்த வீட்டு சுவர் ஏறினாள். படர்ந்த கிளை பிடித்தபடியே சுவர் மீது கொஞ்ச தூரம் நடந்து, அடுத்த பக்கம் மேடான இடம் பார்த்துக் குதித்தாள். அடுத்த வீட்டுக் கொல்லைக் கதவு திறந்து, நீள சந்து வழியே வாசலுக்குப் போய் நின்று கொண்டாள்.

வழக்கம் போல இது மதனகோபாலுக்கும், கருப்பனுக் கும் நடக்கும் சண்டை. இரண்டு பேருமே கள்ளச் சாராயம் விற்பவர்கள். சின்னப் பையன்களை ஏவி விட்டு அடித்துக் கொள்வார்கள், சைக்கிளில் இரண்டு போலீஸ்

வர, சைலண்டாய் தெருவில் திரியும் மாடுகளைப் பிடித்துக் கொண்டு பால்காரர் மாதிரி போய் விடுவார்கள்.

இன்று சண்டை உக்கிரமாக இருந்தது. செல்வி இரண்டு பக்கமும் பார்த்தாள்.

தாவணியைத் தோளில் போர்த்திக் கொண்டு தெருவில் இறங்கி நடந்தாள். தெற்குமுனையில் ஒரு கும்பல் வடக்கு மூலையில் ஒரு கும்பல். இந்தப் பக்கம் நாலு பேர் முன்னேறி அடித்துவிட்டுப் போக. அந்தப் பக்கம் பின் வாங்கிப் பிறகு முன்னேறும்.

இப்போது தெற்குப் பக்கம் பின்னடைந்து இருக்கிறது. செல்வி தெற்குப் பக்கம் நோக்கி நடந்தாள். வடக்கிலிருந்து நாலைந்து பேர் இவளைக் கடந்து தெற்கு நோக்கி ஓடினார்கள்.

கடைசியாய் ஓடினவன் நின்று இவளைப் பார்த்தான்.

''யாரு... நீ திருநா தங்கச்சிதானே... தெருவுல சண்டை நடக்கிறது தெரியல...''

''நான் இன்ஸ்டிட்யூட்டுக்குப் போகணும். இன்னிக்குப் பரீட்சை.''

''கல்லு அடிக்கறாங்களே, எப்படிப் போவ.''

''உங்களுக்குள்ளதா சண்டை. நாங்க என்ன பாவம் பண்ணோம்.' இப்படி ஓரமா போயிடறேன்'' வடக்குப் பக்கம் கல்லடித்துவிட்டுத் திரும்ப, தெற்கு முன்னேற தயாராக இருந்தது. ஒரு கல் செல்வியின் தலைக்குமேல் பறந்தது. வடக்கில் வந்து விழுந்தது, இவள் வருவது பார்த்து தெற்கு கூட்டம் தயங்கியது. செல்வி வேகமாய் நடந்தாள்.

''இருப்பா, இருப்பா லேடீஸ் வராங்க, ஒரு மினிட் இரு.'' கூட்டம் காத்திருந்தது. அது மதனகோபால் கூட்டம்.

''திருநா தங்கச்சி... எங்கேயோ அவசரமா போவுது.'' ஆட்கள் சோடா பாட்டிலுடன் முன்னேற தவித்துக் கொண்டிருந்தனர்.

செல்வி பேச்சு கேட்டுத் தயங்கி நின்றாள். சுவரோரம் ஒதுங்கினாள்.

''ஏங்க, நான் போயிடட்டுமா... பரிட்சைக்குப் போகணும்.''

''வழி வுடு, வழி விடு, நீ போம்மா'' மதனகோபால் சரசரவென்று ஆட்களைத் தள்ளி வழிவிட்டான். செல்வி விரைவாய் கடந்ததும். 'ஹோ' என்ற கூச்சலோடு அந்த கும்பல் வடக்கு நோக்கி ஓடிற்று. செல்வி ஒரு வீட்டுப் படிக்கட்டில் ஏறி, அந்தக் கும்பல் ஓடுவதை வேடிக்கை பார்த்தாள்.

அடிக்கறவன் மேலயும் அடிபடலை. நடக்கறவ மேலயும் அடிபடலை. பிறகு எதுக்குக் கூச்சல் போடறானுங்க. பயமுறுத்தவா, யாரை பயமுறுத்த? ஒருவரை ஒருவர் பயமுறுத்தவா... இல்லை தெருவைப் பயமுறுத்த. தெரு ஜனங்களைக் கலவரப்படுத்தத்தான் இந்தச் சண்டை, மெட்ராஸ் சண்டை.

திருநா மாதிரி ஆட்கள், 'தடேல் தடேல்' என்று இந்த சப்தத்துக்குப் பயந்து கதவு சாத்துகிறார்கள். வீட்டுக்கு வீடு திருநா இருக்கிறார்கள். தெரு முழுக்க கதவு சாத்தி, வழிவிட்ட சந்தோஷத்தில் இவர்கள் அதிகம் கத்து கிறார்கள். பெருக்காத கூடத்தில் மின் விசிறி போட. நாலு பக்கமும் அலைகிற குப்பை போல அலைகிறார்கள்.

செல்வி மெயின் ரோடுக்கு வந்தாள். தினம் வீட்டுக்கு தினமலர் போடுகிற கடையில் மாலை மலர் வாங்கினாள். ''கணக்கில் எழுதிக்க'' என்றாள். ''திருமண வீட்டில் மணமகன் உட்பட பதினைந்து பேர் கொலை, சீக்கிய தீவிர

வாதிகள் சுட்டனர். திருமண கோஷ்டி திருப்பிச் சுட்டதில் மூன்று தீவிரவாதிகள் பலி. சண்டிகர். மே- பதினாலு மாலை மலர் தலைப்பு பேசியது.''

பஞ்சாப், மெட்ராஸ் மாதிரி இல்லை, அங்கு சண்டையே வேறு மாதிரி இருக்கிறது. விதவிதமாய் ரைஃபிள் வைத் திருக்கிறார்கள், வீட்டுக்கு வீடு வைத்திருக்கிறார்கள். ஏன் சுட்டார்கள், எதற்கு சுட்டார்கள் என்கிற விபரம் வராது. சுட்டார்கள் என்றுதான் வரும்.

மறுநாள் திருமணம். முதல் நாள் மணமகன் பலி. இப்போது அந்தப் பெண் கதி என்ன... அவள் எச்சலா... புதுசா. 'எச்சே' என்று அவளை மணமுடிக்கிறவன் கூப்பிட் டால், என்ன செய்வாள். ''என்ன... மறுபடி கூப்பிடு...'' ''எச்சே'' நொச்சென்று குழவியால் முன் நெற்றியில் அடி. ''போ, இன்னொன்னு பண்ணிக்கிறேன், போ.''

இங்கு முடியுமா? தெருவில் எதிர்முனையில் நின்று கூச்சலிடுகிற கூட்டம். மனைவி புருஷனை அடித்துக் கொன்றால் தாங்குமா? தமிழ் தேசம் அமைதியான தேசம். அதனால்தான் சண்டைகூட நிதானமாய் நடக்கிறது. அவங்க அடிச்ச பிறகு நீ போ, நீ அடிச்ச பிறகு அவங்க வரட்டும், மறுபடியும் அவங்க அடிச்சா...'' போங்கடா, செல்வி அலுப்பாய் தெருவுக்குத் திரும்ப, போலீஸ் வந்து விட்டிருந்தது. கதவு தட்டி வீடுகளை விசாரிக்க முயன்று கொண்டிருந்தது. வடக்கும் தெற்கும் காலியாய் இருந்தன.

''யாரும்மா நீ...'' போலீஸ் இன்ஸ்பெக்டர் மடக்கி கேட்டார் ''எங்க போற?''

''இந்தத் தெருவுங்க. வீட்டுக்குப் போறேன்.''

''இந்தத் தெருவுல எதாவது சண்டை நடந்ததா?''

தெரு முழுக்க கல்லும் கண்ணாடியும் சிதறிக் கிடக்க, போலீஸ் இன்ஸ்பெக்டர் கேள்வி விசித்திரமாய் இருந்தது, போலீஸ் கூட நிதானம்தான்.

"சார்... லேடீஸ் வேணாம், ஜெண்ட்ஸாங்க புடிப்போம். நீ போம்மா..." ஒரு கான்ஸ்டபிள் விலகி வழி விட, செல்வி சந்தில் புகுந்து சுவரேறி வீடு திரும்பினாள். கொல்லைப் புறம் உட்கார்ந்து முழு பேப்பரையும் படித்து விட்டுக் கூடத்தில் போட்டாள்.

போலீஸ் போனதும் அண்ணன் வாசற்கதவு விரியத் திறந்துவிட்டு பேப்பர் எடுத்தது. "ஏது பேப்பர்" சமையலறையைப் பார்த்து ஒருமுறை கேட்டது. படிக்கத் துவங்கிற்று. அவ்வளவுதானா சுரணை, 'நேத்தி பேப்பரா... இன்னி பேப்பரா' என்று தெரியாத சுரணை. இவரு பிள்ளை பார்த்து, நாள் பார்த்து, சீரு பேசி, சத்திரம் புடிச்சி தங்கச்சிய கட்டிக் கொடுக்கிற ஆள்...

பம்புக்குத் தண்ணீர் பிடிபட்டது. கொப்பளித்து அழுக்கு ஜலம் மேலே வந்தது. முதல் ஜலம் எடுத்துப் போய் கொல்லைச் செடிகளுக்கு ஊற்றிவிட்டு நாலு தவலை ஜலம் அடித்தாள்.

அடுத்த வீட்டு சுவர் பக்கம் போய் "சொர்ணக்கா, தண்ணீ வருது." என்று கத்திவிட்டு கூடத்துக்கு வந்தாள்.

சிவசுக்கு தங்கை இல்லை. தம்பி இல்லை. அப்பா இல்லை, வயசான அம்மா மட்டும் உண்டு. சிவசுக்கு மட்டுமில்லை. சினிமாவில், நாவலில் வரும் ஹீரோக்களுக்கு உறவுப் பிடுங்கல் அதிகம் இருப்பதில்லை. அம்மா கூட அதிகம் கண்டு கொள்வதில்லை. சௌகர்யம். எழுதியவனுக்கு ஊர்ப்பட்ட பிடுங்கல் இருக்கும். எதையும் கண்டுக்காத கதை எழுதற சௌகர்யம். எழுதிக் கேட்கணும். சிவசு நிஜம்மா பொய்யானு கேட்டுரணும்.

'பெருமதிப்பிற்குரிய கதாசிரியர் அவர்களுக்கு,

உங்கள் ரசிகையாகிய திருவளர்செல்வி எழுதும் மடல். நலம். நாடுவதும் அதுவே'

அண்ணன் லெட்டர் பேடில் செல்வி கடிதம் எழுதத் துவங்கினாள்.

அதுவே அவள் ஒரு ஆணுக்கு எழுதிய முதல் கடிதம்.

2

"என்னாடி அது..."

கடிதம் முழுவதும் எழுதி, மடித்து எச்சலிட்டு ஒட்டும் போது அண்ணி கேட்டாள்.

"லெட்டர்"

" அது தெரியுது. யாருக்குன்னுதான் கேக்கறேன்."

செல்வி பேசாமலிருந்தாள்.

"கொண்டா அதை."

"ஏன்?"

"யாருக்குன்னு பார்க்கறேன். ஒட்டப்பட்ட கடிதத்தின் மேல் பக்கம் வெறுமையாக இருந்தது.

"யாருக்கு இது."

"என் ஸ்நேகிதம்."

"அட்ரஸ் எழுதலை."

"போய், கேட்டு எழுதணும்."

"எங்கத்தி ஸ்நேகிதம்?"

"ஸ்கூல்ல லைப்ரரில பார்த்துப்போம்."

"ஒன்னா படிச்சதா?"

"படிச்சதுதான்."

"என்ன ஜாதி."

"பிராமின்."

"வேலைக்குப் போறாப்பலயா?"

"ஆமாம்."

"எங்க?"

"தெரியலை."

"என்ன எழுதியிருக்க?"

"பார்க்கணும் போல இருக்கு, பேசணும் போல இருக்குன்னுதான்."

"நம்ம வூட்டுக்கு வருமா?"

"வராது."

"ஏன்?"

"வராது?"

"அப்ப எங்க பேசுவே?"

"எங்கனா பள்ளிக்கூடம், காலேஜ் வாசல்ல பார்த்தா, அங்க போய் பேச வேண்டியதுதான்."

"இந்த லெட்டரும் சேர்த்து போட்டுர்றியா?"

அண்ணி இடுப்பிலிருந்து ஒரு இன்லேண்ட் எடுத்துக் கொடுத்தாள்.

"யாருக்கு?"

"சாக்கடைக்குப் போக்கிடம் ஏது? நான் யாருக்கு எழுதுவேன், எங்கப்பாருக்குத்தான்."

"இங்க சூளைல இருக்கு பொறந்த வூடு. எண்பது பைசா குடுத்து பஸ் ஏறி இறங்கினா அப்பா வீடு. அதுக்கு ஒரு

லெட்டரா? என்ன நினைப்பாங்க... உங்களை நாங்க என்னவோ கட்டிப் போட்டிருக்கறதாத்தானே நினைச்சுப் பாங்க...''

''கட்டிப் போட்டாத்தான் பரவாயில்லையே... டைப்பு தேய்ஞ்சு போச்சு, தேய்ஞ்சு போச்சுன்னாரே உங்க அண்ணன்.''

''அதுக்கு.''

''நாற்பதாயிரம் கடனா, 'பாண்டு எழுதி வாங்கிக்கறா மாதிரி கொடு'ன்னு கேட்டு எழுதியிருக்கேன்.''

''நாப்பதா, தருவாங்களா?''

''தராத என்னா.''

''ப்ரஸ் எழுதி வச்சாங்கள்ல உங்க வீட்ல. அப்புறம் என்ன திரும்பத் திரும்ப அவங்களையே கேக்கணும்?''

''சரி... புள்ளை பொண்ணுன்னு இந்நேரம் ரெண்டு பொறந்திருந்தா சங்கிலி, மணி அரணை, வளையலு, கொலுசுன்னு செலவாகியிருக்காதா? பொறக்கலை... பொறக்கும்கற நம்பிக்கையும் இல்லை. 'பொறந்த செலவா நினைச்சுக்கிட்டு துட்டு குடு'ன்னு...''

அண்ணி இரண்டு விரல்களால் புடவைத் தலைப்பு எடுத்து, கண்ணில் பொத்திக்கொண்டு விம்மினாள்.

''உங்களை யார் என்ன சொல்லிட்டாங்க இப்ப... இப்படி எழுதினா எங்க பேர்ல தப்பு வருமில்ல.''

''சொன்னா தானா... சொல்லாதயும் உறுத்தும். இதுவும் நல்ல செலவுக்குத்தான்னு எழுதியிருக்கேன்.''

''அண்ணன்கிட்ட நான் பேசறேன். வேணாம், கிழிச் சுருங்க.''

''அடி போடி, அவங்களுக்கு ஆயிரம் கவலை. நீ வேற நாட்டாமை பண்ணினா நொந்துருவாங்க.''

"ஓடற ப்ரஸ் தானே... பாங்க்ல ஆர்டர் காட்டி கடன் வாங்கறது?"

"வாங்கலாம்" வட்டி கட்டணும், வட்டி போக லாபம் சோத்துக்குத்தான் மிஞ்சும். அப்புறம்..."

"அப்புறம் என்ன... இது போதாதா?"

"உன்னை எப்படியும் இந்த வருஷம் கரை சேர்த்துடணும்னு சொல்லிட்டிருக்காங்க. இழுத்து, இழுத்து செலவழிச்சாலும் எண்பது ரூபா ஆயிடும் நகை. என்னுது உங்கம்மாவது எல்லாம் போட்டாலும் கூட மூணுநாலு பவுன் தேவைப்படும். சாப்பாட்டுச் செலவு, கைல ரொக்கம். இதுக்கெல்லாம் தேவைப்படாதா?"

"இந்த கருமத்துக்காகத்தான் நான் மேல படிக்கிறேன் னேன்."

"மேல படிச்சா கூட பத்து பவுன் கேப்பாங்க. 'கட்டிக் கொடுக்க வக்கில்லை. படிக்க அனுப்பிட்டான்'னு காதுபட பேசுவாங்க."

"பேசிட்டுப் போவட்டும். ஊர் உலகத்துல படிச்ச பொண்ணுக்குக் கல்யாணமே ஆகலையா? எவனாவது சோணங்கி கிடைப்பான்."

"நம்ம ஜாதிலியா. ஆபீஸ்ல துடைக்கிறவன், தூங்கற வனே பதினைஞ்சு பவுன் கேக்கறான். சும்மா கட்டிக்கு வாங்களா?"

'ஏன் பதினைஞ்சு பவுன். எதாவது நொண்டி முடம்னு சல்லிசா பாருங்க."

"அடி போடி துக்கிரி. உன்கிட்ட மதிச்சு பேசறம் பாரு. என்னை ஜோட்டால அடிக்கணும். ஒண்ணுக்கு மூணு அண்ணன் மூணு பேரும் சம்பாதிக்கிறாங்க. உனக்கு, நொண்டி, முடம்னு பார்த்தா, வேற கேள்வி வரும்."

"என்ன கேள்வி."

"அடங்கினா மாடா, அவுத்துக்கிட்டுப் போன மாடான்னு கேப்பாங்க."

"ம்ம், கேப்பானுங்க, நீ கேக்கற சீருக்கு, அடங்கறத விட, அவித்துகிட்டே போலாம்'னு சொல்லணும்."

"ம்ஹூம். வளர்ப்பு சரியில்லை."

"யார் வளர்ப்பு?"

"நீ உங்க அண்ணன், மத்த ரெண்டு எதும் சரியில்லை, வீட்ல... ஒரு பொட்டப் புள்ளை இருக்கு, மாசம் இருநூறு ரூபான்னு பத்து வயசுல எடுத்து வச்சிருந்தாக்கூட பாதி சீரு முடிஞ்சிருக்கும். ஒத்த சங்கிலி ரெண்டு வளையல், ஜிமிக்கி தவிர என்ன இருக்கு உங்கிட்ட. இப்படி நிப்பாங்களா எந்த ஊட்லயாவது. உங்கப்பா எங்ககிட்ட நீட்டி, முழக்கினு வந்தாரு... "நாப்பது பவனுக்குக் குறையக் கூடாது"ன்னு சட்டமா உரசிப் பாத்துல்ல இட்டாந்தாரு."

"அதான் தப்பு. இப்படி கட்டாத, எங்க அண்ணனா உரசி, உச்சிமோந்து ஒரு பொண்ணைக் கூட்டியாந்திருந்தா. நிமிர்ந்து சட்டவட்டமா. 'நாங்க அப்படித்தான் கட்டினோம். எங்க பொண்ணையும் அப்படித்தான் கொடுப்போம்'னு சொல்லலாம். 'கனம்மா கொண்ணாந்துட்டாங்க. இப்ப அதே கனம் தூக்குன்'னா இடுப்பு இழுக்குது. லெட்டர் போஸ்ட் பண்ண வேணாம். பாங்க்ல கடன் வாங்கட்டும். அதென்ன மானங்கெட்டத்தனம்... மாமனார் கிட்ட கை நீட்டற அசிங்கம்..."

"பாவம், அவரு சொல்லலை. நானாத்தான் கேட்டேன், 'எங்க வீட்டுக்கு எழுதறேன்"னு ரெண்டு நாள் பொறுத்து, 'உன் இஷ்டம்'ன்னாரு சும்மா வேணாம். பாண்டுல கையெழுத்துப் போட்டுரலாம்னாரு."

"பெரிய பாண்டு. பொண்ணு பெத்தவன் பாண்டு எழுதிக் கொடுத்தா, நீங்க ஒழுங்கா திருப்பிக் கொடுத்துரு வீங்களா? ச்சேச்சே... புள்ளை பொறக்கலையாம்... பொறந் திருந்தா பண்ற செலவைக் கேக்கிறதாம். அசிங்கம். பாங்க்ல கடன் வாங்கி பிரஸ் ஓட்டட்டும். வீடு வித்து என் கல்யாணம் நடத்தட்டும்."

"இந்த மாட்டு சந்துல இருக்கற பின்கூரை வீடு மூணு ரூபா போனா பெரிசு. அதுல நாலு பேரு பங்கு. இருக்கிற ஒரே மதிப்பு சொந்த வூட்டுக்காரங்கன்றது அதையும் வித்துட்டா பொண்ணு பார்க்கவே ஆள்வராது."

"வர வேணாம். நான் படிக்கிறேன். நிம்மதியா பி.ஏ., எம்.ஏன்னு."

"போடி... இதுக்காக படிக்கப் போவாங்களா. படிச் சாலும் கல்யாணம் கட்டாம, புள்ளை பெத்துக்காம இருந்துட முடியுமா?"

"கட்டாத இருந்துட்டா?"

"என்னா?"

"கல்யாணம் கட்டாதேயே இருந்துட்டா."

"இப்ப வயசுத் திமிறு, பேசுவ, முப்பது வயசுக்கப்புறம் வெறுமை புடுங்கிச்சுன்னா எங்களைத் திட்டுவ."

"மாட்டேன்."

"செல்வி, புள்ளைப்பேறு இல்லாம இருந்துடலாம். புருஷன் இல்லாது போறது கொடுமை."

"ஏன்."

"புள்ளை பொறக்கலையேன்னு அழறதுக்கு ஒரு இடம்... புருஷன் உண்டு. புருஷன் இல்லையேன்னு யார் கிட்ட அழ முடியும்."

"ஏன், ஆம்பளைத் துணை இல்லாத பொம்பளையால முடியாதா?"

"உனக்கு சொன்னா புரியாது செல்வி."

"புரியும் படியாகச் சொல்லுங்களேன்?"

"உங்க அண்ணன் பயந்த சுபாவமா இருக்கலாம். பட படப்பா இருக்கலாம், சம்பாதிக்கிற சாமர்த்தியம் இல்லாத இருக்கலாம். ஆனா அது நல்ல புருஷன் 'எங்க வீட்டுக்கு இப்படி எழுதிட்டேன்'னு கேட்டதும் உட்கார்ந்து கண் கலங்கும் ஒழுங்கா சாப்பிடாது. முழங்கையை நெத்தில வச்சுக்கிட்டு மோட்டு வளைய பார்த்து கிட்டுப் படுத் திருக்கும். 'உனக்குக் கஷ்டம் உனக்குக் கஷ்டம்'னு நூறு வாட்டி சொல்லும். 'சரி வுடுங்க'ன்னு சமாதானப்படுத்தி னாலும் அடங்காது. எனக்கு இது புடிக்குமோ. அது புடிக்குமோன்னு எதை எதையோ வாங்கிட்டு வரும்."

சின்னதாய், கணநேரம் அண்ணி முகத்தில் வெட்கம் மின்னிற்று. ஒருவேளை, அண்ணன் உள்ளுக்குள்ளே ஒரு சிவசுவோ.

"இது பாரம் செல்வி குடும்ப பாரம். நீ, நான், பிரஸ் எல்லாம் அவருக்குப் பாரம், இழுப்பாரு. போய் லெட்டரைப் போடு.

"எனக்கொண்ணும் புரியலை. நீங்க பேசறது."

"புரியுண்டி, கல்யாணம் கட்டி, ரெண்டு பெத்துட்டு இங்க வா. வகை வகையா பேசலாம். அப்ப உன் பேச்சும், போக்கும் வேறயா இருக்கும். நானும் 'எதுக்கு நாற்பது பவுன் இடம்'னு நிமிர்ந்தவதான். எத்தினி பவுனுக்கு இது ஈடாகும் சொல்லு." அண்ணும் அண்ணியும் இருக்கிற போட்டோவைச் சுட்டிக் காட்டினாள்.

"ஆமா... இந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் ஆயி டுச்சா?"

"ஐயோ, இது பொண்ணே இல்லை" செல்வி சொல்லி நாக்கு கடித்தாள்.

"ஏய்..."

"ஒரு செகண்ட், கத்தாதீங்க. இது பொண்ணு இல்லை. ஆம்பளைதான். கதை எழுதறவரு மெட்ராஸ்லதான் இருக்காரு. நீங்ககூட படிக்கலை... பைண்ட் பண்ணின ஒரு தொடர்கதை. அது எழுதினவரு."

"அவருக்கு எதுக்கு லெட்டர்?"

"சும்மாதான் கதைபடிச்சேன் புடிச்சிருந்தது. 'நல்லா இருக்கு. நிறைய எழுதுங்க'ன்னு பாராட்டி ரசிகர் லெட்டர். இவங்கெல்லாம் தப்பான ஆளுங்க இல்லை. படிச்சவங்க. நல்ல மாதிரி. வம்பு தும்பெல்லாம் பண்ண மாட்டாங்க. ஏன், பதில்கூட போட மாட்டாங்க."

"பொம்பளை எழுதினாக்கூடவா."

"என்னை மாதிரி எத்தனை பேர். எழுதுவாங்களோ எல்லோர்க்கும் போட முடியுமா?"

"போய் பார்க்கணும். பேசணும்னியே... இவரைத் தானா?"

"ஆசைதான். முடியுமா? லெட்டர் மட்டும்தான் போட முடியும்."

"பார்த்தா என்ன பேசுவ?"

செல்வி விழித்தாள்.

"மெட்ராஸ் ஆளுன்ற, தடுக்குன்னு, 'பொம்பளை லெட்டர் எழுதிச்சே'ன்னு வூட்டுக்கு வந்துட்டாக்க ரொம்ப கஷ்டப்பட்டுறவ. வேணாம்."

"வரமாட்டாங்க அண்ணி."

"அப்ப ஒண்ணு செய். உன் அட்ரஸ் இல்லாத மொட்டக் கடுதாசியா எழுதிடு."

"அது தப்பு இல்லை, அதுக்கு கடுதாசியே எழுதாத இருக்கலாம்" செல்வி தன் முழு விலாசம் எழுதினாள். சிநேகிதியிடம் போய், அவன் விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

இரண்டு கடிதங்களையும் போஸ்ட் ஆபீசிற்குப் போய் தபாலில் சேர்த்தாள். வியாழக்கிழமை அனுமார் கோயிலுக்கும் போய் விட்டு இன்ஸ்டிட்யூட் போனாள். வெள்ளி, மார்க்கெட்டுக்கப் போய் காய்கறி வாங்கி வந்து, அரிந்து கொடுத்து விட்டு இன்ஸ்டிட்யூட் போனாள், சனிக்கிழமை, விரதத்துக்குச் சப்பாத்தி மாவு பிசைந்து கொண்டிருந்த போது, கடிதம் வந்தது மாவு கையோடு கடிதம் வாங்கினாள்.

கிறுக்கலாய் ஆங்கிலத்தில் அவள் பெயர் எழுதியிருந்தது. உதறி பின்பக்கம் துடைத்து விட்டு நடையில் நின்றபடி படித்தாள்.

திருவளர் செல்வி அவர்கட்கு,

வணக்கம். உங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. பாராட்டுக்கு நன்றி.

சிவசு, நிஜம். உண்மை. உயிரோடு உலவுகிற நிஜம், உடனே, 'விலாசம் எங்கே' என்று கேட்க வேண்டாம்.

"எல்லா ஆண்களுக்கும் சிவசு இருக்கிறான். நூற்றுக்குத் தொண்ணூறு ஆண்கள் நல்லவர்கள்தான். செல்வி, அவர்களை உணர பெண்களுக்குச் சந்தர்ப்பம் இல்லை.

வெளிப்படுத்த ஆணுக்கு வாய்ப்பு இல்லை. நம் தேச ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே, பெரிய ஐஸ்கட்டி காலம் காலமாய் இருக்கிறது. இது உடைபட வேண்டும். உடைக்க முயற்சிக்க வேண்டும்.

அப்போது, 'சிவசு எங்கே' என்று என்னைக் கேட்க மாட்டீர்கள். 'இதோ' என்று உங்கள் சிவசுவை எனக்கு அறிமுகப்படுத்துவீர்கள்.''

''உங்கள் கடிதத்துக்குள்ளே பொதிந்த உங்கள் தேடல் எனக்குப் புரிகிறது. தொடருங்கள், நல்லபடி முடிய வாழ்த்துக்கள்.

பி.கு: உங்கள் பெயர் மிக அழகாக இருக்கிறது. மார்கழி குளிர் போல, சொல்லும் போதே ஒரு இதமான கம்பீரம் வருகிறது.

செல்வி வயிற்றுக்குள், குப்பென்று ஒரு சந்தோஷம் எழுந்தது. உடம்பெல்லாம் பரவியது.

''அண்ணி, பதில் வச்சிருச்சு... பதில் வந்திருச்சு.'' பின்பக்கம் ஓடினாள்.

அண்ணி சாக்கடையோரம் குந்தி உட்கார்ந்து வாந்தி யெடுத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன அண்ணி... என்ன உடம்புக்கு.''

''தெரியலைடி. காலைலேர்ந்தே புரட்டிக்கிட்டிருந்தது. ரெண்டு சப்பாத்தி போட்டு எடுத்ததும் குமட்டிடுச்சு.''

''எண்ணைப் புகையா இருக்கும்.''

செல்வி தலை பிடித்துக் கொண்டாள். அண்ணி குமுறி ஒருமுறை வாந்தி எடுத்தாள். எழுந்து, தள்ளாடி சுவர் பிடித்து நின்றாள், ஆடினாள், கண் மூடி சிறிது நேரம் நின்று விட்டு குனிந்து வாய் கொப்பளித்தாள்.

கூடத்துக்கு வந்து படுத்துக் கொண்டாள்.

"அடுப்பு அணைச்சிட்டேனா பாரு."

"அணைச்சுருக்கு. நீங்க படுங்க. நான் பாத்துக்கறேன்."

"வேணாம். எழுந்து உட்கார்ந்தாள்."

"மறுபடி வருதா?"

"இல்லை. படுக்க முடியலை."

"என்ன செய்யுது?"

"படுத்து எழுந்தா பூமியும் கூடவே எழுந்துக்கற மாதிரி பிரமை. ரெண்டு நாளாவே தலை சுத்தல் பித்த மயக்கமா, வயித்துக் கோளாறா ஒண்ணும் புரியலை. நெஞ்சு அடைக்கிற மாதிரி ஏதோ தொந்தரவு."

"வேற ஏதனா இருக்குமா?"

"தெரியலை."

"என்ன தெரியலை... போன மாசம் ஆனிங்களா..."

"ஆன மாதிரிதான் இருந்தது. அப்புறம் ஒண்ணும் இல்லை. ரத்தக்குறைவோன்னு நினைச்சுக்கிட்டேன்."

"நீங்களா நினைச்சுக்க வேண்டியதுதானா... சொல்ல வேணாமா?"

"யார்கிட்ட சொல்றது?"

"என் கிட்ட... ஏன்... நான் பொம்பளை இல்லையா?"

"ஆமா... கல்யாணமாகாத பொண்ணுக்கிட்ட பேசற விஷயமா இது?"

"அதுக்காக ஒரு கிழவியைக் கொண்டாந்து வைக்க முடியுமா? இருக்கறவங்கக்கிட்ட தான் சொல்லணும். வீம்பு என்ன?"

"ஒரு வீம்பும் இல்லடி. தங்குதோ தங்கலையோன்னு கவலை. ஊருக்கு முன்னாடி 'டாம்டாம்' கொட்டிட்டு

ஒண்ணுமில்லாத போச்சுன்னா... அதான் பேசாத இருந்துட்டேன்.''

''கிளம்புங்க.''

''எங்க?''

''டாக்டர் வீட்டுக்கு.''

''பார்த்துட்டுப் போலாமேடி.''

''அதான் பார்த்தேனே... குடம் குடமா வாந்தி எடுக்கறதை. எழுந்து புடைவை மாத்திக்கங்க.''

''ஏன்? இது போறாதா?''

''யார் இது, உங்க வீட்டு வேலைக்காரியா'ன்னு டாக்டரம்மா கேக்கறதுக்கா? மாத்திக்கிட்டு கிளம்புங்க.''

புடைவை மாற்றக் கூட சக்தியில்லை. தள்ளாடிற்று. செல்வி ப்ளீட்ஸ் மடித்துச் சொருகி விட்டாள். சீப்பு எடுத்து அண்ணியின் முன் தலை வாரினாள். வீடு பூட்டி. சைக்கிள் ரிக்ஷா பிடித்து டாக்டர் அம்மாவிடம் கூட்டிப் போனாள்.

இரண்டாவது ஆளாய் உள்ளே போனார்கள். டாக்டரம்மா சகலமும் கேட்டுவிட்டு செல்வியை வெளியே போகச் சொல்லி க்ளவுஸ் மாட்டிக் கொண்டாள்.

செல்வி வெளியே வந்து தெருவை வேடிக்கை பார்த்தாள். இடுப்புப் புடைவை சொருகலில் அந்தக் கடிதம் இருந்தது.

'இன்னொரு முறை படிக்கலாமா...'

''உள்ளே வாங்கம்மா.'' டாக்டர் குரல் கேட்டது.

''இவங்க சொல்றது வச்சு பார்க்கறபோது கர்ப்பமா இருக்கலாம். யூட்ரஸ் சைஸ் பெரிசா இருக்கு. எதுக்கும் இந்த நர்ஸிங்ஹோம் போய் இன்னொரு டாக்டர்... நான் லெட்டர் தரேன்... பாருங்க. அங்க சில டெஸ்ட் பண்ணு வாங்க.''

"ஏங்க... நீங்க சொல்ல முடியாதா."

"டெஸ்ட்லதான் சரியாத் தெரியும்."

"இப்போதைக்கு மருந்து..."

"வேணாம், இந்த டாக்டர் பார்த்துடுங்க. அவங்களே சொல்வாங்க."

"ஏதாவது பயப்படற மாதிரி..."

"ஒண்ணுமில்லை. ரொம்ப வீக்கா இருக்காங்க."

வாசலில் இருக்க வைத்துக் கடிதம் எழுதினாள்.

"பயமுறுத்தறதா மாதிரி பேசறாளேடி இவ."

"ஏன் பயப்படறீங்க? இன்னொரு டாக்டரைத் தான் பார்க்கச் சொல்றாங்க! பார்ப்போமே."

"எப்ப?"

"இப்பவே, இதே ரிக்ஷால போயிடலாம்."

"துட்டு எடுத்தாந்தியா!"

"நூத்தி நாப்பது ரூபா இருக்கு" ரிக்ஷா ஏறி பெரிய நர்ஸிங்ஹோம் வந்தார்கள். அந்த லேடி டாக்டர் போன் செய்திருப்பாள் போலிருக்கிறது. போன உடனே லாபுக்கு அனுப்பினார்கள். ரத்தமும், யூரினும் எடுத்துக் கொண் டார்கள். பெரிய டாக்டர் வரும்வரை படுத்திருக்கச் சொன்னார்கள். பெரிய டாக்டர் வலக்கையில் துணி சுற்றி இறுக்கி, ரத்தக் கொதிப்பு பார்த்தார்.

"ப்ரஷர் ஜாஸ்தி இருக்கே... என்ன சாப்டீங்க காலைல?"

"ஒண்ணும் சாப்பிடலை. இன்னிக்கு சனிக்கிழமை, விரதம்..."

"அதான்... நீங்க யாரும்மா?"

"அவங்க நாத்தனார்."

''கொஞ்சம் வெளிய இருங்க.'' இந்த டாக்டரும் க்ளவுஸ் மாட்டிக் கொண்டார். செல்வி வெளியே வந்தாள். பத்து நிமிடம் கழித்து, ஒரு லேடி டாக்டர் உள்ளே போனாள். இரண்டு நிமிடம் பொறுத்து, கதவு ஒருக்களித்துத் திறந்து புதிய க்ளவுஸ் போட்டாள். மூடிக் கொண்டாள். க்ளவுஸ் உள்ளே போயிற்று. செல்வி கவலை யானாள்.

அரைமணி கழித்து நர்ஸ் அவளை உள்ளே கூப்பிட் டாள்.

''பெரியவங்க யாரும் வரலையா? இவங்க புருஷன் எங்க? உள்ள வாங்க.''

''ப்ரஸ்ல இருக்கார் டாக்டர். ஏன் கேட்கறீங்க?'' அண்ணி கண் மூடி கிடக்க, டாக்டர் செல்வியைத் தனியே அழைத்து எதிர்பக்கம் கூட்டிப் போனாள்.

''முதல் பாயிண்ட், அவங்க ரொம்ப வீக்கா இருக்காங்க. ப்ரஷர் ஜாஸ்தி இருக்கு. இரண்டாவது, இது கர்ப்பம் இல்லைன்னு சந்தேகப்படறேன்.''

''ஏன் டாக்டர்?''

''கட்டியாவும் இருக்கலாம். நாளைக்கு இன்னொரு டெஸ்ட். தியேட்டருக்கு கூட்டிட்டுப் போய் பண்ணனும் அட்மிட் பண்ணிடுங்க.''

''பயப்படற மாதிரி...''

''இப்போதைக்கு இல்லை.''

''புரியலைங்க.''

''கட்டியா இருந்தா உடனே ஆப்பரேஷன் தேவைப் படும். கர்ப்பம்னா கம்ப்ளீட் ரெஸ்ட்ல இருக்கணும், இப்ப லாப் சார்ஜ் கட்டிடுங்க. இவங்க வீட்டுக்காரரைக் கூட் டிட்டு வாங்க.''

செல்வி, மெல்ல தலை திருப்பி அண்ணியைப் பார்த்தாள். தோளில் கை வைத்தாள். அண்ணி சிரமத்துடன் கண் விழித்தாள்.

"எப்படி இருக்கு அண்ணி?"

"அடி வயிறு நோவுதுடி, இன்னும் புரட்டல் இருக்கு."

"டாக்டர் ஆஸ்பத்திரில சேர்க்கச் சொல்றாங்க. இன்னும் டெஸ்ட் பண்ணனும். நான் போய் அண்ணனைக் கூட்டிட்டு வரேன்."

"அவர்கிட்டே பதட்டமில்லாத சொல்லிக் கூட்டிட்டு வா, செல்வி."

"சொல்றேன். அரை அவர்ல வந்துருவேன். தனியா இருப்பியா?"

அண்ணி தலையசைத்தாள். கண்மூடிக்கொண்டாள். சைக்கிள் ரிக்ஷா விட்டு ப்ரஸ் வாசலில் இறங்க அண்ணன் இரண்டு பேரோடு பேசிக் கொண்டிருப்பது வாசலிலிருந்தே தெரிந்தது.

"என்ன?"

"பேசிட்டு வா."

"முடிச்சுட்டேன். சும்மா பேசிட்டிருக்கேன். எதுக்கு வந்தே?"

"இங்க வா." செல்வி வாசல்லேர்ந்தே கூப்பிட்டாள்.

அண்ணன் அருகே வர தெருவுக்குக் கூட்டிப் போனாள்.

"அண்ணி வாந்தி எடுத்தது. டாக்டர் கிட்டப் போனோம். நர்ஸிங்ஹோம் போய் டெஸ்ட் எடுக்கச் சொன்னாங்க. அங்க டாக்டர் அட்மிட் ஆகச் சொல்லிவிட்டாங்க."

"உண்டாயிருக்கா." அண்ணன் முகத்தில் சந்தோஷம் தெரிந்தது.

"தெரியலை"

"பிறகு?"

"எப்படிச் சொல்வது? செல்வி தயங்கினாள். தலை குனிந்து தரை பார்த்தாள். பெரிய கனவு இது அண்ணிக்கும் அண்ணனுக்கும் தினம் தினம் பொங்கும் ஏக்கம் இது. எப்படிச் சொல்வது?

"அது கட்டியாவும் இருக்கலாம், குழந்தையாவும் இருக்கலாம். நாளைக்கு தியேட்டர்ல வச்சு இன்னொரு டெஸ்ட் எடுக்கணும்னு..."

"ஐயோ..."

"இப்ப காசு வேணும். அண்ணி ஆஸ்பத்திரில அசையக் கூட முடியாம படுத்திருக்காங்க."

"இப்பதான் பேப்பருக்கு இவங்கக்கிட்ட காசு குடுத்தேன், செல்வி. நாலாயிரத்து எழுநூறு ரூவா."

"வாங்கிடு."

"ஆர்டர் எழுதிக் கொடுத்துட்டாங்க."

"பாதியாவது வாங்கிடு. அட்மிட் ஆகணும். ஆயிரம் ரூபா கூட இல்லாத முடியுமா?"

"உங்க அண்ணிக்கிட்ட ஏதாவது துட்டு இருக்குமே."

"அது பர்ஸ்தான் எடுத்துட்டு வந்தேன். நூத்தி நாப்பது ரூபா இருக்கு."

"பேசாத மோதிரம் வச்சிரட்டுமா?"

"இந்தக் காசு கேட்டு வாங்கேன்."

"எப்படி வாங்கறது. நல்லா இருக்காதே." நின்று திருநா விரல் பிசைந்தான்.

செல்விக்குக் கோபம் பொங்கிற்று.

''ஆஸ்பத்திரில கண் சொருகிக் கிடக்கு. அவங்க கட்டியோ, குழந்தையோன்னு சந்தேகப்படறாங்க. எப்படி எப்படின்னு தயங்கினா என்ன அர்த்தம்? அவங்களும் மனுஷங்க தானே. அவசரம், ஆபத்து தெரியாது.'' சுள்ளென்று உரக்கக் கூவினாள்.

குரல் கேட்டு உட்கார்ந்திருந்த இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

''என்ன முதலாளி, என்ன பிரச்சனை?''

''ஒண்ணுமில்லீங்க'' -திருநா படியேறிப் போய் நாற்காலியில் உட்கார்ந்தான். தலைகுனிந்து தாழ்ந்த குரலில் விவரித்தான். செல்வி வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

''அட்மிட் பண்ண ஆயிரமாவது வேண்டும். இவர்கள் கொடுப்பார்களா, மறுப்பார்களா?''

செல்வி திரும்பினாள். அண்ணன் எதிரே அமர்ந்தவர்கள் காசு எண்ணிக் கொண்டிருந்தார்கள். அண்ணன் கொடுத்த காகிதத்தை வாங்கிக் கொண்டார்கள்.

''அதனால்தான் என்ன முதலாளி... வீடு முக்கியம். போய் உடனே கவனிங்க. லேடீஸ் இருக்காங்க. இல்லைன்னா நானே மோட்டார் சைக்கிளில் உங்களை ட்ராப் பண்ணிடுவேன்.''

படியிறங்கினார்கள்.

அண்ணன் முகம் வாடியிருந்தது. வாக்குக் கொடுத்த உடனே உடைத்த வேதனை முகத்தில் தெரிந்தது.

''இப்ப எப்படிங்க இருக்கு?'' ஒரு ஆள் முன்வந்து செல்வியிடம் கேட்டான். ''பயப்படற மாதிரி இல்லையே...'' அவனே தொடர்ந்தான்.

"இல்லீங்க. டெஸ்ட் செய்தது கஷ்டமாயிடுச்சு. தாங்க முடியலை."

"வரேன் முதலாளி. ஒரு போன் போடுங்க நைட்டு. நான் அட்ஜஸ்ட் பண்ணி பேப்பர் தரேன்."

அண்ணன் கை குலுக்க, இரண்டு பேரும் வண்டி உதைத்து மறைந்து போனார்கள்.

"நீ போ செல்வி. நான் சைக்கிள்ல வரேன்." செல்வியை சைக்கிள் ரிக்ஷாவில் ஏற்றிவிட்டு பின்தொடர்ந்தான்.

அண்ணனைப் பார்த்ததும் அண்ணி அழத் துவங்கினாள்.

"த்த... சும்மா இரு. என்ன இப்போ... டெஸ்ட் பண்றாங்க. அவளோ தானே."

"கட்டியா இருக்கும்கறாங்களே."

"யார் சொன்னது?"

"நர்ஸ்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா."

"அதானாம். இப்பவே டெஸ்ட்டுக்குக் கூட்டிட்டுப் போறாங்களாம்."

அண்ணன் டாக்டரிடம் ஓடினான், செல்வி அண்ணியின் விரல்களைக் கோர்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"கடைக்குப் போனியா?"

"ம்ம்..."

"எங்க வூட்டுக்கு ஒரு போன் போடக்கூடாதா?"

"எதுக்கு... நான்தான் கூட இருக்கேனே."

"எங்க அப்பாவையும், அம்மாவையும் பார்க்கணும் போல இருக்கு. செல்வி..."

"சொல்றேன். ஆஸ்பத்திரில போன் இருக்கு."

"நெம்பர் தெரியுமா?"

"நினைப்புல இல்லை."

"எழுதிக்க."

நர்ஸிடம் பேனா வாங்கினாள். காகிதம் தேடினாள். இடுப்பில் இருந்த கடிதம் எடுத்துப் பின்பக்கம் எழுதினாள். அஞ்சு, ஆறு, நாலு, மூணு சைபர், சைபர்.

அண்ணிக்கு, 'இரவு என்ன உணவு தருவது என்று கேட்டுப் போய் தயார் செய்ய வேண்டும். மிச்சமிருக்கிற கோதுமை மாவை சப்பாத்தி போட்டு எடுக்க வேண்டும். பாலைக் காய்ச்சி, ஒரு ஹார்லிக்ஸ்? பாட்டில் வாங்கி எடுத்து வரவேண்டும். இன்று இரவு படுக்கை இங்கேயோ, வீட்டிலோ? தெரியவில்லை.

ஆஸ்பத்திரியில் படுக்கை என்றால், கூடவே படிக்க ஏதாவது எடுத்து வர வேண்டும், என்ன எடுத்து வரலாம்?

மறுபடியும் அந்த பைண்ட் பண்ணிய தொடர் கதையைப் படிக்கலாமா? வேண்டாம். அது கனா. சுகமான கனா. இது நிஜம். துடிக்க வைக்கிற நிஜம்.

அண்ணன் நர்ஸோடு வந்தான்.

"தியேட்டருக்குப் போகணும். லாப் பணம் கட்டியாச்சு."

"டெஸ்ட் தானே?"

"டெஸ்ட்தான். டெஸ்ட்டில் கட்டின்னு தெரிஞ்சா உடனே ஆபரேஷன்."

வியர்த்தது.

செல்வி டெலிபோன் நோக்கி ஓடினாள். "ஹலோ அஞ்சு, ஆறு, நாலு, மூணு, சைபர், சைபர். நான் செல்வி பேசறேன். திருநா தங்கச்சி. ஆமாம். சிவபாதம் ஐயா இருக்காங்களா? கொஞ்சம் கூப்பிடறீங்களா?"

காத்திருந்தாள்.

மாமா, நான் செல்வி பேசறேன். மங்கை அண்ணிய, இஸெபல்லா நர்ஸிங் ஹோம்ல சேர்ந்திருக்கோம்.''

விஷயம் சொன்னாள்.

எதிர்முனை பதட்டமாவது தெரிந்தது. அரை மணியில் அம்பாஸிடர் காரில் ஆண்களும், பெண்களுமாய் ஆறு பேர் இறங்கினார்கள். திருநாவைச் சூழ்ந்து கொண்டார்கள். புலம்பினார்கள். நர்ஸ் அதட்டினாள். செல்வியைத் தனியே அழைத்தாள்.

'கட்டி' என்று நிச்சயம் ஆகிவிட்டதாம். திருநா கையெழுத்துப் போட வேண்டுமாம். செல்வி, அண்ணனைத் தனியே அழைத்து டாக்டர் அறைக்குப் போனாள்.

நர்ஸ் மறுபடி விவரம் சொல்ல, திருநா தலை உயர்த்தி செல்வியைப் பார்த்தான். கையெழுத்திட்டான். நர்ஸ் போனதும், முகம் பொத்தி, குலுங்கக் குலுங்க அழுதான்.

செல்வி அவன் தோளை அணைத்துக் கொண்டாள். குலுங்கின முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

''நூற்றுக்கு தொண்ணூறு ஆண்கள் நல்லவர்கள்தான் செல்வி. அவர்களை உணர பெண்களுக்கு சந்தர்ப்பம் இல்லை. வெளிப்படுத்த ஆண்களுக்கும் வாய்ப்பில்லை...'' கடிதம் மனதில் ஓடிற்று.

'திருநா நல்லவன்' என்பதை இப்படித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா?

4

ஏழு நாட்கள் சோறு பொங்கி அண்ணனுக்குப் போட்டு தானும் தின்று, அண்ணிக்கும் பிசைந்து எடுத்துப் போய்... லஸ் ஏரியா தெளிவாய் புரிபட்டு விட்டது.

அண்ணியோடு அண்ணியின் அம்மாவும், அவர்கள் வீட்டு மருமகப் பெண்ணும் துணைக்குப் படுத்துக் கொண்டார்கள். "சூளையிலிருந்து சோறு கொண்டு வரது கஷ்டம். நானே உங்களுக்கும் சேர்த்து காபி, சாப்பாடு கொண்டாந்துடறேனே?"

"வேணாம்மா, தப்பா போயிடும். மலட்டுப் பொண்ணைக் கொடுத்துட்டு வெக்கமில்லாம சம்பந்தி வூட்டு சோறு திங்கறாங்க'ன்னு பேச்சு வரும்."

"யாருங்க அப்படிப் பேச முடியும்?"

"இல்லாட்டியும், நாளைக்கு எதுனா ஒரு பேச்சுல இது வரும்."

அந்தப் பெண்ணும் மறுத்து விட்டது. செல்வியை விட இரண்டு மாதம் சிறியவள். "எட்டாவது படிச்சிருக்கேன்" என்று விரியப் பேசிற்று. "படிக்க புஸ்தகம் வேணுமா?" என்று செல்வி கேட்டாள். "வேணாம். டேப் ரெக்கார்டர் இருக்கு" என்று மறுத்து விட்டது. சோகப் பாட்டுதான் பிடிக்குமாம்.

ஏழாவது நாள், வார்ட் பாய் டிப்ஸ் உள்பட நாலாயிரத்து நானூறு ரூபாய் அவர்களே கட்டினார்கள். 'வீட்டுக்கு அழைச்சிட்டுப் போய் ஒரு மாசம் உடம்பு தேத்தி அனுப்ப' பர்மிஷன் கேட்டார்கள்.

அம்பாஸிடர் காரில் ஏற்றி, சூளைக்குக் கொண்டு போய் அண்ணி வீட்டில் செல்வி இறக்கி விட்டதும்,

அண்ணி அவளைத் தனி அறைக்குள் வைத்துப் பேசினாள். அந்தப் பெண்கள் கதவு சாத்திக் கொண்டு வெளியே நின்றார்கள்.

''என்ன அண்ணி இது?''

''செல்வி, நேத்தி வரைக்கும் எனக்கு நீ சின்னப் பொண்ணு. இன்னிக்கு இல்லை. உங்க அண்ணன் கிட்ட பேசு. 'நான் அந்த வூட்டுக்கு வரதா வேணாமா'ன்னு கேட்டுச் சொல்லு. உபயோகம் இல்லாத பொண்டாட்டி தேவையா, தேவையில்லையா'ன்னு பேசிடச் சொல்லு.''

''என்ன இப்படி பேசறீங்க?''

''உங்கப்பா இருந்தா நான் அந்த வீட்டுக்கு இப்ப வர முடியாது. நிச்சயம் படி ஏத்தமாட்டாரு. 'வேற பொண்ணு பாக்கறம், என்னா செய்யறது'ன்னு ஆஸ்பத்திரியிலேயே அறுத்து வுட்டிருப்பாரு. எனக்குக் கொஞ்ச நம்பிக்கை, உங்க அண்ணன் மேல.''

செல்வி தலை குனிந்து கொண்டாள், என்னவெல்லாம் வேதனை பெண்களுக்கு, எதெல்லாம் அவளுக்குப் பணயப் பொருளாய் வைக்கப்படுகிறது. அழகு, படிப்பு, சீர், குழந்தை, புருஷன்... ஏன் எல்லா இடத்திலும் சார்ந் திருக்கும்படி இவளுக்கு நேரிடுகிறது.

''சொல்லு செல்வி.''

''ஒரு தப்பு பண்ணிட்டேன். உங்களை நேரா அங்க அழைச்சிட்டுப் போயிருந்திருக்கணும். இங்க வந்த தொட்டுதான் இப்படிப் பேசறீங்க?''

''இங்க வந்தது ஒரு நிம்மதிக்கு.''

''என்ன நிம்மதி?''

''உட்கார்ந்து மனசு வுட்டு அழுவலாம்.''

"எதுக்கு அழுவணும்? ஒரு குறைதான். இல்லேங்கல. ஒண்ணு பெத்து இறக்கியிருந்தா, பீடையே போச்சுன்னு நிம்மதியா இருந்திருக்கலாம் தான், அதுக்காக... உங்களை ஒதுக்கிட முடியுமா... இந்த மாதிரி ஒதுக்கறது நன்றி கெட்டத்தனமில்லையா? அம்மா செத்த ஆறு மாசத்துல அப்பா உங்களை மருமகளா கொண்டாந்து வச்சவரு. இன்னிக்கு எங்க வீடு கொஞ்சம் உருப்படியா இருக்குன்னா அது உங்களாலதான். எங்கப்பா வேற... எங்க அண்ணன் வேற..."

"அதுக்கும் ஆயிரம் ஆசை இருக்கும் மனசுல."

"இருக்கலாம். அதுக்காக பொம்பளைய பலி போட்டுப் புள்ளை வரம் வாங்கறதா?"

"அண்ணனுக்கு எண்ணம் இல்லாட்டியும், அடுத்தவங்க தாண்டலாம்."

"யாரு நானா?"

"ஐயோ..."

"கடவுள் சத்தியமா நான் இதுக்குக் காரணமா இருக்க மாட்டேன். அப்படி என்னை மீறி அண்ணன் தப்பு பண்ணிச்சு... நான் கடைசி வரைக்கும் கல்யாணம் கட்ட மாட்டேன்."

"ச்சீ... என்ன பேச்சு இது." அண்ணி பலஹீனமாய்ச் சீறினாள்.

"நீங்களும் நானும், அண்ணியும் நாத்தியுமா சண்டை போட்டுருக்கலாம். ஆனா பொம்பளைய பொம்பளையே கடிச்சுத் துப்பற பாவத்தை நான் செய்ய மாட்டேன். உடம்பு தேறினதும் வீட்டுக்கு வாங்க. நல்லாத் தூங்குங்க. சாப்பிடுங்க மனசு அலட்டாத..."

செல்விக்கு ஏனோ அழுகை வந்தது. ''ஆறு வருஷம் காத்திருந்து. இனி இல்லை'' என்று மல்லாக்கப் படுத்திருக்கும் பெண்ணைப் பார்க்க, துக்கம் வந்தது.

''நான் இருக்கேன்... அப்பப்ப வந்து போய்கிட்டிருக்கேன்...'' செல்வி அண்ணி கைபிடித்துக் கொண்டாள். தலையணைக்கு அடியிலிருந்து துழாவி இரண்டு தங்க வளையலை எடுத்தாள்.

''இத நீ போட்டுக்க இனிமே.''

''லஞ்சமா?''

''இல்லம்மா சந்தோஷம். ஊர் உலகத்துல ஆயிரம் குடும்பச் சண்டை பொம்பளையாலதான். 'நான் இருக்கேன்'னு எந்தப் பொம்பளையும், எந்தப் பொம்பளைக்கிட்டேயும் சொல்றதில்லை. அதான் அவ ஆம்பளைய நம்பிக்கிட்டு கிடக்கா.''

''அதனால வளையல் போட்டுப் பாசம் வளர்க்கறீங்களோ?''

''இல்ல செல்வி.''

''உடனே அசிங்கம் பண்ணிட்டீங்களே'' நாளைக்கு எனக்கு இப்படி ஒரு நிலைமை வந்ததுன்னா'ன்னு யோசனை பண்ணித்தான் இறுக்கிப் புடிச்சுகிட்டேன், இந்த மாதிரி வளையல் லஞ்சமா கிடைச்சா, வாங்கி வச்சுகிட்டு நாளைக்கு என் நாத்தனாருக்கு இதப் போட்டு அஜெஸ்ட் பண்ணிக்குவோம்'னு தோணாது?''

''உனக்கு ஒரு குறையும் வராது செல்வி.''

''அதெப்படி நிச்சயமா சொல்ல முடியும்? மாசத்துல மூணு நாள் உக்கார்ற எந்தப் பொம்பளைக்கும் இது வரலாம். வளையளைப் போடுங்க கைல.''

''வாங்கிக்க மாட்டியா?''

"இது பழசு. புதுசா கல்லு வச்சு பண்ணிப் போடுங்க என் கல்யாணத்துக்கு. நான் வரேன்."

அறை வாசலில் அத்தனை ஆணும் பெண்ணுமாய் கேட்டுக் கொண்டிருந்தார்கள் போலிருக்கிறது. பாரம் குறைந்த முகமாய், வாயெல்லாம் பல்லாய் வழியனுப் பினார்கள். "டேய் கார எடுறா."

"வேணாங்க. நான் பஸ்ல போயிடறேன்." திடமாய் மறுத்துவிட்டு பஸ் ஏறினாள்.

மவுண்ட்ரோட் விளிம்பில், மாலை நேரக் கும்பல் பஸ்ஸில் தாவி ஏறிற்று, திபுதிபுவென்று உள்ளே பாய்ந்தது. கிடைத்த இடத்தில் தொப் தொப் என்று உட்கார்ந்தது.

செல்வி பக்கத்தில் சிகப்பாய், சுருள் முடியாய் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். முகம் திரும்பி...

"ஜானு, கம் ஹியர்" என்று யாரையோ பார்த்துக் கூவினாள், சீட் காலியாய் இருந்தது. ஜானு வருவதற்கு முன் சீட்டில் கிழவி உட்கார்ந்துவிட, ஜானு உதடு பிதுக்கி, கூப்பிட்ட பெண் அருகே நின்று கொண்டாள்.

"கம், டேக் மை ஸீட்."

"லீவ் இட் யார்."

"பரவாயில்லை, உட்காருடி."

"வேணாம்."

"வாங்க அட்ஜஸ்ட் பண்ணிக்குவோம். செல்வி முன் வந்து ஜன்னலோரம் நெருங்கி உட்கார, சிவந்த பெண் நகர ஜானு உட்கார்ந்து கொண்டது. கொஞ்சம் மாநிறமாய் இருந்தாலும், அந்தப் பெண்ணும் அழகாய் இருந்தது.

"ஐ ஹேட் பஸ் டிராவலிங்."

"வாட் டு டூ."

நின்றிருந்த ஒரு பெண் கை நீட்ட, மற்ற பெண்க ளெல்லாம் அவளிடம் சில்லறை கொடுத்தார்கள். அவள் அதைப் பின்பக்கம் நின்ற பெண்ணிடம் கொடுத்து, "எட்டு மைலாப்பூர், உன்னதும் சேர்த்து ஒன்பது"

செல்வி வியந்தாள். 'ஒரே ஆபீஸ் போல இருக்கு' என்று நினைத்துக் கொண்டாள். அநேகமாய் எல்லாப் பெண்களும் தோளில் பை மாட்டியிருந்தார்கள். கையில புத்தகம் வைத்திருந்தார்கள். லேசான பவுடர் வாசனை யோடு இருந்தார்கள். கிளம்புமுன் முகம் கழுவி, பவுடர் போட்டுக் கொள்வார்கள் போலிருக்கிறது.

"நான்-ஸ்டாப்பிங்ல டபிள் விசில் கொடுத்தா நல்லா இருக்கும். போய் கொஞ்சம் தூங்கலாம்."

"இவன் தரமாட்டான். சோம்பேறி. மணிக்கூண்டுல போட்டுருவான் பாரு." புத்தகம் புரட்டினார்கள்.

"ஏய், இவன் தொடர்கதை படிக்கிறியா?" வாரப் பத்திரிகை பிரித்துக் காட்டினாள்.

"நான் எவனுதும் படிக்கிறதில்லை. தூங்கறதுக்கு முன்ன புரட்டுவேன். நாலு பக்கம் புரட்டறதுக்கள்ள தூக்கம் வந்துரும்."

"நல்லா எழுதறான்டீ."

"ப்ச்சு."

"இல்லீங்க. நல்லா இருக்கும். செல்வி வலிய உள்ளே புகுந்தாள். "இதுக்கு முன்னாடி எழுதியது சூப்பரா இருந்துச்சு" சின்ன மகிழ்ச்சியோடு பேசினாள்.

இருவரும் ஒருசேர அவளைத் திரும்பிப் பார்த்தார்கள். மறுபடி திரும்பி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள். மெலிதாய்ச் சிரித்தார்கள். சும்மா இருந்தார்கள்.

செல்விக்கு அதே மௌனம், சிரிப்பு கஷ்டமாய் இருந்தது, கலைக்க ஆசைப்பட்டாள்.

"வேலைலேர்ந்து வர்றீங்களா?"

தலையாட்டினார்கள்.

"எங்க வேலை?"

"பிலிப்ஸ்"

"பிலிப்ஸ்னா?"

"பிலிப்ஸ்தான்."

"பல்பு விக்கிற இடமா?"

"விக்கறதில்லை. தயார் பண்றது."

"உங்க பேர் என்னங்க?"

"ம்ம்..."

"உங்க பேர்?"

"ப்ரியா" பதில் சொல்லிவிட்டு 'மேற்கொண்டு கேட் காதே' என்பது போல முகம் தூக்கிக் கொண்டது.

"பாவம், ஆபீஸில வேலை செய்துட்டு கதை படிக்க நேரம் இருக்காது இல்லை?"

இருவரும் மௌனமாய் இருந்தார்கள்.

"கதை படிக்கவே மாட்டீங்களா?"

"வாட்'ஸ் த யூஸ்?"

"என்னங்க?"

"எதுக்கு கதை படிக்கணும்? ஹிண்டு படிக்கறதுக்கே நேரம் இல்லை. தமிழில் வர்ற கதையெல்லாம் ஒரே குப்பை. ஒரு சாமர்செட்காம் ஈக்வலா ஆகுமா ஜானு. இவனுங்க எல்லாம்."

"அது சரி, இங்கிலீஷ் தெரியாதவா கொண்டாடறதுக்கு ஆள் வேணுமே."

"டர்ட்டி டர்ட்டிங்ஸ்"

"அப்படி இல்லீங்க." செல்வி பேச முற்பட்டபோது, "ஜானு, அங்க ஒரு ஸீட் காலியாறது வா." இருவரும் எழுந்து ஆட்களை இடித்து, நகர்த்தி அந்த ஸீட்டுக்கு ஓடினார்கள். ஜன்னலோரம் உட்கார்ந்திருந்தவர்களிடம் கெஞ்சி நெருக்கி உட்கார்ந்து கொண்டார்கள் திரும்பி ஒருமுறை அவளைப் பார்த்தார்கள். சிரித்தார்கள்.

மயிலாப்பூர் வரும் வரை சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

செல்வியின் நெஞ்சுக்குள் ஒரு சின்னக் காயம் ஏற்பட்டது. ரத்தம் வழிந்தது.

செல்வி தன் முகத்தை உடனே கண்ணாடியில் பார்க்க ஆசைப்பட்டாள். ப்ரியா மாதிரி சிகப்பில்லை. ஆனாலும் திருநா மாமனார் வீட்டிலிருந்து கிளம்பும் போது, முகம் துடைத்து பவுடர் போட்டிருக்கலாம். நாள் முழுக்க ஆஸ்பத்திரி வராண்டாவில் நின்ற களைப்பு, இன்னும் கருப்பாகி இருக்கும். தலை கலைந்திருக்கும். கொஞ்சம் எண்ணைப் பசை அதிகமாயிருக்கும் ச்சே... ஏன் இப்படி பஸ் ஏறினேன்.

'ஒரு சாமர்செட்மாமுக்கு ஈக்வலாடி இவளுங்க எல்லாம்."

யார் 'சமர்செட்மாம்' தெரியவில்லை.

ஹிண்டு படிக்கிறதுக்கே நேரமில்லை செல்வி வீட்டில் ஹிண்டு வாங்குறதில்லை. தினமலர்தான். செல்வி, அதன் வாரமலரை விரும்பிப் படிப்பாள். இதை படிங்க முதல்... அதைத்தான் முதலில் படிப்பாள். ஜானு வாரமலர் படிக்க மாட்டாளா. ப்ரியா அதை 'டர்ட்டி ரைட்டிங்ஸ்' என் பாளா. வாரமலர் நல்லாத்தான் இருக்கு. கொஞ்சம் கிசுகிசு

அதிகம். ஆனாலும் உபயோகமாய் நிறைய சொல்கிறது. ஒருவேளை ஜானுவுக்கு உபயோகமில்லையோ என்னவோ.

அவர்களுக்கு எது உபயோகம்? ஹிண்டுதானா... ஹிண்டு புரியவே இல்லை. ஏன்? போறாது. இங்கிலீஷ் போறாது. ப்ளஸ் டூ இங்கிலீஷ் ஹிண்டு படித்துப் புரிந்து கொள்ள உதவாது.

ச்சே... எத்தனை பெண்கள் மேல் படிப்பு படிக்கி றார்கள். நான் மட்டும் ஏன் படிப்பு விட்டேன். வீட்டோடு உட்கார்ந்து தொடர்கதை பைண்டிங் படிக்கிறேன்.''

''நம் தேச ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே, பெரிய ஐஸ்கட்டி காலம் காலமாய் இருக்கிறது. இது உடைய வேண்டும், உடைய முயற்சி செய்ய வேண்டும்.''

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேதானா ஐஸ் கட்டி. படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும், பணக்காரர் களுக்கும் ஏழைகளுக்கும், உயர்ந்த ஜாதிக்கும் தாழ்ந்த ஜாதிக்கும் இடையே ஐஸ்கட்டி இல்லையா? காலம் காலமாய் நிற்கவில்லையா? இது உடைக்கப்பட வேண் டாமா?

எனக்கும், பிரியாவுக்கும் இடையே ஐஸ்கட்டி இருக் கிறது. படிப்புத் திமிர் என்கிற ஐஸ்கட்டி.

இதுபற்றி அந்த ரைட்டருக்கு எழுதலாமா? விதம் விதமான ஐஸ்கட்டிகள் பற்றிச் சொல்லலாமா? வேண் டாம். இனி எவனுக்கும் எழுத வேண்டாம். கதை படித்து விட்டு 'ஹா' என்று மலைக்க வேண்டாம். கதை முக்கிய மில்லை. கதையைவிடப் படிப்பு முக்கியம்.

''ச்சே... நான் ஏன் படிக்காது போனேன்'' பஸ் இறங்கி நாலு தெரு கடந்து வீட்டுக்குள் நுழைய, அண்ணன் ரேழியில் யாரோடோ பேசிக் கொண்டிருந்தார்.

"ஜாதகம் சரியா இருந்தா வர்ற மாசம் முடிச்சுறலாம். ஒண்ணுக்கு நாலா கொண்டாங்க. பொருந்தின இடம் போய் பார்ப்போம்."

செல்வி கவலையானாள்.

'ச்சே...' பின்னால் எத்திராஜு தன் மனைவியை வெளியே அழைத்தார்.

5

செல்வியை திரும்பிப் பார்க்க, எதிர்வீட்டு அம்மாள் அமைதியாக வாசலில் நிற்பது தெரிந்தது.

"கொஞ்சம் முதுகு சொறிஞ்சு வுடு." எத்திராஜுலு கட்டளையிட, அந்த அம்மாள் இரண்டு கைகளாலும் முதுகை மேலிருந்து கீழாகச் சொறிந்து விடத் துவங்கினார். இன்னமுறையில் தான் சொறிந்து விட வேண்டும் என்ற கட்டளை போலிருக்கிறது. எங்கே கூப்பிட்டாலும் எப்போது கூப்பிட்டாலும் சொறிந்துவிட வேண்டும். வந்து சேவகம் செய்ய வேண்டும். எதிர்க்க முடியாது. 'தெருவி லியா' என்று கேட்க முடியாது.

"உனக்கு கௌரதை என்னா, துடப்பக் கட்டை... புருஷனுக்குச் செய்யறத விட பெரிய கௌரதை என்னா" கேட்க உடனே பதில் வரும்.

சுகப்படுவது என்பது உடம்பாலா, மனசாலா... மனசு படுகிற சுகம்தான் பெரிய சுகம். பெண் தருகிற சுகம் 'ஏய்... என்றவுடன் ஓடிவந்து, 'சொறிந்துவிடு' என்றதும் சொறிந்து விட்டு, 'போதும்' என்றதும் விலகி நின்று, அடிமையாய் அவள் தருகிற சிஷ்ருஷை சுகம், பொங்கி, சோறு போட்டுத் தின்னும்போது மெல்ல விசிறி, விக்கும்போது நீர்க்குவளை

நீட்டி, 'ப்ஹோவ் ஏன்ற ஏப்பத்தோடு எழுந்திருக்கும்போது கையலம்பத் தண்ணீர் ஊற்றி, சாய்ந்தது எச்சல் தட்டு எடுத்துச் சுத்தம் பண்ண ஓடுகிறாளே அந்த ஓட்டத்தை, ஆட்டத்தைப் பார்ப்பதே சுகம். ஏவலுக்கு ஆள் இருக்கிறது என்கிற அகங்கார சுகம்.

'வேறு எந்த வேலைக்கும் போக வேண்டாம். இந்த வேலைக்குப் போ. என்றுதான் அண்ணா ஜாதகம் பார்க்கிறார். 'எச்சே' என்று கூப்பிட்டதும் வாசலுக்கு வரவும், முதுகு சொறியவும் 'போதும்' என்ற பிறகு விலகி நிற்கவும்... 'வாழ்க்கை பூராவும் இதையே செய்' என்கிறார். இப்ப இப்படித் தோணும். 'இரண்டு புள்ளை பெத்துட்டு வாடி... உட்கார்ந்து வகை வகையா பேசுவோம்' என்கிறாள் அண்ணி. இப்படிச் சொறிவதே சுகம் என்பது போலப் பேசுகிறாள்.

''ஆம்பளை முதுகு சொறிய மாட்டான்னு நினைக்கிறியா நீ... உங்கண்ணா எனக்கு கால்புடிச்சு விடும். இடுப்பு மிதிச்சிவுடும். நீ குடிச்ச பாலுதான் நான் குடிப்பேன்னு அடம் புடிக்கும். புருஷனுக்குச் செய்யறது தான் தெரியுதே தவிர, புருஷன் நமக்கு என்ன செய்ய றான்னு எவளும் சொல்றதில்லை. எவக்கிட்டயும் ''சொல்ற தில்லை''.

அண்ணி தனியே கூப்பிட்டு இப்படி ரகசியம் சொல்வாளோ.

இரண்டு பெத்துட்டு வாடி. வகை வகையா பேசுவோம். வகை வகையாய் பேச என்ன இருக்கிறது?''

''நாலு நாள் சண்டை போட்டு, எனக்குப் புருஷ சங்காத்தமே வேணாம்னு தள்ளிப் படு. அஞ்சா நாள் தூக்கத்துல கை பட்ட மாதிரி புரண்டு நெஞ்சுல கை வை, அடடா... கன்னுகுட்டி மாதிரி ஓடி வரும் புருஷன்.''

"பத்து நாள் ஊருக்குப் போயிட்டு வரட்டும். புருஷன் வந்த அஞ்சாவது நிமிஷமே எனக்கு முடியலைப்பா... இத் தினி நாள் இப்படி பிரிஞ்சிருக்க முடியலைன்னு அழுதுடு. அடடா... அன்னிக்கு மத்தியானமே அத்தினி சாம்ராஜ்ய மும் உன் கால் கீழ்தான்."

"ஒருநாள் பளீர்னு அடிச்சிடுச்சுன்னு வை. ஒண்ணும் சொல்லாத வாங்கிக்க. ஏன்டீ, கண்ணு சிவந்திருக்குன்னு உங்க மாமியார் கேட்டா, ஒண்ணுமில்ல அத்தை கக்கூஸ் கதவு சிக்கிக்கிச்சு. பளிச்சுன்னு இழுத்தேன், கண்ல பட்டுச் சுன்னு புருஷன் காதபட சொல்லு. அரை அவர்ல மன்னிப்பு கேட்டுருவாரு."

"அத்தைக்குத் தெரிஞ்சா கஷ்டம்னுதான் உங்க பேர் சொல்லலைன்னு அழுதபடி பேசு... இனிமே உன்னை கை நீட்டி அடிக்கவே மாட்டேன்னு கட்டிக்கும் புருஷனைக் கவுக்கறது சுலபம்டீ, செல்வி."

வாழ்க்கை முழுக்க கவிழ்க்கிற நாடகம்தானா? தன் பலம் வளர்க்காமல் பிறர் பலம் அறுக்கிற வேஷம்தானா? எல்லோரையும் எதிராளியாய் நினைத்து, பழத்தில் முள் வைத்து விழுங்கக் கொடுக்கும் காட்சி தானா? உதடு ஒட்டாத வசனம்தானா?

இதற்குப் பதில், பிரியா மாதிரி இங்கிலீஷ் புக்கும், டிபன்பாக்ஸுமாய் வேலைக்குப் போகலாம். பத்திலிருந்து, ஆறு வரை இரண்டாயிரம் ரூபாய்க்கு உழைத்து விட்டு இன்னும் இங்கிலீஷ் புக் வாங்கலாம். புடைவைகள் வாங்கலாம். புது சினிமா பார்க்கலாம். மாசம் இருநூறு ரூபாய் சேர்த்து அறுபது வயது வரை சேமித்து வற்ற காசை வட்டிக்குப் போட்டு அதில் காலம் தள்ளலாம். 'எச்சே' என்று எந்த நாயும் கூப்பிடாது. எவனுக்கும் முதுகு சொறிந்து விட வேண்டியிராது.

எதிர் வீட்டம்மாள் எல்லாம் சகித்துக் கொண்டிருக்கக் காரணம், போக்கிடம் இல்லாத குறைதான். போக்கிடம் இல்லாத சாக்கடையாய் தன்னை மாற்றிக் கொண்ட தால்தான். தேங்கின ஜலம்தான் சாக்கடை. தேங்காது ஓடிக்கொண்டே இருந்தால்... புத்தியும், பொருளும் பெருகிக் கொண்டேயிருந்தால்...

"அண்ணா, எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம். வேண்டவே வேண்டாம்."

இதை எப்போது சொல்வது அண்ணனிடம்... எப்படிச் சொல்வது? எல்லாப் பொண்ணுங்களும் இப்படித்தாம்மா சொல்லும் என்று எழுந்து போய் விடாமல் புரியும்படி எவ்விதம் சொல்வது?

செல்வி வீடு பெருக்கினாள். பாத்திரங்கள் தேய்த்தாள். உலர்ந்த துணி மடித்தாள். உலையேற்றினாள். அண்ணியின் ஆஸ்பத்திரி துணிகளை நனைத்து சோப்பில் ஊறப் போட் டாள். காய் நறுக்கினாள். 'கடைக்குப் போய் டெட்டால் வாங்கணும். காசு தரியா'' என்று அண்ணனிடம் கேட்டாள்.

"நான் வாங்கிட்டு வரேன் போ. எல்லாத்துக்கும் நீயே அலையணுமா?'' சட்டை போட்டு அண்ணன் வெளியே கிளம்பிற்று.

செல்வி காய் வதக்கினாள். பூஜை அறையை ஒழித்து சுத்தம் பண்ணி, விளக்குகளைப் புளி போட்டுத் தேய்த்து முற்றத்தில் சாய்த்து உலர வைத்தாள். கவிழ்ந்த பாத்திரங் களை உள்ளே கொண்டு போய் அடுக்கினாள். அண்ணன் டெட்டாலுடன் உள்ளே வந்தது. நனைத்து வைத்த துணிகளைத் துவைத்து, அலசி டெட்டால் விட்டுப் பிழிந்து முற்றத்தில் சீராய் உலர்த்தினாள். குளித்தாள். விளக் கேற்றினாள். படங்களுக்கு முன் விழுந்து வணங்கினாள்.

"சோறு போடட்டுமா... கொஞ்ச நேரம் போகட்டுமா?"

"உன் சௌகர்யம்."

"உனக்குப் பசிச்சா இப்பவே போட்டுர்றேன்."

"போடு."

இலை பரப்பி காய் வைத்து, சுடச்சுட சாதம் பரிமாறுகிற போது, அண்ணன் விரல் தீண்டாமல் இலையையே பார்த்துக் கொண்டிருந்தது.

"நெய் ஆயிடுச்சு, வாங்கிட்டு வரணும். மறந்துட்டேன்."

"ம்... பரவாயில்லை, குழம்பு ஊத்து."

"சோறு ஒதுக்கிக்கயேன். ரசம் வேற இருக்கு."

"எனக்கு மோர் போதும்."

"ஏன்?"

"ப்ச்சு."

"ஏன் கிடந்து உழப்பிக்கிறண்ணே?"

"உன்னை உருப்படியா கரையேத்தணும்னு நினைக்கறச்சே, இவ போய் படுத்துக்கறா. இவ இல்லாம எதும் முடியாது என்னால. அடுத்த வாரமே யாராவது உன்னைப் பொண்ணு பார்க்க வரேன்னு சொன்னா, யாரை வச்சு வாங்கன்னு சொல்றது? யாரை வச்சு காபி பலகாரம் கொடுக்கறது? காலைல போனவ... நீவந்து நாலு ஆள் வேலை செய்ற... எனக்கு ஒண்ணும் புரியலை போ."

"இப்ப எதுக்கு அலுப்பு, எனக்கு வேலை ஜாஸ்தின்னா... அண்ணி படுத்துக்கிச்சேன்னா?"

"எல்லாம் தான்."

"சூடா ரசம் குடி, முதல்ல, பசி பரபரன்னு எடுக்கும்."

"வேணாம்மா." கை நீட்டி இலை மறித்தாள்.

"இப்பப் போய் எனக்குக் கல்யாணம் பேசறது சரியா... அண்ணி உடம்பு தேறி வரட்டும். இதேன்னா ஆறு மாசம் ஆவும்."

"ஆறு மாசமா? வர வாரம் வந்துருவான்னு நினைச்சேன்."

"உஷ்ணக் கட்டியா... அப்பெண்டிஸா ஒரு வாரத்துல வர... கர்ப்பப்பையல்ல அறுத்துருக்காங்க. இதோன்னா நாலு வாரம் ஆவும் நிக்கறதுக்கு. அப்புறம் குனியக் கூடாது. கனம் தூக்கக் கூடாது. ரெஸ்ட்ல இருக்கணும்னு சொல்லியிருக்காங்க."

"படுத்த படுக்கையாவா இருக்கும்ன்ற?"

"உடம்பு விட மனசு பலஹீனமா இருக்கும்."

"போயிருச்சே... போயிருச்சேன்னு புலம்பல் இருக்கும். இனி புள்ளைப் பேறு இல்லவே இல்லைன்றபோது எதுக்குப் பொறந்தேன்னு ஏங்கி அதுவே சாகடிச்சுடும்."

"அவ உசிரோட வந்தா போதும்னு இருக்கு... புள்ளையாவது குட்டியாவது... ஒண்ணும் வேணாம் போ..."

"அண்ணி மேல பிரியம்தானா?"

அண்ணன் பதில் சொல்லாது உட்கார்ந்திருந்தது.

"சொல்லேன், பிரியம்தானா?"

நிமிர்ந்தது.

கண்ணில் ஜலம் கட்டி, விழிகள் இரண்டும் விளக்கு வெளிச்சத்தில் தெறித்தன. சட்டென்று திவலை திரண்டு கன்னம் இறங்கிற்று.

"ச்சீ... என்ன இது" செல்வி மெல்ல மெல்ல அண்ணன் சிவசுதானா? அன்பு சொல்லும் கண்ணீரா?"

"இனிமே எங்களுக்கு குழந்தை நீதான் செல்வி."

"நிசம்தானா?"

ஒரு கவளம் எடுத்து மூக்கு உறிஞ்சி விழுங்கிற்று.

"அப்ப நான் சொல்றதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேக்கறியா?"

"என்னா?"

"இப்போதைக்கு கல்யாணப் பேச்சு வேணாம்."

"ஏன்?"

"நின்னு செய்யறதுக்கு அண்ணியால.இப்ப முடியாது."

"ஆறு மாசம் போவட்டும்கிறியா?"

"நாலு வருஷம் போவட்டும்?"

"நாலு வருஷமா...?"

"நான் வேலைக்குப் போறேன். இங்கயே எங்கயாவது நல்ல இடமா..."

"உளறாத செல்வி. எதுக்குப் பொட்டப் புள்ளை வேலைக்குப் போறது... நம்ம குடும்பத்துல அந்தப் பழக்க மில்லை."

"கடனை வாங்கி, பிரஸ் வித்து என்னைக் கரையேத் திட்டா ஆச்சா... அப்புறம் பலதுக்கும் யாரு செலவு செய்ய முடியும்? இன்னும் கொஞ்சம் உரமா நின்ன பிறகு பேசலாம். பழம் பெருமை எதுக்கு வீணா. இருக்கற நிலைமைக்குத் தகுந்தபடி மாத்திக்க வேண்டியதுதானே..."

"வேணாம். இருக்கற உரம் போதும்."

"போறாதுண்ணே."

"பிரஸ் பெரிசு பண்ணப் போறேன். ஏற்பாடு நடக்குது."

"மாமனார்கிட்ட கடன் கேட்டுத்தானே... இப்பப் போய் சட்டமா காசு வாங்கலாம்னா, வேணாண்ணே அந்தக் காசு."

"யார் சொன்னா?"

"அண்ணி"

"அறிவுகெட்ட ஜென்மம். இதையேன் உன் கிட்டச் சொன்னா?"

"அண்ணே, என்ன நினைப்புல இப்படிக் காசு கேட்டியோ தெரியலை. ஆனா இனிமே அப்படி காசு வாங்கினா நம்ம வீடு விளங்காது. குழந்தை பொறக்கலை உங்க பொண்ணுக்கு. அதுக்கு ஈடா காசு கொடுன்னு கேட்டு வாங்கினா, நம்ம வீடு நல்லாருக்காது. அவங்க கொடுப்பாங்க. புள்ளைக்குச் சேர வேண்டியது இப்படிப் போவுதுன்னு புழுங்குவாங்க. நமக்கு உறுத்தும்."

"அதுக்கு... நீ வேலை..."

"ஏன் வேலைக்குப் போனா என்ன... ஆயிரமோ ஆயிரத்தைநூறோ பாங்கில அப்படியேப் போட்டு, நாலு வருஷத்திலே சௌகரியமா கல்யாணம் பண்ணலாம்."

"செல்வி உன் யோசனைய அப்புறம் கேட்கிறேன். ஒழுங்க இரண்டு வாரத்துல உங்க அண்ணிய வீட்டுக்கு வரச்சொல்லு."

"நஷ்ட ஈட்டோடயா?"

"ஆமா, நஷ்ட ஈட்டோடதான், என்ன இப்ப?"

"எனக்கு அந்தக் காசு வேணாம். அந்தக் காசுல கல்யாணம் வேணாம், நீயே முடிஞ்சு வச்சுக்க..."

"ஏன்... உனக்கு எங்க நோவுது?"

"நாளைக்கு எனக்கு அண்ணி கதி வந்தா நீ நஷ்ட ஈடு கொடுக்கணும் பாரு... அதுக்காகத்தான் சொல்றேன்."

பளீரென்று ஒரு அறை செல்வியின் கன்னம் தாக்கிற்று. 'பொட்ட நாயே... எனக்குப் புத்தி சொல்ல வந்துட்டியா?" தட்டு எட்டி உதைக்கப்பட்டது.

"ஒழுங்கா வூட்டோட இருந்து, நாங்க சொல்ற பையனுக்கு கழுத்து நீட்டு. வேலைக்குப் போறாளாம் வேலைக்கு. எட்டாவதோட முட்டி உடைச்சு வூட்ல உக்கார வச்சிருக்கணும். ப்ளஸ் டூ முடிச்சிட்டல்ல. பொழுது போவலை, பொழுது போவலைன்னு புஸ்தகம் படிக்க நேல்ல... அந்தக் கொழுப்பு பேச வைக்குது."

"எச்சில் கை உதறி அண்ணன் வெளியே போக, செல்வி திகைத்து உட்கார்ந்திருந்தாள்.

இது சிவசுவா... சிவசு இப்படிச் செய்வானா... செல்வி விழித்தாள். எழுந்து நின்றாள். வலி மூளையைத் தாக்கி கண் சொருகிற்று. மணைக்கட்டை இழுத்துப் படுத்துக் கொண்டாள். யாராவது இப்போது அருகே வந்து அணைத்து இறுக்கி ஆறுதல் சொல்லக்கூடாதா என்று ஏக்கம் பொங்கிற்று.

6

ஆனால் யாரும் அணைத்துக் கொள்ள மாட்டார்கள். நானிருக்கிறேன் என்கிற உறவு எவருக்கும் கிட்டாது. கிட்டினாலும் நிரந்தரமல்ல. அண்ணனுக்கு அழுகை வந்தது. அழுதான். கோபம் வந்தது. அடித்தான். எல்லா உறவுகளும் அவரவர் மனநிலைக்கு ஏற்றபடிதான் நடப்பார்களே ஒழிய, எதிராளி மனமறிந்து உனக்கு என்ன தேவை என்று கேட்டு நடப்பதில்லை. அப்படி கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலை அமைய வேண்டும்.

எனவே எதிர் பார்க்காதே- உன்னை நீயே அணைத்துக் கொள். உன்னிடம் நீயே பேசு. உனக்கு நீயே உரமேற்று,

எதிர்பார்த்து ஏங்கி இல்லையென்று புழுங்கிச் சாவதைவிட, எதுவாயினும் அசையாது இருக்கப் பழகு.

உன்னைப் பற்றி யோசி. உன் தேவை பற்றி யோசி உன் வாழ்க்கை பற்றி யோசி.

அண்ணன் தன் கௌரவத்துக்காக என் கல்யாணம் பேசுகிறது- அண்ணி- தன் இருப்பைக் காப்பாற்றிக் கொள்ள எனக்கு வளையல் லஞ்சம் கொடுக்கிறாள். என்னோடு பேசுவதே தன் படிப்புக்கும் தகுதிக்கும் இழுக்கென்று முன் சீட்டுக்கு அந்தப் பெண்கள் ஓடுகிறார்கள்.

இவர்கள் எப்போது என்னை என் விருப்பத்தைக் காதில் போட்டுக் கொள்வார்கள்? எப்போது என்னை மதிப்பார்கள். எனக்கென்று ஏதோ தகுதி வேண்டும். எனக்கென்று ஏதோ ஒரு பட்டம் வேண்டும் எனக்கென்று ஒரு நிலைமை வேண்டும். ச்சீ நாயே வூட்டோட கிட, என்று கை நீட்ட முடியாத தகுதி வேண்டும்.

என்ன செய்வது... நான் செய்வது...

இங்கு மீன் அரிந்து சோறாக்கி வேறு வீட்டுக்குக் கல்யாணமாகிப் போய்- அங்கும்... அதையே செய்து...

ஏன் என்ன தவறு... மீன் அரிவதிலும், சோறாக்குதிலும் என்ன இழுக்கு. ஆண் இப்படி யோசிக்கிறானா? சம்பாதிச்சு அம்மா கைல கொடுத்து, சம்பாதிச்சு பொண்டாட்டி கைல கொடுத்து, சம்பாதிச்சு பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி... யோசிக்கிறானா... நான் மட்டும் ஏன் மீன் அரிதலை மட்டும் என்று யோசிக்கிறேன். ஏதோ தவறு. ஏதோ கோபம். கஷ்டப்பட்டு சமைத்துப் பரிமாற கன்னத்தில் அடி வாங்கிய கோபம். நான் தவறாய் யோசிக்கிறேன். என்ன வேண்டும் எனக்கு? மறுபடி யோசி. செல்வி, என்ன வேண்டும் உனக்கு?

செல்வி படுக்கையை விட்டு எழுந்து கொண்டாள். மெல்ல எழுந்து முற்றத்துக்குப் போனாள். தரை சில்லென்று இருந்தது. நகரத்து மின் வெளிச்சத்தில் சுடர்கள் வெளிறித் தெரிந்தன. பளீரென்று வெள்ளை மினுக்கலாய் இரண்டொரு மேகங்கள் தெரிந்தன பட்சியோ, வௌவாலோ வானத்தில் குறுக்கே பறந்தது.

எனக்கு என்ன வேண்டும் என்பதை இப்போது தெளிவாக யோசிக்க முடியவில்லை. ஆனால், என் நிலைமை என்ன என்பது மட்டும் புரிகிறது. நாப்பதாயிரம் செலவில் கடன் வாங்கிக் கல்யாணம் எனக்குப் பண்ணுகிற நிலையில் வீடு இல்லை. பொருளாதார பலம் இல்லை.

மூன்று அண்ணன்களும் கொஞ்சம் சுமாராய் சம்பாதிக்கத் துவங்கிய பிறகு இது சாத்தியமாகலாம். இப்போது இல்லை. அண்ணி வீடு வசதி. தாங்கிக் கொண்டார்கள். இல்லையெனில் அந்தச் செலவு அண்ணன் தலையில் விழுத்திருக்கும். ஆறாயிரம் ரூபாய் கடனைச் சுமக்க வேண்டியிருக்கும். வளையலோ, கழுத்து சங்கிலியோ அடமானம் போயிருக்கும்.

கல்யாணச் செலவு, சீர் என்று பார்க்கும் போது அண்ணன் நல்ல வரனா என்று பார்ப்பதைவிட, தனக்குச் சௌகர்யமா என்று பார்க்கும். அண்ணன் சௌகர்யத்துக்கு யாரோ ஒருவனைத்தான் ஏற்க வேண்டி இருக்கும்.

அவன் 'எச்சே' என்று கூப்பிட்டாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

கல்யாணம் வேண்டாம் என்று இருந்து விட்டால்...

முடியாது.

அது தேவைதான். படுக்கை சுகம் பற்றியெல்லாம் தெரியவில்லை. ஆனால் ஒரு புருஷனோடு தெருவில் உரசி நடந்துபோவது சுகம்தான். இரண்டு குழந்தைகள், புருஷ

னோடு போட்டோ எடுத்து மாட்டிக் கொள்வது பெருமை தான். 'உனக்கு நெத்திலி துவையல் புடிக்குமா' என்று கேட்டுக் கேட்டு சமைப்பது குஷிதான்.

ரொம்பவும் எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் நல்ல வனாய், சுமாரான அழகனாய், கஞ்சத்தனம் பண்ண வேண்டியிராத சம்பாத்தியமாய், பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்பமாய்...

சுமாரான அழகு என்றால், ஒழுங்கான பற்கள். அடர்த்தி யான தலைமுடி, குள்ளம் என்று சொல்ல முடியாத உயரம், சுறுசுறுப்பாக இருந்தாலும் பரவாயில்லை. கொஞ்சம் நல்லவன் என்றால்... முன் கோபம் இல்லாத ஆள்... கோபம் வந்தாலும் நடுத்தெருவில் கூவாத ஆள், "என்னப்பா வயிறு நோவுதா? ஏன்... அடடா... இரண்டா வது நாளா... ஏன் அப்படி... வா... எழுந்திரு... முதல் டாக் டர்கிட்ட போகலாம். வேணாமா அட... எழுந்திருடின்ன ஈ" சின்ன அதட்டலில் கூட அன்பு காட்டுகிறவன்.

கஞ்சத்தனம் இல்லாத வருமானம் என்றால்... ஒரு ஸ்கூட்டர் டி.டி. பெட்ரூம், டைனிங் ரூம்... ஹால், கிச்சன். டிபிள்காட்.

ஏய் சொல்லி, வேணாம்... வேணாம்னா வேணாம்.

செல்விக்கு அயர்ச்சியாய் இருந்தது. இது எதுவும் இல்லாத ஒரு ஆளுக்கு கழுத்து நீட்டினால்... முன் பல் நீண்டு வாய்க்கடையோரம் வெள்ளை விழுந்து, வழுக்கை தலையாய் குள்ளமாய், ஆயிரத்து நூறு சம்பளம், அதுல அம்மாகிட்ட நானூத்தி அம்பது கொடுத்துடணும், மிச்சத்துல எதுனா செய்துக்க. ஆனா குழம்புல உறைப்பு குறைஞ்சது, சட்டிய தலைல கவுத்துடுவேன் வேண்டாம். இப்போதைக்கு சுகமும் வேண்டாம். அவஸ்தையும் வேண் டாம். சுகமா அவஸ்தையா என்று கதி கலங்க வேண்டாம்.

வேறு என்ன செய்யலாம்? வேலைக்குப் போகலாம். பிரியா மாதிரி, ஃபிலிப்ஸில் வேறு ஏதாவது கம்பெனியில் தோளில் பை மாட்டி, புத்தகம் சுமந்து எட்டுமணி நேரம் வேலை செய்துவிட்டு வரலாம். நாலு பேருடன் பேசிப் பழகலாம். நான்கு இடங்களைப் பார்க்கலாம், சாமர் செட்மாம் யாரென்று தெரிந்து கொள்ளலாம். கொஞ்சம் இங்கிலீஷ் பேசக் கற்றுக்கொள்ளலாம்.

ஏன்... ப்ரியா அப்படி ஓடிப்போனாள்? டர்ட்டி ரைட்டிங்க்ஸ் என்றாள். நல்ல ரைட்டிங் எது? யார் எழுதுகிறார்கள்? இவன் நன்றாய்தான் எழுதுகிறான். ஏன் டர்ட்டி ரைட்டிங்ஸ் என்று சொன்னான்.

வீடு தாண்டி, மீன் அரிவது தாண்டி, அண்ணி அண்ணனைத் தாண்டி ஒரு உலகம் இருக்கிறது. இந்த மாட்டுக்காரத் தெருவைத் தாண்டி ஒரு உலகம் இருக்கிறது. மவுண்ட் ரோட், ஜார்ஜ் டவுன், சென்ட்ரல் என்று பல இடங்கள், பல மனிதர்கள் இருக்கிறார்கள். அந்த எல்.ஐ. சியில் யாரெல்லாம் இருக்கிறார்கள்? என்ன வேலை செய்வார்கள்? புரியவில்லை.

அவ்வளவு உயர பில்டிங்கில் ஜன்னலோர சீட் கிடைத்தால் யாராவது வேலை செய்ய முடியுமா? நீலக் கடலையும், பட்டணத்தையும் பார்த்தபடியே உட்காரத் தோணுமே தவிர, டைப் அடிக்கத் தோணுமா?''

''செல்வி தூங்கலையா?'' பின்னே குரல் கேட்டது.

7

அண்ணா கலைந்த கிராப்பும், தூங்கின கண்ணுமாய் நின்றிருந்தார்.

"தூக்கம் வரலை"

"எனக்கு குடிக்கத் தண்ணி எடுத்தா- தலைமாட்டுல எப்பவும் தண்ணி வை."

மறந்து விட்டது. அண்ணி சொம்பு ஜலம் தினம் இரவில் எடுத்து அண்ணா தலைமாட்டில் வைப்பாள். நடுநிசியில் சொம்பு ஜலம் அண்ணன் குடிப்பது வழக்கம் என்று சொல்வாள்.

செல்வி உள்ளே ஓடினாள். தண்ணீர் மொண்டு ஹாலுக்கு வந்தாள்.

"அழுதியா செல்வி?"

"இல்லைண்ணா."

"அடிச்சுட்டேன்னு கோவமா?"

"இல்லை."

"படுக்கச் சொல்ல எனக்கு கண் கலங்கிடுச்சு. அப்பா, கையைப் பிடிச்சுப் பாத்துக்கடா பாத்துக்கடான்னு சொல்லிட்டுப் போயும் கை நீட்டி அடிச்சிட்டனேன்னு..."

"வுடுங்கண்ணே."

"லேடீஸ் வேலைக்குப் போறது அப்பாக்குப் புடிக்காது செல்வி, அதான்."

"புடிக்குமா புடிக்கலையான்றது முக்கியம் இல்லை, இப்ப கல்யாணம் முடியாது."

"கடன் வாங்கி முடிக்க முடியும் செல்வி."

"நசுங்கிடுவே அண்ணே, பிரஸ் வித்து நீ எங்கியாவது கம்பாஸிடர் வேலைக்குப் போகும்படியா ஆயிடும்."

"அப்படித்தான் முடிவு பண்ணிட்டேன்."

"அடுத்தடுத்த செலவுக்கு கம்பாஸிடர் வேலைல காசு கிடைக்காது."

"அப்ப பாத்துக்குவம்."

"இப்பவே யோசிக்கறது நல்லது."

"எம்மா புடிவாதம் புடிக்கற."

"நான் வேலைக்குப் போறேன்."

"ப்ளஸ் டூ படிப்புக்கு யார் வேலை தருவா?"

"எதுனா கிடைக்கும்."

"வீட்ல முள்ளா குத்துது?"

"ஆமா."

"என்ன ஆமா?"

"சும்மா பொங்கித் தின்னு, ரேடியோ கேட்டு, கதை புக் படிச்சு... உடம்பெல்லாம் முள்ளு குத்தினா மாதிரிதான் இருக்கு."

"அதுக்குத்தான் கல்யாணம்."

"உன்னால இப்ப முடியாதுண்ணே."

"ஒரு வருஷத்துல முடிச்சு காட்டறேன்."

"அதுவரைக்கும் வேலைக்குப் போறேன்."

"வேலைன்னா என்ன வேலை?"

"கிளார்க், டைப்பிஸ்ட் ஏதாவது வேலை"

"எங்க"

"தேடணும்"

"தெரியாத இடத்துக்குப் போகக் கூடாது."

"போன தெரிஞ்ச இடமா போயிடுமே."

"ஏடாகூடமா ஏதாவது ஆயிடுச்சுன்னா... குடும்பத்துக்குக் கெட்ட பேரு."

"தெருவுக்கு நூறு பொம்பளைங்க போறாங்க. எடாகூட மாவா ஆயிடுச்சு. நீ சரின்னு சொல்லு, நான் நாலு இடம் தேடறேன்."

"வேணாம்."

"ஏன்?"

"நானே தேடறேன். நல்ல இடமா, நம்ம ஆளு இருக்கிற இடமா..."

"அண்ணே."

"போய் வர சுலுவா இருக்கணும். ராத்திரி மூடிடக் கூடாது. பத்து மணிக்குப் போனா... அஞ்சு மணிக்குத் திரும்பினமான்னு இருக்கணும்."

"அப்படி சட்டமா கேட்க முடியுமா?"

"அப்படி முடிஞ்சா போகலாம்."

வேதாளம் இறங்கி வந்திருக்கிறது. மேலும் இழுப் பானேன்... தானாய் வரும்.

"சரி, உன் இஷ்டம் போலப் பாரு."

"ஒரு வருஷம்தான் செல்வி, அப்புறம் விட்டுருன்னா விட்டுரணும்."

"சரி"

"உங்க அண்ணிகிட்ட இப்போதைக்கு சொல்லாத."

"ஏன்?"

"அவமானம். வேலைக்கு அனுப்பறாரு தங்கச்சியன்னு அவங்க பேசுவாங்க.

"வர மாசமே இட்டாந்துடவா?"

"ஆறு மாசம் ஆவுன்னியே, இப்ப?"

"வந்து இங்க படுத்துக்கிட்டு ரெஸ்ட் எடுத்துக்கட்டும். உட்கார்ந்தபடி வேலை செய்யட்டும். நான் சமைக்கறது? துணி தேய்க்கறது பார்த்துக்கறேன்."

"வேலைக்குப் போய். சமையலும் பாத்து எப்படி அது..."

"முடியும்."

மறுவாரம் அண்ணனும் தங்கையும் சூளைமேடுக்கு கிளம்பிய போது, அண்ணி நடமாடிக் கொண்டிருந்தாள்.

"என்னாடி மூஞ்சி துள்ளுது. அண்ணன் கல்யாணம் பேசிட்டாரா நான் இல்லாத?"

"அதெல்லாம் இல்லை."

"பின்ன..."

"நான் வேலைக்கு போறேன்."

"வேலைக்குப் போறியா?"

"கூவாத."

"என்னாடி கூத்து இது? உன்னைக் கரையேத்தாத, வேலைக்கு அனுப்பினா சிரிக்க மாட்டாங்க?"

"நாற்பதாயிரம் ஆவும். உங்க வீட்ல கேட்டு கொண்டாறியா?"

"அது எப்படி தருவாங்க?"

"அப்ப வாய் மூடிக்கிட்டிரு. வரமாசம் வந்து சேரு."

"எங்க வூடு சிரிக்கும்."

"சிரிச்சா அப்புறம் நடக்கறதே வேற."

"என்ன பண்ணுவ?"

"எங்க அண்ணனுக்குப் பொண்ணு கேட்டு ஆளு வருதுன்னு லேசா சொன்னா போதும்."

"செல்வி..."

"நம்ம வீடு அது. இதில்லை. அங்க கஷ்டம் நஷ்டம் நம்மது. மத்தவங்களைப் பத்தி கவலை இல்லை. உங்க வீடு சிரிக்கும்கறதுக்கு நாங்க உட்கார்ந்து புலம்ப முடியாது."

"அதிகமா ஆடற... வேணாம் சொல்றதைக் கேளு-"

"நான் சொல்றது கேளு. அந்த ப்ரஸ் அடமானம் வச்சு தெருவுல நிக்கறதை விட நான் வேலைக்குப் போறது நல்லது. அண்ணனை ஒரு வழியா சமாதானப்படுத்தி வச்சிருக்கேன். நீ குறுக்க பேசின... பொல்லாதவளாயிடுவேன்."

"பொல்லாத்தனம் தான் வந்துருச்சே."

"அனுபவி. வந்து வாக்கப்பட்டிருக்கல்ல, அனுபவி."

"நான் இப்பவே வரேன் உங்களோட."

"எதுக்கு?"

"உங்கண்ணனுக்கு உறைக்கற மாதிரி பேச அங்கதான் முடியும். இங்க கத்த முடியாது."

"வா, வந்து கத்திப் பாரு."

அண்ணி ஒரு மாதத்தில் திரும்பினாள். நடுக்கூடத்தில் நின்று அண்ணனைத் திட்டினாள்.

"அவதான் வேலைக்குப் போணம்னு கேட்டா உங்களுக்கு அறிவில்லை...? எதுக்குத் தலையாட்டறதுன்னு இல்லையா? எங்க வேலைக்குப் போப் போறா... என்ன வேலைக்கு போப் போறா. எத்தினி சம்பாதிக்கப் போறா. சம்பாதிச்சு என்ன செய்யப் போறா... காலைல போய் சாயங்காலம்வர பொண்ணை வேலைக்கு தானடி போறன்னு நீங்க கேட்க முடியுமா? நான் கேட்க முடியுமா? அப்படி கேட்டதா வச்சுக்குவம். இவ ஒழுங்கான

பதில் சொல்வாளா? ஏன் அனுப்பணும்? இப்ப எதுக்குக் கேட்கறோம்னு நமக்கே தோணாதா?

நான் சொல்றது புரியறதா? எப்ப வீட்டை விட்டு இவளை வேலைக்கு அனுப்பறமோ அப்புறம் இவ நமக்கு அடங்கறவ இல்லை, உடுத்தறதும் போறதும் வரதும் அவ இஷ்டமாயிடும். கேட்டா சம்பாதிக்கறேன்னு பேச்சு வரும். நம்ம பொண்ணே நமக்கு அன்னியமாயிடும், அந்தப் பொண்ணு கல்யாணமும் நம்ம பொறுப்பு இல்லைன்னு தட்டிக் கழிக்கத் தோணும்.

தானா தேடி, கல்யாணத்தை முடிச்சிக்கிட்டு மாலையும் கழுத்துமா வந்து நின்னா, சரி எங்கனா எப்படின்னா போன்னு அட்டைப் பொட்டில குக்கர் போட்டு கலர் பேப்பர் சுத்திக் கொடுத்துட்டு வுட்டுருவோம்.

இதே... இந்த நாயி வூட்டோட கிடக்கட்டும், ஒவ்வொரு ராத்திரியும் நீங்களும் நானும் இவளைப் பத்திதான் பேசுவோம். ஐயோ கரையேத்தணுமே கரையேத்தணுமேன்னு ஒவ்வொரு கிராமா தங்கம் சேர்ப்போம்.

அதுக்குத்தாண்டீ பயம்னு சொல்றீங்களா? எப்ப நான் தங்கம் சேர்த்து எப்ப இவளைக் கரையேத்தறதுன்னு கவலைப்படறீங்களா? அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.

இருபத்தேழு பவுன் தாலிக் கொடி உள்பட என்கிட்ட இருக்கு. இது என் சொத்து. இப்ப உங்க சொத்து சந்தோஷமா இருபது பவுன் அவ கழுத்துல போட்டுர்றேன். இன்னும் இடிக்குதா, என் கழுத்துல மஞ்சுக்கயிறு கட்டிக்கினு தாலிக்கொடிகூட அவுத்துத் தரேன்.

கடவுள் சத்தியத்துக்குச் சொல்றேன். பொண்ணை வெளியே அனுப்பாதீங்க. இந்த இரண்டரை லட்சம் ஓட்டு வீடு நாலு பேர் பங்குன்றீங்களே, யார் நாலு பேர்? உங்க

தம்பி இரண்டு. நீங்க ஒண்ணு, இவ ஒண்ணு. குதிரு மாதிரி தங்கச்சிய வச்சிக்கிட்டு சொத்துல பங்கு என்ன... வித்து கல்யாணம் பண்ண முடியாதா? எனக்கு என்ன புள்ளையா குட்டியா... உங்க பிரஸ் காசுல குடித்தனம் நடக்காதா?''

உங்க தம்பி சொத்துல பங்கு கேட்டா, கல்யாணத்து செலவுக்கு காசு குடுடா முண்டம்னு கேட்க முடியாதா?

வீட்டுக்குப் பெரியவங்க நீங்க. இப்படி ஒரு முடிவு எடுக்கத் தெரியாதா? பொட்டச்சி பேச்சு கேட்டுட்டு தலை யாட்டிடறதா? அங்க வந்து மிரட்டறா... ஏதாவது வாயத் திறந்தா எங்கண்ணனுக்கு வேற இடத்துல பொண்ணு பார்ப்பம்னு. இங்க வாடி. நாங்க யாரு தெரியுமா? சூளை மேடு ஆசாமிங்க.''

ரெண்டு தடவை வாய் வார்த்தையா சொல்லிப் பார்ப்போம். கேக்கலியா ஒரே வெட்டுதான். வேற இடம் பார்த்துருவியா? நல்ல உசிரோட இருக்கறப்ப உன்னால முடியுமா? தள்ளி வைக்கிறது அத்தினி சுலபம்னு நினைச்சுக் கிட்டிருக்கியா? சரி... எங்க அம்மா வூட்ல நின்னுட்டிருக் கப்ப நாத்தனாரைத் தூக்கியெறிஞ்சு பேசவேணாமேன்னு வாயை மூடிக்கிட்டிருந்தேன்.

நான் இல்லாத நேரத்துல அண்ணன் மனசை தங்கச்சி மாத்திட்ட... இப்ப என் புருஷன் மனசை நான் மாத்திக் காட்டட்டுமா...? உன்னையும் இன்னும் ரெண்டு தம்பிங் களையும் கண்ல விரல் கொடுத்து ஆட்டி வச்சிருவேன். உங்க அண்ணனோட அடி உதைக்கெல்லாம் பயப்படறவ நான் இல்லடி.

அத்தினி திமிர். கண்ட புஸ்தகமெல்லாம் படிக்கிற பாரு, அதுல வந்த திமிர். பொத்துன மாதிரி புருஷன் வேணுமாம். அவன் பொயட்ரி சொல்லணுமாம். தலை சீவி வுடணுமாம். பாவாடையை எடுத்து குளிக்கறப்ப ரூம் கதவுள போட்டு

என்ன கண்ணம்மான்னு கொஞ்சணுமாம். கதவு இடுக்கு வழியா கால் பார்க்கணுமாம்.

மாஞ்சு மாஞ்சு படிக்கிறியேன்னு நானும் அந்த புஸ்தகத்தைப் படிச்சேன். எந்த வூட்ல நடக்கும் இதெல்லாம்? எழுதினவன் வூட்ல நடக்குமா இதெல்லாம்? உள் பாவாடை கொண்டாந்து போடுங்கன்னா, என்ன சுண்ணம்மான்னா வந்து போடுவான், குளிக்கப் போறதுக்கு முன்னாடி எடுத்துட்டுப் போக முடியலையாடி முண்டம்னுவான். இதுக்கு ஒரு ஆளான்னு எகிறுவான். அதான் ஆம்பளை. போடி, போடி போக்கத்தவளே... அவன் எழுதறானாம்... இவளுங்க உருகறாளுங்க. புருஷன் முறைப்பா இருப்பான். விறைப்பா இருப்பான். கொஞ்ச நேரம் கொஞ்சுவான். கோவப்படற நேரம் கத்துவான். குளிக்கிற இடத்துல வந்து கொஞ்சினா அலுத்துத்தான் போகும். கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்கவுடேன்னு தோணும். புஸ்தகத்தை நம்பாதபடி, எழுதறது வேற... நிஜத்துல வாழ்க்கை வேற.

பொம்பளை வேற, ஆம்பளை வேற... ஒட்டிக்கின்னு போலாமே ஒழி. ஒண்ணுக்குள்ள ஒண்ணா ஆக முடியாது. பொம்பளை ரகஸ்யம் பொம்பளைக்கிட்ட. ஆம்பளை ரகஸ்யம் ஆம்பளைக்கிட்ட. உதிரம் கொட்றதை ஆம்பளைக்கிட்ட சொல்ல முடியுமா... காட்ட முடியுமா?

மூஞ்சி பொத்திக்கறல்ல... சொல்ல முடியாதுன்னு தெரியுதுல்ல. ஆனா இதை பொம்பளைக்கிட்ட சொல்லலாம். காட்டலாம், என்ன பண்றதுன்னு கேட்கலாம்.

ஆம்பளைக்கு வேற உலகம்டீ, தூக்கமோ, வேதனையோ, துட்டு இல்லாத குறையோ அவன் பொம்பளைக்கிட்ட சொல்லி அழுவ முடியாது. அழுதா ஆக முடியாது. அவன் இன்னொரு ஆம்பளைக் கிட்டதா புலம்ப முடியும்.

அடியே... நான் வாழ்ந்தவடி. எனக்குத் தெரியும் என் கிட்ட கேளு. நான் சொல்லித் தரேன். எவனோ போக்கத் தவன் எழுதினத படிச்சுட்டு மாஞ்சு போவாத, ஒரு வேளை என் புருஷன் உதறிட்டா, எனக்குன்னு ஒரு சம்பாத்தியம் வேணாம்னு கேட்பீங்க. தெரியும்டி. உன்னை மாதிரி கிறுக்குப் பொண்ணுங்க என்னா கேட்கும்னு எனக்குத் தெரியும்.

தொப்புள்லேர்ந்து தொடை வரைக்கும் மாங்கா கீறின மாதிரி வடுவோட என் புருஷன் கிட்ட வந்துருக்கேன். கருப்பப் பையைத் தொலைச்சுட்டு வந்து நிற்கறேன். இனி புள்ளை பெக்க முடியாது. படுக்கைக்கும் உபயோக மில்லை.

தேஞ்சு போன விளக்கமாறு மாதிரி வந்திருக்கேன், என் புருஷன் ஒதுக்கி வச்சுட்டா இத்தினிநாள் வாழ்ந்ததுக்கு அர்த்தம் உண்டா? இன்னிக்கும் எம்புருஷன் என்னை ஒசத் தியா நினைக்கிறார். என்னிக்கும் நினைக்கும்படி பண்ண என்னால முடியும்டி. ஏன் புருஷன் ஒதுக்கணும்? பொம் பளைய சொல்லு... ஒதுக்கப்படற மாதிரி பொம்பளைய ஏன் இருக்கணும்? வளைஞ்சு கொடுத்து வளைச்சுப் போட் டுக்கத் தெரியலன்னா அப்புறம் நீ என்ன பொம்பளை?

பொண்டாட்டிய ஒதுக்கி வைக்கிறவனை பெரியவங்க வுட்டுருவாங்களா? நாங்க நாலு இடம் பார்த்து விசாரிச்சுத் தான் பண்ணி வைக்கிறோம், நல்லவனா. கெட்டப்பழக்கம் இருக்கா... உத்தியோகம் என்னா... உடம்பொறுப்பு எத்தினி... அதெல்லாம் எப்படி இருக்கு. எல்லாம் கேட்டுத் தான் பொண்ணு கொடுக்கறோம். அப்பன் ஆயிய எதிர்த்து பண்ணிக்கிட்ட ஒடுகாலி வேணா ஒதுக்கி வைச்சா யார் கிட்ட போய் நிக்கறதுன்னு பயப்படலாம். நீ எதுக்குப் பயப்படணும்? அப்படி ஏதாவது ஆச்சுன்னா, சும்மா ஒரு பேச்சுக்கு சொல்றே ர், வூட்டு வாசல்ல நின்னு நியாயம்

கேட்க மாட்டமா? அவன் பொண்ணு குடுத்த இடத்லேர்ந்து ஆளுங்களைக் கூட்டிட்டு வந்து, எங்க பொண்ணுக்கு நியாயம் சொல்லுன்னு கேக்க மாட்டமா...?

ஒண்ணுக்குள்ள ஒண்ணு கொடுக்கறது வாங்கறது இத்தினியும் யோசிச்சுதாண்டி. ஊர் உலகம் ஒண்ணும் முட்டாள் இல்லை. தலைமுறை தலைமுறையா பொண்ணு கொடுத்து புள்ளை கேட்கறது சாதாரண விஷயமில்லை. ஆயிரம் காலத்துப் பயிறு. விதைப்போ அறுப்போ விவரமில்லாத நடக்காதடி, உன் பயிருல பூச்சி புடிச்சா என் பயிரும் நாசமா போயிடுமேன்னு பதறுவான். உன் வீட்ல நெருப்பு புடிச்சா என் வீட்டுக்கும் வந்துடுமோன்னு துடிப்பான். கூப்பிடாத வந்து நிப்பாண்டி. கூட நின்னு மருந்து அடிப்பான். கூரை மேல நின்னு தண்ணி ஊத்துவான். ஜாதிக்கட்டும் ஊர் கட்டும் வெறும் சடங்கு இல்லை. அது வாழ்க்கை.

ஆம்பளையும் பொம்பளையும் கட்டிக்கினு தனியா போயிட்டா, வேற உலகமாயிடுவாங்களா? ஒருத்தரும் இல்லாத இடத்துக்குக் குடி போயிடுவாங்களா?

அரை வேக்காடு, உன்னைச் சொல்லிக் குத்தமில்லை. தப்பு எம்மேலதாண்டி. மூஞ்சி தெரியாத பாப்பானுக்கு லெட்டர் எழுதின போதே நான் மடக்கி தவடைல போட்டிருக்கணும். போடாதது என் தப்பு. அதப் படிச்ச மயக்கத்துல' கடிதாசு எழுதற திமிர்ல வேலைக்குப் போறேன்ற.''

''யாருக்கு எழுதினா.''

''யாரோ பாலமுருகனாம். கதை எழுதறவானாம். இவ படிச்சாளாம். பாராட்டணுமாம். இது லெட்டர் எழுதி அவன் லெட்டர் போட்டான். அவன் பேரு என்னாடி...''

செல்வி பேசாதிருந்தாள்.

''எதுக்கு லெட்டர்லாம் எழுதணும்?''

"கேட்டேன்... எழுதினா என்ன தப்பு? அவங்க நல்ல வங்க, தப்பு தண்டா போகாதவங்க, பதிலே கூட போட மாட்டாங்கன்னா, மறுநாளே முழ நீளத்துக்குப் பதில் எழு திட்டான். பொம்பளை லெட்டரில்ல... படிச்ச வுடனே பதில் எழுதிட்டான்."

"எங்க அது..." திருநா அதட்டினான்.

செல்வி பேசாதிருந்தான்.

"கேட்கறேனில்ல... எங்க அது..." குரல் உயர்த்தினான்.

செல்வி உள்ளே போய் மடித்த கடிதத்தை எடுத்து வந்து நீட்டினாள்.

அண்ணன் பிரித்துப் படித்தான். முகம் மாறினான்.

"என்ன இது... என்னங்கிறேன்." உரக்கக் கத்தினான்."

"உங்கள் பெயர் மிக அழகாக இருக்கிறது... மார்கழி மாதக் குளிர்போல... சொல்லும் போதே ஒரு கம்பீரம் வருகிறது."

ஆள் காட்டி விரலால் அந்த வாசம் குத்திக் காட் டினான்.

"இவன் கொண்டாடறதுக்கா உனக்குப் பேர் வச்சோம். யாரு இவன். பேர் என்னா... அட்ரஸ் எது" புரட்டித் திரும்பினான்."

"போய் இரண்டு வார்த்தை கேட்கறேன். உன் பொண்டாட்டி பேரு என்னா சொல்லு? கேட்கச் சொல்ல குளிருதான்னு பார்க்கணும்னு கேட்கறேன். இதோ பார், செல்வி, அண்ணனுக்குத் தெரியாத ஒரு காரியம் கூட இந்த வூட்ல நடக்கக் கூடாது. இந்த மாதிரி கடிதாசு போக்கு வரத்து எல்லாம் நம்ம வூட்ல சரிப்படாது."

நெடுகக் கடிதம் கிழித்தான். செல்வி விழி விரிய வேதனையுடன் நின்றாள். மறுபடி பிடித்து கிழித்தான் சுக்கு

சுக்காக்கினான். முற்றத்தில் போட்டான். கிழித்தவை பறந்தன. செல்வியின் மனசு போல திசை தெரியாது கலைந்தன.

"இதைக் கிழிச்சு என்னா... இவ படிக்கிற புஸ்தகம் தப்பு. அதைக் கொளுத்தணும். எங்கடி அந்த புஸ்தகம்?"

அண்ணி உள்ளே போனாள். அலமாரி திறந்தாள். புத்தகங்களை வாரினாள். கொண்டு போய் முற்றம் கொட்டினாள். சமையலறைக்குப் போய் கெரஸின் எடுத்தாள். ஊற்றினாள். நெருப்புக்குச்சி கிழித்து தொலைவில் நின்று போட்டாள்.

குபீரென்று பற்றியது.

மேலே கிடந்த அகல்யா 'நெருப்பில்' தகதகவென்று எரிந்தது. கருதி மடிந்தது. கருப்பு சாம்பலாயிற்று. காற்றடிக்க, மேலே பறந்தது.

செல்வி வேதனையுடன் அண்ணியைப் பார்த்தாள். அண்ணனைப் பார்த்தாள். எரியும் குவியல் பார்த்தாள்.

அவளுக்குள்ளே ஒரு வெஞ்சினம் படர்ந்தது.

8

எரிந்த அத்தனைக் குப்பையும் அண்ணியே தண்ணீர் ஊற்றித் தள்ளினாள்.

சுருண்டு ஹாலில் கிடந்த செல்வியை உலுக்கி 'சாப்பிடவா' என்று கூப்பிட்டாள். செல்வி அசையவில்லை. உள்ளே இனம் தெரியாத கோபம் பொங்கிற்று. ஆனால் இது நேரமில்லை.

இது விலங்கு. பூட்டி சுவரோடு பிணைத்திருக்கிற நேரம். விலங்கு உடைக்கலாம். இழுத்து முழுபலம் கொண்டு உதறி சங்கிலி அறுக்கலாம், விழும், உடையும், உறவுச் சங்கிலியை முறிக்க, குடும்பம் என்கிற கூரை தரை தொடும். பிறகு எங்கே போவது? கூரையற்று எவ்வளவு காலம் வாழ்வது? தனியே எப்படி நிற்பது?

அண்ணி வன்முறை காட்டுகிறாள். வாசல்படி இறங்கக் கூடாது என்கிறாள். ஏன்... ஏன்? எதற்கு இத்தனை பயப்படுகிறாள்? அண்ணி நல்லவளா கெட்டவளா? வளையலைக் கழற்றித் தன் கையில் திணித்த அண்ணியா இவள்? ஓடி ஓடிச் செய்தோமே, அதற்குப் பரிசா இது. எல்லா நாத்தியைப்போல இவள் கர்ப்பப்பை எடுத்ததற்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியிருக்க வேண்டுமோ. நாக்கு புடுங்கிக்கிற மாதிரி நாலுவார்த்தை பேசியிருக்க வேண்டுமோ.

'போனால் போவுது. நீ நல்லபடி உடம்பு தேறி வா.' என்கிற இதம் தவறோ? உன் வேதனையில் இத்தனை இதம் காட்டினேன், எனக்கு ஏன் இப்படி வஞ்சனை செய்கிறாய்? நீ நல்லவளா, கெட்டவளா?

திரும்பி வரும்போது உன் வீடு மொத்தமும் உபசாரம் செய்ததே... 'கார் ஏடு' கூவியதே... எல்லாம் மறந்து விட்டதா? நாத்தி அசடு என்று நினைத்து விட்டாளா?

ஏதோ நடந்திருக்கிறது, அண்ணிகூலி ஆள் பக்கம் செல் வது போல, எங்கோ ஏதோ நடந்திருக்கிறது. ஏவி விட்ட மிருகம் மாதிரி அண்ணி நடந்து கொண்டதற்கு ஏதோ இருக்கிறது.

யாரோ ஏவி விட்டிருக்கிறார்கள்.

அண்ணனின் வீடு பேசியிருக்குமோ? இருக்கும், 'அந்தப் பொண்ணை வூட்டோட வச்சிருந்தா, அவங்க அண்ண

னுக்கு வேற பொண்ணைக் கட்டி வைக்கிறதைப் பத்தி இன்னைக்கு இல்லேன்னாலும் பின்னாடி மொள்ள மொள்ள ஆரம்பிப்பா. மொதக் காரியமா அவளைக் கரை யேத்தற வழியப் பாரு. அவ அவளுக்குப் புருஷன், குழந்தைன்னு ஆனாதான் அடுத்த ஊடு கலைக்காத இருப்பாளுங்க. கொஞ்சம் வுட்டா போச்சு. நீ நின்னா குத்தம், உட்காந்தா குத்தம்னு ஆயிடும். புருஷன்கிட்ட அழுது சமாளிச்சிடலாம். இதுங்கக்கிட்ட முடியாது. அனுப்பி வச்சுடு முதல்ல... கல்யாணத்தைப் பண்ணி.''

ஏவி விட்டிருப்பார்களோ.

இல்லை, இரண்டு மாதம் வீட்டில் இல்லை. மந்திரி சபை மாறியிருக்கும், மறுபடி சகலமும் தன் கைக்கு வர தன்னைக் கவிழ்க்க காரியமா? ஒரு அடி தாடையில் போட்டு உட்கார வச்சுட்டா, அப்புறம் எல்லாம் நம்ம சொல்றபடிதான் என்கிற தந்திர கணக்கா?

'அகல்யா' பொய் என்கிறாள்.

அது குடித்தனமில்லை என்கிறாள். பாவாடையோட பாத்ரூம் வாசல்ல பத்துநாள் புருஷன் நின்னா அலுத்துரும் படி. 'அப்பால போ... தேச்சு குளிக்கணும்'னு வெடு வெடுக்கத் தோணும். பொம்பளை ரகசியத்தை புருஷன் கிட்ட சொல்ல முடியுமா என்று கேட்கிறாள்.

முடியாதா?

ரத்தப் போக்கு காட்டுவியாடி என்கிறாள்.

கஷ்டம்தான். பொம்பளை வேற... ஆம்பளை வேற. ஆம்பளை ஆம்பளைக்கிட்ட அழலாம். பொட்டச்சிக் கிட்ட அழக்கூடாது.

ஏன்... ஏன்... ஏன்?

என் புருஷன் என் தோளில் விழுந்து அழக்கூடாதா? அழுதால் தேற்ற மாட்டேனா? ரத்தப் போக்கு மட்டுமா... பிரசவம் புருஷன் நின்று பார்க்க வேண்டும். என்கிறார் களாம். அவள் வலி, வேதனையை அருகே இருந்து குழந்தை ஜனிக்கிற விஷயம் முழுவதும் நின்று பார்க்கக் கட்டளையிடுகிறார்களாம், ஐரோப்பாவில். இது... இங்கு கூடாதா? என்ன தப்பு?

பாரேன் நின்று. பிள்ளைப்பேறு பாரேன்... பெண் தவிப்பது பாரேன். உயிர் போய் உயிர் வருவது பாரேன். புரியவில்லையா? குழந்தையை விட மனைவி முக்கியம் என்று தெரியுமில்லையா? என் பிள்ளை, என் பிள்ளை என்று கொண்டாடும் கர்வம் அறுந்து, எங்கள் குழந்தை என்று பேச வருமில்லையா? பாரேன். வெள்ளை, வெட்டை, ரத்தப்போக்கு உள்ளவள் பெண் என்பது பாரேன்.

பார்க்க மாட்டான். பார்க்க இவளும் விடமாட்டாள். கவர்ச்சி போகும். ஐயோ என்று ஆண் கண் பொத்தி முகம் சுருக்கினால் பொட்டச்சி கிளுகிளுப்பு போகும். பவுடரும், சோப்பும், பாடியும், பாவாடையும் நைலக்ஸும் நைட்டி யும் சிதறும்.

'மஞ்சள் முகமே வருக... மங்கல விளக்கே வருக...'

என்று கொஞ்சுவது குப்புறக் கவிழும். புளி போட்டுத் தேய்த்த விளக்கில்லை பெண். அவள் வெங்கலப்பட்டை யில்லை. மலமுத்துரதாரி. மனுஷி.

அண்ணி சொல்வது தவறு. பாத்ரூமுக்குப் பாவாடை கொண்டு வருவது கவர்ச்சியில்லை. காமமில்லை. காதலாலுமில்லை. அது உதவி. அன்பு. பரஸ்பர நட்பு. இதைச் செய்வதில் எனக்கு எந்த இழிவுமில்லை என்கிற உயர்ந்த குணம். நீயும் நானும் மேலும் கீழுமில்லை. சமம்,

என்கிற நட்பு. என் ஜட்டி நீ தோய்க்கிற போது உன் பாவாடை நான் எடுத்துத் தரக் கூடாதா என்கிற துணிவு.

ஐயோ, புருஷன் இதைப்போய் செய்துக்கிட்டு... ஏன், செய்தால் என்ன? புருஷன் வேலைக்குப் போகணும். பொம்பளை சோறாக்கணும். ஏன் இரண்டு பேரும் வேலைக்குப் போவோம். இரண்டு பேரும் சோறாக்கு வோம். என்ன தவறு?

மறைச்சு வைச்சால்தான் கவர்ச்சி.

நாணப் படறதுதான் உசத்தி.

பொறி புத்தி. எலிப்பொறி புத்தி. மசால் வடைக்குப் மோப்பம் பிடிக்கிற எலியை, வலிய இழுத்து படாரென்று மாட்டி விடுகிற புத்தி.

எத்தனை நாள் பொறி வைப்பாய்?

எத்தனை நாள் கவர்ச்சி காட்டுவாய்?

அப்புறம் புள்ளை பொறந்துடுச்சுன்னா அவனை மடக்கி, 'அம்மா பாவம் இல்லையா, அம்மாவுக்கு நீ பெரிசானா சோறு போடுவியா?' என்று மயக்கி வைத்து... யாரையாவது பொறியில் மாட்டிப் பிழைக்க வேண்டும் யார் குடுமி யாவது தன் கைவசம் இழுத்தாக வேண்டும்.

சுயபலம் இல்லாத சுதந்திரம் இல்லாத; பெண்கள். சார்புகள். ஒட்டுண்ணிகள். பிரித்துப் போடுகிற தந்திரம்... புருஷனையும், பிள்ளையையும் தனித்தனியே மடக்கி வைக்கிற தந்திரம். வாழ்க்கை முழுவதும் தந்திரக் கணக்கு எலிப் பொறி புத்தி.

தன்னைத் தான் மதிக்காத போது, உன்னை யார் மதிப் பார்கள்? உன் சுதந்திரம் உனக்கு உயர்வில்லாத போது, எவர் சுதந்திரம் நீ மதிப்பாய்?

அண்ணி பிரித்தாளுகிறாள். என்னைவிட அக்கறை யாருக்கு உண்டு இக்கல்யாணத்தில் என்று நாடகம் போடு கிறாள்.

ஏன்... எதற்கு...? என்ன பயம்? யார் எதிரி?

"எத்தினி கஷ்டப்பட்டாலும் அவ இந்த வீட்ல காட்டற அக்கறை... தனக்குப் புள்ளே இல்லேன்னாலும் தன் நாத்தனார் மேல் உள்ள அக்கறை எவளுக்கு வரும்?" அண்ணன் பாராட்ட வேண்டும்.

ஒரு இழப்பை இன்னொன்றால் ஈடு செய்ய வேண்டும். என் கல்யாணத்துக்கு ஓடியாடி, தன் வீட்டில் கடன் வாங்கி தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'நான் நின்னு முடிச்சேன். இல்லேன்னா இவ கல்யாணத் துக்கு இங்க நாதியேது? மூணு அண்ணன்மார் தானே ஒழிய. ஒண்ணுக்கும் உரம் கிடையாது. எங்க அய்யா துட்டு அத்தினியும்.'

ஆக, ஆடு வெட்டி சாமியைக் குளிப்பாட்டுகிறாள்.

மாட்டேன். நான் பலியாக மாட்டேன்.

என்ன செய்யலாம்? எதிர்த்துத் துணிவாய், தெளிவாய், என்ன செய்யலாம்? கத்துவதில் லாபமில்லை. பட்டினியில் புண்ணியமில்லை. விட்டால், அண்ணி விரைவில் கல் யாணம் முடிப்பாள். ஓடி விடுவோமா எந்த இடத்துக்கு? அது இழுக்கு. இங்கே இருந்துதான் மன்றாட வேண்டுமே ஒழிய, ஓடினால் என் நிலை இன்னும் பலவீனமாகும்.

ஏதாவது முழுங்கி செத்துப் போவது போல் நடிக்க லாமா? அண்ணியை அலற அடிக்கலாமா?

எப்படிப் போராடுவது? வளையல் திருகிக் கொண்டே யோசித்தாள். சட்டென்று வளையல் திருகுவதை நிறுத் தினாள்.

"எங்கடி போயிட்டு வர...?"

"தி.நகர் வரைக்கும்."

"என்ன அது, பார்ஸலு?"

"புஸ்தகம்."

"என்ன புஸ்தகம்... நிறைய இருக்கே."

"நேத்து எரிச்சியே அது."

"என்ன..."

"நேத்து முற்றத்துல போட்டு எரிக்கலை நீ. அதே புஸ்தகம்" எழுந்து அறைக்குள் போய் பேப்பர் பரப்பி ஷெல்பில் புத்தகங்களை அடுக்கினாள்.

"ஏதுடி காசு?"

"வளையல் வச்சு வாங்கினேன்."

"ஐயோ"

"ஏன் கத்தற... உன் வளையலா, உங்கப்பன் வீட்டு வளையலா, என் வளையல் வச்சு மறுபடி வாங்கிட்டேன். இது எங்கப்பா பண்ணிப் போட்டது."

"உங்க அண்ணன் வந்தா, இத சொல்லிப் பாரு... செருப்பால அடிப்பாரு."

"இனிமேல என் புஸ்கத்து மேலயோ, என் மேலயோ, யாராவது கை வச்சிங்க, நடக்கறதே வேற..."

"என்னடி செய்வே?"

"நடுக்கூடத்துல தூக்கு மாட்டிக்கிட்டு சாவேன்."

"ஐயோ... ஐயோ..."

"மறுபடி சொல்றேன். இனிமே எனக்கும் உனக்கும் இந்த வீட்ல எந்தப் பேச்சு வார்த்தையும் இல்லை. என் கல்யாணத்துக்கு நீ ஆள் இல்லை. அது என் வேலை. உன்

ஆட்டமெல்லாம் உன் வீட்டுக்காரரோட வச்சுக்க. என் கிட்ட வேணாம்.''

''நான் ஆடறேனாடி... நானா ஆடறேன்?''

''அனாவசியமா ஆடற.''

''உன்னை வீட்டுப் படி இறங்கவுட்டது தப்பு. கட்டிப் போட்டிருக்கணும் நாயே.''

''வீட்டை இடிச்சுகிட்டு வெளியே போவேன். யார் கிட்ட சவால் விடற? யாரை நாய்ங்கற...? நன்றி இல்லாத ஜன்மம் நீ. வேற வீட்ல நீ வாழ்க்கைப் பட்டிருந்தா, உன் கதையே இப்ப வேற. போனாப் போவுது பொம்பளை யாச்சேன்னு இரக்கப்பட்டா, என் மேலேயே பாயறியா?''

''உன் நல்லதுக்கத்தானடி...''

''என் நல்லது எனக்குத் தெரியும்.''

''நம்ம குடும்பத்துல பொம்பளை வேலைக்குப் போன தில்லையோடி.''

''போனா ஒரு பவிசும் குறைஞ்சுடாது.''

''கெட்டுப் போறதுக்கு வழி தேடாதடி.''

''த்த... வீட்ல உட்கார்ந்து கெட்டுப் போற பொம்பளை ஆயிரம் காட்டுவேன், உங்க சித்தி ஒருத்தி புருஷனை வுட்டுட்டு வேற ஒருத்தன் கூட தொடுப்பு வச்சுக்கிட்டது சூளை நாறுது. பேச வந்துட்டா.''

''அனாவசியமா என் குடும்பத்தை இழுக்காத.''

''என்கிட்ட வந்தா இதும் இழுப்பேன். இதுக்கு மேலயும் இழுப்பேன்.''

''எங்க வச்ச வளையலை?''

''உனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை.''

''மூட்ட வேண்டாமா?''

''அது என் நகை, எனக்கு மீட்கத் தெரியும்.''

''உங்க அண்ணன் விட்டுருவாரா?''

''விடலைன்னா நான் விட்டுருவேன்.''

''எதை?''

''உங்க உறவை.''

''விட்டுட்டு...''

''அது என் தலையெழுத்து.''

''துணிஞ்சிட்டியா?''

''நேத்திக் காலைல வரைக்கும் துணிவில்லை. எல்லாத் தையும் நடு முத்தத்துல போட்டு எரிச்ச பாரு... அப்ப துணிஞ்சிட்டேன்.''

''அதெல்லாம் மனசைக் கெடுத்துக் குட்டிச்சுவராக் கிடும்படி.''

''நல்ல கதை ஒண்ணு சொல்லேன்.''

''ராமாயணம், மகாபாரதம்னு ஆயிரம் இருக்கும்டி.''

''இருக்கு, அதுலயும் இருக்கு. பொம்பளை தேரோட் டினது, கத்தி எடுத்து சண்டை போட்டது, கடைசி வரைக் கும் தைரியமா நின்று பழி வாங்கினது எல்லாம் இருக்கு.''

''என்னதான் சொல்ற?''

''நான் வேலைக்குப் போவேன்.''

''ஒரு நாள் என் கால்ல விழுந்து கதறப் போறப் பாரு.''

''மாட்டேன். மறந்து போய்க் கூட உன் காலண்ட ஒண்ட மாட்டேன்.''

''நான் அனுபவிச்சவ. குடித்தனம் பண்றவ. என் பேச்சு கேளு.''

"உன் அனுபவம். உன் குடித்தனம் எனக்குத் தெரியும். அது எனக்கு வேணாம்."

"பாத்ரூம்ல பாவாடை போடற புருஷன் வருவான்னு கனவு காண்றியா?"

"வருவான்."

"வரலைன்னா?"

"வரவைப்பேன்."

"ஆடுடி. உன் இஷ்டத்துக்கு ஆடு. உக்காந்து அதையும் நான் பாக்கறேன். எனக்கு நீ ஆஸ்பத்திரில செஞ்ச கடனுக்குப் பதிலா ரெண்டு கல்லு வளையல் உன் கல்யாணத்துக்கு செய்ய நினைச்சேன். ஒண்ணும் கிடையாது."

"வேணாம்."

"செல்வி?"

"என்னா?"

"தீ மிதிக்கிற"

"நெஞ்சுல தைரியம் இருக்கு."

"அப்படியம்மா கண்ணு, அந்தத் தைரியம் உங்க அண்ணன் வர வரைக்கும் இருக்கட்டும்" அண்ணி சிரித்து விட்டுச் சமையலறைக்குப் போனாள்.

அண்ணன் படியேறும் சப்தம் வாசலில் கேட்டது.

9

அண்ணன் உள்ளே நுழைந்து சட்டை அவிழ்த்து நாற்காலி முதுகில் போட்டு விட்டு பனியனுடன் முற்றத்துக்குப் போயிற்று. தண்ணீர் அடித்து முகம் கழுவிற்று.

''துண்டு கொடு...'' சமையலறை நோக்கிக் கூவிற்று.

''துண்டு கொடுன்றேனில்லே...'' அண்ணன் குரல் உயர்ந்தது. செல்வி அறையிலிருந்து துண்டு எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். அண்ணனைக் கத்தவிட சுலபமான வழி, கூப்பிட்ட குரலுக்குப் பதில் சொல்லாது இருத்தல். அதுவும் வேலையிலிருந்து அலுப்புற்று வர, ஏன் என்ன என்று கேள்வியில்லாது போனால், அண்ணன் சுரீர் என்று கோபப்படும். படட்டும் என்று தான் அண்ணி மௌனமாய் இருக்கிறாள் போலிருக்கிறது. சாம்பல் ஊதி விட்டால் கங்கு கண் விழிக்கும். பிறகு நெய் வார்க்கத் தழல் பிறக்கும். இது ஊதுகிற வித்தை.

''ஏன், உங்க அண்ணி இல்லையா?''

''இருக்கு.''

''எங்க?''

''சமையலறைல இருக்கு.''

''சரி.''

''செல்வி...''

''என்னண்ணே.''

''அந்த ஆளு வந்திருந்தாரு. நம்ப ப்ரஸ்ஸுக்கு இன்னிக்கு.''

''யாரண்ணே.''

''உங்க ரைட்டரு. நீ ஆ... ஊன்னுவியே...''

செல்வி பளிச்சென்று திரும்பினாள். அடட என்று வியந்தவள் சட்டென்று அடக்கிக்கொண்டாள்.

''அவங்க வீட்லயும் கூட்டிட்டு வந்தாரு'' உள்ளே வயிற்றில் சிலுக்கென்ற பயம் துளிர்விட்டது. ஒருவேளை வீடு தேடி கடைக்கு வந்து விட்டானா?''

"எதுக்கண்ணே?"

"ஏதோ டெலிபோன் கனெக்ஷன் கிடைச்சிருக்கு. லெட்டர் அடிக்கணும்னு மேட்டர் கொடுத்தாரு."

"நம்ம ப்ரஸ்ஸுக்கு எதுக்கு?"

"நம்மகிட்ட மேட்டர் கொடுக்கிற பப்ளிஷர் சொன்னாப்பல... நமக்கு தெரிஞ்சவர் வராரு, ஒரு ஜாப் விஷயமா... சீப்பா முடிச்சுக் குடுங்கன்னு. ஐந்நூறு கார்ட் கொடுத்துட்டுப் போயிருக்காரு."

"எதுனா கேட்டாராண்ணே?"

"இல்லை."

"மேட்டர் கொடுத்துட்டு அதுக்குக் காசும் கொடுத் துட்டுப் போயிட்டாரு. நான் இன்லெண்ட் வாங்க அனுப் பிட்டேன்."

"எதுனா பேசினாரா?"

"ஊர்க்கதை பேசினோம். அந்த அம்மாவும் நல்லா கலகலன்னு பேசிச்சு. இரண்டு பேரும் பவர் பிரஸ் நின்னு பார்த்துட்டு போனாங்க."

"எதுக்கு?"

"சும்மா அது டபுக்கு டபுக்குன்னு அசையறது வேடிக் கையா இருக்குதாம். ஒரு பொண்ணு, ஒரு பையனாம். ராயப்பேட்டை வூடாம். நல்ல மனுஷாளாத்தான் தெரியுறாங்க."

"நீ எதுனா பேசினியா?"

"கேட்டேன். லெட்டர் நிறைய வருமான்னு கேட் டேன். என் வீட்லகூட உங்கக் கதை விரும்பிப் படிக்கறாங் கன்னேன்."

''சிரிச்சாரு. அந்தம்மாதான் பதில் சொல்லிச்சு. இது செய்து கொடுங்க. வேலை சுத்தமா இருந்தா, இன்னொரு ஆயிரம் ப்ளெயின் இன்லேட் பேர் அட்ரஸ் அடிச்சுத்தர ஜாப் தரேன்னுச்சு.''

''லெட்டர் நிறைய வருமாமா?''

''வருமாம்.''

''யாரு அது?'' அண்ணி வெளியே வந்தாள்.

அண்ணன் பேசாதிருந்தான்.

''நீ கூடத்துல போட்டு எரிச்சியே, அந்த ரைட்டரு கடைக்கு வந்தாராம்.''

''உன்னைத் தேடிக்கிட்டா... நான் சொல்லலை, பொம்பளை எழுதினா ஓடி வந்துருவாங்கன்னு.''

''இல்லை. அவரு ஜாப் கொடுக்க வந்தாரு.''

''ஏன், ஊர்ல வேற ப்ரஸ்ஸே இல்லையா...? மந்தவெளி தானா, நோட்டம் பார்க்க வந்திருப்பான்.

''ச்சேய்... அந்த ஆளு கல்யாணம் கட்டி இரண்டு பெத்தவன்.'' அண்ணன் பதில் சொல்ல, செல்வி தன் பலம் உணர்ந்தாள்.

''நீ லெட்டர் கிழிச்சது சொல்றதுதானே...''

''அது தவறு.''

''எது?''

''லெட்டர் கிழிச்சது.''

''ஏன்... ஏன்? நம்ம வூட்டுக்கு அப்படி லெட்டர் வரக் கூடாது.''

''போடி. நானும் ஏதோ நீ போட்ட கூச்சலைப் பார்த்துத் தப்போன்னு நினைச்சேன். அவருபோன பிறகு

யோசனை பண்ணிப் பார்த்தேன். அப்படி ஒண்ணும் தப்பா இல்லை.

"உன் பேரு கேட்டா குளிர்ற மாதிரி இருக்கிறதுன்றது ரொம்ப சிலாக்கியமா."

"தமிழ்ப் பேரு, நல்லா இருக்குன்ற மாதிரிதானே தவிர."

"வேணாம், நம்ம வூட்டுக்கு வேணாம்."

"சரி, வராது போ. லெட்டர் வரக்கூடாது அவ்வளவு தானே."

"புஸ்தகம் கூட வரக்கூடாது. வளையல் அடமானம் வச்சு அத்தினி புஸ்தகமும் புதுசா வாங்கியிருக்கா. நடுக் கூடத்துல தூக்கு மாட்டிக்கினு சாவேங்கறா."

"என்ன செல்வி இது" அண்ணன் திடுக்கிட்டுத் திரும்பினார்.

"வேலைக்குப் போவாளாம், தடுத்தா உங்க உறவே வேணாம்னு வெளியே போயிடுவாளாம். பொட்டக் கழுதை பேசற பேச்சா இது? நல்ல புஸ்தகம் படிச்சிருந்தா இந்தப் பேச்சு வருமா? என்ன தைரியம் இருந்தா வளையல் அடமானம் வச்சு... எங்க வூட்டுப் பெண்களுக்கு வராதும்மா இத்தினி கர்வம். ஒரு வார்த்தை கேட்கத் தோணிச்சா."

"நீ யாரு என் புஸ்தகம் எரிக்க... யாரைக் கேட்டு நீ எரிச்ச...? உன்கிட்ட எதுக்குச் சொல்லணும்?"

"செல்வி, இது தப்பு."

"அடிண்ணே, உன் கை நோகற வரைக்கும் அடி. ஆனா, நான் படிக்கிற புஸ்தகத்தை நடு வீட்ல போட்டு எரிச்சது சரின்னு சொல்லாத. உன்னைக் கேட்காத ஒண்ணும் செய்யறதில்லை. ஒரு பொட்டுகூட வாங்கினதில்லை. அது

அசிங்கம்னு எரிச்சது இருக்கே, அது நான் சாகற வரைக்கும் ஆறாது.''

''செல்வி, அதுக்காக வளையல் அடமானம் வைக்கிறதா?''

''வளையல் இங்க இருக்கு. அடமானம் வைக்கலை.'' செல்வி மேஜை டிராயர் திறந்து வளையல் எடுத்துப் போட்டாள்.''

''பின்ன... துட்டு ஏது?''

''என் ஸ்நேகிதிக்கிட்ட கடன் வாங்கினேன். என்னிக்கு வேலைக்குப் போறேனோ, அன்னிக்கு திருப்பிக் கொடுக்கிறேன்டீ. எங்கண்ணி புஸ்தகத்தையெல்லாம் கொளுத்திட்டா, எனக்கு புஸ்தகம் வாங்கணும்னு அழுதேன். டக்குன்னு நூறுரூபா கொடுத்துட்டா. ஏழு புஸ்தகம் எண்பத்தியெழு ரூபா. மிச்சம் கொண்டு போய்க் கொடுக்கணும்.''

''மிச்சம் எங்கே?''

செல்வி மறுபடி டிராயர் திறந்து காசு எடுத்துப் போட்டாள்.

''புஸ்தகம்?''

ஷெல்ஃபிலிருந்து கொண்டு வந்து மேஜையில் வைத்தாள். அண்ணன் புஸ்தகம் புரட்டினான். ''எங்கே வாங்கின.''

''மாம்பலத்துல.''

''எப்படிப் போன?''

''நடந்து.''

''ஏன், பஸ்ல போகக் கூடாதா?''

"இதுவே கடன், இதுல பஸ்ஸுக்கு அனாவசியமா காசு செலவுன்னு நடந்து போனேன்." செல்வி துக்கம் தாளாமல் உதடு கடித்தாள். கண்ணில் ஜலம் திரண்டது.

"ம்ம்- சரி இந்த நூறு ரூபா உன் ஸ்நேகிதிக்கிட்ட கொடுத்துடு."

"இது வேணாம்னு தானே எரிச்சேன். இப்ப நீங்களே துட்டு கொடுத்தா என்ன அர்த்தம்... எரிச்சவ முட்டாளா?"

"ஆமா முட்டாள்தனம் தான்."

"சேர்ந்துட்டீங்களே, அண்ணனும் தங்கச்சியும். எப்படியாவது போங்க, இந்த வூட்ல நல்லதுக்குக் காலம் இல்ல. நல்ல சொல்லுக்கு மதிப்பு இல்ல."

"ஏய், ஏன் கத்தற? நான் ப்ரஸ் வச்சுப் பொழைக்கறவன். துண்டு பேப்பர் கூட ஜல்லின்னு எடுத்து வைக்கிறவன். பைண்ட் பண்ண புத்தகம் எரிச்சது எனக்குக் கூட கஷ்டமாத்தான் இருந்துச்சு. வுடு அது போச்சு. ஏதோ கோவத்துல நடந்து போச்சு. எனக்குச் சோறு வை. போ."

"அவ கல்யாணம் கட்டிக் குடித்தனம் பண்றதைப் பார்க்கறதா எண்ணமில்லையா உங்களுக்கு?"

"புஸ்தகம் படிச்சா தெருவோட போயிடுவான்றது தப்பு. எனக்கு அந்தாளு தப்பா தெரியலை. கடைலேர்ந்து போன் பண்ணாங்க வூட்டுக்கு. டெலிபோன் வந்து சந்தோஷம்போல. பையனோட கொஞ்ச நேரம் பொண்ணோட கொஞ்சநேரம் அப்புறம் வேற யார்கிட்டயோ கொஞ்ச நேரம் பேசினாங்க. எழுந்து போற போது, அதுக்கும் ரெண்டு ரூபா கொடுத்தாங்க. வேணாங் கன்னேன், கேட்கலை, ஒரு காலுக்கு ஒரு ரூபா பண்ணிட்டான். வாங்கலைன்னா ஒசி காலே இருநூறு ஆயிடும், வாங்கிக்கன்னு டேபிள்ல வச்சுட்டாரு."

''சாயந்திரம் வரேண்ணே புரூஃப் பாக்க.''

''ஏன், போய் நிக்கணுமா'' அண்ணி வெடித்தாள்.

''என்னையே புரூஃப் பார்க்கச் சொல்லிட்டாங்க. சாயந்திரம் அந்த அம்மா மட்டும் வந்து வாங்கிட்டுப் போவாங்க.''

'எல்லார் மாதிரியும்தான்.''

'நல்லா இருக்காங்களா?'

'நான் வரட்டாண்ணே சாயந்திரம் ப்ரஸ்ஸுக்கு அவங்களைப் பார்க்க?'

''ம்...ம்'' அண்ணன் யோசித்தான்.

''லேடீஸ்தானே, பார்க்கலாமில்லையா.''

''வா பாரு.''

''அண்ணே.'' சந்தோஷமாய் சொல்லி அண்ணன் கை பற்றினாள். உடனே ப்ரஸ் ஓட ஆசைப்பட்டாள்.

அண்ணி சமையலறைக்குப் போய் தடேலென்று தட்டு வைத்தாள், சோறும் குழம்பும் தட்டில் ஊற்றினாள். செல்வி தண்ணீர் எடுத்துத் தட்டருகே வைத்ததும், ''இந்தா, நீயே போடு என் தலை நோவுது'' எழுந்து படுக்கை அறைக்குப் போனாள்.

''அண்ணிக்குக் கோபமாயிடுச்சிபோல.''

''அவ கிடக்கா. எரிச்சது, கிழிச்சது இரண்டும் தப்பு ஆனா செல்வி, அதுக்காக தூக்குல தொங்குவானேன். வீட்டை வுட்டுப் போவேன்னு திமிர் பேச்சுல்ல? எனக்குப் பிடிக்காது.''

''ஒண்ணு கூடத்தில நின்னு கத்துது அண்ணி... பொறுக்கமாட்டாத சொன்னேன்.''

''அதுக்கோசரம்?''

"தப்புத்தான்."

"சோறு போடு."

"எத்தினி மணிக்கு வராங்க?"

"ஆறு மணிக்கு."

ஆட்டோ ப்ரஸ் வாசலில் நின்றது, ஒரு பெண்மணி நான்கு வயது பையனோடு கீழிறங்கினாள். படியேறினாள். "ரெடியாயிடுச்சா" விசாரித்தாள்."

செல்விக்கு சிலிர்த்தது. அந்த மனிதர் மனைவியா? அவன் எல்லாக் கதைகளிலும் வருகிற மனைவியா நீ...? கண்கள் பரபரக்க, எதிரே நின்றவளை அளந்தாள்.

கருப்பு. சிறிய கூரான மூக்கு, பெரிய கண்கள், முப்பது முப்பத்திரண்டு இருக்கும். சிரிப்பில் பல் வரிசை சீர் தெரிந்தது.

"ரெடியாயிடுச்சும்மா. உட்காருங்க டேய்," உள்ளே குரல் கொடுத்தான். "இது செல்வி, என் தங்கச்சி, உங்க வூட்டுக்காரர் கதைன்னா உசிரு. என்னா பைத்தியம்."

"வணக்கம்." அந்தப் பெண்மணி கை குவித்தாள்.

" நான் லெட்டர் கூட எழுதினேங்க."

"அப்படியா."

செல்விக்கு ஏமாற்றமாய் இருந்தது.

"பதில்கூடப் போட்டாருங்க."

"எப்போ?"

ஏமாற்றம் அதிகரித்தது.

"நீங்க லெட்டர் பார்க்க மாட்டீங்களா?"

"பார்ப்பேன். உங்க பேர் என்ன சொன்னீங்க?"

"செல்வி. திருநிறை செல்வி. இவரு அண்ணன் திருநாவுக் கரசன்."

"அநேகமா எல்லா லெட்டருக்கும் பதில் போட்டுடு வாரு... நிறைய வரதுனால பேர் ஞாபகம் வச்சுக்கறது கஷ்டம்."

"எப்படிங்க எழுதுறாரு?"

"எல்லார் மாதிரியும்தான்."

"நீங்க அவர் கதை படிப்பீங்களா?"

"ம்ம் படிப்பேன்."

"இது மகனா... பேர் என்னா?" செல்வி பிள்ளையை அணைத்துக் கொண்டாள். பதில் எதிர் பார்க்காது மறுபடி கேட்டாள்.

"அவர் கதை படிச்சுட்டு அபிப்பிராயம் சொல்வீங் களா?"

"ம்ம்... சொல்வேன்."

"அவர் கதைல வரது நீங்களா?"

அவள் சிரித்தாள்.

"அப்படின்னா?"

"அதுல வர வொய்ஃப் நீங்களா?"

"அப்படியே இல்லை. கொஞ்சம் சாயல் இருக்கும்."

"ரொம்ப அண்டர்ஸ்டாண்டிங் உள்ள ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ஃபா கதைல...?"

"கதையை அப்படியே நம்பாத செல்வி. எங்களுக் குள்ளே அண்டர்ஸ்டாண்டிங் உண்டு, பிரச்சனை உண்டு. எல்லா நேரமும் நேரா நடந்துட முடியுமா. இடறும். சுள்ளுன்னு நோவும். சமாளிச்சுக்கிட்டு மறுபடி நேரா நடக்கணும்."

"அவரு அப்படியில்லையா?"

"எப்படி?"

"சிவசு அவரு இல்லையா?"

"குழந்தை மாதிரி கேட்கற செல்வி."

"ரொம்பக் குழந்தைங்க. எப்பவும் தகராறு. எதிர்த்துப் பேசுது. வேலைக்குப் போவேன்னுது. கல்யாணம் வேணாம்னுது." அண்ணன் கவலையோடு குற்றம் சொன்னர்ர்.

"வயசு?"

"நாம வுட முடியுங்களா? கண்டிச்சா இன்னும் முறைக் குது?"

"கண்டிக்கிறதுன்னா எப்படி... அவரு புஸ்தகத்தை நடு வூட்ல. போட்டு எரிக்கிறதா?" செல்வி தன்னை மறந்து கத்தினாள்.

சட்டென்று அங்கே அமைதி படர்ந்தது.

10

அந்த பெண்மணிக்கு திகைப்பும் அவமானமும் ஒரு சேரப் படர்ந்திருக்க வேண்டும். வியப்போடு செல்வியைப் பார்த்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

"சரி... இதுக்கு எவ்வளவு காசு தரணும்?" பேச்சு திசை மாற்றினாள்.

"அது ஒரு கோவத்துல அவங்க அண்ணி செய்துடுச்சு. எப்பவும் புஸ்தகம் படிக்கறா, வீட்டு வேலை செய்யற தில்லைன்னு..." குரலில் மன்னிப்பு கலந்து திருநா அண்ணன் பேசினார், கஸ்டமரைக் கடை வாசலில் மனசு நோக வைத்த வேதனை அவருள்ளும் எழுந்தது.

''உடனே போய் மொத்த புஸ்தகமும் வாங்கின்னு வந்துருச்சுங்க. அது ஷெல்ப் முழுக்க அவரு புஸ்தகம்தான்.''

''புஸ்தகத்தை எரிக்கலாமா...? நாம எரிக்கலாமா? நமக்கு சாப்பாடு புஸ்தகம்தானே...? ப்ரஸ்ஸும், பைண்டிங்கும், ரப்பர் ஓட்டறதும் யாரோ எழுதறதாலே தானே...? நாமே நம்ம கண்ணைக் குத்திக்கலாமா?''

''ஒரு கோவத்துல...''

''யார்கிட்டயாவது கொடுத்துருக்கலாம். தூக்கிக் குப்பைல கூட போட்டிருக்கலாம். எரிச்சு சாம்பலாக்கற அளவுக்கு நாம கோவப்படாம- அப்ப அது கோபம் இல்லை, ஆத்திரம், அசூயை. கோவம் இருக்கிற இடத்துல கூட குணம் இருக்கும். ஆத்திரமும், அசூயையும் இருக்கற இடத்துல நல்லது இருக்காது.''

''தப்புதாங்க. செல்வி, என்னா இதெல்லாம் கஸ்டமர் கிட்ட சொல்லிக்கிட்டு.''

''கஸ்டமர் மாதிரி வரலைங்க. நர்மதா ராமலிங்கத்து சிநேகிதம், நமக்கும் சிநேகிதம்னு வந்தோம். பிரஸ்ஸா இல்லை மெட்ராஸ்ல? என்னமோ இங்க வந்தது ரொம்ப வேதனையாயிடுச்சு போங்க.''

''ப்ளீஸ் மன்னிக்கணும். நான்தான் உளறிட்டேன். வேலைக்குப் போறேன்னு வீட்ல தொந்தரவு செய்ததுக்கு கோவப்பட்டாங்க. படிப்புலதான் எதுத்துப் பேசறன்னு கூடத்துல போட்டு...''

''வேலைக்குப் போறது பாவமா? அதுக்கு அவரு புஸ்தகம் குறையா?''

''எங்க ஜாதில இதுவரைக்கும் அனுப்பினதில்லீங்க.''

''எந்த ஜாதில இப்ப போகலை?''

"எங்க குடும்பத்துல பெரிசானதும். கட்டிக் குடுத்துடறது. வெளியே நடமாட விடறதில்லை."

"அந்தக் காலம் போயிடுச்சுங்க. வேலைக்குப் போற பொண்ணு வேணும்னு கேட்கறாங்க. பாதிப் பசங்க. வெளி வாசல்ல பழகின பொண்ணுதான் சாமர்த்தியம்னு நினைக்கிறாங்க."

"சொல்லுங்கக்கா. மீன் அரியறதோட நின்னு போச்சு இவங்க சாமர்த்தியம்-"

'மீன் அரியறது தப்பில்லை செல்வி. படிப்பும், துணிச்சலும், பொது அறிவும் வேணும்."

"புரியலையே."

"ஊர் தெரியாத, உலகம் தெரியாத வளரக்கூடாது வளர்றது தப்பு."

"கெட்டுருவேனாம்."

"சிரித்தாள்."

"நான் பதினேழு வயசுல கவர்மெண்ட் வேலைக்குப் போனவ. இப்ப முப்பத்தாறு வயசு. கெட்டா போயிட்டேன்? குடித்தனம் பண்ணலையா? குழந்தை பெத்துக்கலையா? ஆயிரத்து எண்ணூறுரூபா சம்பளம், இரண்டு பேரும் சம்பாதிக்கிறதுனால நாலுகாசு பார்க்க முடியுது. இரண்டு காசு சேர்க்க முடியுது. நல்ல பள்ளிக்கூடத்துல பையனைச் சேர்க்க முடிஞ்சுது. வீட்ல உட்கார்ந்து கெட்டுப் போலாம்."

"எங்க சுத்து பத்தெல்லாம் கேலி பண்ணுமே."

"பண்ணுவாங்க. உட்கார்ந்தாலும் பண்ணுவாங்க. நின்னாலும் பண்ணுவாங்க. கட்டிக் கொடுத்தாலும், கட்டாம வச்சிருந்தாலும் கேலி பண்ணுவாங்க. ஊர்

பேச்சுக்கு நம்ம குழந்தையை வாட விடறதா? யார்கிட்ட போவும் அது? எங்க சொல்லி அழும்?''

''எரிச்சது தப்புத்தாங்க.'' அண்ணன் தலை குனிந்தார்.

''ஐயோ... அதுக்கே சொல்லலை. கொண்டாடறதுக்கு நாலு பேர் இருந்தா, கேலி பண்ண இரண்டு பேர் இருப் பாங்க. பாராட்டப்பத்து பேர்னா பழி சொல்ல நாலு பேர் இருக்கும், நான் செல்வி பத்தி பேசறேன்.''

''அது வேலைக்குப் போலான்றீங்களா?''

''தாராளமா... நல்ல இடமான்னு நீங்க போய் ஒரு தடவை பாருங்க. கல்யாணத்துக்குப் பிறகு அவ இஷ்டம், அவளைக் கட்டிக்கப் போறவர் இஷ்டம்.''

''எங்க ஜாதி ஆளுங்களே பெரிய இடத்துல பல பேர் இருக்காங்க. கேட்டா கிடைக்கும்.''

''பிறகு என்னா... என்ன படிச்சிருக்கு செல்வி?''

''ப்ளஸ் டூ அக்கா. டைப்ரைட்டிங் போறேன்.''

''அக்கௌண்டென்ஸி கத்துக்கறதுதானே?''

''அதான் ப்ளஸ் டூ காமர்ஸ் எடுத்தேன்?''

''பின்ன என்ன? எந்தக் கம்பெனிலயும் வேலை கிடைக்கும். தைரியமா போ.''

''வீட்டுல கலந்து யோசனை பண்ணனுங்க.''

''அண்ணி போவாதுன்னு சொல்லும்.''

''செல்வி எல்லாம் அசடு வழியற பொண்ணு இல்லீங்க. சில பேரைப் பார்த்தாலே தெரியும். தடுமாற்ற கேஸ் இதுன்னு. செல்வியைப் பார்த்தா அப்படித் தோணலை.''

அண்ணன் புன்சிரிப்பும், பெருமையுமாய் செல்வியைப் பார்த்தார்.

செல்வி உள்ளே ஜில்லென்று சந்தோஷம் படர்ந்தது.

''மனுஷாளோட பேசிப் பழகக் கத்துக்க செல்வி. மனுஷாளைப் புரிஞ்சுக்க. அப்பாவியா இருக்காதே. அது பாவம். சாமர்த்தியம் வேணும். நல்லவங்க, கெட்டவங்களைப் புரிஞ்சுக்கற பக்குவம் வேணும். தைரியமா போ.''

''தேங்க்ஸ்க்கா.''

''நான் வரட்டுமா?''

பிள்ளையோடு கீழிறங்கினாள். ஆட்டோவுக்குள் ஏறினாள். அண்ணனும் தங்கையும் தெருவுக்கு வந்து வழியனுப்பினார்கள்.

''ஐயோ காசே தரலை. நான் பாட்டுக்கு ஆட்டோல ஏறிட்டேன்.''

''பரவாயில்லைம்மா. அடுத்த ஜாபுக்குக் காசு கொடுங்க.

''அதெப்படி?'' பர்ஸ் பிரித்தாள்.

''வாங்க மாட்டேன்.''

''ஏன்?''

''இது அபராதம் மாதிரி.''

''எதுக்கு அபராதம்?''

''புஸ்தகம் எரிச்சதுக்கு. எரிச்சது உங்க காது வரைக்கும் வந்து உங்களை ஒரு நிமிஷம் வேதனைப் படுத்தியதுக்கு.''

''பதினேழு வயசுல வேலைக்குப் போய், இருபத்தெட்டு வயசுல கல்யாணம் கட்டி, இன்னிய தேதிக்கு ஆறு வயசுப் புள்ளை இருக்கு... இதுக்குள்ள ஆயிரம் வேதனைப் பட்டாச்சு, இது பெரிசில்லை. வாங்கிக்குங்க.''

''மாட்டேம்மா, வேதனை இல்லாத குடித்தனம் இல்லை. எனக்குத் தெரியும், என் பொண்டாட்டி எரிச்சது கூட புஸ்தகத்து மேல கோவம் இல்லம்மா. வேற ஏதோ கோவம். புள்ளை உண்டாயிருக்குன்னு நினைச்சுட்டு ஆஸ்

பத்திரிக்குப் போனா, கட்டின்னு ஆப்பரேஷன் பண்ணி கர்ப்பப்பையையே எடுத்துட்டாங்க. அதுல குழம்பிப் போயிருக்கா.''

''எத்தனை பசங்க.''

''ஒண்ணுதான். இது ஒண்ணுதான் இனிமே எனக்கு குழந்தை'' செல்வி பின் தலையை திருநா மெல்ல வருடினார்.''

''வேதனை தான்.''

''அதான் இதையும் கண்டிக்க முடியாத, அதையும் கோவிச்சுக்க முடியாத தவிக்கிறேன்.''

''செல்வி...''

''அக்கா.''

''அண்ணிக்கிட்ட சமாதானம் பண்ணிக்க. ஏன்னு கேட்காத செல்வி. அது பெருந் துக்கம். புள்ளையில்லாத போறது... இனி இல்லவே இல்லேங்கறது பெரிய துக்கம். உள்ள புலம்பல் தாங்காத யாரையாவது மிதிக்கத் தோணும். யாரும் மதிக்க மாட்டாங்களேன்ற பயத்துல அதட்டத் தோணும்.''

''அதுக்கு புஸ்தகத்தைப் போய்...''

''ச்சு... முட்டாள்தனமா ஒரே விஷயம் பேசாத. நாளைக்குப் போற இடத்துல பூ மாதிரி தாங்குவாங்களா? நாய் விரட்டு விரட்டுவாங்க? தேவையில்லாத மூஞ்சில துப்புவாங்க. பொறுப்பு வந்தா வேதனை வரும் செல்வி. அண்ணி கோவத்தை மறந்துடு. நீயா போய் உதவி செய். தலை பின்னி விடு, கொண்டவளும், உடன் பிறந்தவளும் அடிச்சுக்கிட்டா ஆம்பளை என்ன செய்ய முடியும்... அனாதையா நிக்கறதைத் தவிர? ச்சேன்னு வெறுத்துடும்.''

''வெறுத்துடுச்சு.''

"விட்டுப்புடிங்க திருநா சார்."

"எப்படி என்னைத் திருநான்னு கூப்பிடறீங்க?" இங்க எல்லாரும் என்னை அப்படித்தான் கூப்புடுவாங்க..."

"எங்க ஜாதில திருநாவுக்கரசுக்கு 'திருநா' தான். எனக்கு இரண்டு சொந்தக்காரங்க அந்தப் பேர்ல உண்டு."

"நீங்க ஐயர் இல்லீங்களா?"

"இல்லை."

"அவரு ஐயருங்களா?"

"ஆமாம்."

"நீங்க?"

"பிள்ளைமார். சோழிய வேளாளர்."

"அட. நம்ம பக்கம்.

அந்தப் பெண்மணி சிரித்தாள்.

"செல்விக்கு நல்ல பையனாப் பார்த்து சொல்லுங் களேன்."

அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

"உங்கக் கவலை புரியுது, செல்வி இரண்டு வருஷம் வேலைக்குப் போகட்டும். நல்ல வரன் தானா வரும். நம்ம பக்கத்துப் பசங்க இப்ப வேலைக்குப் போற பொண்ணு தேட ஆரம்பிச்சுட்டாங்க."

அண்ணன் முகவாய் தடவி யோசிக்க, கை கூப்பினாள், ஆட்டோ குலுங்கிக் கிளம்பிற்று.

"எனக்குத் தெரியாது இத்தினி நாளா" அண்ணன் கடைக்குள் ஏறினார்.

"எனக்குத் தெரியும்."

"சொல்லலியே."

''ஜாதி எதுக்குப் பேசணும்னு சொல்லலை.''

''வேலைக்குப் போறியா செல்வி?''

''நிச்சயம்.''

''அப்ப அவங்க சொன்ன மாதிரி அண்ணியைச் சமாதானம் பண்ணிக்க.''

''ஏன்?''

''முட்டாள்தனமா பேசறியே. நொய்யு நொய்யுன்னு என்கிட்ட குத்திக் குத்திப் பேசிட்டிருப்பா. ஒரு தடவை இல்லேன்னா. ஒரு தடவை பொறுமை இல்லாத நானும் சீறிடுவேன். அப்புறம் எல்லாருக்கும் கஷ்டம்.''

''அண்ணிக்குப் பயம். நாம வுட்டுறுவோம்னு.''

''எப்படி விட முடியும் செல்வி?''

''அவங்க வீட்ல கட்டிப்புடிச்சு ஒரே அழுகை. இங்க வந்து 'ஓ'ண்ணு கோவமா கத்துது.''

''புரியவே இல்லை.''

''அதான் அழகா சொன்னாங்களே. துக்கம் யாரை மிதிக்கிறோம்னு தெரியாத துக்கம்.''

''எனக்குத் துக்கமில்லையா... புள்ளை இல்லேன்னு?''

''இருக்கும்மா இருக்கு. யார்கிட்ட சொல்ல முடியும்... எனக்குத் துக்கம் இருக்குன்னு கொஞ்சம் காட்டினாக்கூட அவ அழுதுடுவா. சோறு, சாப்பிடாத, எதுவும் பேசாத, உள்ளுக்குள்ள புழுங்குவா?''

''நான் உனக்குக் குழந்தை இல்லையா அண்ணே?''

''அதான், கூட கவலை வருது, தப்பு நடக்கக் கூடாதுன்னு பயம் வருது.''

''நான் தப்பா நடப்பேனா?''

"மாட்டேன்னு நம்பிக்கை இருக்கு. யாரை நம்பறது? இவங்க நம்ப ஜாதி. ஐயரு ஜாதில கல்யாணம்."

"நல்லாத்தானே இருக்காங்க?"

"சரி, சில ஒட்டுச் செடி வேர் புடிச்சி நின்னுடும். சிலது பட்டுடும்."

"நல்லாப் பேசாறங்க இல்லை?"

"சரி, ரைட்டர் பொண்டாட்டி. வேலைக்குப் போற வங்க. பேச்சுக்கு என்ன குறைச்சல்?"

"வேலைக்குப் போறதைப்பத்தி என்ன சொல்றே அண்ணே?"

"பார்க்கலாம். இப்ப உடனே வீட்ல போய் கிளறாதே. அதுகூடப் பக்குவமா பேசு. என்கூட படிச்சவனுங்க ரெண்டு மூணு பேர் பெரிய ஆளா இருக்கான். பேசிப் பார்ப்போம்."

"இருக்குறதுலியே பெரிய கம்பெனி பாரேன்."

"இரு. இப்ப போன்ல பேசிடலாம்." அண்ணன் நம்பர் தேடிற்று. போன் சுழற்றிற்று.

செல்வி நகம் கடித்துக் காத்திருந்தாள்.

"மாணிக்கம் இருக்கானா? நான் அவரு சிநேகிதன் பேசறேன்." எதிர் முனையில் ஏதோ குரல் கேட்டது.

"அவரு டைரக்டரா என்னன்னு தெரியாது. கம்பெனி ஓனர் மாணிக்கம். தான் ஒரு சிநேகிதம் என் நம்பர் குறிச்சுக் கறீங்களா? போன் பண்ணச் சொல்லுங்க."

"என்ன சொல்றாங்க?"

"ஏதோ மீட்டிங்ல இருக்கானாம். பத்து நிமிஷத்துல பண்றாங்களாம். நீ வீட்டுக்குப் போ."

செல்வி படியிறங்கி வீடு நோக்கிப் போனாள். தெரு விளக்குகள் எரியத் துவங்கின.

"அன்புள்ள எழுத்தாளர் அவர்களுக்கு, இன்று உங்கள் மனைவியைச் சந்திக்கும் பெரிய பாக்கியம் கிடைத்தது. மிகவும் சந்தோஷமாய் இருந்தது. இந்தச் சந்திப்பால் என் வாழ்க்கையில் மிகப்பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது... என்ன மாறுதல் என்பதை..."

வேண்டாம், கடிதம் வேண்டாம். ஒரு கடிதம் எழுதி புஸ்தகம் எரிபட்டது போதும்.

அன்பும் மரியாதையும் மனதில் இருந்தால் போதும். என்றேனும் முடிந்தால் போய் சந்திக்கலாம். வேலைக்குப் போய், முதல் சம்பளம் வாங்கினதும் ஏதாவது சாக்லேட் வாங்கிக் கொண்டு போய் சந்திக்க வேண்டும்.

வேலை கிடைக்குமா? சாக்லேட் வாங்குகிற சம்பள மாவது கிடைக்குமா? தெரியவில்லை.

செல்வி படியேறி உள்ளே நுழைந்தாள்.

ஹால்முழுக்க ஐந்தாறு பெண்கள் மட்டும் பாயில் உட்கார்ந்திருந்தார்கள்.

"இவதான் பொண்ணா? வாம்மா, உள்ளவா, கிட்ட வந்து உட்காரு. எத்தினியாவது படிச்சிருக்கே? எங்க புள்ள எம்.ஏ. படிச்சுருக்குது... சொன்னேல்ல உங்ககிட்ட?"

ஐம்பது வயது பெண்மணி வரவேற்றாள்.

செல்விக்கு வயிறு கலங்கியது.

11

"பொண்ணு பார்க்க வரமாட்டேன்னுட்டான். ஆடு மாடு பார்க்கிற மாதிரி பொண்ணு பார்க்கறதெல்லாம் தப்புன்றான். ஆன முட்டும் கூப்டம், வரலை. உங்களுக்குப் புடிச்சிருக்கா சரி. பூப்போட்டுப் பார்த்துட்டு பேசிட்டு வந்துருக்கன்னான். படிச்ச புள்ளை. எம்.ஏ. அதட்டிப் பேச முடியலை. அத்தினி படிப்பு. நாம படிக்கலையே, உட்காரு நிக்கறியே நீ எத்தினியாவது படிச்சிருக்க?''

செல்வி மெல்லத் தரையில் உட்கார்ந்தாள்.

''ப்ளஸ் டூ'' என்று முணுமுணுத்தாள்.

''பயப்படாத, நாங்க பொண்ணு பாக்கறதுக்குன்னு வரலை. வெறும் பூ மட்டும் பத்து முழம் வாங்கியாந்தோம், எல்லாம் நல்லபடி முடிஞ்சா எத்தினி வேணா கொடுக்க லாம், எத்தினி வேணா வாங்கிக்கலாம்.

அவனுக்குப் பொண்ணு படிச்சிருக்கணும். ஏன்னா அவன் எம்.ஏ. அவனுக்குப் பொண்ணு அழகாயிருக்கணும். அவன் நல்ல உயரம். சுருள் கிராப்பு, சினிமா ஸ்டார் மாதிரி இருப்பான். உங்க நிறத்துக்கு ஒரு மாத்து கூடன்னு வச்சுக்கங்க. பச்சபாஸ்ல படிச்சுது. கலைஞராண்டே ப்ரைஸ் வாங்கிருக்குது. என்னவோ புஸ்தகம் கூட போட்டான். என்னடி அது, நாற்பது வயது பெண்மணி பேசினாள்.

''களவா... கற்பா'' முப்பது பதில் சொல்லிற்று.

''என்னவோ ஒண்ணு, இவன் கை துட்டு போட்டு புஸ்தகம் போட்டான். நூறு புஸ்தகம் லைப்ரரில வாங்கிட் டாங்க. மிச்சம் சிநேகிதருக்குக் கொடுத்தது போக, இரண்டு கட்டு வூட்ல இருக்கு. எப்பவும் அதான் படிச்சிக்கிட் டிருக்கும், கொடேண்டி புஸ்தகத்தை.''

முப்பது எடுத்துக் கொடுத்தது.

செல்வி வாங்கிக் கொண்டாள்.

கால் முகிலன் என்று பெயர் போட்டிருந்தது

''இது அவன் பேர் இல்லை மேகநாதன்னு பேரு. மாத்திக்கினான்.''

''இவளும் நிறைய புஸ்தகம் படிப்பா'' அண்ணி அடக்கமாய் பேசினாள்.

''படிக்க வேண்டியதுதான். இப்ப எல்லார் வீட்லயும் தான் புஸ்தகம், பேப்பர் வாங்கறாங்க. எல்லாரும்தான் படிக்கறாங்க. எங்க வீட்ல அதுக்குன்னு நூறு ரூபா எடுத்து வச்சுடணும்.''

''எங்கங்க வேலை!''

''கார்ப்பரேஷன். கவர்மெண்ட் மாதிரி நிரந்தர உத்யோகம், ஒரு இடத்துக்கே அதிகாரி. அவனுக்கு கீழ ஆறு, ஏழு பேர் வேலை செய்யறாங்க. சொந்த வூடு. மாடில ரூம் கட்டிக் குடுத்துருக்கோம். அமைதியான புள்ளை, ஒரு பீடி, சிகரெட் கிடையாது. வெத்தலை பாக்கு, பொடி எதுவும் கிடையாது.''

''என்ன செய்வாங்கன்னுகேளு அத்தை?''

''ஒரே பொண்ணு. மூணு அண்ணன்மார்ங்க அதுக்கேத் தாப்பல செய்வாங்க. கேக்கக்கூடாதுன்னுட்டான் என் புள்ளை, செய்யறது செய்யட்டும். தாலி கட்டின பிறகு மீட்டிங் போட்டுறணும், அதுக்கு ஆற செலவுதான்.''

''நாங்க செலவுக்கு அஞ்றவங்க இல்லை. ஒரே பொண்ணு. நல்ல இடமா குடுக்கணும்'' அண்ணி கவலை யுடன் பேசினாள்.''

''எங்க புள்ளை எம்.ஏ. நம்ம ஜாதிலே இத்தினி படிப்பு யாருக்கும் கிடையாது. இதை விட நல்ல இடம் உங்களுக்கு நிச்சயமா கிடைக்காது.''

"பேசிக்கினே போனா எப்படி? என்ன ஏதுன்னு விவரமா சொல்லிட்டா நல்லாயிருக்கும்."

"நீங்கதான் சொல்லணும்." அண்ணி பதில் சொன்னாள்.

"அம்பது பவுன், நாப்பது பவுனுக்கு ஒரு இடம் வந்தது. அஞ்சாங்கிளாஸ், ஆறாங்கிளாஸ்தான் படிப்பு. நாங்க வேணாம்னுட்டோம், உங்க பொண்ணு படிச்சிருக்கு. முப்பது பவுன் போடுங்க."

"முப்பதா?"

"கல்யாணச் செலவு பாதிப் பாதி பகிர்ந்துக்குவோம்."

"ஒருவேளை டிபன் போட என்ன செலவு ஆகும்? முப்பது பவுனுங்கறீங்களே."

"எம்புள்ளை சொன்னான். டிகிரி படிப்பு இருந்தா எதுவுமே கேட்காதம்மான்னான். நான் இது பள்ளிக்கூடம் தானேன்னு முப்பது கேட்டேன். எனக்கு அப்பமே அறுவது பவுன் போட்டாங்க."

"அப்ப பவுன் நாப்பது ரூபா வித்திருக்கும். எனக்கு நானூறு விக்கையிலே அம்பது போட்டு வுட்டாங்க." அண்ணி நெஞ்சு நிமிர்த்தினாள்.

"அப்புறம் ஏன் முப்பது பவுனுக்கு மயங்கற நீ?"

"முப்பது பவுனுக்கு எங்க போறது... என்னுதுதான் போடணும். இருக்கறது ப்ரஸ்ஸு நடத்தப் போவுதே தவிர, இதுக்குன்னு இவங்க அண்ணன் ஏதும் செய்யலை" அண்ணி முத்தலாய்ச் சொல்ல, செல்வி ஆங்காரமானாள்.

"ஏன் உன்னது போடணும்? உன் குழந்தைகளுக்கு ஆவாதா? அதுங்களுக்குச் செய்ய வேணாமா?"

"எங்க அண்ணிக்குப் புள்ளையில்லை" செல்வி பட் டென்று சொன்னாள். அண்ணி முகம் இருண்டது.

"அடட... ஏன் எனக்கு அப்பவே பட்டுச்சு, இடுப்பு அகலாத சிக்குன்னு இருக்காங்களே... எப்படிடான்னு. சரி, சின்ன வயசுல கட்டிக் குடுத்து, உடனே பெத்து இறக்கி யிருக்கும்னு நினைச்சேன், ஏன்?"

"தங்கலைம்மா." அண்ணி வேதனையுடன் சொன் னாள்.

"என்ன தப்பு?"

"விதிதான்."

"அது சரி. டாக்டர் கிட்டே போனியா? அவரையும் கூட்டிட்டுப் போனியா?"

"போனமே... அஞ்சாம் மாசம் கர்ப்பம் இல்லை, கட்டின்னு அறுத்து எடுத்துட்டாங்க."

"கர்ப்பப் பையையேவா?"

"ம்."

"அட, கிரகச்சாரமே." எல்லோரும் அண்ணியை உற்றுப் பார்க்க, அங்கே ஒரு பேரமைதி நிலவியது.

"அப்ப உன் நகை மொத்தமும் நாத்தனாருக்கு தான்னு சொல்லு."

"ஆங்... அதெப்படீங்க, மொத்தத்தையும் குடுத்துட்டு அப்புறம் நாங்க எங்க போறது? ஏதோ இல்லாத குறைக்கு வாழ்க்கைப்பட்டதுக்காகக் குடுக்க வேண்டியதுதான். ஆனா முப்பது பவுன் தாங்காதுங்க."

"எத்தினிதான் செய்வ?"

"பதினைஞ்சு பவுன்."

"பதினைஞ்சு பவுனா? குப்பை அள்றவன் போடறான், பதினைஞ்சு பவுன். படிச்ச பொண்ணுன்னு ஓரளவுக்கு குறைச்சோம். பாதிக்குப் பாதியா வெட்டினா எப்படி?

சிரிப்பாங்க. எங்க புள்ளைக்கு ஏதாவது குறையா, இப்படி சம்பந்தம் பண்ணியிருக்கியேன்னு கேட்டுருவாங்க.''

''சரி, இருவது போடலாம்.''

''முப்பதுக்குக் கண்டிஷனா குறைய மாட்டேன். நாங்க நின்னு சகலமும் நடத்தறோம். உங்க பங்கு செலவு பத்தாயிரம் முன் கூட்டியே குடுத்துடணும்.''

''அவங்கக்கிட்டே பேசிட்டு சொல்றேங்க.''

''இது மட்டும் எட்டு இடம் பார்த்துட்டம். அவனா படிப்பு வேணும், படிப்பு வேணும்கிறான். பார்த்த பொண்ணுங்களுக்கு அது ஒண்ணுதான் குறை. மத்தபடி நல்லா கடைஞ்ச மாதிரி இருக்குதுங்க. குழாய்த்தண்ணி ரெட்டைக் குடம் போட்டுத் தூக்கற மாதிரி நல்ல வாளிப்பா இருக்குதுங்க. இதுக்கு இடுப்பையே காணமே. கவுச்சி சாப்பிடுவீங்கல்ல?''

செல்விக்கு புடைவையை உருவி 'பாருடி' என்று காட்டும் ஆத்திரம் வந்தது. மாடு வியாபாரம் நடக்கிறது. எல்லோர் பேச்சிலும் மிருகத்தனம் இருக்கிறது. அண்ணிக்கு ஏன் இப்படிப் போகிறது புத்தி? இதென்ன நடைமுறை.

''கேட்டுச் சொல்லு. நாங்க கிளம்பறோம். உங்க வீட்ல போன் இருக்கா?''

கடைல இருக்கு.''

''நம்பர் குடு. நம்ம வூட்டு போன் நம்பர் குடுடி. எம் பேரு சரோஜா. பேபின்னு கூப்பிடுவாங்க. பேபின்னு கூப்பிட்டா போதும், விஷயத்தை போன்லேயே கேட்டுக்கறேன், நாளைக்குச் சொல்றியா?''

வாங்கி வந்த பத்து முழத்தை ஆளுக்கு அரை முழம் நறுக்கித் தலையில் சூடிக் கொண்டனர். அண்ணி குங்குமம் கொடுத்தாள். கூட்டம் மெல்ல நகர்ந்து படி இறங்கியது.

"சுற்றிக் கொண்டிருந்த சருகுகளைப் பெருக்கி எறிந்த முற்றம் மாதிரி வீடு அமைதியாயிற்று.

அண்ணன் உள்ளே நுழைந்தார்.

"ஏய், இங்க வா."

"என்னா?" அண்ணி குரலில் கோபம் இருந்தது.

"உன்னைப் பொண்ணு பார்க்க ஆள் இட்டாரச் சொன்னேனா?"

"இல்லை"

"அப்ப என்ன இது? மடித்து வைத்திருந்த பூப்பந்தைப் பார்த்துக் கேட்டார்.

"நானா வாங்கண்ணேன். எப்பமோ புள்ளை இருக் கான்னு விசாரிச்சதுக்கு இப்ப கும்பலா வந்துட்டாங்க. வெளில போங்கன்னுட முடியுமா?"

"நான் இல்லாத பேசி முடிச்சிடுவியா?"

"உங்களாண்ட கேட்டு சொல்றதாத்தான் சொன் னேன்."

"இங்கென்ன இருக்குது, முப்பது பவுனு நாள் தான் அவுத்துக் கொடுக்கணும்னு பேசினதுகூட என்னைக் கேட்டுத்தானா?"

"அது... அது... பவுனு குறைக்க அவங்களுக்கோசரம்..."

"ஊருக்கோசரம் புருஷனைக் குழிக்குள்ள இறக்கிடு வியா?"

"இதென்ன பேச்சு. யார் சொன்னா உங்களுக்கு?"

"அந்த கும்பல் தான் கடைக்கு வந்ததுங்க நோட்டம் பார்க்க. இதோ பார், ஏதோ ஐயோ பாவம் நொந்துக் கிடக்கிறியேன்னுதான் உன் கூச்சலுக்கு அடங்கிப் போறது. உங்க சொத்துலதான் இவளுக்குக் கல்யாணம்னு தயவு

செய்து நினைக்காதே. என்னைக் கேட்காத அதிகப்பிரசங்கித்தனமா யாரையும் கூப்புடற வேலையும் வேண்டாம்.''

''நான் நொந்து கிடக்கிறதுதான் ஊருக்குத் தெரிஞ்சு கிடக்கே. அண்ணன் பொண்டாட்டி கர்ப்பப்பை அறுத்துட்டாங்கன்னு தந்தி பேப்பர்லேயே போட்டாச்சு.''

''என்ன சொல்ற நீ?''

''நான் சொல்லிட்டேனாம் அவங்ககிட்ட'' என்றாள் செல்வி.

''சொல்லுடி. எவகிட்ட வேணா எத வேணா சொல்லு. ஊர்ல புள்ளை பெறாதவே இல்லையா என்ன... அதுல நானும் ஒருத்தி, இருந்துட்டுப் போறேன். அதுக்காக எங்க ரெண்டு பேரையும் பிரிச்சுடாதேடி தாயே... அந்த மாதிரி ஏதாவது செஞ்சே... புஸ்தகம் எரிச்ச கணக்கா நானும் மண்ணெண்ணெயை ஊத்திக் கொளுத்திக்கிட்டு எரிச்சுடுவேன்.''

''ஏய் நிறுத்து... என்ன பேச்சு இதெல்லாம்?''

''நான் இளக்காரமா போயிட்டேங்க.'' அண்ணி அழுதாள்.

''ச்சே... ஏன்தான் வூட்டுக்கு வரோம்னு ஆய்டுது. எப்பப் பாரு சண்டை சச்சரவு.''

''வேணாம். நான் வாய மூடிக்கிட்டு இருக்கேன். ஏண்டி, உன் நாத்தனாருக்கு கல்யாணம் ஆகலைன்னு கேட்டா, இதோ அதோன்னு ஏதாவது சொல்லிக்கிறேன்.''

''எதுவும் சொல்ல வேணாம். இப்ப இல்லை இரண்டு வருஷம் பொறுத்துதான்னு சொல்லு.''

''அதென்ன கணக்கு ரெண்டுவருஷம்?''

''அது வேலைக்குப் போவுது.''

''எங்க?''

''வரதன் கடைல. இப்ப பேசிட்டுதான் வரேன்.''

''அதாரு வரதன்?''

''என் கூடப் படிச்சவன், கொஞ்சம் தூரத்துச் சொந்தம். இப்ப போன்ல பேசினான். கூட்டிட்டு வான்னான். சாப்ட்டுட்டுப் போறோம்.''

''எந்த இடம்?''

''மவுண்ட் ரோடு. நம்ம கல்யாணத்துக்கு மிக்ஸி கொடுத்தானே...''

''ஆமாம்.''

''உனக்கு பண்டம் கொடுத்ததைச் சொன்னாதான் ஆளு ஞாபகம் வரும். ஆட்டோமொபைல்ஸ் கடை. கணக்கு எழுதற வேலை.''

''என்னா கிடைக்கும்?''

''போனாத்தான் தெரியும்.''

''சொந்தத்துல வேலைக்கு வுட்டு இன்னும் அசிங்கமா போப்போவுது.''

''அசிங்கம் என்னா? இன்னும் மரியாதையா நடத்து வான்.''

''இந்தா செல்வி. உனக்கு ஒரு வார்த்தை. வேலைக்குப் போயிட்டு, பெருக்குறது என் வேலையில்லை, கழுவுறது என் வேலையில்லைன்னு தகராறு ஆரம்பிச்சே பட்டுன்னு நிறுத்திடுவேன். இது உன் வீடு. நாளைக்கு இன்னொரு இடம் போய் குப்பை அள்ளத் தெரியாத நிக்கக்கூடாது.''

செல்வி நன்றியுடன் அண்ணனைப் பார்த்தாள்.

அது கடையில்லை. கம்பெனி.''

''த மெட்ராஸ் ஆட்டோமொபைல்ஸ்'' ஆட்டோ மொபைல்ஸ்'' வாசலில் பெரிய போர்டு இருந்தது. கீழே

கோடௌன். மேலே ஆபீஸ் படியேற சிறிய ஹால். வரவேற்பு நாற்காலிகள். டெலிபோன் ஆபரேட்டர் தாண்டியதும் பெரிய ஹால். ஏழெட்டு நாற்காலிகள். இரண்டு பெண்கள் குனிந்து ஏதோ எழுதிக் கொண் டிருந்தார்கள். கண்ணாடி அறையில் நீல டி.வி. பெட்டி ஒன்று நோ ஸ்டாக்... நோ ஸ்டாக்... என்று கண் சிமிட்டிக் கொண்டிருந்தது.

ஹாலில் வயதானவர் பேப்பர் படித்துக் கொண்டிருந் தார். அண்ணன் கனைத்துக் கை கூப்பியது. மெல்லப் பேப்பரை மடித்தார்.

''யெஸ்... வாட் ஐ கேன் டூ ஃபர் யூ ஸார்?'' கனத்த குரலில் பேசினார்.

''வரதனைப் பார்க்கணும்.''

''டைரக்டரையா?''

''இல்லீங்க. வரதன் இந்தக் கம்பெனி ஓனர்.

''ஓனர்தான் டைரக்டர். டைரக்டர்தான் வரதராஜப் பெருமாள். நீங்க கேக்கறது யாரை?''

''நாங்க வரதுன்னுதான் கூப்புடுவோம். வீட்ல சின்னப் பையான்னுவாங்க.''

''பேப்பர் படித்தவருக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''உங்க பேர் என்னவோ?''

''திருநாவுக்கரசு, திருநான்னா தெரியும்.''

''திருநாளா... திருநாள்னா என்ன அர்த்தம்? உத்சவம்னு சொல்லலாமா?''

''இல்லீங்க.. திருநா... திருநான்னா...''

''அண்ணே... சும்மா இருங்க.''

பெரியவர் போன் பட்டன் அழுத்தினார்.

''ஹலோ வைத்தி பேசறேன். யாரோ திருநாவாம். சின்னப்பையன் இருக்கானான்னு கேட்கிறார். நோண்டீ கேட்டதுல, நீங்கதான் அதுன்னு தெரிஞ்சுது. உள்ள அனுப்பட்டுமா?''

போன் பொத்திக் கொண்டு ஒரு இடிச் சிரிப்பு சிரித்தார் அந்த மனிதர். கண் ஓரம்... இமை விளிம்பு, காது நரை, கழுத்து மாலை எல்லாம் சிரித்தது. சிரிப்பில் விஷமம் தெரிந்தது.

செல்வி கவலைப்பட்டாள்.

12

''உள்ளே போங்கோ...'' வைத்தி கை காட்டினார்.

கண்ணாடிக் கதவு திறந்து உள்ளே போனார்கள். செவ்வகமான அறை நடுவே கதவு இருந்தது.

இடப்பக்கம் சோபாக்களும், வலப்பக்கம் பெரிய கண்ணாடி மேஜையும், நாற்காலிகளும் இருந்தன. சில் லென்ற ஏ.ஸி. குளிர் உடம்பைத் தாக்கிற்று.

''வாங்க அண்ணே'' இளைஞனாய் ஒரு ஆள் சுழல் நாற்காலி விட்டுக் கை கூப்பினார்.

''வரதா... நல்லாயிருக்கியா?'' அண்ணனும் கை கூப்பிற்று.

''உக்காருங்க. யாரு, தங்கச்சியா? வாம்மா உட்காரு.''

''உன் முழு பேரு மறந்து போச்சு வரதா... நாளாச் சில்ல... நான் வேற சின்னப் பையான்னு வூட்டுப் பேரை இங்க வந்து சொல்லிட்டேன்.''

''தப்பேயில்லை. உங்களுக்கு நான் சின்னப் பையன்தான்.''

''நல்லது. அது மனசோட இருக்கணும். உளறியிருக்கக் கூடாது. நான் கடைன்னதும் ஏதோ எட்டுக்குப் பத்து, பத்துக்குப் பன்னிரண்டு இடத்துல இருப்பேன்னு நினைச்சேன். பெருசா இருக்குப்பா. கம்பெனின்னு போட்ருக்குது.''

''பெரிய கடை, அவ்வளவுதான்.''

''நல்லா இருக்கியா?''

''உங்க புண்ணியத்திலே...''

''இதுக்கு ஒரு வேலை போட்டுக் கொடு வரதா.''

''ஏன் அண்ணே?''

''நச்சரிக்குது.''

அந்த இளைஞன் திரும்பி செல்வியைப் பார்த்தான்.

''வேலைக்கு வர வேண்டிய அவசியம்?''

''வீட்டு நிலைமை'' செல்வி பதில் சொன்னாள்.

''ஏன் அண்ணே. சாப்பாட்டுக்குக் கஷ்டமாயிடுச்சா, பிரஸ் சரியா ஓடலையா?''

''சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லை வரதா. செல்வி கல்யாணத்துக்கு நான், இன்னும் ரெடியாகலை. தம்பிங்க இப்பதான் கால் ஊனியிருக்காங்க. அவனவன் வயித்துப் பாட்டைப் பார்த்துக்கறான். இதுக்கு ஒரு வழி பண்ற அளவு...''

''வீடு இருக்குதுல்ல?''

''இருக்கு.''

''இருக்கு. வித்து முடிச்சுடலாம். இது வேணாங்குது.''

''இன்னிய அவசரத்துக்கு வித்துட்டா, நிலம் விலை போற வேகத்துல பின்னால் வருத்தப்படுவோம். திரும்பக் காசு சேர்த்து வாங்க முடியுமா?அதான் விக்க வேணாம். இரண்டு வருஷம் வேலைக்குப் போய் துட்டு சேர்க் கறேன்னு அண்ணன்கிட்ட சொன்னேன்.''

மறுபடி அவன் திரும்பிப் பார்த்தான்.

''என்ன வேலை செய்யும்? என்ன சம்பாதிக்கும்? என்ன சேர்க்கும்? எதுக்கு அண்ணே இது?''

''சொன்னேன், கேட்கலை. ஒரே பிடிவாதம்.''

''வேலைக்குப் போறது ஃபேஷனாயிடுச்சுண்ணே. எதிர் வீட்டுக்காரி போறாளே, நாம போனா என்னன்னு தோணுது. சாந்துப் பொட்டு, ப்ளாஸ்டிக் பை, பவுடர் டப்பா. குதிகால் செருப்பு, காட்டன் புடைவை, சில்க் புடைவைன்னு செலவழியுமே தவிர சேர்க்க முடியாது. செலவு செய்யத்தான் பொம்பளைங்க சம்பாதிக்கப் போறாங்களே ஒழிய... ஆரம்பத்துல அப்படித்தான் தோணும். ஆயிரம் ரூபா சம்பாதிச்சா, ஆயிரத்தையும் அப்படியே பாங்க்ல போட்டுடணும்னு தோணும், இரண்டு மாசம் போட முடியுமா? சம்பாதிக்கிறமே, கூட ஒரு புடைவை வாங்கினா என்னன்னு ஆரம்பிக்கும். முன்ன எதிர் வீட்டுக்காரிப் புடைவை மட்டும் தெரிஞ்சது போய் நிறைய பொம்பளைங்க புடைவை கண்ல பட்டு அத்தினி விதப் புடைவையும் நம் பீரோவுல அடுக்க மாட் டோமோ... புடைவை வச்சுக்கப் போறலைன்னு இன் னொரு பீரோ வாங்கலாமான்னு தோணும். கடன் உடன் வாங்கிக் கல்யாணத்தை முடியுங்கண்ணே...''

அண்ணன் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.''

''ஒரு வேளை காசு குறைஞ்சதுன்னா... நான் தரேன் கடனா தரேன்.''

அண்ணன் முகம் சொறிந்தார்.

''அண்ணே. போகலாமா...'' செல்வி எழுந்தாள்.

''எங்க?'' அவன் முகம் திரும்பாமல் கேட்டான்.

''எங்களுக்குத் தெரியலை இது. நீங்க தெளிவா லேடீஸ் பத்தி சொல்லிட்டீங்க. புடைவை வாங்கத்தான் வேலைக்கு வரோம்னு புட்டு வச்சுட்டீங்க. புரிஞ்சு போச்சு வரோம். வாங்கண்ணே.''

''எங்கம்மா?''

''வேற எங்கயாவது வேலை தேடலாம்.''

''வெறும் திமிரு'' தலை குனிந்து கண்ணாடிக் குமிழ் உருட்டினான்.

''ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு குணம். ஒருத்தருக்கு அலட்சியம். ஒருத்தருக்குத் திமிரு.''

''நான் யாரையும் அலட்சியமாச் சொல்லலம்மா. நல்லது சொல்றேன்.''

''எது நல்லதுன்னு நிறைய சொல்லலாம். நடக்கறது என்னன்னு புரிஞ்சு சொல்லணும்.''

''என்ன செல்வி, வந்த இடத்துல சண்டை போடறே... வரதன் நமக்கு வேண்டப்பட்டவன்.''

''வேண்டப்பட்டவங்கதான்... இடைஞ்சலா நினைச் சாக்க விலகிப் போயிடறதுதான் நல்லது.''

''விலகறதுக்கா எட்டு வருஷம் கழிச்சு திருநா அண்ணன் முகம் பார்த்திருக்கேன். எத்தினி சம்பளம் வேணும் உனக்கு?'' திரும்பினான். முகத்தில் கடுமை இருந்தது.

''என் யோக்கியதைக்கு ஏத்தது.''

''என்ன யோக்கியதை?''

''ப்ளஸ் டூ... காமர்ஸ்... எய்ட்டி பர்ஸண்ட்.''

''ஃப்யூ... எம்.பி.ஏ. வோன்னு நினைச்சேன்.''

''எம்.பி.ஏ.வா இருந்தா இங்க ஏன் வரேன். இடமா இல்லை?''

''படிக்கிறது...''

''நீங்க சொல்ற மாதிரி உடுக்கறதுக்கே உத்யோகம் வேணுங்கற போது, எங்கேயிருந்து படிக்கிறது?''

''அப்ப வர சம்பளம் சேர்த்துடுவிங்க, புடைவை வாங்க மாட்டீங்க?''

''புடைவை வாங்கறோம். பொங்கித் திங்கறோம்... சம்பளத்தை என்ன பண்ணுவேன்னு கேட்டுத்தான் வேலை தருவீங்களா.''

''இன்னது பண்ணப் போறேன்னு வேலை கேட்கறீங் களே... அதனால வர்ற கேள்வி இது. இரண்டு வருஷம் கழிச்சு கடன் வாங்காத கல்யாணம் முடியுமா?''

''பத்து வாங்கற இடத்துல அஞ்சு வாங்கலாம். அஞ்சு கைல இருக்குன்னு நம்பிக்கையோட இருக்கலாம். அண்ணன் காப்பாத்தும்னு உட்கார முடியுமா.''

''உட்கார முடியாதுதான் கிளம்பிட்டீங்களே.''

''யெஸ்.''

''அத்தச் சொல்லுங்க. வீடு போரடிச்சுது, வேலைக்குக் கிளம்பிட்டீங்க.''

''அது இல்ல வரதா.''

''சும்மா இருங்க திருநா அண்ணே, வேலை போரடிச்சா வீட்டுக்குப் போய் உட்கார்ந்துடுவீங்களா?''

''இல்லை.''

''என்ன இல்லை?''

"நின்னு பெரியாளாகணும். இன்னொருத்தர் கை எதிர் பார்க்காத வாழணும்."

"அடடே... புரட்சி."

"இத பொம்பளை சொல்றதுதான் புடிக்காத போயி டுச்சு. நாம பேசுறதை இதுங்க பேசுதேன்னு பயம் வருது."

"பேசுங்களேன். பேசறதுக்கு என்ன காசா பணமா... இன்னொருத்தர் கையை எதிர்பார்க்காத இருக்கறதுக்கு எத்தினி உழைக்கணும் தெரியுமா?"

"தெரியும்"

"எவ்வளவு அவமானப்படணும் தெரியுமா?"

"தெரியும்"

"என்ன தெரியும் ச்சீ... போ வெளியேன்னு இப்ப சொன்னா மூஞ்சி செத்துரும்."

"ஆமா... செத்துரும்" செல்விக்கு உதடுகள் துடித்தன. "வெளியே போய் செத்த முகத்தை அழுத்தித் துடைச்சிக் கிட்டு, இன்னொரு இடம் போய் வேலை கேட்பேன். அங்கியும் 'ச்சீ... போ'ன்னா வேற ஒரு இடம்..." கண்களில் ஜலம் கட்டியது.

அவன் அமைதியாய் இருந்தான். யோசித்தான்.

"அண்ணே... வேலை போட்டுக் கொடுத்துடலாம். எனக்கு ஆள் தேவைதான். காமர்ஸ் படிச்சிருக்கு. வேலை கத்துக் கொடுக்கலாம். கல்யாணத்துக்குச் சேர்க்கணும்னு சொன்னீங்களே... அத்தினி சம்பளம் தர முடியாது, நிறைய எதிர்பார்த்தீங்கன்னா ஏமாந்துடுவீங்க."

"எத்தினி தருவ வரதா?"

"அள்ளிக்கொடுக்கலாண்ணே, உங்கப்பாரு எங்க வீட் டுக்குச் செய்த உதவிக்கு உட்கார வச்சு காசு தரலாம். இரண்டரை வட்டிக்கு முப்பது பவுன் நகை அடகு

வச்சோம். வாங்கிட்டு துட்டு கொடுத்தாரு. வருஷம் போனதுக்கப்புறம் மீட்டுக்கப் போனா வட்டி வேணாம் னுட்டாரு. வட்டிக்குக் கடன்னாதான், அடைக்கத் தோணும். அதான் சொன்னேன். போய்ட்டு வான்னாராம் உங்கப்பா. அந்தக் காசுலதான் கடை ஆரம்பிச்சாராம் எங்கப்பா...

முப்பது சவரனுக்கு நூத்தி இருபது ரூபா மேனிக்கு வட்டி தரணும், முப்பத்தி நாலு வருஷம் ஆச்சு, இப்போ எத்தினி வட்டி தரணும். அத்தினியும் வேலை தராமலியே தரலாம். காசு குறைஞ்சா கடன் தரேன்னு சொன்னது அப்படித்தான். கடன்னு சொன்னது வாணாம்னு தள்ளத் தான் இது பேய்க் கூச்சல் போடுதே.''

செல்வி முகம் துடைத்துக் கொண்டாள்.

''அது வாங்க மாட்டேன் வரதா. அப்பா செய்த தானம் தலைக்கு மேல கடைசிமட்டும் நின்னு காப்பாத்தும். அதைக் காசா வாங்கி அழிச்சிடக்கூடாது. நான் கேட்டது உதவி.''

''ஆயிரம் ரூபா தரேன். வேலை கத்துக்கட்டும். பார்ப் போம். என்ன சொல்றீங்கன்ன.''

''வரதா'' திருநா பரவசப்பட்டு எழுந்து கை குலுக் கினார், '' நாளைக்கே வரச் சொல்லட்டுமா?''

''நல்ல நாள் பார்த்து வரச் சொல்லுங்க போதும். ஆவே சமா இருக்கறதால நாள் நட்சத்திரம் பார்த்தே வரட்டும்.''

''ஐயோ, நான் ஆவேசப்படலைங்க. பாரமா இருக் கோம்னு புழுங்கிப் போய்...''

''அடட... ஆவேசம் வரணும். மூவாயிரத்து அறநூறு வால ஆரம்பிச்ச கடை இது. கோணி ஊசி, ஆணிலாடம், குதிரை சவுக்கு. கடையாணி வித்த கடை இது. இப்பவும் அதேதான். வேற மாதிரி ஊசி, வேற மாதிரி ஆணி, சீதுக்

கொட்டா, ஓட்டுக் கூரை, மரக் கட்டைத் தளம்னு வளர்ந்து இரட்டை மாடியா நிக்குது. எங்க ஐயா ஆவேசப் பட்டதால வந்த வளர்ச்சி தெளிவு இருக்கணும்.''

''இருக்குங்க.''

''எதுக்கோசரம் வேலைக்குப் போறம்னு உங்களுக்குத் தெளிவு இருக்கா?''

''நிச்சயமா இருக்கு.''

''அப்ப வாங்க. வந்து கம்பெனின்னா என்னன்னு புரிஞ்சுக்கங்க.''

''நான் சொல்லிட்டேன். வீட்டு வேலை செய்ய மாட் டேன்னு சொல்லிடக் கூடாது... அதுவும் செய்யணும்னு.''

''நாலு நாள்ல நீங்களும் நானும் கூட வீட்டு வேலை கத்துக்கலாண்ணே... உலகம் கத்துக்கறது கஷ்டம்.''

''அப்ப...''

''வாங்க,'' கை கூப்பினான்.

''எட்டு வருஷம் ஆச்சு கடை வளர்ச்சி கண்ணுக்குத் தெரியறது. வீட்ல யாரு, என்ன எத்தினி பசங்க தெரியலை.''

''இரண்டு பொண்ணு. பெரிசு நாலு வயது. சின்னது ரெண்டு வயசு. பிள்ளை வேணுமின்னு பிடிவாதமா உண்டாயிருக்கா. இது தவிர தங்கச்சி இருக்கு பத்தாவது படிக்குது.''

''ரொம்ப சந்தோஷம்.''

''ஒரு நாள் அண்ணியைக் கூட்டிட்டு வீட்டுக்கு வாங்க...''

''வரேன். நிச்சயம் வரேன்.''

குளிர் பானம் உள்ளே நுழைய,நின்றபடி குடித்தார்கள், அவன் போன் பேச ஆரம்பித்தான். பாட்டில் மேசையில் வைத்தார்கள். இன்னொரு போன் எடுத்து பட்டனை அழுத்தி யாரையோ கூப்பிட்டான். மாணிக்கத்தை கூப் பிட்டு, ரெண்டு பேரை ட்ராப் பண்ணணும்னு சொல்லு.''

''வரேங்க.'' செல்வி கை கூப்பினாள்.

அவன் தலையசைத்தான். போனில் பேசத் துவங்கினாள்.

வெளியே வந்தார்கள்.

இப்போது நீலப் பெட்டியில் எண்களும் எழுத்துக்களும் பட்டியல் போல மேல போய்க் கொண்டிருந்தன.

''ஐயா... வரேங்க.'' வைத்தியைப் பார்த்து அண்ணன் கை கூப்பினார்.

''பேசியாச்சா... அம்மாடி, ஸ்டேட்மெண்ட் எடுத்துண்டு போ. கொஞ்சம் கூலா இருப்பார்னு நினைக்கறேன். கெஞ் சிக் கூத்தாடிக் கையெழுத்து வாங்கிடு, என்னாண்றது... வந்துட்டமே... அனுபவிப்போம்.''

முகம் திருப்பி யாருக்கோ உத்தரவு பொழிந்தார்.

செல்வி ஹாலை மறுபடி ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். தனக்கு சம்பந்தமேயில்லாத இடம் போல் இருந்தது. ஆனால், இங்கே இந்த மாடியில் தன் வாழ்க்கை துவங்கப் போகிறது. நல்ல நாள் எப்போது? நாளைக்கு நல்ல நாளா...?

''கார் ரெடி சார்...'' யாரோ அருகே வந்து சொன் னார்கள்.

''காரா... நாங்கள் ஓனரைப் பார்க்க வந்தோம். அவங்க உள்ள இருக்காங்க...'' அண்ணன் கைகாட்டினார்.

'தெரியும். உங்களைத்தான் வீட்ல வுட்டுட்டு வரச் சொன்னாரு.''

''யாரு, வரதனா?''

''முதலாளி.''

''வேணாம். நாங்க பஸ்லேயே...'' திரும்பி வரதன் அறைக்குள் போனவரை செல்வி தடுத்தாள். ''அவங்க கார்லேயே போயிடலாம்.''

''வேற யாருக்காவது இருக்குமோன்னு தோணுது, தப்பா நம்மளைக் கேட்கறாங்க.''

''இல்லை. போன்ல சொன்னாரு, ட்ராப் பண்ணுங் கன்னு.''

கறுப்புக் கண்ணாடி ஏற்றி, டிரைவர் கதவு திறந்து காத்திருந்தான். செல்வி உள்ளே ஏறினாள். அண்ணன் பின்னே நுழைந்து உட்கார்ந்து கொண்டார். கதவு சாத்தப் பட்டது. சாத்தியதும் இருள் சூழ்ந்தது. சாலை திரும்பப் பட்டது. கார் மெல்லிய துடிப்போடு இயங்கியது. நகராமல் நின்றது.

13

''எங்க போகணும் சார்?'' என்றான் டிரைவர்.

''மந்தைவெளிங்க. நாங்க பஸ்லேயே போயிருப்போம். உங்களுக்கு சிரமம்.''

செல்வி அண்ணனை முறைத்து அடக்கினாள்.

கார் நகர்ந்து மவுண்ட்ரோடு கும்பலில் கலந்தது. கறுப்புக் கண்ணாடிக்கு வெளியே உலகம் மங்கலாய்

நடமாடுவது தெரிந்தது. கார் முன் பக்கமிருந்து சில்லென்று காற்று கிளம்பியது.

''ஏஸி காரா?''

''ஆமாங்க. இரண்டு மாசம்தான் ஆச்சி, டெலிவரி எடுத்து, சார் யாருங்க?''

''நான் அவருக்கு உறவு?''

''அம்மா வழியிலயா... ஐயா வழியிலயா?''

''எங்கப்பாரும் அவங்கப்பாரும் ரொம்ப சிநேகிதம்.''

''முதலாளி அப்பாருங்களா?''

''ஆமாங்க. அதான்... என் தங்கச்சியை இங்க வேலைக்குக் கேட்டவுடனே சரின்னுட்டான்.''

''வேலைக்கா?'' திரும்பி சின்ன வியப்போடு செல்வியைப் பார்த்தான். 'இங்க வேலைக்கு வரவளுக்கா கார் ஓட்டறம்?'' என்பதாய்ப் பார்வை பட்டது.

''கம்பெனி நல்ல லாபங்களா?'' அண்ணன் சீட்டு விட்டு முன்னேறி கேட்டார்.

''ஆட்டோமொபைல்ல லாபம் இல்லாத எப்படிங்க... இடம் வாட்டமா புடிச்சிட்டாரு. நெறைய காண்டாக்ட் இருக்கு. துடிப்பானவரு. என்ன கொஞ்சம் முன் கோபம்.''

''கத்துவானா?''

''கத்தாத வேலை ஆவாது சார். கோவம் வந்துச்சி, தாட்புட் தஞ்சாவூர்தான். நான் அடிகூட வாங்கியிருக்கேன்.''

அண்ணன் கவலையுடன் செல்வியைத் திருப்பிப் பார்த்தார். செல்வி இறுக்கமாய் உட்கார்ந்திருந்தாள்.

"ஆனா, அதே சமயம் நல்ல குணம். கஷ்டம்னா வாரி கொடுப்பாங்க. கஷ்டப்பட்ட குடும்பம். அதனாலே பிறத்தி யார் கஷ்டம் தெரியும். ஆனா, அந்த அம்மா இருக்கே..."

"முதலாளி அம்மாவா...?"

"பிசாசு, எச்சக் கையால காக்கா ஓட்டாது. இத்தினிக் கும் பெரிய பரம்பரை. என்னைப் பார்த்து. சட்டுன்னு பெட்ரோல் திருடறியான்னு கேட்டுது சார். உட்கார வச்சி அஞ்சு லிட்டர் பெட்ரோல் போட்டு ஊர் சுத்தினேன். லிட்டருக்கு ஆறு கிலோ மீட்டர் வரலை. அப்புறம் தான் வண்டி மாத்துனாங்க."

"சரி... பொம்பளை எப்படி இருந்தா நமக்கென்ன?"

"உங்களுக்கு ஒண்ணுமில்லை. என்னை மாதிரி தொழி லாளர்களுக்குக் கஷ்டம். உறவுக்காரங்கறதால சொன் னேன். பாப்பா பேரு என்னங்க?"

"செல்வி, திருவளர் செல்வி."

அப்போதுதான், தன் பெயர்கூட வரதன் கேட்காதது செல்விக்கு உறைத்தது.

ஆக, இந்த வேலை தன் திறமைக்கும் படிப்புக்கும் கிடைக்கவில்லை. இது தானம். ஒருவகைப் பிச்சை. போன தலைமுறைப்பட்ட கடனுக்கு இப்போது வட்டி. 'வா, வந்து ஏதோ செய்' என்கிற நினைப்பில் பத்தோடு பதினொன்று என்கிற எண்ணத்தில் தரப்பட்ட வேலை நல்லது. நான் பத்தோடு பதினொன்று இல்லை. நம்பர் ஒன். நிச்சயம் ஒன். இனி அண்ணியோட சண்டை இல்லை. என் யுத்தம் வேறு. என் போர்க்களம் வேறு.

"ரொம்ப மாட்டு சந்தா இருக்கே... வண்டில பட்டு துன்னா அம்மா..." டிரைவர் முணுமுணுத்தான்.

"நிறுத்தப்பா..." செல்வி குரல் கொடுத்தாள். இறங்கி மெல்ல கார்க்கதவு சாத்திவிட்டு வீடு நோக்கி நடந்தாள்.

"வரதன் வேலை கொடுத்துட்டாம்மா. நான் என்னமோ கடைன்னு நினைச்சேன். பெரிய கம்பெனியா இருக்கு ஆறேழு லேடீஸ்ங்க வேலை செய்யறாப் போல... ஒரு ஐயரு மானேஜரா இருக்காப்பல... ஆயிரம் ரூபா சம்பளம் போட்டுத் தரேன்னுட்டான். 'உங்கப்பா செஞ்ச உதவிக்கு இது உறை போட காணாது'ன்னுட்டான்."

"என்னிக்குப் போகணும்?"

"எப்ப வேணா நல்ல நாள் பார்த்துப் போகலாம்."

"நான் நாளைக்கு எங்க வூட்டுக்குப் போலாம்னு இருக்கேன்."

"எதுக்கு?"

"எனக்கு முடியலை. மறுபடி தலை சுத்துது. இன்னிக்கு அரிசி களைஞ்சு போடச் சொல்ல, அப்படியே குப்புற வுழுந்துடுவேன்னு தோணுது."

"நெசமாவா... இல்லை... இல்லை இவ வேலைக்குப் போற கடுப்புல பேசறியா?"

"எனக்கு என்ன கடுப்பு. உங்க தங்கச்சிய நீங்க அனுப்ப றீங்க."

"நீ இங்க இருந்தாதானே எனக்கு வசதியா இருக்கும்?"

"எல்லார் வசதிக்குமா இருக்கணும்னு ஆசை எனக்கு முடியலியே."

"அவங்க போட்டும் அண்ணே. சமையல் நான் கவனிச்சுக்கறேன்."

"வேலைக்குப் போகணுமே செல்வி."

''பத்து மணிக்கு ஆபீஸ். ஒன்பதுக்குக் கிளம்பினாப் போதும். காலைல அஞ்சரைக்கு எழுந்தா, எல்லா வேலை யும் செய்துட்டுப் போயிடலாம்.''

''துணி துவைக்கறது, பத்து பத்திரம், சமையல் எல்லாம் ஒரே ஆளால முடியாதும்மா, இவ கோவத்துல ராங்கி காட்டறா.''

''அவங்களுக்கு முடியாதுதான். உடம்பைவிட்டு அவங்களுக்கு மனசுல பாரம் அதிகம். யோசிச்சு யோசிச்சு உடம்பைக் கெடுத்துக்கறாங்க.''

''இந்தா செல்வி... உன் வரைக்கும் பேசு. அனாவசியமா என்னைப்பத்தி நீ பேச வேண்டாம்.''

''ஏன் என்னை வையறீங்க. உங்களால முடியலைன்னா நான் செய்யறேன்னு சொன்னேன். அவ்வளவு தானே.''

''அத அவரு சொல்லணும். போறதானா போன்ற மாதிரி. அவரு நிக்க, நீ என்ன சொல்வது?''

''உங்க பேச்சு எனக்குப் புரியலை.''

''வேலைக்குப் போறத நீதானே என்னாண்ட சொல்லணும்?''

''சொன்னாதான் கூவறீங்களே. இஷ்டமில்லைன்னு கத்தறீங்களே.''

''எனக்கு இஷ்டமில்லைதான், என் வீடு, இனி எப்படிப் பேசும்னு உனக்குத் தெரியாது. ஏன் மச்சினி வேலைக்குப் போறா, உன் புருஷனுக்குத் தங்கச்சியக் கட்டிக் கொடுக்க வக்கில்லையான்னு கேட்பாங்களே... அதுக்குப் பதில் சொல்லமுடியாது.''

''போவாதீங்க.''

''உனக்குப் புரியலைடி- ஒரு வீட்டைப் பத்தி உறவு ஜனம் ஒண்ணும் சொல்லாம இருக்கணும்கறது உனக்குப் புரியலை.''

''உறவு உறவுன்னு எத்தினி உறவுக்குப் பயப்பட்டா வணும் ஒரு மனுஷாள்.''

''பயப்பட்டுத்தான் ஆவணும்.''

''நம்ப கஷ்டத்தை நாமதான் சுமக்கணும்.''

''வீட்ல உட்கார்ந்துருக்கறதுல உனக்கு என்னா கஷ்டம்? இந்த ஆயிரம் ரூபால என்னா சாதிச்சுடப் போற?''

''ஆயிர ரூபா ஆரம்பம். இது மாதிரி நாலு மடங்கு நான் சம்பாதிக்கணும்.''

''கல்யாணம் கார்த்தி அது வேணாமா.''

''அதுபாட்டுக்கு அது'' ''வேலைக்குப் போக வேணாம்னு புருஷன் சொன்னா?''

''அப்படிப்பட்ட புருஷன் வேணாம் எனக்கு. என்னை வேலைக்குப் போன்னு சொல்றவனுக்குத்தான் நான் கழுத்தை நீட்டுவேன்.''

''நம்ம ஜாதில அது கஷ்டம்.''

''ஜாதி என்னா ஜாதி.''

''ஐயோ... ஐயோ... எங்கேயோ போறாளே.''

''செல்வி. என்ன இது அதிகப் பிரசங்கித்தனம்.'

''நம்ம ஜாதில நல்லவங்க இருப்பாங்க அண்ணே. புரிஞ்சவங்க இருப்பாங்க. என் கல்யாணம் பத்தி இப்ப என்ன பேச்சு.''

''நீ வேலைக்குப் போகணும். நாங்க உட்கார்ந்து சோறாக்கிப் போடணும்.''

"வேணாம், நீங்களும் வேலைக்கு வாங்க. ஊர்ல வேலைக்குப் போற பொம்பளை சோறே ஆக்கற தில்லையா?"

"இந்த சுகம் உனக்குத் தெரியலை செல்வி?"

"ரொம்ப சுகம். ரொம்ப சுகம். அதான் எனக்கு வேணாம்னு ஓடறேன். என்னால மத்யானம் தூங்கற சுகம் தாங்க முடியலைன்னு ஓடறேன்."

"ஓடி அலுத்துப் போய் வூட்டுக்கு வரபோது, இது சொல்லட்டா."

"அலுப்புல ஐயோன்னு கேட்டுக்கிட்டு இருக்கலாம். ஆனா அடுத்த நாள் ஓடறதுக்கு துடிப்பு வந்துடும்."

"எக்கேடோ கெட்டு ஒழி."

"அப்ப நீங்க உங்கம்மா வீட்டுக்குப் போகலையா?"

"என்னை ஏண்டி துரத்துற?"

"நான் எதுக்கு உங்களைத் துரத்தணும்? நீங்கதான் போறேன் போறேன்னு குதிக்கிறீக."

"அவ பூச்சி காட்டறா செல்வி. உன்னை எப்படியாவது மடக்கணும்னு ஆத்திரப்படறா."

"இந்த ஆத்திரம் புரியலை அண்ணே எனக்கு. கையைப் பிடிச்சு, 'நான் இருக்கேன். கவலைப்படாதீங்க'ன்னு சொல் லிட்டு வந்தேன். படுத்த படுக்கையா இருக்கறபோது, வளையலைக் கழட்டிக் கொடுத்தாங்க, இரண்டு வார்த்தை யைப் பேசினதுக்கே."

"என் அருமை உனக்குத் தெரியலை. ஒவ்வொருத்தி நாத்தனாரை எப்படி நசுக்கறதுன்னு வீட்டுக்குள்ள நுழைஞ் சதும் யோசிப்பா. ஐயோ இது தாயில்லாப் பொண்ணாச் சேன்னு கட்டிக்கிட்டேன் பாரு... அது என் தப்பு. உன்

கல்யாணத்தை என் பாரமா நினைச்சேன் பாரு. அது என் தப்பு.''

''மறுபடி சொல்றேன். என் கல்யாணம் உங்கபாரம் இல்லை. உங்க நகை ஒரு குந்துமணி கூட என் உடம்பில் ஏறாது. இங்க சீருல ஒரு கரண்டிகூட நான் தொடமாட்டேன். இது என் பாரம். எனக்கு மூணு அண்ணன் உண்டு. அவங்க பாரம். என் கல்யாணத்தன்னிக்கு உங்கப்பாரக் கூப்பிட்டு மொய் எழுதச் சொல்லுங்க. வாங்கிக்கறேன். அதே மொய் திருப்பி உங்க தம்பி கல்யாணத்துக்கு எழுதி வைக்கறேன்.''

''அப்ப எனக்கு உரிமை இல்லையா?''

''எங்க அண்ணனுக்கே என்மேல உரிமை இல்லை, பெரியவங்கன்ற மரியாதைக்கு சிலதுக்குக் கட்டுப்படறேன். என்னைப் பூட்டி வைக்க முடியாது.''

''இப்பவே இப்படி பேசறியே, இன்னும் இரண்டு காசு சம்பாதிச்சுட்டா.''

''இதே பேச்சு, இதே நடவடிக்கை, மாறாது''

''உன் ரூட்டு தப்பு செல்வி.''

''பார்த்துடலாம்.''

''திரும்பிப் பார்க்கிறபோது லேட்டாயிடும். சரி பண்ண முடியாது.''

செல்வி மௌனமாய் நின்றாள். கண் மூடினாள். உள்ளே இருள் கவிழ்ந்தது.

14

"முதல்ல அப்பா படத்தையும் கும்புட்டுக்க செல்வி'' அண்ணன் சொன்னதும் ஹாலுக்கு நகர்ந்து தகப்பன் படத்தைக் குனிந்து வணங்கினாள்.

முகத்தோடு ஒட்டின மீசை, கொஞ்சம் குழி விழுந்த கன்னம்... தீர்க்கமான பார்வை, நெற்றியில் திருநீறு, காதில் கடுக்கன், சரிகை துப்பட்டா, மார்பு அளவு படம், 'ஒழுக்கமாக இரு' என்று அதட்டும் தோற்றம். ஒழுக்கமாய் வாழ்ந்ததாலேயே அதட்டல் கூடி விட்டது. கொஞ்சம் சம்பாதித்தாலேயே மற்றவர்களை அதிகாரம் பண்ணும் குணம் வந்து விட்டது. தானாய் உழைத்து முன்னுக்கு வந்தாலேயே தடுமாறுகிறவர்களைக் கண்டு ஏளனம் அதிகமாயிற்று. தன் ஜாதியை முக்கியம் என்று மதித்தால் மற்றவரை 'என்ன ஜாதிடா' என்று கேட்க வைத்தது.

வேறு காலம்... வேறு வாழ்க்கை... வேறு வித லட்சியம்... வேறு வித கொள்கைகள்...

வேலைக்குப் போக விட்டிருக்கவே மாட்டார், இந்நேரம் திருமணம் முடிந்திருக்கும். 'நம்ம வீட்டுக்குப் பேரு கெடுக்காத நல்ல புள்ளைன்னு பேர்வாங்கணும்'' கட்டளை வந்திருக்கும்' கட்டளை வந்திருக்கும் 'உன் மனசு என்ன' என்ற கேள்வியே வந்திருக்காது.

அம்மா எதிரே வரக்கூடாது. அண்ணன் உட்கார்ந்து பேசக்கூடாது. உனக்கு என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும். சும்மா கிட. வீடு- மாட்டு மந்தை... தகப்பன்- மேய்ப்பன். அறிதல் என்பது இங்கு இல்லை. அடங்குதல் தான் முதலும் முடிவுமான விஷயம் அதுவும் பெண் பிள்ளைகள் அடங்கி இருக்க வேண்டும். பெண் இப்படி

இருக்க வேண்டும் என்பது ஆணின் கட்டளை. அவன் விருப்பம்.

'இப்படித்தான் இருக்க வேணும் பொம்பளை.
இங்கிலீஷு படிச்சாலும் இன்பத் தமிழ்நாட்டிலே.'

தமிழ்நாட்டு மீதே வெறுப்பு வந்தது, இந்தப் பாட்டு கேட்ட பிறகுதான். ஏன் இங்கு மட்டும் இப்படி இருக்க வேண்டும் என்கிற கேள்வி வந்தது, இதை உணர்ந்த பிறகுதான். வேறு ஊரில் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்தது. இந்தக் கேள்விக்குப் பிறகுதான் 'முடியாது போ' என்று மறுத்தது. இது எல்லாமே அப்பா செத்த பிறகுதான் வந்தது.''

செல்வி படத்தை உற்றுப் பார்த்தாள். நான் நீயில்லை நீ எனக்குத் தகப்பனில்லை. எனக்கு வித்திட்டவன். என்னை வளர்த்தவன். ஆனால் நான் நீயில்லை. நீ சொல் லித் தந்ததை நான் மறுக்கிறேன், என்னால் தூண் பிடித்து நிற்க முடியாது. உன் வருகைக்குப் பயந்து புழக்கடைக்கு ஓட முடியாது. உன் வாக்கே வேதம் என்று வாழ முடியாது. கட்டுப்பட இயலாது.

நான் நானே. என் வாழ்க்கை நானே பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும் என் குணமே காரணம் கட்டளைக் கல்.

உன் கௌரவம் எனக்கு வேண்டாம்; உன் கொள்கை எனக்கு வேண்டாம்.

''எனக்கு வெளியே அடி விழும். தெரியும். அவமானம் வரும் தெரியும். கேலியும் குத்தலும், புண்களும் வரும் தெரியும். நான் தாங்குவேன்.

உன்னிடம் வந்து ஒண்டாது, எவர் மடியிலும் விழுந்து அழாது தாங்குவேன்.

''செல்வி, அண்ணியையும் கும்பிட்டுக்க.''

"சேர்ந்து நில்லுங்கண்ணே."

"என்னை எதுக்குக் கும்புடறது- அதான் பெரியவங்களைக் கும்பிட்டாளே."

"ச்சீ வா..." அண்ணன் இரைந்தான்.

"நான் வரலை..."

"கட்டாயப்படுத்தாதே அண்ணே. நீ நில்லு போதும்."

அண்ணனைக் குனிந்து நமஸ்கரித்தாள்.

"நல்லா இரு செல்வி."

இவன் நல்லவன். தன் பிடிவாதத்துக்கு எதிர்பிடிவாதம் காட்டாமல், ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறாள் என்று பிரமித்துப் போனவன். 'சரி, வெளியே அனுப்பிப் பார்ப் போமே' என்று யோசித்தவன்."

பெண் மனசு உற்றுக் கவனிக்கிறவனுக்கு பிரமிப்பு நிச்சயம் வரும். வாழ்க்கை பற்றி பிரமிப்பு வராதவனுக்குத் தான் மரபு தேவைப்படுகிறது. 'பெரியவங்க சொன்னாங்க' என்று உதவிக்குரல் தேவைப்படுகிறது. எதையும் உற்றுக் கவனிக்காதவர்களே இங்கு அதிகம். அதில் அண்ணியும் அடக்கம்.

புதுசாய் வாங்கின பெரிய ரெக்ஸின் பையை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். 'எதுனா வாங்கிக்க செல்வி என்று அண்ணன் நூறு ரூபாய் கொடுக்க, அதில் அறுபது ரூபாய்க்கு வாங்கின பை இது.

குழம்பு சாதமும், தனியே கிண்ணத்தில் வாழைக்காய்ப் பொரியலும் போட்ட டிபன்பாக்ஸ், கர்ச்சீப், சீப்பு, ஸ்டிக்கர் பொட்டு, கட்டைப் பேனா, பென்சில், ரப்பர், அண்ணனின் விஸிட்டிங் கார்ட், ரொம்பவும் யோசித்து இருக்கட்டும் என்று வைத்துக் கொண்டிருக்கும் சானிடரி டவல், வட்டப் பவுடர் டப்பா, இரண்டு சாக்லேட்,

சாக்லேட் பள்ளிக்கூட ஆசிரியை சொல்லிக் கொடுத்தது. ரொம்ப டயர்டா இருந்தா மிட்டாய் சாப்பிடலாம். சர்க்கரை உள்ளே போனா கொஞ்சம் தெம்பு வரும். க்ளூகோஸ் மாதிரி. அயர்ச்சி வருமோ என்கிற பயத்தில் எடுத்து வைத்துக் கொண்ட சாக்லேட்.

வேற என்ன வேணும்?

'பஸ்ஸுலே படிக்க வாரப் பத்திரிகை எடுத்துப் போலாமில்லையா... வேணாம். அந்தாள் புஸ்தகம் எடுத்துப் போகலாம் எது? எதுனா. எல்லாம் படிச்சதுதான். நடுவுலேர்ந்து புரட்டி எதுனா படிக்கலாம்' கைக்குக் கிடைத்த புத்தகம் எடுத்து வைத்துக் கொண்டாள்.

மணி ஒன்பது. கிளம்ப சரியாய் இருக்கும். பை, பவுடர் டப்பா வாங்கிய காசு போக மீதி முப்பதுரூபாய் இருக்கிறது. இது போதும்.

வேறென்ன மறந்து விட்டோம்?

எதுவுமில்லை.

''அண்ணே, நான் வரேன். அண்ணி வரேன்.''

கூடம் தாண்டி ரேழிக்குப் போனாள்.

''உன் பாவாடை தாவணிய நான் தேய்க்கணுமா? சுருட்டிப் போட்டிருக்கே...'' அண்ணி குரல் முதுகுக்குப் பின்னே கேட்டது.

''மறந்து விட்டது. பாடீஸும், உள் பாவாடையும் ரவிக்கையும் குளிக்கிற போது தோய்த்து விட்டோம். துண்டு சுற்றி, குளிக்கிற இடத்துக்குப் போன போது உண்டான துணி தோய்த்தாகி விட்டது. அறையில் அவிழ்த்த வெளிப் பாவாடையும் தாவணியும் மறந்து விட்டது. இந்தப் பழக்கம் இனி கூடாது.

"ஒரு அலசு அலசி விட்டுக் கிளம்ப வேண்டியது தானே?"

"வந்து தோய்ச்சுக்கறேன்."

"அது வரைக்கும் அங்கே கிடைக்கணுமா?"

உள்ளே போய் துணிகளைச் சுருட்டி துணிக் கூடையில் போட்டாள்.

"அண்ணே வரேன்" மறுபடி கூவினாள், படியிறங் கினாள்.

"சொல்லாத போவுது பாரேன்" அண்ணி குரல் பின்னால் கேட்டது.

ஒன்பது பத்து. பஸ்ஸில் கூட்டம் பிதுங்கித் தள்ளிற்று. ஒன்பது இருபது பஸ் உட்கார இடம் இல்லை. ஒன்பதரை பஸ்ஸில் லேடீஸ் ஸீட் காலியாக இருந்தது. மந்தைவெளி டெர்மினல் முழுக்க மக்கள் வெள்ளம். நல்ல வேளை பத்து மணி அலுவலகத்துக்கு, ஒன்பதுக்குக் கிளம்பினோம். பாவாடை தாவணி தோய்த்து விட்டு வந்திருந்தால் ஒன்பதரை பஸ் கூடக் கிடைத்திருக்காது.

ஒன்பதரை பஸ்ஸில் உட்கார்ந்து புஸ்தகம் பிரித்தாள். மனசு புத்தகத்தில் லயிக்கவில்லை. ஜன்னலோர ஸீட்டின் வெளியே வேறு உலகம் தெரிந்தது. நான்கு பாதை பிரிந்த முனையில் இருந்த டெர்மினல் சுற்றி சுவர் எழுப்பி, தீவு மாதிரி இருந்தது. நிறைய கல்லூரி மாணவிகள் தென்பட் டார்கள். கும்பல் கும்பலாய் பேசிச் சிரித்துக் கொண்டிருந் தார்கள். வேலைக்குப் போகிற பெண்கள், அநேகமாய் தனியே நின்று ஏதாவது பத்திரிகை படித்துக் கொண்டிருந் தார்கள்.

ஒன்பது பத்து பஸ் உறுமிற்று. மெல்ல நகர்ந்தது நகர, படியோரம் ஆண்கள் தொத்திக் கொண்டார்கள்.

"என்ன சார்... நைன் டென் வுட்டுட்டேளா?" முன்னால் குரல் கேட்டது.

"ஆமா சார், இன்னிக்கு தர்ப்பணம், சாஸ்திரி லேட் பண்ணிட்டார்" நின்றவர் பதில் சொன்னார்.

ஒன்பது இருபது பிதுங்கத் துவங்கியது. ஒன்பதரையில் உட்கார இடமில்லை ஆட்கள் நிற்கத் துவங்கினார்கள் இவள் பக்கத்தில் நாற்பது வயதுப் பெண்மணி தோல் பையோடு உட்கார்ந்திருந்தாள்.

கையில் டிக்கட்டுக்கு உண்டான காசை அடுக்கி அடுக்கி பார்த்துக் கொண்டிருந்தாள். செல்வியும் பை திறந்து சில்லறைக் காசு எடுத்து வைத்துக் கொண்டாள்.

"ஏங்க... ஆர்ட்ஸ் காலேஜுக்கு எண்பது பைசாதானே?"

"தெரியாது..." பதில் வந்தது.

உற்றுப் பார்க்க, அந்தப் பெண்மணி முகம் மிகக் கவலை யோடு காணப்பட்டது. இவளுக்கு வயது வந்த பெண் குழந்தை இருக்கலாம். பிள்ளை இருக்கலாம்? அவர்களைப் பற்றிய கவலை இருக்கலாம். மாமனார் மாமியார் தொந்தரவு. புருஷன் கோபம், குடும்பச் செலவு- ஏதாவது குறையிருக்கலாம்.

அந்தப் பெண்மணி கையில் கல்கி இருந்தது.

"ஏங்க... புது கல்கியா?"

"தெரியலை."

"கொஞ்சம் கொடுங்களேன்."

"வேணாம்மா. போன வாரம் கேட்டாங்கன்னு தின மணிக் கதிர் கொடுத்தேன். மறந்து போய் என் ஸ்டாப்பிங் கில் வாங்காம இறங்கிட்டேன். ஆபீஸ்ல லைப்ரரிக்காரன் புதுசு வாங்கிக் கொடுன்னு கத்தினான்."

"செல்வி ஜன்னல் பக்கம் முகம் திரும்பிக் கொண்டாள்.

ஒன்பது இருபது அசைந்தது, மறுபடி ஆண்கள் பிதுங்கும் வாசலில் தொற்றிக் கொண்டார்கள். ''ஒன்பதரை, பஸ் ஸெல்லாம் கீழே இறங்குங்க. இது போவாது.'' யாரோ பஸ் பக்கத்தைத் தட்டினார்கள்.

''ஏம்பா?''

''ப்ரேக் சரியா புடிக்கலை. இறங்கி முன் வண்டிக்குப் போங்க. இல்லை... அடுத்த வண்டிக்கு வாங்க.''

''அடுத்த வண்டி எப்ப?''

''எனக்குத் தெரியாது. கூண்டுல கேளு.''

''ஏறி உட்கார்ந்த பிறகு இறக்கறீங்களே... முன்னால் சொல்லக் கூடாது?'' யாரோ அதட்டினார்கள்.

''ப்ரேக் புடிக்காத நடு வழில இடிச்சு இறங்கறதுக்கு முன்னாடியே சொன்னது என் தப்பு. எப்படின்னா போங்க. இது போவாது.''

கூட்டம் பதபதவென்று இறங்கிற்று. செல்வி விழித்த படியே உட்கார்ந்தாள். சட்டென்று இறங்கி ஓடிப்போய் டெர்மினஸ் வாசலில் ஊர்ந்து மெல்லப் போகும் ஒன்பது இருபது நோக்கி ஓடினாள்.

பின் பக்கம் இடம் இல்லை.

முன் பக்கம் ஓடினாள். பஸ் தெருவுக்கு இறங்கித் திரும்பத் துவங்கியது.

வலக்காலை முன் வைத்து தொற்றிக் கொண்டாள். விளிம்பில் தொங்கி நிற்கும் இரண்டு ஆட்களுக்கு நடுவே புகுந்து முதல் படியில் ஏறினாள்.

''யாரது... முன்னால் ஏர்றது... இறங்கு கீழே...''

''போயிடுங்க... போயிடுங்க. உள்ளே போயிடுங்க...'' வாசல் படியில் நின்று இடித்துத் தள்ள, முன்னேறினாள், யார் காலையோ மிதித்தாள்.

இவளைத் தொடர்ந்து வந்தவர்களும் அடித்துப் பிடித்து ஏற, பத்து இருபது பேர் அதிகமானார்கள்.

அந்தக் கவலை தோய்ந்த பெண்மணி பின்னே வந்து நின்றாள்.

பஸ் திரும்பி வெளி விளிம்பில் நின்றது.

''இப்ப ஏறினவங்கல்லாம் கீழ இறங்கு...''

''அடுத்த பஸ் கேன்ஸல் ஆயிடுச்சுப்பா. ஆபீஸ் போக வேண்டாமா?'' யாரோ மன்றாடினார்கள்.

''கேன்ஸலா?''

''ப்ரேக் பிடிக்கலையா.''

''எதுல ப்ரேக் பிடிக்குது, நாலு ட்ரிப் அடிச்சிட்டு டிபன் வேளைக்கு நிறுத்திடறார். நம்ப டிரைவருக்கு சாமர்த்தியம் இல்லை.''

''பப்ளிக் சர்வீஸே இப்படி பாடா படுத்தறீங்களே.''

''நாங்க பட்ற பாடு தெரியுதா உனக்கு? நாப்பது பேர் ஸீட்டு, இருபது பேர் ஸ்டாண்டிங், பஸ்ல பாரு, நூறுபேர் அடைஞ்சு கிடக்கறாங்க. எவன் டிக்கட் கொடுக்கறது? ஒரு டிக்கெட் கொடுக்காம வுட்டா எனக்குக் காயிதம் குடுக் கறான்.''

''கண்டக்டர் சொல்றது ஞாயம். எல்லாம் டிக்கெட் வாங்கிடுங்க. முன்னால ஏறினது யாரு. பிரதர், காசு கலெக்ட் பண்ணி பின்னாலே அனுப்பு.''

ஜனங்கள் காசு வாங்கி கம்பியில் சாய்ந்து நின்ற பஸ் கண்டக்டரிடம் கொடுத்தார்கள்.

''ரை... ரைட்ஸ்''

பஸ் குலுங்கிற்று. பின்னால் நின்றவன் முதுகு முழுக்க சாய்ந்தான் கவலை தோய்ந்த அம்மாள் நகர்ந்து செல்விக்கு

முன்னால் நின்று கொண்டாள் ''சரியா நில்லு. மேல சாயாத'' என்றாள்.

பஸ் கிளம்பி மயிலாப்பூர் குளக்கரை வழியே ராயப் பேட்டை நோக்கி ஓடிற்று.

அங்கங்கே அடித்துப் பிடித்து ஏறினார்கள். முட் டினார்கள். இடுப்பில் முழங்கை வைத்து அழுத்தினார்கள். உடம்பு முழுக்க உடம்பு பட்டது. கழுத்து முழுக்க மூச்சு பட்டது. உடம்பு வியர்வையில் நனைந்தது.

மணிக்கூண்டு தாண்டியது ஓடியன் வழியே போய் தெரு வளைவில் நின்றது ''எம். ஆர்.எப் இறங்கு.''

''இதான் ஆர்ட்ஸ் காலேஜா.''

''ஆமா. ஆமா. ஆமா.''

செல்வி முண்டி அடித்து முன்பக்க வாசல் எங்கே என்று தேடினாள், வாசலில் நின்ற ஆண்கள் அசையாது நின்றார்கள். ''இடம் விடுங்க, ப்ளீஸ்'' என்றதும் வயிறு எக்கி இடம் விட்டார்கள்.''

செல்வி கூட்டத்தைப் பிளந்து கொண்டு கர்ப்பப் பையிலிருந்து நழுவி வரும் குழந்தை போல பஸ் விட்டுத் தரையிறங்கினாள். உடம்பில் பனிக்குட வாசனை அடித்தது.

15

வொயிட்ஸ் ரோட் முழுக்க ஜனங்கள் வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள். கரகரவென்ற சப்தத்தோடு இரும்புக் கதவுகள் மேல் நோக்கித் திறக்கப் பட்டன. மோட்டார் வாகன உதிரி உறுப்புகள் விற்கும் கடைகளே

அதிகம் இருந்தன. லிட்டில் மோட்டார்ஸ், சதர்ன் ஆட்டோ மொபைல்ஸ், பகவான் பேரிங்ஸ். தமிழ்நாடு ஸ்போர் பார்ட்ஸ்...

செல்வி நடந்து, மிட்லண்ட் எதிரே உள்ள சிறிய சந்தில் திரும்பினாள். சைக்கிள் ஓட்டிகள் உரசிக்கொண்டு போனார்கள். ஸ்கூட்டரில் முகம் முழுவதும் கவசத்தால் மறைத்து மூடி யாரோ அவசரமாய் ஹார்ன் அடித்துக் கடந்தான்.

இராணி டீக்கடையில் பெரிய கும்பல் இருந்தது. செல்விக்கு டீ குடிக்க ஆசையாய் இருந்தது. தாகம் எடுத்தது. சாப்பிடலாமா?''

படியேறி ''டீ எவ்வளவுங்க ஒரு கப்?'' என்று கேட்டாள்.

''அம்பது பைசா'' -அழுக்கு பனியனாய் ஒரு பையன் பதில் சொன்னான்.

''அங்கே டோக்கன் வாங்குங்க.''

''எங்கே?''

''கல்லாவுல''

''ஒரு டீ கொடுங்க.''

மேஜை மீது டோக்கன் விசிறிப் போடப்பட்டது. எடுத்துப் பையனிடம் கொடுத்தாள்.

கொதிக்கத் கொதிக்க பீங்கான் கப்பில் டீ கொடுக்கப் பட்டது. தாகத்துடன் உதடு பொருத்த, சுர்ரென்று சுட்டது. சின்ன கலவரத்துடன் கப்பை உதடு விட்டு விலக்க, டீயோடு திரும்புகிறவன் காலில் சிதறியது.

''ஐயோ...'' அந்த ஆள் கோழிக் குஞ்சு மாதிரிக் கீச்சுக் குரலில் கத்தினான். அந்தக் கூவலிலும் தன் கோப்பையை அசையாது இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டாள்.

"சுடச் சுட கால்ல ஊத்திட்டியே... தள்ளி நின்னு குடிக்கக் கூடாது?" கத்தினான்.

"மன்னிச்சுக்கங்க."

"என்னாத்த மன்னிக்கறது. வெந்தே போச்சு விரலு."

"அங்க போய்ப் படில நின்னு குடிங்க..." பையன் கை காட்ட; செல்வி படியிறங்கினாள். டீ உறிஞ்சிக் குடித்தாள். டீக்கடையில் பெண்கள் யாருமில்லை. எல்லாம் ஆண்கள் தான். நிறையப் பெண்கள் தெருவில் நடந்து கொண்டிருந் தார்கள். யாரும் டீக்கடைக்கு வரவில்லை. ஒருவேளை பெண்கள் டீ சாப்பிட மாட்டார்களோ! டீ தாகம் எடுக்க-தோ, மெல்ல வாயால் ஊதி, மறுபடி உறிஞ்சினாள். தெருவில் போன பெண்கள் சிரித்தபடி அவளைக் கடந்து போவது தெரிந்தது.

காலிக் கோப்பையை வைத்துவிட்டு செல்வி சந்துக்குள் வேகமாய் நடந்தாள். மெட்ராஸ் ஆட்டோ மொபைல் அருகே போய் நின்றாள், கீழே கடைபூட்டு போடப் பட்டிருந்தது. மேலே இருப்பார்களோ, மேலே போக, மேலேயும் கம்பிக் கதவுகள் இழுத்துப் பூட்டியிருந்தன. இன் னிக்கு லீவா? புதன் கிழமைதானே? படியிறங்கி தெருவுக்கு வந்தாள். மணி ஒன்பது நாற்பது.

எங்கே போவது?

ஒருவேளை அமாவாசை என்று லீவு விட்டு விட்டார் களோ? அமாவாசைக்குக் கடைகள் விடுமுறை விடுமா?"

"உங்க பக்கத்துக்கடை திறக்கலையா?"

"திறப்பாங்க?"

"எப்ப?"

"தெரியாது."

நகரத்தில் யாரும் எதற்கும் சரியாகப் பதில் சொல்வ தில்லை.

வாசலில் வெயில் அடித்தது. எதிர்ப்பக்கச் சுவர் பக்கம் போய், நிழலில் நின்றாள். டீ குடித்த கடை ஆள், கீச்சுக் குரலில் திட்டின ஆள் இடப்பக்கமிருந்து நடந்து வருவது தெரிந்தது.

நிற்பது தெரிந்தால் மேலும் திட்டுவானோ?''

''நடக்கவே முடியலை பார்... ஊத்திட்டியே சுடச் சுட...'' சொல்லுவான். செல்வி முகம் திருப்பிக் கொண் டாள்.

அங்கிருந்து எல்.ஐ.சி. தெரிந்தது.

உச்சி மாடியில் யாரோ இரண்டு பேர் நின்று, ஊர் பார்த்தார்கள். வேலை செய்தால் அந்த மாதிரி இடத்தில் வேலை செய்யணும். வெயில் தெரியாம இருக்கும்.

தெருவில் தூசு பறந்தது, வாகனங்களிலிருந்து புகை கலந்த காற்று வீசிற்று. குப்பைத் தொட்டியில் நிறைய அட்டைப் பெட்டிகள் இருந்தன. தள்ளு வண்டியில் ஒருவன் சோன்பப்டி விற்றுக் கொண்டு போனான். ஒரு கை வண்டியில் பெரிய மரப் பெட்டிகள் ஏற்றி தள்ளாடிய படி நாலுபேர் தள்ளிக் கொண்டு போனார்கள். பெரிய லாரி சந்தில் நுழைந்து திடும் திடும் என்று புகை விட்டு இவளைத் தாண்டி இவளை மறைப்பது போல் நின்று கொண்டது.

எல்லோருக்கும் வேலை இருந்தது. எல்லோரும் சுறுசுறுப் பாய் இருந்தார்கள். மந்தைவெளி மாட்டுச் சந்தில் இப் போது கறவைகூட நடமாடாது. எங்காவது சுவர் நிழலில் உட்கார்ந்து அசைபோடும். எவர்சில்வர் பாத்திரக்காரன் மட்டும் கூவிக் கொண்டு போவான். பற்று தேய்க்கிற வேலைக்காரப் பெண்கள் ஏதாவது ஒரு வீட்டு வாசலில்

உட்கார்ந்து மிஞ்சின சாதத்தைப் பங்கு போட்டுக் கொள்வார்கள்.

"ஐயர் வூட்ல நாளைக்கு தெவசம். கார்த்தால வராதன் னுட்டாங்க. சாயந்தரமா போவணும். இரண்டு வண்டி பாத்திரம் இருக்கும். புலம்பலாய்ப் பேசிக் கொண்டிருப் பார்கள்.

மற்றபடி காற்று மட்டுமே முன்னும் பின்னும் மாட்டுக் காரச் சந்தில் அலை மோதும். இங்கே இந்த வொயிட்ஸ் ரோடில் மனிதர்கள்... மனிதர்கள்... மனிதர்கள்...

அருகே கரகரவென்று ஒரு கதவு மேலெழும் சப்தம் கேட்டது. லாரி மறைவு விட்டு நகர்ந்தது, செல்வி எதிர்ப் பக்கம் பார்த்தாள். காலில் டூ சூடு வாங்கியவன் எக்கி கதவு தள்ளிக் கொண்டிருந்தான். ஐயோ, அவன் இந்த இடத்து ஆளா...

செல்வி முன்னேறினாள்.

"வணக்கங்க" அவன் திரும்பினான்.

"என்னா?"

"இப்பத்தான் திறக்கறீங்களா?"

"ஏன்... உனக்கு என்னா?"

"நான் வேலைக்கு வந்திருக்கேன். இங்க மிஸ்டர் வரதராஜப் பெருமாள் வரச் சொன்னாரு."

"சரி, என்னா அதுக்கு?"

"மேல திறக்கறீங்களா?"

"திறக்கலாம்... திறக்கலாம்..."

"பத்து மணிக்குத்தானே ஆபீஸ்?"

"ஆமா... என்ன அதுக்கு? நேத்திக்கு வூட்டுக்கு போகச் சொல்ல ராத்திரி ஒன்றை மணி. அத யாராவது கேக்கறீங் களா? இப்ப மட்டும் மணி பார்க்கறீங்க?"

"நான்... எனக்குத் தெரியாதுங்க. நான் புதுசா வேலைக்கு வந்திருக்கேன்."

"ரொம்பத் தப்பு... ரொம்பத் தப்பு..."

"என்னங்க?"

"பொட்டப் புள்ளைங்களா மாடில சேர்த்துடறது. அதது பையத் தூக்கிட்டு அஞ்சரை மணிக்கு டாண்ணு போயிடுது. மிச்ச வேலையை யார் பார்க்கறது? நேத்தி மட்டும் இருபத்தாறு பொட்டி அடிச்சிருக்கேன். நாலே முக்காலுக்கு சிவப்புக் காகிதம் கொண்டாந்து இது அர்ஜென்ட்டுன்னாங்க."

செல்வி பேசாதிருந்தாள்.

"உன் பேர் என்னா?"

"திருவளர் செல்வி."

"அடேங்கப்பா... வளர்ந்துட்ட போ."

"நீ ஐயரா?"

"இல்லீங்க."

"என்னா ஜாதி?"

செல்வி தயங்கினாள். "சோழிய வேளாளர்."

"எங்கித்து வேளாளர்? போடி நாயக்கனூரா?"

"அந்த இடம்தான். நாலு தலைமுறையா மெட்ராஸ் லயே இருந்துட்டோம்.

"உட்காரு... உட்காரு. நம்ம பெருமாளுக்கு சொந்தமா?"

"எந்த பெருமாளு?"

"அதான் முதலாளி. எனக்கு பெருமாளு ஒண்ணுவிட்ட தம்பியாவணும். கடை திறந்த நாள்லேர்ந்து நான் தான் கூட இருக்கிறது. நீ சொந்தமா?"

'ஆம்' என்று சொல்வதா, 'இல்லை' யென்று சொல்வதா? செல்விக்குப் புரியவில்லை. சேர்ந்த நாளிலேயே பொய் சொல்வானேன்.

"ரொம்ப தூரத்துச் சொந்தம். எங்கப்பாருக்கு அவங் கப்பா ரொம்ப சிநேகிதம்."

"அதான பார்த்தேன். சுய ஜாதிக்குப் பெருமாள் வேலை தர மாட்டான்."

"ஏன்?"

"நம்ம ஜாதில எவன் உட்கார்ந்து ஒழுங்கா வேலை பார்க்கறான் சொல்லு. மாடி முழுக்க ஐயர் கும்பல். கீழ எல்லாரும் முதலியார் பசங்க."

"நீங்க கார்ப்பென்டரா?"

"என்னா செய்யலை? கதவு தொறக்கறது, கடை சாமான் எண்றது, பொட்டி அடிச்சு பாக் பண்றது, டெலிவரிக்கு எடுத்துட்டுப் போறது... காபி கூட வாங்கிட்டு வரச் சொல்றாங்க, போயேன்."

"பெரிய கடை, இல்லை?"

"நான் வரும்போது பத்தடிக்குப் பன்னெண்டடி இருந்தது. மேல ஓலைக்கூரை அதிர்ஷ்டம், பெரிய ஆளா யிட்டான். இந்த இடம் கட்டடம் கட்டத் தோண்டற போது, தவலை நிறைய தங்கம் கிடைச்சுதுன்னாங்க. அதுல தூக்கிட்டான்னாங்க தெரியலை."

"தங்கமா?"

"இது யார் இடம்னு நினைக்கறே? நூறு வருஷத்துக்கு முன்ன, ஆற்காடு நவாபு இடம். இந்த இடத்துலேர்ந்து நூல்

பிடிச்சா மாதிரி போனா அவன் பொண்ணுங்களை வச்சிருந்த இடம் வரும். இப்ப பாழடைஞ்சு கிடக்குது. ஆட்டுத் தோல் பைல மூடி போட்ட தவலை வச்சு, அதுல சவரனா குமிச்சிருந்ததாம். இதை எடுக்கறவன் வருஷா வருஷம் எனக்கு பூஜை போடணும். அன்னிக்கு ஏழைங் களுக்கு கஞ்சி ஊத்தணும். எந்தப் பொம்பளைக்கும் மனசாலயும் கெடுதல் நினைக்கக் கூடாது, அப்படி நினைச்சா...'' நிறுத்தினான்.

''நினைச்சா.''

''நான் நோவாது, நெஞ்சு மிதிச்சுக் கொன்னுடுவேன்னு எழுதியிருந்ததாம்.''

''யார் சொன்னது?''

''பராபரியா கேட்டதுதான். இதெல்லாம் கூப்பிட்டா சொல்லுவாங்க.''

இந்தக் கதையை எப்படி நம்புவது என்று தெரிய வில்லை. ஒரு தனி மனித உழைப்பை. அதிர்ஷ்டம் என்று எல்லோரும் அழைப்பது போல, இது ஒரு கதையுடன் பேசப்படுகிறது.

''உங்க பேர் என்ன?''

''பெரியசாமி. நான் சொன்ன கதை நம்ப முடியலை தான...?'' ஒரு தடவை அந்த இடம் காட்டறேன். ஆற்காடு நவாப் இடம் அப்ப தெரியும்.''

''கிட்டதானா?''

''நம்ம மாடிலேர்ந்து தெரியும். கதவு தொறக்கலாம். வா.''

''சரியாய்ப் பத்து மணிக்கு, மேல்மாடிக் கதவு திறக்கப் பட்டது. உள்ளேயிருந்து வெம்மையான புழுக்கமும் காகித நெடியும் மூக்கைத் துளைத்தன.

ஜன்னல் கதவுகள் திறக்க, வெளி வாகன சப்தங்கள் உள்ளே நுழைந்தன.

சட்டமிடப்பட்டு பெரிய துர்க்கை படம் மாட்டியிருந்தது. கீழே வெள்ளைப் பேப்பரில் பால்பாயிண்ட் பேனாவினால் துலுக்காணத்தம்மன் என்று எழுதியிருந்தது, படம் சுவரோடு இருந்தது.

''இதுக்குப் பின்னால குடம் இருக்கு...'' பெரியசாமி படம் துடைத்தபடி பேசினான்.

''நிஜம்மாவா?''

''இந்த சந்துல பார்த்தா தெரியும்.'' படத்தைச் சற்று விலக்கிக் காட்டினான். செல்வி எட்டிப் பார்த்தாள். உள்ளே இருட்டாய் அதே சமயம் பளபளப்பாய் ஏதோ தெரிந்தது. அது குடமாகவும் இருக்கலாம். வேற ஏதாவதாகவும் இருக்கலாம்.

''இந்த மாதிரி படம் ஏதும் கிடையாது. இது வரைஞ்ச படம். எனக்கு மனசுல எதுனா குழப்பம்னா வந்து நிப்பேன். 'தாயே'ன்னுடுவேன். பெரிசுக்குன்னு பாப்பாத்திங்க, இதுக்கு ஒரு முழம் பூகூடப் போட மாட்டாளுங்க. நீ நம்ம ஜாதிங்கறதுனால சொல்றேன். போகப் போக இது சக்தி உனக்குப் புரியும், இது நவாப் கடத்திட்டு வந்த பொம்பளை. கடைசி வரைக்கும் நவாப்புக்கு உடம்படாத அவன் கொட்டிக் கொடுத்த துட்டை பூமில புதைச்சுட்டு அது மேலேயே உட்கார்ந்திடுச்சு. நவாபு செத்த மறுநாளே, சமாதி ஆயிடுச்சு.''

''அது என்ன ஜாதி?'' பெரியசாமியைச் சந்தோஷப் படுத்தும் விதமாய் செல்வி கேட்டாள்.

''மீனவர்ன்றாங்க... நாயக்கர்ன்றாங்க. தெரியலை. ஆனா ரொம்ப உக்கிரம். உத்து முகம் பாரு. கண்ல கோபம்

தெரியும். அப்படி அமைஞ்சு போச்சு. சிரிச்சாப்பல அமைந் திருந்தாலும், சிரிப்புல ஒரு சலிப்பு தெரியும்...''

செல்வி உற்றுப் பார்த்தாள். அப்படித்தான் தெரிந்தது. ஒருவேளை உள்ளே பெரியசாமி யோசனையை மனதில் ஏற்று உற்றுப் பார்ப்பதால் அப்படி தெரிகிறதா? இனிமை யான முகமாய் யோசித்துப் பார்க்கலாமா? மனசை மாற்றிப் படம் உற்றுப் பார்த்தாள். அப்போதும் அந்தச் சிரிப்பில் ஒரு சலிப்பு தெரிந்தது. எப்படி இனி மாற்றிப் பார்ப்பது என்று புரியவில்லை.

''இவங்க கண்ட கண்ட தெய்வம், வளையாது வாழ்ந்த வங்க. மனசாலே நினைச்சாலே நம்ம வாழ்க்கை நிமிர்ந் துடும். கும்புட்டுங்க.''

செல்வி கரம் குவித்தாள்.

வளையாது வாழ்ந்தவளா? வளைய மாட்டேன் என்று வாழ்ந்தவளா, ஆமெனில் வணங்குகிறேன்.

யோக பலம் தா... ஞான பலம் தா.

அந்தப் படத்தின் கண்கள் மெல்ல உருண்டது போல் பட்டது. செல்வி திடுக்கிட்டாள்.

அந்த ஹாலுக்குள் நாலைந்து பெண்கள் பேசிச் சிரித்த படி உள்ளே நுழைந்தார்கள்.

16

''ஹோய்... லுக் தேர். எ நியூ ஃபேஸ்...'' சற்றுப் பருமனாய் இருந்த பெண் கூவினாள்.

மற்ற மூவரும் உற்றுப் பார்த்தார்கள்.

''ஒரே பக்தி மயமா இருக்காங்க.''

"புதுசு இல்லே... முத முதல்ல பய பக்தியாத்தான் இருப் பாங்க."

"பெரியசாமி சொல்லியிருப்பான். துலுக்காணத்தம்மன் தான் இந்தப் பேட்டைக்கே தெய்வம்னு. பயந்திருப் பாங்க."

"அது மட்டுமா... சந்து வழியா இடம் காட்டி யிருப்பான்."

தேவையின்றி, எல்லாப் பெண்களும் சிரித்தார்கள். ஹாலில் வலது மூலை ஒரு அறையாய், கண்ணாடி மரச் சட்டங்களால் தடுக்கப்பட்டிருந்தது. இரண்டு பெண்கள் அறைக்குள் நுழைந்து கதவு தாழிட்டுக் கொண்டார்கள். எதிர்பக்கம் இன்னொரு அறை இருந்தது. அதில் வரதராஜப் பெருமாள் என்ற பலகை இருந்தது. அம்மன் படத்திற்குக் கீழே பெரிய கண்ணாடி டேபிள், மரச்சுழல் நாற்காலி. இது வைத்திய நாதய்யர் இடம். பெருமாள் அறைக்குள் ஓரமாய், வாசல் தாண்டும் இடத்தில், டெலிபோன் ஆபரேட்டர். வைத்தி எதிரே மூன்று டேபிள்கள், மூன்று நாற்காலிகள். இதில் எது தன்னுடையது என்று தெரிய வில்லை.

இரண்டு பேர் அறைக்குப் போனதும் டெலிபோன் ஆப ரேட்டர் போர்டு துடைத்து விட்டு, டிபன் பாக்ஸ் பிரித்து உட்கார்ந்தாள். குப்பென்று நல்லெண்ணெய் வாசனை வந்தது. தோசையைப் புரட்டிப் பிய்த்து சாப்பிடத் துவங்கினாள்.

இன்னொரு பெண், ஹால் மேஜைக்கு வந்து டைப் ரைட்டர் உறையைக் கழட்டி பிரஷ்ஷால் துடைக்கத் துவங்கினாள்.

"என் பேர் திருவளர் செல்விங்க..." செல்வி தானாய் முன்னேறி, துடைக்கிற பெண்ணோடு பேசினாள். அந்தப்

பெண் 'ஒரு நிமிடம்' என்று கை காட்டியது, ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அந்தப் பெண்மணிக்கு முப்பது வயசுக்கு மேலிருக்கும். ஒல்லியாய், எந்தப் பகுதியும் வளர்ச்சி பெறாது, மூங்கில் பொம்மையாய் இருந்தாள். தலையில் முன்பக்கம் நரை இழைகள் தென்பட்டன. காதில் மங்கலாய் தங்கத்தோடு, கழுத்தில் கருகமணி மாலை அணிந்திருந்தாள். கையில் ஸ்டார் பட்டை தங்க வளையல் இருந்தது. வெள்ளி மோதிரம் போட்டிருந்தாள். நடக்க மெட்டி தெரிந்தது. எண்ணெய் இறங்கின ஒற்றைக் கல் மூக்குத்தி அணிந் திருந்தாள்.

"எம் பேர் கல்யாணி. கந்த சஷ்டிக் கவசம் சொல்லிண் டிருந்தேன். என்ன வேணும்? வேலைக்குச் சேர்ந்திருக் கீங்களா?"

"ஆமாங்க."

"உட்காருங்க. டீ சாப்பிடுவீங்களா?"

"இப்பதாங்க சாப்பிட்டேன்."

"பரவாயில்லை சாப்பிடுங்க. கிருஷ்ணவேணி கீழ சொல்லு."

இடக்கையால் பட்டன்களைத் தட்டிக் காது தோள் பட்டை இடுக்கில் ரிஸீவர் பொருத்தி.

"தேவராஜு... குட்மார்னிங். டீ அனுப்பு மேல" என்றாள். "அடச்சீ... அனுப்பு... அப்புறம் பேசலாம்."

"நானா? தோசை சாப்பிடறேன்... மிளகாய்த் துவையல் அனுப்பட்டா. யார் வேணும்? கம்ப்யூட்டரா... இரு கிரிஜா, தேவராஜு லிஸ்ட் கேட்கறான்... சொல்லிட்டேன். அனுப்பறாளாம். டீ அனுப்பு, வுட்றாதே."

"எனக்கு என்ன வேலைங்க?"

"வைத்தி சொல்லுவார். அவர்தான் இங்க ஹெட்."

"வரதராஜப் பெருமாள் வரமாட்டாரா?"

"பாஸ் பன்னண்டு மணிக்கு வருவார்."

"வைத்தி சார்..."

"வரணும்."

"என்ன மாதிரி வேலை இருக்கும் எனக்கு?"

"என்ன வேலை இல்லை? டைம்மிங்லேர்ந்து லெட்ஜர் போஸ்டிங் வரைக்கும் செய்யலாம். இதுக்கு முன்ன என்ன வேலை பார்த்தீங்க."

"எங்கயும் இல்லை. இதான் ஃபர்ஸ்ட்."

"என்ன படிச்சிருக்கீங்க."

"டைப்பிங் தெரியும். 'ப்ளஸ் டூ' காமர்ஸ் க்ரூப்."

"அக்கௌண்டென்ஸி படிச்சிருக்கீங்களா?"

"சுமாராத் தெரியுங்க. பள்ளிக்கூடத்துல படிச்சது."

"அப்ப எல்லாம் சொல்லித் தரணும்."

செல்வி பேசாது இருந்தாள். வியர்த்தது.

"ஆமாங்க."

"வைத்தி உங்களை எங்க போடப் போறாரோ தெரியலை. இது ஸ்பேர் பார்ட்ஸ் விக்கற இடம். எல்லா ஸ்பேர் பார்ட்ஸும் மனசு பதியாதபோது, வேலை செய்யறது கஷ்டம்?"

"இரண்டு நாள்ல கத்துக்க முடியாதா?"

"இரண்டு நாளா? நான் வந்து மூணு வருஷம் ஆச்சி. எனக்கே பல பார்ட்ஸ் பேரு தெரியாது. இது ஒஷன். பெரிய கடல். எல்லா பார்ட்ஸும் தெரிஞ்சவங்க, இங்க இரண்டு பேர். ஒண்ணு கிரிஜா. இன்னொன்ணு தேவ

ராஜன். பயப்படாதீங்க. கத்துக்கலாம். கஷ்டப்பட்டா இன்னும் சீக்கிரமே கத்துக்கலாம்.''

''அஞ்சு மணிக்கு விட்டுருவாங்களா?'' செல்வி கேள்விக்குக் கல்யாணி வெடுக்கென்று திரும்பிப் பார்த்தாள்.

தவறு. இந்தக் கேள்வி தவறு. நுழையும்போதே வீட்டுக்குப் போவது பற்றிக் கேட்பது தவறு. ஆனால், உள்ளே இருக்கும் அண்ணி முகம், பஸ் கூட்டம், குபுக்கென்று இந்தக் கேள்வியைக் கொண்டு வந்து விட்டது.

''எனக்குத் தெரியாது. நான் அஞ்சரை மணிக்குப் போவேன். பஸ் ஏறி ட்ரெயின் பிடிச்சு, வீட்டுக்குப் போக அப்பத்தான் சரியா இருக்கும்.''

''வீடு எங்கே?''

''குரோம்பேட்டை.''

குரோம்பேட்டை எங்கேயிருக்கிறது என்று தெரியவில்லை. அந்தப் பக்கமெல்லாம் செல்வி போனதில்லை.

''உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சுங்களா? செல்விக்கு கேட்க ஆசையாய் இருந்தது. ஆனால் கல்யாணி டைப் மெஷினில் பேப்பர் சொருகி, ஏதோ ஃபைல் விரித்து, அடிக்கத் துவங்கி விட்டாள்.

ஒரு தட்டில் ஆறு டம்ளர் டீ வந்தது. செல்வி வயதுடைய பையன் எடுத்து வந்தான்.

''திருவளர் செல்வி, டீ எடுத்துக்க.''

''வேணாங்க. இப்பதான் சாப்பிட்டேன்.''

''பரவாயில்லை. இதுக்குக் காசு இல்லை. எடுத்துக்கங்க.''

டீ சூடாய் இருந்தது. கிருஷ்ணவேணி கையலம்பி விட்டு, சின்ன ஏப்பத்துடன் டீ எடுத்துக் கொண்டாள். அடி டிராயரிலிருந்து பெரிய டம்ளர் எடுத்து நிதானமாய்

ஆற்றினாள். சப்தமெழ உறிஞ்சிக் குடித்தாள். போன் அடித்தது, பட்டன் தட்டி, காதில் கருவியைப் பொருத்திக் கொண்டாள்.

''குட்மார்னிங் சார்... யெஸ் சார், வந்துட்டாங்க. கிரிஜா, பாஸ் கூப்பிட்டறாரு... செல்வியா... அப்படி யாரும்... மேடம் உங்க பேர் என்ன.''

''திருவளர் செல்விங்க.'' எழுந்து நின்று பதில் சொன் னாள்.''

''வந்துட்டாங்க. வைத்தி சார் வரலை. நீங்க பேசறீங் களா? சரிங்க சார். நான் சொல்லிடறேன். கிரிஜா போன் எடுத்துக்க, பாஸ் ஸ்டேட்மெண்ட் கேட்கறாரு'' பட்டன்களைத் தட்டி, எரியும் விளக்குகள் பார்த்தபடி டீ குடித்தாள்.

''என்னங்க, பெருமாள் சார் பேசணும்னாரு.''

''ப்ச்சு...'' கிருஷ்ணவேணி. கையால் அவளை நிற்க வைத்துவிட்டு, விளக்குகளைப் பார்த்துக் கொண்டிருந் தாள். ஒரு விளக்கு அணைத்து சிறிது நேரம் கழித்து மறு விளக்கும் அணைந்தது.

''போர்ட்ல இருக்கறபோது தொந்தரவு பண்ணக் கூடாது.''

''சரிங்க.''

''பாஸ் இன்னிக்கு வரமாட்டார். உங்களை வைத்தி கிட்ட வேலை கத்துக்கச் சொன்னாரு?''

''சரிங்க. வைத்தி சார் வருவாங்களா?''

''தெரியாது. கிரி, பாஸ் இன்னிக்கு வரல்லையாம். ரிஸீவர் எடுத்துப் பேசினாள். ''கேட்டேன், அவங்களை வைத்தி கிட்டவுட சொல்லிட்டாரு. இரு தேவராஜ் கூப் பிடறான். கொஞ்சம் லைன்ல இரு. தேவா... இன்னிக்கு

பாஸ் வரலை. என்னன்னு தெரியலை. உனக்கு தோசை வச்சிருக்கேன். ஆள் அனுப்பு.'' ரிஸீவர் வைத்துவிட்டுத் திரும்பினாள்.

''ஏம்மா நிக்கறிங்க? உட்காருங்க.''

செல்வி உட்கார்ந்தாள். உள்ளே கண்ணாடி அறையில் சிரிப்புச் சத்தம் கேட்டது. வெளியே லாரி சத்தம் கேட்டது. யாரோ காக்கிச் சட்டை உள்ளே நுழைந்து கடித உறைகளைப் போட்டு விட்டு கிருஷ்ணவேணியிடம் கையெழுத்து வாங்கிப் போனான். தெரு தூசு, சுழலாய்க் கிளம்பி ஜன்னல் வழியே செல்வியை எட்டிப் பார்த்து விட்டுக் கீழே இறங்கியது.

''அவரு வரலீங்களே... வருவாரான்னு தெரியலீங்களே...'' கிருஷ்ணவேணி பேசிக் கொண்டிருந்தாள். கல்யாணி டைப் அடித்ததை உருவிக் கையெழுத்துப் போட்டு, கவரில் திணித்து ஒட்டினாள் எழுந்துபோய் வேறு டேபிளில் உட்கார்ந்து கொண்டாள்.

டிராயர் இழுத்து பேப்பர் கத்தைகளை வாரிப் போட்டுக் கொண்டாள்.

''கல்யாணி இங்க பத்து லெட்டர் இருக்கு. லோக்கல் டெலிவரி. எடுத்துக்க.'' கல்யாணி தலை நிமிர்ந்து பார்த்து விட்டுப் பேப்பர்களை மறுபடி பிரித்துப் போடத் துவங்கினாள்.

செல்வி எழுந்து கிருஷ்ணவேணியிடம் போனாள்.

''நான் கொண்டு போய்க் கொடுத்துடறேன்.''

''வேணாம். உட்காருங்க.''

''பரவாயில்லை'' காகித உறைகளைக் கையிலெடுத்தாள்.

"அட வைம்மா கீழ! யாரு, எதுன்னு தெரியாத எப்படிப் பேப்பர் கொடுக்கறது? போய் உட்காருங்க"

செல்விக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

"பெருமாள் சார் சொல்லலையா உங்ககிட்ட..."

"என்ன சொன்னார்னு உங்களுக்குத் தெரியுமா? போய் உட்காருங்க பேஜார் படுத்தாம."

"என்ன வேணி?" கிரிஜா எட்டிப் பார்த்தாள்.

"கவர் எடுத்துக்கிட்டுப்போய் கல்யாணி கிட்டத் தராங்களாம். யார் என்னன்னு தெரியலை. வேலை செய்யறேன், வேலை செய்யறேன்னா கொடுத்துட முடியுமா?"

கிரிஜா உற்றுப் பார்த்து விட்டுக் கதவு மூடிக் கொண்டாள். உள்ளே சிரிப்புச் சத்தம் கேட்டது.

செல்விக்கு அதிர்ச்சியாய் இருந்தது. ஏன் எல்லோரும் பாராமுகம் காட்டுகிறார்கள்? ஏன் எல்லோரும் கூட்டுக்குள் பொதிந்து கொள்கிறார்கள். மலரக் கை நீட்டி வரவேற்கும் முகம் எங்கும் இல்லையே, ஏன்...? நான் அவசரப் படுகிறேனோ? வந்தவுடனே மடமடவென வேலை கவனிக்க ஆர்வப்படுகிறேனோ? என் ஆர்வம் தவறோ? அதிகபட்சமோ?"

மர நாற்காலி உறுத்தியது.

கனத்த செருப்புச் சப்தம் கேட்டது.

வெள்ளை மல் வேட்டியும், வெள்ளை முழுக்கைச் சட்டையும், தடித்த கண்ணாடியுமாய் வைத்தி சார் படியேறினார்.

"குட்மார்னிங் சார்."

"குட்மார்னிங். தோசை தின்னியா?"

"ஆமா சார்."

"நல்லெண்ணை தோசையா?"

"ஆமா சார்."

"இனிமே இங்க திங்காதே."

"ஏன் சார்."

"சிக்கு நாத்தம் அடிக்கறது. சரி, திங்கறது கூடப் பரவா யில்லை. கொஞ்சம் உசத்தி நல்லெண்ணையா வாங்கப் படாது? எப்படித்தான் திங்கறியோ"

"பாஸ் போன் பண்ணாரு."

"அவனுக்கென்ன... ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி, இன்னிக்கு வரானா?"

"இல்லை."

"வந்தேமாதரம். என்னவாச்சு."

"காரணம் சொல்லலை. உங்களைக் கேட்டார். வரலைன்னேன். கிரிஜா கிட்ட ஸ்டேட்மெண்ட் அனுப்பச் சொன்னாரு. அவ்வளவுதான்."

செல்வி தவித்தாள். இவளைப் பற்றியும் பேசினாரே... சொல்லவில்லையே...

"யார் இது?" செல்வியைக் கை நீட்டிக் கேட்டார்.

"நீங்களே கேளுங்க."

"நான் திருவளர் செல்வி சார், அன்னிக்கு வந்திருந் தேன்."

"ஆமாமா. ஞாபகம் இருக்கு. என்ன விசேஷம்?"

"வேலைக்கு வந்துருக்கேன்."

"என்ன வேலைக்கு?"

"தெரியலை சார்."

"எனக்கும் தெரியலையே."

"ஏம்மா கல்யாணி, உங்ககிட்டப் பெருமாள் ஏதாவது சொன்னானா?"

கல்யாணி இல்லையென்று தலையசைத்தாள்.

"திடுமென்று வேலைக்கு வந்தா நான் எப்படி ஏத்துக் கறது? நீங்க இன்னிக்குப் போயிட்டு நாளைக்கு வாங்கோ நான் கேட்டு வைக்கறேன்."

செல்வி திகைத்தாள். வயிறு கலங்கியது, சிரிப்பாள். அண்ணி, வாய் விட்டுச் சிரிப்பாள்.

"சார்... அவர்களை உங்ககிட்ட உட்கார வைக்கச் சொன்னாரு" கிருஷ்ணவேணி நிதானமாய் குரல் கொடுத் தாள்.

"இவா பேர் சொன்னானா?"

"சொன்னாரு. வந்திருக்காங்களான்னு கேட்டாரு, ஆமான்னேன். உங்ககிட்ட உட்காரச் சொல்லுன்னாரு.

"இத முதல்லேயே சொல்லப்படாதா? வந்த பொண்ணை உள்ள நுழைஞ்சதும் போன்னு சொன் னேனே... அம்மா வா, உன் பேர் என்ன?"

"திருவளர் செல்வி."

"வா வந்து ஸீட்டுக்கு எதிர்க்க உட்கார். அம்மா... தாயே... பகவதி." முதுகு காட்டிப் படத்தை நோக்கி வணங்கினார். செல்வி மனசுக்குள் தடுமாற்றம் குறைந்து, மெல்லிய அமைதி அமரலாயிற்று.

படத்தை உற்று நோக்கினாள். மனசுக்குள் கை குவித்தாள்.

"என்ன செய்தாலும் எந்தன் துணை நீயே... என் அன் னையே... உமையே... என்னை நீ...என்ன செய்தாலும்..." பாட்டு தட்டுத் தடுமாறி உள்ளே புரண்டது. விழியோரம் நீர் துளிர்த்தது.

17

அவமானம் இரண்டு வகைப்படும் என்று தோன்றியது. வீட்டில் உள்ள அவமானம் வேறு... வெளியே படும் அவமானம் வேறு.

வீட்டு அவமானத்திற்குக் கோபம் வருகிறது. அந்தக் கோபத்தை வெளியே கொட்டவும் முடிகிறது. ஆனால், வீடல்லாத இடத்தில் படும் அவமானத்திற்கு கோபத்திற்குப் பதில் அழுகை வருகிறது. அந்த அழுகையையும் காட்ட முடியாது.

செல்வி பல் கடித்து வைத்தியநாதனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வைத்தி கண்மூடி இரண்டு நிமிடம் உட்கார்ந்து கொண்டிருந்தார். மெல்லக் கண் திறந்தார்.

''ம்ம்... வெரிகுட். இதான் முதல் உத்யோகமா?''

''யெஸ் சார்.''

''அப்ப நான்தான் உன் குரு.''

''யெஸ் சார்.''

''சம்பளம் ஏதாவது பேசியிருக்கா?''

''ஆயிரம் ரூபான்னார் சார்.''

''ஆயிரமா? வாழ்க. வளர்க. நான் வேலைக்குப் போய் வாங்கின முதல் மாச சம்பளம் எவ்வளவு தெரியுமோ? பதினைஞ்சு ரூபா பத்தனா, உனக்கு ஆயிரம் ரூபா. சரி இரண்டும் ஒண்ணுதான்னு வெச்சுக்கோ. உனக்கு என்ன தெரியும்?''

செல்வி யோசித்தாள்.

''ஒண்ணும் தெரியாது சார்.''

''அவையடக்கம் வேணாம். டைப் தெரியுமா?''

"லெட்ஜர் போஸ்டிங் தெரியுமா?"

"பள்ளிக்கூடத்துல ப்ளஸ் டூ காமர்ஸ் சார்."

"ஆக ஏதோ தெரியும்."

"ம்ம்... என்ன வேலை தர்றது. சரி ஒரு வார்த்தை அவர் கிட்டயே கேட்டுறுவோம். கிருஷ்ணவேணி... பெருமாள் கொடு."

"எந்தப் பெருமாள் சார்?"

"ம்ம்... வெங்கடேசப் பெருமாள், பெருமாளுன்னா தீங்க."

"ஏன்?"

"உங்களைப் பார்த்து எனக்கும் அப்படியே சொல்ல வருது. அது தப்பு இல்லை."

"புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கப்படாது கிருஷ்ணவேணி. நீ பாஸுன்னுதான் கூப்பிடணும், சரி... கனெக்ஷன் கொடு..."

காத்திருந்தார்கள். மணி அடித்தது.

"யாரு...? ஹலோ... நான் வைத்தி பேசறேன் சார்... இங்க நிறைவளர்ச் செல்வி... ஏம்மா, உன் பேர் அதானே?"

"திருவளர் செல்வி."

"ஸாரி, திரை நிறு... இல்லை இல்லை... சரிவர கேட்கறேன்.

"திருவளர் செல்வி சார்."

"சாரி, தமிழ்ப் பேரா இருக்கறதாலே சரியா வாயில நுழையல. திருநிறைச்செல்வியாம், வந்திருக்கா. வேலைக்கு எடுத்துக்கறதா சொன்னேளாம். என்கிட்ட நீங்க ஒரு இன்ஸ்ட்ரக்ஷனும் கொடுக்கலை. எதுக்கும் டைரக்டா உங்களை ஒரு வார்த்தை கேட்டுரலாம்னு... சரி... சரி... சரி.

அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் தந்துரட்டுமா... ப்ரோ பேஷனா... என்ன போடறது இல்லை... லௌகீகம் பேசிட்டேளா என்னன்னு தெரியலை. சரி. அந்தப் பெண் சொல்லித்து, வேணியும் சொன்னா. நான் உங்களை டைரக்டா கேட்கணும் பாருங்கோ, அதான்... ஸாரி ஃபார் த ட்ரபிள். வருவேளா ஆபீஸுக்கு? அதெல்லாம் ஒண்ணு மில்லை. நான் பார்த்துக்கறே. தாங்க் யூ'' ரிஸீவரை மரியாதையுடன் வைத்தார்.

''வெரிகுட். மொத வேலை உன் அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர். கல்யாணி, இங்க வா. மேடம் பேர் திருநிறைச் செல்வி. இவாகிட்ட அட்ரஸ் வாங்கி ஒரு அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் அடி. ப்ரோபேஷன் கிளார்க் ப்ரோ பேஷன் பீரியட் ஆறு மாதம். மன்ஸாலிடேட் சம்பளம் ஆயிரம் ரூபா. மத்ததெல்லாம் உனக்கு அத்துப்படி. படேர்னு கொடு, ராகு காலத்துக்கு முன்ன கையெழுத்துப் போட்டு வாங்கட்டும்.

''அம்மாடி... உன் முழுப் பேர் எனக்கு சட்டுன்னு வரலை. செல்வின்னு சுருக்கமா கூப்புடறேன்.''

''கூப்புடுங்க சார்.''

''முதல் முதல்ல வேலைக்கு சேர்ந்துருக்கே... உனக்கு என் அனுபவம் வச்சு சிலது சொல்றதுக்கு ட்ரை பண்றேன். பள்ளிக் கூடப் படிப்பு தவிர, வேற என்ன படிப்பே?''

சட்டென்று அவன் முகம் ஞாபகம் வந்தது. சிவசுவை எழுதியவன் ஞாபகம் வந்தது. பெயர் சொன்னாள்.

''அப்படி ஒருத்தன் எழுதறான்னு எனக்குத் தெரியாது. நான் அதெல்லாம் படிக்கறதில்லை. நான் தினம் படிக்கற புஸ்தகம் நீதி சாஸ்திரம்... விஷ்ணு சர்மான்னு ஒரு பிராமணன் எழுதினது. உலகத்துல மனுஷா எப்படி இருக்கணும்கறதுக்கு இலக்கணம் அந்த நீதி சாஸ்திரம். இது

நான் தேடிக் கண்டுபிடிச்ச புஸ்தகம். அதுல ராஜ சேவைன்னா என்னன்னு போட்டிருக்கு. நாம செய்யறது இப்ப ராஜசேவை, ஒருத்தன் கீழ வேலை செய்யற உத்தி யோகம். இங்க ராஜா பெருமாள். நாம எல்லாம் சேவ கர்கள். ராஜாகிட்ட எப்படி நடந்துக்கணும்?''

''அடக்கமா?''

''அது மட்டும் போறாது, ராஜாவுக்குப் புடிச்ச விஷயம் என்ன்னு பார்க்கணும்... அது என்ன? சொல்றேன் கேள். ரண களத்தில் அரசனுக்கு முன்னே செல்பவனையும் நகர வீதியில் அரசனுக்குப் பின்னே செல்பவனையும் அரண் மனையில் தொங்கித் திரிபவனையும் அரசன் விரும்பு கிறான்.

விசாரித்தபோது முகஸ்துதி செய்பவனையும், கார்யா கார்யத்தை அறிந்து செய்பவனையும், சந்தேகம் கிளப்பா மல் சொன்னதைச் செய்பவனையும் அரசன் விரும்பு கிறான்.

குத்தலும் ஏளனமுமாக அரசன் பேசும்பொழுது யார் பதிலுரைப்பதில்லையோ, யார் அரசன் அருகில் உரக்கச் சிரிப்பதில்லையோ அவனை அரசன் விரும்புகிறான்.

அரசனுடைய எதிரியைத் தானும் வெறுத்து, அரசனது பிரியத்தைப் பெற்றவர்களுக்கு விருப்பமான காரியத்தைச் செய்கிறவனை அரசன் விரும்புகிறான் புரியறதா.''

''புரியறது சார்.''

''உனக்கு பெருமாள் வேண்டப்பட்டவனா இருக்க லாம். காட்டிக்காதே. உனக்குப் போனாப் போறதுன்னு ஒரு நன்னில வேலை தந்திருக்கலாம். அத்து மீறாதே. நீ அவன் கூட சண்டை போட்ட மாதிரி பேசியதைக் கேட்டேன். பட்டுப்பட்டுன்னு பதில் சொன்னே... அதுல அசந்து போய் வேலை தந்தான். ஆனா, அதுவே உன்

இயல்பாயிடக் கூடாது, வேலைக்கு சேர்ந்துட்டே. இனி அடிமை. ஆயிர ரூபா அடிமை. ஆக... நான் எத்தனை பெரிய இண்டலச்சுவல்னு நினைச்சே... நிலைக்காது. இது மட்டுமில்லை. எதுவும் நிலைக்காது. புரியறதா?''

''புரியறது சார்.''

''இந்தா உன் ஆர்டர். கையெழுத்துப் போடு. ஆர்டரைக் கண்ல ஒத்திக்கோ. மேல ஒரு படம் இருக்கு, மனசு குவிச்சு நமஸ்காரம் பண்ணு. பண்ணினயா? இந்த ஆர்டரைக் காட்டி, இந்த ஆபீஸ்ல ஒவ்வொருத்தரிடமும் போய் உன்னை அறிமுகம் பண்ணிக்கோ.''

செல்வி எழுந்தாள். ஆர்டரைக் கண்ணில் ஒற்றினாள். படம் பார்த்து நின்றாள். வணங்கினாள்.

''சார்... என் பேரு திருநிறை செல்வி ப்ளஸ் டூ காமர்ஸ்... வீடு மந்தைவெளி. அண்ணன் கூட இருக்கேன். நான்... நான் சோழிய வேளாளர். நமஸ்காரம் பண்றேன் சார்.'' குனிந்து தரை தொட்டு முதுகு வளைத்து வணங்கினாள்.

''தீர்க்க சுமங்கலி பவ... கடைசில சொன்னது வேண்டாம். பட்டு பூச்சியிலிருந்தும், தங்கம் கல்லிலிருந்தும், தாமரை சேற்றிலிருந்தும், நீலோத்பவம் சாணத்திலிருந்தும், நெருப்பு கட்டையிலிருந்தும், கோரோஜனை பசுவின் பித்த ஜலத்திலிருந்து உதிக்கின்றன. குணமுள்ளவர்கள் தம் சொந்த குணத்தினாலேயே பிரகாசிக்கிறார்கள். பிறப்பால் அல்ல. இதுவும் நீதி சாஸ்திரம்.

''போய் ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வா. கிருஷ்ண வேணி... டி.வி.எஸ்.கொடும்மா.''

செல்வி கல்யாணியை நெருங்கினாள். ஆர்டர் காட்டினாள். கல்யாணி கை குலுக்க, சிறிது பேசிவிட்டு நகர்ந்தாள்.

கிருஷ்ணவேணி அருகில் வந்து காத்திருந்தாள்.

"இது எவ்ளோ நல்லா இருக்கு? இப்ப ஆயிரம் வேலை செய்யேன். நீ செய்யத்தான் வேணும். தடக்குன்னு வந்து கட்டு எடுத்தா... வுடுவேனா? எம்பேரு வேணி. அப்படியே கூப்பிடு. கல்யாணமாகி அஞ்சு வயசில் ஒரு பையன் இருக்கான். மாமியார் பார்த்துக்கறாங்க. அவரு பிஸ்டன் கம்பெனி மெஷினிஸ்ட். சூளைல இருக்கேன். லஞ்ச்சுல வா. நிறையப் பேசலாம்.

கண்ணாடிக் கதவுதிறந்து கம்ப்யூட்டர் அறைக்குள் நுழைந்தாள். சில்லென்று ஏஸி காற்று வீசியது.

"யெஸ்?" கிரிஜா திரும்பினாள்.

"நான் சேர்ந்துட்டேன்."

"குட்."

"இது ஆர்டர்"

"வெரிகுட்." கையில் ஆர்டர் வாங்கவில்லை.

"நான் கிரிஜா. இவ மங்களா. கம்ப்யூட்டர் அனலிஸில் ஆப்பரேட்டர்ஸ். எனிதிங் எல்ஸ்?"

"ஒண்ணுமில்லீங்க."

"ஆல் த பெஸ்ட்." சிரித்தபடி கதவு திறந்தார்கள்.

செல்வி வெளியே வந்தாள். "ஏங்க கீழ போணுமா?" வேணியைக் கேட்டாள்.

"போயேன், போய்த் தெரிஞ்சுக்க... தேவராஜன் பாரு..."

செல்வி படியிறங்கினாள். படிக்குப் பக்கத்தில் பெரிய இரட்டைக் கதவு இருந்தது. சின்னக் கதவு வழியே கடைக்குள் நுழைந்தாள்.

"தேவராஜன் யாருங்க?"

"நான்தான்."

உயரமாய் நறுக்கு மீசையில் ஒரு இளைஞன் உட்கார்ந்த படி பேசினான்.

"என் பேரு திருவளர் செல்விங்க. வேலைக்குச் சேர்ந் திருக்கேன்."

"அப்படியா... வாங்க, உட்காருங்க ப்ரதர்ஸ்... கொஞ்சம் வாங்கப்பா..." கவுண்ட்டர்கள் விட்டு ஆட்கள் மேஜைக்கு அருகே கூடினார்கள்.

"இது சேகர்... இது மனோகரன். இது சுப்பராயன், ராமலிங்கம், நானும் சேகரும் ஸீனியர் சேல்ஸ்மேன். மத்தவங்க ஜூனியர். வாங்க கடை காட்டறேன்."

கடை உள்ளே வெகு தூரம் போயிற்று. இரண்டு ஆள் உயர ரேக்குகள். ஒருவரே நுழைய முடியும் இடை வெளியில் இருந்தன. எல்லா அடுக்குகளிலும் விதவிதமாய் மோட்டார் வாகன உதிரிகள் அடுக்கப்பட்டிருந்தன. ஒரு வெப்பம், அழுக்கு எண்ணெய் நாற்றம், கோணிப்பை நெடி வீசியது. அவளை முன்னே நடக்கவிட்டு பாண்ட் பாக் கெட்டில் கைகளைவிட்டபடி கம்பீரமாய் தேவராஜ் பின் தொடர்ந்தான்.

பின்னால் பெரிய திறந்தவெளி. அங்கும் உதிரிகள் கிடந்தன. மரப்பெட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன.

"வாங்க... வாங்க..."

பெரியசாமி தினத்தந்தி பேப்பர் படித்தபடி எழுந்தான். "சேர்ந்துட்டீங்களா? இதான் நம்ம இடம். டீ சாப்பிட றீங்களா? சொல்லட்டா, இவரு தேவராஜு. இங்க பெரிய ஆளு."

"பெரியசாமி" தேவராஜ் அடங்கின குரலில் கூப்பிட் டான்.

"என்னங்க?"

"உட்கார்ந்து பேப்பர் படி."

"ஏன்... நீங்க சுத்திக் காட்டறதால நாங்க பேசக் கூடாதா? இல்லை, உங்களுக்குத் தெரிஞ்சது எங்களுக்குத் தெரியாதா? உன் ஜாதகம் வெள்ளை சட்டை போட்டு காலாட்டி உட்கார்ந்துக்கிட்டிருக்கே, நான் பொட்டியடிக் கிறேன். விரட்டறியே என்னமோ... தெரியாதையா சொன்னாங்க. நரிக்கு நாட்டாமை கொடுத்தா, கிடைக்கு நாலு ஆடு கேட்குமாம். உனக்கு என்னம்மா தெரியணும், நான் சொல்லித் தரேன்."

தேவராஜ் அவமானம் கொண்டிருக்க வேண்டும், திரும்பி கோபமாய் முறைத்தான்.

"போம்மா. இதெல்லாம் எங்கனா சின்னப் பசங்கக் கிட்ட வச்சுக்க. உன்னை மாதிரி பல முறைப்பு பார்த்தவன் இந்தப் பெரியசாமி."

"ஸ்டுப்பிட்."

"நானா... நானா... நேத்து தாடிக்காரன் நாற்பது பேரிங் கொண்ணாந்து வீசியடிச்சுட்டு, இதே கெட்ட வார்த்தை தானே உன்னைச் சொன்னான். லாரி பேரிங் கேட்டிருக் கான் சிங்கு. இவரு கார் பேரிங் அனுப்பிச்சிட்டு இது லாரிதுதான்னு வாதாடினாரு. சிங்கு பார்ட்ஸ் புக் எடுத்துப் போட்டுக் காட்டினான். அப்ப மூஞ்சியைக் கூரைல வச்சுல்ல நீ? அந்தாளு திட்டினதுக்கு 'ஆமா... ஆமா' ன்னுட்டு இப்ப சின்னப் பொண்ணு வந்ததும் என்னியச் சொல்றியா? இந்த நாட்டு ஷோக்காளி வேலை யெல்லாம் வேற எங்கனா வச்சுக்க."

"பெரியசாமி." தேவராஜன் கர்ஜித்தான்.

"... த்தா போடா."

பளீரென்று பெரியசாமி கன்னத்தில் அறை இறங்கியது. பெரியசாமி தாவி, தேவராஜ் சட்டையைப் பிடித்தான். இருவரும் இறுகப் பிடித்துத் தடுமாறி மூலை மூலையாய் அலைந்தார்கள்.

செல்வி மடமடவென்று வெளியேறி மாடிக்குப் போனாள். அவளுக்கு வியர்த்தது.

18

காலங்காலமாய்ப் பெண் என்பவள் ஆணின் மார்புப் பதக்கம். தொப்பிச் சிறகு வழிபடு பொருள். வயிற்றில் அடித்தால்கூடத் தாங்கிக் கொள்ள முடியும். நெஞ்சில் கை வைத்துப் பதக்கம் பிடுங்கி வேகம் வரும். கால் மிதித்தாலும் மன்னித்துவிட முடியும். கழற்றி வைத்த தொப்பியை மிதித்தால் வெறி கொள்ளும்படியாகும். வீட்டு வாசலில் இருப்பினும் உதாசீனப்படுத்தலாம். வழிபடும் தெய்வத்தின் மீது தூசு தும்பு பட்டாலும் கோபம் வரும்.

நாலு ஆண்களுக்கிடையே அவமானம் தாங்கிக் கொள்ளலாம். நடுவே ஒரு பெண் இருக்க, நட்பு என்பது நாலு பேரிடமும் இல்லை.

செல்வி நகர்ந்து போனதும் சண்டை நின்று விட்டது.

“...த்தா ...குட்டி முன்னாடி ஆட்டம் காட்டறியா, பிஸ்தா வேலையா... ஒன்று நீ... இல்லை நான் இந்த கம்பெனில... பார்த்துடலாம். உன் வண்டவாளம் மொத்தமும் பெருமாள்கிட்ட அவுத்து வுடலை...” கடைவிட்டு இறங்கினவனை மடக்கிக் கொண்டார்கள்.

வண்டவாளங்கள் நிறைய இருந்தன. இழுத்தால் எல்லோரும் மாட்டுவார்கள்.

"பொம்பளைக்கோசரம் சண்டை போடாத பெரிய சாமி."

"அவன் போடலை."

"தப்புதான். போய் சொன்னா வேலைக்குச் சேர்ந்த பொண்களை, வூட்டுக்கு அனுப்புவாங்க. உன்னால தான்னுடுவாங்க. பாவம் இல்லை... இது."

பெரியசாமி யோசித்தான். உள்ளே போனான்.

செல்வி மிரண்டு போயிருந்தாள்.

"என்ன அலறி அடிச்சுண்டு வர? பசங்க கோட்டா பண்ணாளா? கீழே இருக்கிறது அத்தனையும் ரெண்டுங் கெட்டான். எல்லோருக்கும் ஸ்பேர் பார்ட்ஸ் கிங்குன்னு நினைப்பு. கடையப் பாத்தியா? பெர் மன்த் ட்வல் லாக்ஸ் டர்ண் ஓவர். வா... உட்கார். இந்த சார்ட்டு பார்த்துக்கோ. இதுக்குப் பேர் காடெக்ஸ். அந்த பொட்டில வரிசையா அடுக்கி இருக்கும்.

"இதுல பார்ட்ஸ் வாங்கினது எத்தனை, வித்தது எத்தனை, இருப்பு எத்தனைன்னு எழுதியிருக்கு.

இது ஆக்ஸில் ஹவுஸிங் சார்ட். எதோட ஆக்ஸில்? ஃபியட் கார். எத்தனை ஸ்டாக் இருக்கு? முப்பத்து மூன்று எவ்வளவு வித்திருக்கு? போன வாரம் வரைக்கும் பதினேழு. எவ்வளவு வாங்கினோம்? அம்பது. கீழே போய் ஸ்டாக் கேட்டா, கூடவோ குறைச்சலோ இருக்கு. எப்படி? இதுல என்ட்ரி ஆகலை. இரண்டும் சமம் ஆகலை. உன்னால இனிமே ஆகணும்.

அந்த டிராயரைத் திறந்து பார். குப்பையா சிகப்புக் காகிதம் இருக்கு. என்ன அது தெரியுமா? டெலிவரி சலான். அந்தக் குப்பைலேர்ந்து நீ ஃபியட் கார் எடுக்கணும். எடுத்து

எத்தனை வித்துருக்குன்னு பார்த்து இதுல, வித்த டேட் போட்டு ஸ்டாக் குறைக்கணும். புரியுதா?''

''புரியுது சார்.''

''இன்னொரு எக்ஸாம்பிள். இது எம் எஃப் ஒன் தர்ட்டி ஃபைவ் ரியல் வீல். எம் எஃப்னா மாஸி ஃபெர் கூஸன். என்ன வண்டி? டிராக்டர். இது ரியல் வீல். ஸ்டாக் என்ன பாரு. இதைக் கழி. மிச்சம் எழுது. முதல்ல சிகப்புக் காகிதம் எடுத்துக்கோ. அடுக்கு பார்ட்ஸ் வாரியா அடுக்கு. வீல்ஸ், பேரிங், நட் போல்ட்னு பிரி. பிரிச்சதை வண்டி வாரியா அடுக்கு. இன்னிக்கு கைவச்சா ஆறு நாள் ஆகும் அடுக்க. அடுக்கிட்டுக் காமி. இப்போதைக்கு இதான் வேலை. என்னடா இரண்டு மாசக் குப்பையைத் தள்றானேன்னு பார்க்காத.

மலையைக் கொடைஞ்சாதான் தங்கம். சேத்துல இறங்கினாதான் சோறு. அழுகின பழங்களைப் பிழிஞ்சாத்தான் மது. போய் பயப்படாம செய். இந்த வாரம் முழுக்க எடுத்துக்கோ அடுக்கறதுக்கு.''

''இரண்டு நாள்ல முடிச்சுருவேன் சார்.''

''இல்லம்மா, கஷ்டம்''

''வீட்டுக்கு எடுத்துண்டு போயும் அடுக்கலாமா சார்?''

''தாயே... இங்குள்ள வேலையை இங்கு செய். வீட்ல உள்ள வேலையை வீட்ல செய். சமுத்திரத்தில் கட்டடம் கட்டலும், தரையில் மீன் பிடிப்பதும், காட்டில் ராஜ்ய பரிபாலனமும், நாட்டில் வேட்டையாடுவதும் மூடன் செயல். இது நீதி சாஸ்திரம். அததுக்கு இடம் இருக்கு, வேலையைக் கவனி. கல்யாணி... வேற எங்கெங்கே சிகப்பு சலான் ஒளிச்சு வச்சிருக்க? இவளுக்குக் காட்டு.''

கல்யாணி அலுப்புடன் எழுந்து வந்தாள். நாலைந்து மேஜை டிராயர்கள் திறந்து போட்டாள், எல்லாவற்றிலும் நூற்றுக்கணக்கான சிகப்பு சலான்கள் இருந்தன.

''சிலது நம்பர் பெயர் சரியா தெரியாது. எடுத்துண்டு போய் தேவராஜ்கிட்ட உள்ள வெள்ளை சலானோட கம்பேர் பண்ணி தெரியாதது எழுதிக்கோ.''

''ஏன் தெளிவா தெரியலை.''

''கடைசிக் கார்பன் காப்பி அழுத்தி எழுதலை. தெரியலை. எத்தனை தடவை சொன்னாலும் அழுத்தி எழுத மாட்டாங்க.''

அடுக்க அடுக்க சிகப்பு சலான் வந்து கொண்டேயிருந்தது.

''இது வெட்டி வேலை செல்வி ஏன் காடெக்ஸ் கட்டிக்கிட்டு அழறாரோ தெரியலை? கம்ப்யூட்டர் செய்யற வேலை இது. கிரிஜா சகலமும் விரல் நுனில வச்சிருக்கா. நேத்திக்கு ஸேல்ஸ் வரைக்கும் ரிஜிஸ்டர் ஆயிருக்கு.''

''அப்ப ஏன்...''

''சும்மா உனக்கு ஏதாவது வேலை தரணும் இல்லை...? அதுக்கு செய்யச் சொல்றாங்க. நீ அடுக்கி வெச்சாக் கூட உன்னை ஸ்டாக் கேட்க மாட்டாங்க. கம்ப்யூட்டரை விடவா மனுஷன் கரெக்டா சொல்ல முடியும்?''

பிரயோஜனமில்லாத வேலை என்று நினைக்கிற பொழுதே அயர்ச்சி வந்தது.

இதே வேலையை கம்ப்யூட்டர் செய்கிறது. அதாவது கிரிஜா செய்கிறாள். அதாவது ஆக்ஸில் ஹவுஸிங் இன்று ஸ்டாக் என்ன... பட்டன் தட்டினால் காட்டும். நேற்று ஸ்டாக் என்ன... பட்டன் தட்டினால் காட்டும். போன வருடம் எத்தனை விற்றது, போன வருடலாபம். இந்த

வருட லாபம் எவ்வளவு... போன வருட கொள் விலை, இந்த வருஷத்துக் கொள்விலை, போன வருஷத்துல ஆக்ஸில் ஹவுஸிங் விற்பனையில் லாபசதவிகிதம் என்ன... இந்த வருட விழுக்காடு என்ன... எல்லாம் காட்டும்.

இந்த காடெக்ஸ். இனி நாலு மாத விட்டுப்போன கணக்குகளைப் பதிவு பண்ணி கையிருப்போடு எழுதும் கணக்கைச் சரிபார்த்து... இந்த வேலைக்கு மரியாதை தர முடியுமா? கம்ப்யூட்டர் இன்று வேலை செய்யவில்லை. இதில் என்ன ஸ்டாக் என்று பார்க்கிற நிலைவருமா இல்லை, எந்த மரியாதையும் இல்லாமல் சிகப்பு சலான் அடுக்கி தண்ட சம்பளம் வாங்க வேண்டியது தானா?''

இதைச் சரி பண்ண முடியுமா?

முடியும். முயற்சி செய். முடியும், உனக்குக் கம்ப்யூட்டரோடு சண்டையில்லை. போட்டியில்லை. கிரிஜாவோடு ஒப்பீடு இல்லை. உன் வேலை இது. உனக்குப் பெருக்கி அள்ளுகிற வேலை கொடுத்திருக்கிறார்கள். குப்பையான இடம் பார்த்து பெருக்கு என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். பெருக்கு துடைப்பம் எடுத்துப் பெருக்கு. ஒட்டடை அடி. நீர் தெளித்துத் தரை பெருக்கு, கோலமிடு. முடியும், உன்னால் முடியும். 'அட இதுவும் சரியா இருக்கே' என்று வார்த்தை வாங்க முடியும்.

காடெக்ஸ் நம்பிக்கையான இடம் என்று எல்லார் மனசிலும் பட வேண்டும். எல்லா சிகப்புச் சலானும் கிடைக்குமா? கிடைத்தால் தெளிவாய் படிக்கும்படி புரியுமா? ஆறு ஏழு ட்ராயர்களில் குப்பையாய் திணிக்கப் பட்டிருக்கிறது.

கம்ப்யூட்டர் வந்த பிறகு இந்த வேலையே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தேவைப்படாது போயிருக்கிறது. வேலை என்று வந்து நின்றதற்கு, இதோ வேலை என்று

இங்கே தள்ளப்பட்டிருக்கிறோம். தண்ட வேலை தண்டச் சம்பளம்.

ஆறுநாள் எடுத்துக்கோ என்கிறார் வைத்தி. அடுக்கவே ஆறுநாள் ஆகும் என்கிறாரா இல்லை... ஆற அமர செய் என்கிறாரா. 'இந்த வேலை வேணாம், வேற வேலை கொடுங்க சார்.' என்று கேட்கலாமா? 'டைப்பிங் பண்றேன்'' என்று கெஞ்சலாமா' 'கீழ ஸ்டோருக்குப் போறேன்' என்று கேட்கலாமா.

கூடாது. சொன்னதைச் செய் என்கிற அதட்டல் தான் வரும். வேலை என்ன, வேலை என்ன என்று பத்து நிமிடம் முன்பு அலைந்தோம். வேலை தந்து விட்டார்கள். 'ஐயோ... இந்த வேலையா... மாட்டேன்' என்று எப்படிச் சொல்வது.

இது வேஸ்ட். இருந்தாலும் செய் என்கிறார்கள். ஒப்புக் குச் சப்பாணி என்பதாய் நடத்துகிறார்கள். ஏன் இப்படி இதுதான் அதிர்ஷ்டமா, தலையெழுத்தா, டைப்பிங் மட்டும் எப்படி உடனே விறுவிறு என்று செய்ய முடியும், பாதிக் கடிதங்களுக்கு இந்தப் பெண்ணே பதில் கடிதம் டைப் பண்ணி விடுகிறது. மீதியை என்ன பதில் எழுத என்று கேட்டுக் கொண்டு வந்து செய்கிறது. என்னால் முடியுமோ, என் ஆங்கிலம் இந்த டைப்பிங் வேலைக்குப் போதுமா.'' '' பேசக் கூடத் தெரியவில்லை, எப்படி எழுது வது? எப்படி டைப் அடிப்பது? இது பெட்டர் அடுக்குகிற வேலை பெட்டர். தப்பும் தவறுமா டைப் அடிச்சிருக்கியே, என்ன படிப்பு படிச்சே என்று திட்டு வாங்குவதற்கு இந்த குப்பை கூடை வேலை நிச்சயம் நல்லது.

சிகப்புச் சலான்கள் நூறு அடுக்கி மெல்ல வகை பிரிக்க ஆரம்பித்தாள். டேபிளில் நாலு பேப்பர் வைக்க காற்றில் மெல்லிய சலான் பேப்பர் பறந்து விடும் போல் இருந்தது.

"ஏங்க... டேபிள் வெயிட் இருக்குங்களா?" கல்யாணி யைக் கேட்டாள்.

"உள்ள கிரிஜாக்கிட்ட இருக்கு. அவதான் ஸ்டேஷனரி இன்சார்ஜ். உனக்கு பென்சில், பால்பாயிண்ட் என்ன வேணும்னாலும் வாங்கிக்க." கல்யாணி நிமிராமல் பதில் சொன்னாள்.

கதவு தள்ளி கிரிஜா அறைக்குப் போனாள்.

"யெஸ்?"

சுழல் நாற்காலி கம்ப்யூட்டரை விட்டு திரும்பி இவள் எதிரே நின்றது.

"டேபிள் வெயிட் வேணும்."

"என்னது?"

"டேபிள் வெயிட்டு?"

"எதுக்கு?"

"காத்துல பறக்குது.

"டேபிளா?"

"இல்லை பேப்பர்."

"அப்ப டேபிளுக்கு எதுக்கு வெயிட் வேணும்? என் கிட்ட பேப்பர் வெயிட்தான் இருக்கு."

"அதான்."

"மங்களா... இது பேப்பர் வெயிட்டா, டேபிள் வெயிட்டா?"

"அவங்க சொல்றது கரெக்டாதான் இருக்கும்."

"நாமதான் பேப்பர் வெயிட்னு தப்பா சொல்றமா?"

"இந்தாங்க டேபிள் வெயிட்டு..." வேண்டுமென்றே கடைசி 'டு' வில் அழுத்தம் கொடுத்துச் சொன்னாள்.

"நிறைய வேண்டும்."

"எத்தனை?"

"பத்துப் பன்னிரண்டு வேணும்."

"ஸாரி. ஆறுதான் தருவேன். அதுல அடுக்கி பிரிங்க போதும்."

"சரிங்க."

"அப்புறம்?"

"பேனா வாங்கிக்கச் சொன்னாங்க."

"யாரு?"

"டைப்பிஸ்ட்டு."

"அவளுக்கா. உங்களுக்கா?"

"எனக்கு."

"உங்க வொர்க் என்ன?"

"சலான் பிரிக்கிறது."

"அதுக்குப் பேனா எதுக்கு. கல்யாணியைப் பாருடி, இவங்களைப் பேனா கேட்கச் சொல்லி தூண்டி விடறா. இவங்களைப் பேனா கேட்கச் சொல்லிட்டு அவ தூக்கிண்டு போயிடுவா வீட்டுக்கு. போன மாசம் மட்டுமே நாலு பால்பாயிண்ட் வாங்கியிருக்கா, ஸாரி. உங்களுக்குப் பேனா இல்லை. நீங்க போய் அடுக்கலாம்."

"சரிங்க" தரை கழுவின ஜலம் முகத்தில் வீசிக் கொட்டின அவமானமாய்த் திரும்பினாள். உள்ளே சன்னமாய் சிரிப்புச் சத்தம் கேட்டது.

ஆறு கண்ணாடி உருண்டைகளை வாங்கி மேஜையில் பரப்பினாள்.

'ச்சே! தேவையில்லாத அவமானம் இந்தப் பெண் தான் கேட்கச் சொன்னாள் என்றால், எனக்கு எங்கே அறிவு

போயிற்று. எனக்குப் பேனா எதற்கு? கேட்டது பிசகு. ஆனால் பேனா இல்லை என்பதற்கு இவ்வளவு அதட்டலா? இவள் பேனாவா கேட்டேன்... ஏன் இப்படி? ஏன் இப்படி என்னை வெறுக்கிறார்கள்? என்னைச் சுள்ளென்று பேசுகிறார்கள். நான் புதுசு என்றா... இல்லை வேறு ஏதாவதா?

ஒருவேளை நான் பிராமணத்தி இல்லை என்பதால் இப்படித் தூக்கி எரிகிறார்களோ... ஜாதி துவேஷமா? ச்சே... அப்படி இருக்காது. ஏதோ ஒரு இளக்காரம்... உனக்கு என்ன தெரியும் என்கிற இளக்காரம்.

தெரியும் என்று காட்டுவோம்.

இரண்டு மாதத்தில் காட்ட முடியாதா?

அடிப்படை புரிந்துகொள்ள முடியாதா?

மணி பதினொன்று பத்து. இந்நேரம் வீட்டில் இருந்தால், ரேடியோவை சிலோனுக்குத் திருப்பி கூடத்தில் தலையணை போட்டு முழு வேகத்தில் மின் விசிறி சுற்ற. ஏதாவது கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிற நேரம். அப்பா படத்தில் பழைய ரோஜா மாலை ஊசலாடிக் கொண்டிருக்கும். முற்றத்தில் காகங்கள் உட்கார்ந்து கைகழுவிய பருக்கைகளைக் கொத்திக் கொண்டிருக்கும். வெயில் குழாயடிக்குப் போயிருக்கும், வாசலில் சோன்பப்டியோ, குண்டு ஐஸ்கிரீமோ மணியடித்துப் போகும். பாதிப் பத்திரிகை புரட்ட, கண் செருகும். அப்படியே நெற்றி கூந்தல் சின்னதாய், உரச. ஒரு தூக்கம். தூங்கி... கண் விழிக்க ஒரு மணி பால் கவர் வைத்து விட்டுக் கதவு தட்டுகிற சத்தம் கேட்கும் போது தான் விழிப்பு வரும்.

இந்த நினைப்பே செல்விக்குத் துன்பம் தந்தது. மெல்ல வாய் திறந்து கொட்டாவி விட்டாள். வரதராஜ பெருமாள்

படியேறித் திரும்பியவன், அவள் கொட்டாவி விட்டு கண் செருகுவதை நின்று பார்த்தான். உள்ளே போனான்.

ஹாலில் உள்ள எல்லோரும் அவளையே பார்த்தார்கள். வைத்தி தலையில் அடித்துக் கொண்டார். செல்வி குறுகினாள்.

19

உள்ளே போய் பெருமாள் உட்காருவது கண்ணாடி வழியே நிழலாய் தெரிந்தது. உட்கார்ந்தவுடன் மணி சப்தம் கேட்டது.

பின்னால் வந்த டிரைவர் ப்ரீப்கேஸுடன் உள்ளே ஓடினான். கதவு திறந்து "உங்களைக் கூப்பிடறாரும்மா." என்று செல்வியைப் பார்த்துச் சொன்னான்.

செல்வி எழுந்து நின்றாள், கால்கள் கனத்து இடம் பெயராது நின்றன. அடிவயிறு பயத்தில் குழைந்தது.

"வாயை ஆன்னு திறந்து கொட்டாவி விட்டதைப் பார்த்துட்டான். என்னன்னு கேட்கப் போறான். போய் ஸாரின்னு சொல்லிட்டு வந்துரு. போ. வேற என்ன பண்றது." வைத்தி அலுத்துக் கொண்டார்.

"ஏம்மா, அத்தினி பெரிசாவா கொட்டாவி விடறது. குளிஞ்சு வாய் பொத்திக்கக் கூடாது? வீடா இது..." கிருஷ்ணவேணி சிறிய அதட்டலுடன் பேசினாள்.

"போங்க. ஒன்றும் சொல்லமாட்டார்" கல்யாணி குரல் கொடுத்தாள். மெல்ல அடி எடுத்து வைத்து கீ கொடுத்த பொம்மை மாதிரி செல்வி நடந்தாள். கண்ணாடிக் கதவுக்கு அருகே போனாள். லாக் அழுத்தி, கதவு திறந்து உள்ளே

போய் கதவு சாத்தி அவன் எதிரே நின்று கொண்டாள். அவன் டெலிபோன் சுழற்றியபடி அவளை நிமிர்ந்து பார்த்தான். உட்கார் என்று சைகை செய்தான்.

''சோகன்லால்... வணக்கம். பெருமாள் பேசறேன். சார்ட் அனுப்பறேன். கட்டு தரீங்களா? இரண்டு, இரண்டு கட்டு, எப்ப அனுப்ப? இப்பயா? சரி. சனிக்கிழமை தரேன். ம்ம்... ஆள் பேரா... மேடம்.''

''உங்க பேர் என்ன?''

''திருவளர் செல்வி.''

''திருவளர் செல்வி வேணாம். சும்மா பேப்பர்ல சுத்தி அனுப்புங்க போறும். நம்ம ஸ்டாஃப்தான் மேடம்...''

''சார்.''

''என் டிரைவரோட போங்க. அவரு இடம் காட்டு வாரு. இந்த சார்ட் கொடுத்தீங்கன்னா, அந்த இடத்துல ஒரு பேப்பர்ல சுத்தி இரண்டு லட்ச ரூபா தருவாங்க. வாங்கிட்டு வந்துருங்க.''

''இரண்டு... இரண்டு லட்சமா.'' செல்வி திகைத்தாள்.

''கடை செலவுக்கு. மத்தவங்க பிஸியா இருப்பாங்க. டிரைவர் மட்டும் அனுப்ப முடியாது. அதான் உங்களை அனுப்பறேன் பயப்படாதீங்க. டிரைவர் கூட வருவாரு. கிட்டதான்...'' தன் விஸிட்டிங் கார்டில் கையெழுத்திட்டுக் கொடுத்தான்.

''இது போதுங்களா?''

''போறும்.''

மறுபடி மணி அடித்தான். ''டிரைவர் இவர்களைக் கூட்டிட்டுப் போ. சோகன்லால்கிட்ட வாங்கிட்டு வந்துரு கூடவே போ. கீழ நிக்காதே.''

செல்வி வெளியே வந்தாள். ஹாலில் உள்ளவர்கள் திகைப்போடு பார்த்தார்கள்.

"என்ன கத்தினான்?" வைத்தி கேட்டார்.

"கத்தலீங்க, வெளியே அனுப்பறார்."

"ஐயய்யோ, கொட்டாவி விட்டதுக்கா?"

"இல்லீங்க. எங்கேயோ கார்ட் காட்டி ரூபா வாங்கிட்டு வான்னு சொன்னாரு."

"சோகன்லால் கிட்டயா?"

"ஆமா சார்."

"கல்யாணி, உன் வேலை குறைஞ்சுது, ஓகே... போ... கொட்டாவி விட்டதுக்கு ஒண்ணும் சொல்லலையா."

"இல்லை சார். நான் போகட்டுமா."

"சரி... சரி, போயிட்டு வா."

செல்வி சந்தோஷமாய் நடந்து ஸீட்டுக்கடியில் விட்ட செருப்பைத் தேடிப் போட்டுக் கொண்டாள். டிரைவர் பின்னே வேகமாய் புடைவைத் தலைப்பு போர்த்திக் கொண்டு போனாள்.

காரில் முன்னே ஏறுவதா, பின்னே ஏறுவதா?"

"பின்னால் உட்காருங்க. முன்னால அவர் ஸீட்டு அது. பின்னால உட்காருங்க."

பின் கதவு திறந்து ஏறினாள். டிரைவர் அழுத்தி நிதான மாய் சாத்தினான். கார் கிளம்பியது.

சோகன்லால் யார்? எதற்கு இரண்டு லட்சம்... கடைச் செலவு என்றால் என்ன? கல்யாணி உன் வேலை குறைஞ் சது என்றாரே வைத்தி. அப்போது இது ஒரு வேலையா? இரண்டு லட்சம் எப்படி இருக்கும்? நூறாகவா, பத்தாகவா, எண்ண வேண்டுமா? பேப்பரில் சுற்றிக் கொடு என்றாரே

பெருமாள். சின்ன பொட்டலமாய் இருக்குமா? நூறு ரூபாய் கட்டாக இருந்தாலும் மடியில் வைத்துக் கொள்ளு கிற கட்டாகத்தானே இருக்கும். யப்பா... எவ்வளவு பெரிய பொறுப்பு.

கார் மவுண்ட்ரோடு விட்டு நகர்ந்து ராயப்பேட் டைக்குத் திரும்பிற்று. கோரமண்டல் ஃபைனான்ஸ் என்ற இடத்தில் நின்றது.

கீழிறங்கினாள். டிரைவர் கதவு பூட்டி வர காத்திருந் தாள். டிரைவர் முன்னே போக பின்னால் நடந்தாள். கையெழுத்துப் போட வேண்டுமோ?'' 'இரண்டு லட்சம் பெற்றுக் கொண்டேன்,' யார் கையெழுத்துப் போட்டார் களோ அவர்கள்தான் திருப்பித் தர வேண்டும் என்றால்... அப்படி வருமா? படியேறித்திரும்ப, நாலைந்து குமாஸ் தாக்கள் உள்ள ஹால் தெரிந்தது. ஒரு குமாஸ்தாவிடம் பேச, அவர் உள்ளே கைகாட்ட, இருவரும் ஏஸி அறைக் குள் நுழைந்தார்கள்.

''என்னா...''

தடியாய் ஒரு சிவந்த ஆள் இருந்தார்.

''பெருமாள் அனுப்பிச்சாரு.''

''யாரை?''

''இவர்களை.''

''நீ எதுக்கு?''

''துணைக்கு.''

''வாசல்ல இரு.''

டிரைவர் வெளியேற சுவரோடு பதிக்கப்பட்ட இரும்புப் பெட்டியைச் சாவி போட்டுத் திறந்தான். உள்ளே முழு உயர்த்து ரூபாய் கட்டுகள் அடுக்கப் பட்டிருந்தன. பத்துப்

பத்துக் கட்டாய் இரண்டு கை எடுத்து எதிரே இருக்கிற வனிடம் எறிந்தான்.

அவன் பக்கத்திலிருந்த ஹிண்டு பேப்பரை இரண்டாய்க் கிழித்து மொத்தமாய்ச் சுற்றி செல்வியிடம் நீட்டினான்.

''எங்காவது கையெழுத்துப் போடணுங்களா?''

''போடச் சொன்னாங்களா பெருமாளு.'' உறுத்துப் பார்த்தபடி அந்த ஆள் கேட்டான்.

''இல்லை.''

''அப்ப போ.''

''வரேங்க.''

செல்வி பேப்பர் கட்டை இறுக்கப் பிடித்தபடி வெளியே வந்தான்.

''வாங்கிட்டீங்களா?''

''வாங்கிட்டேன்.''

''எண்ணிட்டீங்களா?''

''இருவது கட்டு இருக்கு நூறு ரூபாய்.''

''சரி வாங்க.''

சர சர வென்று படியிறங்கினார்கள்.

''இங்கேயே இருங்க. கதவு திறக்கறேன், அப்புறம் வாங்க,'' டிரைவர் ஓடி, கதவு திறந்து வரச் சொல்லி சைகை செய்ய, செல்வி கடை வாசலிலிருந்து ஒட்டமும் நடையு மாய் காருக்குள் கட்டோடு புகுந்து உட்கார்ந்தாள்.

டிரைவர் கதவு அழுத்தி மூடினான். கைவிட்டு லாக் செய்தான் சுற்றி வந்து உட்கார, வண்டி கிளப்பினான்.

செல்வி மெல்ல காகிதம் பிரித்துப் பார்த்தாள். விரலால் தடவி... எண்ணி இருபது கட்டுகள் இரண்டு லட்சம் அப்படியே எடுத்துக்கிட்டு வீட்டுக்கு ஓடிட்டா. அடுத்த

மாதம் கல்யாணம். அண்ணன் கிட்ட காட்டினா ஹான்னு வாயைப் பிளந்துடும்...

விடுவார்களோ... தேடி வந்து தலைமயிரைக் கொத்தாய்ப் பிடித்து கூட்டிப் போவார்கள். 'ஐயோ... யார் காசோ... எனக்கு எதற்கு இது...' செல்வி முதுகு சிலிர்த்தாள்.

''எப்படிக் கையெழுத்து போடாத காசு தராங்க.'' டிரைவரிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''உங்களுக்கும் எனக்கும் தருவானா... பணக்காரனுக்குப் பணக்காரன் தருவான். இது கந்து வட்டி.''

''கந்து வட்டின்னா?''

''இன்னிக்குக் கொடுத்து நாளைக்கு வாங்கறது... உடனே போட்டு புரட்டறதுக்கு ஒரு நாளைக்கு ஒரு அவருக்கு இத்தினி வட்டி உண்டு. இன்னிக்கு திங்கள் கிழமை வாங்கி சனிக்கிழமை திருப்பிடுவாங்க.''

''சனிக்கிழமை நாம எடுத்துப் போணுமா?''

''இல்லை, அவன் வருவான். வட்டியோட வந்து வாங்கிட்டுப் போவான்.''

''வாரா வாரம் வாங்குவாரா.

''அப்பப்ப வாங்குவாரு, தருவாரு.''

''எதுக்கு இரண்டு லட்ச ரூபா.''

''யாருக்குத் தெரியும்? வியாபாரத்துக்குத்தான் இருக்கும். ஆட்டத் தூக்கி மாட்டுல போட்டு, மாட்டை தூக்கி ஆட்டுல போட்டு எப்படியோ சம்பாதிப்பாங்க, சுழி, நல்ல சுழி.''

''எவ்ளோ வட்டி...?''

''அது ஆளப் பொறுத்து. அவசரம் பொறுத்து. அஞ்சு பைசாவுக்கும் தருவாங்க. அம்பது பைசாக்கும் தருவாங்க.''

"நூறு ரூபாய்க்கு அஞ்சு பைசாவா."

"ஒரு ரூபாய்க்கு அஞ்சு பைசா ஒரு நாளைக்கு."

"ஐயோ. நஷ்டம் இல்லையா?"

"லாபம் இருக்கத் தொட்டுத்தானே வாங்கறாங்க."

கார் மவுண்ட் ரோடுக்குத் திரும்பி கடை அருகே நின்றது.

"இருங்க... இருங்க இறங்காதீங்க. லபக்குன்னு தட்டிக் கிட்டு போயிட்டா, யாரும் எதுவும் பண்ண முடியாது. இருங்க." இறங்கி கதவு திறந்து வெளி வந்து வேகமாக கதவு மூடி இருவரும் பாய்ந்து படியேறினார்கள்.

ஹாலில் நுழைந்ததும் எல்லோரும் தலை தூக்கிப் பார்க்க, சின்ன வெற்றிப் புன்னகையுடன் பாஸ் கண்ணாடிக் கதவு தட்டினாள்.

"போங்க. தட்ட வேணாம்."

உள்ளே கிரிஜா உட்கார்ந்திருந்தாள். பெருமாள் நின்றபடி ஸ்டேட்மென்ட் பார்த்துக் கொண்டிருந்தான்.

"வாங்கிட்டீங்களா?"

"யெஸ் சார்."

"வச்சிருங்க."

செல்வி மேஜை மீது வைத்தாள்.

"போகலாம்."

"எண்ணிடுங்க சார்."

"தேவையில்லை" நிமிர்ந்து பதில்சொன்னான். செல்வி தயங்கினாள்.

"சார்... ப்ளீஸ். எண்ணிடுங்க."

"கிரிஜா" குரல் கொடுத்தான்.

கிரிஜா பேப்பர் பிரித்து கட்டுகள் எடுத்து தனியே அடுக்கினாள்.

''ட்வெண்டி'' என்றாள்.

பெருமாள் நிமிர்ந்து தலையசைத்தான்.

செல்வி மெல்ல வெளியேற...

''திருநிறை செல்வி...''

''யெஸ் சார்.''

''வெளியே போயிட்டு வந்தது ஃப்ரெஷ்ஷா இருக்குமே.''

''சார்.''

''ஆபீஸ்ல பெரிசா கொட்டாவி விடாதீங்க. மத்தவங்களுக்கும் தூக்கம் வரும். ட்ரை டு லர்ன் சம் வொர்க்.''

''யெஸ் சார்.''

செல்வி முகம் சூம்பி மெல்ல கதவு திறந்தாள்.

''ஷி வெரி நெர்வஸ்'' கிரிஜா சிரித்தபடி சொன்னாள்.

''நேச்சுரலி... போலாம்.''

மெல்ல வெளியேறி தன் இடத்துக்குப் போய் உட்கார்ந்து கொண்டாள். இரண்டு லட்சம் நோட்டுகள் கண்ணுக்குள்ளேயே நின்றன 'கொட்டாவி விடாதீங்க' வார்த்தை முள்ளாய் குத்தியது.

''என்ன வாங்கிண்டு வந்துட்டியா?'' வைத்தி உரக்க கேட்டார்.

''ஆமா சார்.''

''இரண்டு லட்சம் காசு பார்த்ததும் வெடவெடவென்று ஆயிருக்குமே?''

''ஆமா சார்.''

"இவன் இப்படித்தான் திடீர் திடீர்னு சோதிப்பான், பயப்படாத. உனக்காவது கரென்ஸி, காகிதத்துல சுத்திண்டு கார்ல வந்துட்ட. என்னை ஒரு நாள் படுத்தினாம் பாரு. அன்னிக்கு ப்ளட்ப்ரஷர் வந்தது இன்னிக்கு வரைக்கும் போகலை."

"கட்டை எடுத்துண்டு போனது சொல்றீங்களா?" கல்யாணி கேட்டாள்.

"பழுப்பு மஞ்சளா இரண்டு கட்டை, உள்ளங்கை நீளத்துக்கு ஒரு அங்குல கனத்துக்கு... கார்த்தால பதினோரு மணிக்கு டேபிள்ள கொண்டார்ந்து வச்சுட்டு இது இரண்டும் தங்கம். எத்தனை கேரட்... என்ன எடை... சௌகார் பேட்டைல பார்த்துண்டு வாங்கோன்னான். பைல போட்டா கிழிஞ்சுரும் போல கனம். இடுப்புல சொருகிண்டா நழுவி விழுந்துடுமோன்னு பயம். ஒரு காக்கி கவர்ல போட்டு கைல வச்சுண்டு பஸ் ஏறி சௌகார் பேட்டை போய் எடைபோட்டு திரும்பி இவன்கிட்ட கொடுக்கறவரைக்கும் என் உசிரே என்கிட்டே இல்லை போ."

"தங்கமா சார்?

சொக்கத் தங்கம். உரசின இடம் டாலடிக்கிறது. மத்தது பழுப்பா இருக்கு..."

"ஏதோ புதையல் கிடைச்சுதுன்னாரே பெரியசாமி."

"அதுவா?"

"யாருக்குத் தெரியும். கட்டையா வாங்கியிருக்கலாம். இல்லை... நகைய உருக்கி கட்டையாக்கியிருக்கலாம். நாப்பத்தேழு சவரன். பொண்டாட்டிக்கிட்ட சொன்னேன். நம்பவேயில்லை. தங்கத்தை யாராவது கட்டையா பண்ணு வாளான்னு கேட்கிறா..."

''எதுக்கு சார் இரண்டு லட்சம்?''

''ச்சு... வரான், வேலையைப் பாரு.''

பெருமாள் வெளியேறினான். கையில் ப்ரீப்கேஸ் வைத்திருந்தான்.

''வைத்தி... தாஜ் வரைக்கும் போயிட்டு வரேன்...''

''வருவேளா?''

''இல்லை, நாளைக்குப் பார்க்கலாம். போன் பண்ணுங்க.''

''ஆஹா...'' பெருமாள் நகர்ந்ததும் உட்கார்ந்தார்.

''தீவனத்துக்கு போறது காசு.''

''தீவனம்னா?''

''மாட்டுக்கு எதுக்கு தீவனம் போடுவா?''

''பால் கறக்க.''

''அதுக்குத்தான்... எங்கேயோ ஏதோ கறக்கப் போறான். அது தீவனத்துக்கு இரண்டு லட்சம்.''

''புரியலை சார்.''

''புரியும். புரியும். மெள்ள புரியும்.'' செல்வி வியப்போடு வேலை துவங்கினாள். அவளுக்கு இந்த வேலை பிடித்திருந்தது.

20

நாலு வாரங்களில் வேலை செய்யும் இடம் முழுவதும் புரிந்து போயிற்று.

அந்த முதல் நாள் சந்தோஷம் மாதிரி வேற எந்த நாளும் வரவேயில்லை. இரண்டு லட்ச ரூபாய் கரன்சி பார்த்த

சந்தோஷம். கட்டிக் காப்பாற்றிக் கனகாரியமாய்க் காரில் எடுத்து வந்த படபடப்பு மறுபடி நேரவில்லை.

"அண்ணே... கட்டுக்கட்டா எத்தினிக் கட்டு கரன்சி நோட்டுப் பார்த்திருப்பீங்க?" வேலை முடித்த முதல் நாள் வீட்டுக்குள் நுழைந்ததும் பையைப் போட்டு விட்டு அண்ணன் நாற்காலிக்குக் கீழே உட்கார்ந்து கொண்டாள்.

"பார்க்கறதுக்கு என்ன... நிறைய இடத்துல பார்த்துருக்கேன் செல்வி. ஒருகாலத்துல நம்ம வீட்டு பீரோல கூட இருந்திருக்கு, கட்டுக் கட்டா நோட்டு."

"நான் இன்னிக்கு இரண்டு லட்சம் பார்த்தேன்." விழி விரியச் சொன்ன தங்கை தலையை அண்ணன் கோதி விட்டார். இடுப்பு உசரத்துக்கு மிட்டாய் பொம்மை என்று அதிசயப்பட்ட ஆறு வயசு செல்வியைக் கண்டார்.

"எங்க பார்த்த?"

"பார்த்தது மட்டுமா... மடில கட்டி ஆபீஸுக்கு எடுத்துக்கிட்டுப் போனேன். உள்ளே நுழைஞ்சதும் பெல் அடிச்சுக் கூப்பிட்டாரு பெருமாள் சார்" கனவு மாதிரி சொன்னாள்.

"ஜாக்கிரதை செல்வி. சுளுவா வேலை கொடுன்னா இப்படி துட்டு எடுத்துட்டு வர்ற வேலை கொடுக்கறானே... நான் வேணா சொல்லட்டா?"

"வேணாம் அண்ணே. இதுவும் சுளுவுதான்." துள்ளிக் குதிச்சு சமையலறைக்குப் போனாள். போதாத குறையாக அண்ணி எதிரே நின்றாள்.

"ஆயிர ரூபாதானே சம்பளம். இல்லை, இரண்டு லட்சத்தைப் பேர் பாதியா பிரிச்சுக்கலாம்னுட்டாங்களா... இங்க குதி குதிக்கிற முதுகுல சுமக்கறது அழுக்குத் துணியா இருந்தா என்ன... அரச கம்பளமா இருந்தா என்ன...

கழுதைக்கு எல்லாம் ஒண்ணுதான். துள்ளாத நட...'' அண்ணி கட்டளையிட்டாள். முகம் நொடித்து செல்வி நடந்தாள்.

துணி தோய்த்து அலசி உலர்த்தி, கூடத்துக்கு வந்தபோது வழக்கத்தைவிட அதிகமாய்ப் பசித்தது. தட்டு எடுத்து வைத்து, தானே பரிமாறி சாப்பிட்டாள். டிரான்ஸிஸ்டரில் பாட்டு கேட்டபடி தூங்கிப் போனாள்.

ஆறு மணிக்கு தானாய் விழிப்பு கொடுத்தது. பரபர வென்று வீட்டுக் காரியத்தில் ஈடுபட்டு ஒன்பதே கால் பஸ் பிடித்து ஒன்பதே முக்காலுக்கு பஸ் விட்டு இறங்கியதும் டீ தாகம் எடுத்தது. கடையில் நின்று டீ குடித்து விட்டு ஆபீஸ் படியேறினாள். சிவப்பு சலான்களை மேஜையில் பரப் பினாள். அடுக்கத் துவங்கினாள். பெருமாள் வரவில்லை, வைத்தி வரவில்லை. கம்ப்யூட்டர் ரூமில் பாட்டு சப்தம் கேட்டது. கிருஷ்ணவேணி டெலிபோனில் யார் யாருக்கோ போன் பண்ணி பேசிக்கொண்டிருந்தாள். கல்யாணி ஹிண்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தாள்.

நூறு சிகப்பு சலான் அடுக்கியவுடன் செல்விக்கும் வேறு ஏதாவது செய்ய வேண்டும் போல் இருந்தது.

''நான் டைப் அடிக்கட்டுமா கல்யாணி?''

''அடியேன். இந்த ரெண்டு லெட்டரையும் காப்பி எடு.'' அவள் நகர்ந்து கொள்ள. டைப் அடித்தாள். மறுபடி சலான் அடுக்கினாள். சலான்களில் உள்ள பெயர்கள் கார்பன் காப்பியில் விழாமல் இருக்க, எடுத்துக் கொண்டு கீழே உள்ள கோடவுனுக்குப் போனாள்.

''வாங்க...'' என்று வரவேற்றார்கள். 'மேடம்... மேடம்' என்று பேசினார்கள். முதல் தடவையாய் 'மேடம்' என்று பையன் கூப்பிட, செல்வி பார்ட்ஸ் லிஸ்ட் பார்த்துக்

கொண்டிருந்தாள். "உங்களைத்தான் மேடம்..." என்றதும், "என்னையா" என்று நிமிர்ந்தாள்.

"என்னை மேடம்ன்னு கூப்பிடறாங்க அண்ணே" என்று அண்ணனிடம் சொல்லி சந்தோஷப்பட்டாள்.

சலான் அடுக்கப் பத்து நாளாயிற்று. காடெக்ஸ் கார்டில் எழுதத் துவங்கும் முன் அதிகம் விற்பனையாகும் ஸ்பேர் பார்ட்ஸ்களை, லிஸ்ட் கையில் வைத்துக் கொண்டு தேவராஜனோடு எது எது என்னென்ன என்று கேட்டுக் கொண்டாள்.

ஒவ்வொரு பார்ட்ஸ் எழுதும் போதும் அதன் படம் மனசுக்குள் வந்தது. மீதி இருபது நாட்களில் பாதி வேலை முடிந்தது.

சம்பளத்தன்று கல்யாணி போய் எங்கிருந்தோ காசு வாங்கி வர, செல்விக்கு கொஞ்சம் ஏமாற்றமாய் இருந்தது. அது கடன் இல்லையாம். கலெக்ஷனாம். கலெக்ஷனுக்குத் தெரிந்தவர்கள்தான் போவார்களாம்.

மாலை நாலு மணிக்கு எல்லோருக்கும் சம்பளம் பணம் வழங்கப்பட்டது. செல்வியினுடைய கவர் மட்டும் பெருமாள் அறைக்குப் போயிற்று, அழைப்பு வந்தது.

"உட்காருங்க. வேலை புடிச்சிருக்கா?"

"புடிச்சிருக்கு சார்."

"எவ்வளவு முடிச்சிருக்கீங்க?"

"பாதி வந்துட்டேன் சார்."

"எப்ப முடிப்பீங்க?"

"இந்த மாசம் இருவது தேதிக்கு மொத்தமும் முடிச்சு அன்னன்னிக்கு ஸேல் ஸ்டாக் காட்டிடுவேன் சார்."

"உங்க சீட் ஒரு முக்கியமான இடம். வேலை கத்துக்க தோதான இடம். பார்ட்ஸோட பழக்கம் வந்துட்டா இந்த

மவுண்ட்ல எந்தக் கடையிலயும் வேலை கிடைக்கும். ஆயிர ரூபா சம்பளம் நிச்சயம், எழுத எழுத பார்ட்ஸ் பேரு, விலை பழக்கப்பட்டுப் போயிடும். பிறகு கவுண்டரோ கேஷோ உட்காரலாம்.''

''எனக்குக் கம்ப்யூட்டர்ல வேலை செய்யணும்னு ஆசை இருக்குங்க.''

பெருமாள் சிரித்தாள்.

''ரொம்ப சுலபம் அது. கம்ப்யூட்டர்ல வேலை செய்த வங்க கம்ப்யூட்டர்தான் கடைசி வரைக்கும். அதுக்கு ஆசைப்பட வேணாம். ஏஸி ரூம், மிஷின் எல்லாம் அம்சமா இருக்கும். முன்னேற முடியாது.

அப்படி வேற ஏதாவது படிக்கணும்னு ஆசை இருந்தா காலேஜ் சேர்ந்து பிகாம் படிங்க. இந்தாங்க. உங்க சம்பளம். அண்ணன் கையில கொடுத்து வாங்கிக்கங்க.

செல்வி இரண்டு கைகளாலும் கவர் வாங்கினாள். கண்ணில் ஒற்றிக் கொண்டாள், கையெடுத்துக் கும்பிட் டாள்.

''வேலைக்கு வரத்துக்கு முன்ன, படபடன்னு பேசிட் டேன். மன்னிச்சுடணும்.''

''அது வயசு, எல்லோருக்கும் இருக்கும், பளு ஏற ஏற தானா குறையும். சேலஞ்ச் பண்றது சுலபம், ஜெயிக்கறதும் சுலபம், ஜெயிச்சதை ரிடெய்ன் பண்றது கஷ்டம். வேலைக் குச் சென்று சம்பளம் வாங்கிட்டா அது ஜெயிச்சதா அர்த்தம் இல்லை, இதுல, இந்த ஃபீட்ல உங்களுக்கு நிகர் இல்லைன்னு சொல்ல எட்டு வருஷம் ஆகும். ஸ்பேர் பார்ட்ஸ் பீல்ட்ல லேடீஸ் இருக்காங்க, ரொம்ப கெட்டிக்கார லேடியைத் தெரியும். பேரிங் பார்த்துட்டு இது எதுல வர பேரிங், யார் மேக். என்ன விலை எல்லாம் இன்னிக்குச் சொல்ற லேடி தெரியும். இருவது வருஷ

சர்வீஸ் அவங்களுக்கு. வேலைக்குன்னு வந்துட்டீங்க, முழுசா ஈடுபடுங்க, அப்ப, பார்ப்போம்.''

மறுபடி கும்பிட்டு விட்டு வெளியே வந்தாள். மறுபடி உள்ளே போய் யார் அந்த லேடி என்று கேட்க ஆசை வந்தது.

''ஸ்பேர் பார்ட்ஸ் நல்லாத் தெரிந்த லேடி யாராவது இருக்காங்களா... கல்யாணி.''

''நாலஞ்சு பேர் இருக்காங்க.''

''பாஸ் யாரையோ சொன்னாரு எங்கிட்ட.''

''ஆமா... பிரேமலதாவைச் சொல்லியிருப்பாரு. அது ஒரு கேடு கெட்டது.''

''கேடு கெட்டதா...''

''ஆமா, அவளை சேட் வச்சுக்கிட்டு இருக்கான். இவ உட்கார்ந்து தான் கடை ஓனர்ங்கிற மாதிரி அலட்டுவா.''

''ரொம்ப கெட்டிக்காரின்னாரு.''

''நிஜமா தெரியறது வேற... தெரிஞ்சமாதிரி அலட்டிக் கறது வேற. நம்ம பாஸுக்கு அவ மேல ஒரு கண்ணு. முன்ன அடிக்கடி வருவா. இப்ப காணோம். சேட் கண்டிச்சு வச்சுருக்கான் போல இருக்கு.''

''மறுபடி வந்தா காட்டறீங்களா எனக்கு?''

''ஏன்?''

''பாஸ் ரொம்பப் பெருமையா...''

''ப்ச்சு இது ஆம்பளைங்க பீல்ட் செல்வி. நம் கடை தேவராஜன் இதுல கிங். நைன்த் ஸ்டாண்டர்ட் படிக் கறப்போ அப்பா செத்துப் போய் கடைக்கு வந்தான். நூறு ஸ்டியரிங் வீலர், பத்து பாக்ஸா... போட்டால் வெயிட் சொல்லட்டா... பளிச்சுன்னு சொல்வான். கரெக்டா

இருக்கும். பாம்பேலர்ந்து டெயில் லாம்ப் வரைக்கும். எல்லா பார்ட்ஸும் எல்லாவண்டியும் அவனுக்குத் தெரியும். தெரிஞ்சு என்ன... இரண்டாயிரம் ரூபா சம்பளம். இதே தேவராஜன் பொம்பளையா இருந்தா தனிக்கடை ஓனராயிட்டிருப்பான். பிரேமலதா எல்லார்கிட்டேயும் வாதாடுவா. தேவராஜன் கிட்ட பேசமாட்டாளே...''

''அவளை மாதிரி முன்னுக்கு வரணும்.''

''வேணாம் செல்வி. அந்த மாதிரி முன்னுக்கு வர்றதை விட, இதோ இந்தப் படத்துல இருக்கற பொண்ணு மாதிரி விஷம் தின்னு சாகலாம்.''

செல்வி குழம்பினாள்.

''வேலைக்குன்னு வந்துட்டீங்க. அப்ப முழுசா ஈடுபடுங்க.'' பெருமாள் சொன்னது வேறு அர்த்தத்துலயா? 'எல்லாம் கத்துக்க. என் கூடவே இரு. நானே வச்சுக்கறேன்' என்பது போலவே?''

''பிரேமலதா நல்லா இங்கிலீஷ் பேசுவாங்களா?''

''தேவராஜன் கூடப் பேசுவான். எழுதச் சொல்லு வராது லெட்டர் டிக்டேட் பண்ண முடியாது. லெட்டர் எழுதறதுல வைத்தி சார் மன்னன். இவரு இரண்டு நாள் வரலைன்னா வீட்ல இருப்பாருன்னு நினைக்கறீயா வேற எங்கயோ. யாருக்கோ வேலை செய்யறார்னு அர்த்தம்-சண்டே போய்ப் பாரு. வீட்ல ஒரு மிஷின் வச்சு. ஒரு பையனை வச்சு, வேற கடை லெட்டர்ஸுக்குப் பதில் எழுதிக்கிட்டிருப்பார். இங்கேயே தான் பல லெட்டர்ஸ் அடிச்சுக் கொடுத்துருக்கேன்.''

''உனக்கு நல்லா இங்கிலீஷ் தெரியுமா கல்யாணி.''

''சொன்னது டைப் அடிக்கத் தெரியும். ரொட்இன் லெட்டர் அடிச்சுடுவேன். எனக்கு ஃபார்ம் பண்ணி கஷ்டம்.''

பிரேமலதா ஒனா டிக்டேட்...''

''உனக்கு பிரேமலதா பார்க்கணுமா?''

செல்வி சிறிது வெட்கத்துடன் தலையசைத்தாள்.

''அப்ப இறங்கி ஸ்டேட் பாங்க் வரைக்கும் போ. அதுக்கு எதிர்க்கடை மோதிலால் மோட்டார்ஸ்ன்னு போர்ட் போட்டிருக்கும். அங்க வாசப்படி கிட்ட கண்ணாடி வழியா பார்த்தியா சிகப்பா குண்டா ஒரு பொண் உட்கார்ந்திருப்பா, லிப்ஸ்டிக் எல்லாம் போட்டுண்டு... அவதான் பிரேமலதா.''

''என்னா பிரேமலதா பத்திப் பேச்சு.'' ஏஸி ரூம் கதவு திறந்து கேள்வி வந்தது.

''இவளுக்கு பிரேமலதா பார்க்கணுமாம் கிரிஜா. பாஸ் ரொம்ப உசத்தியா சொன்னாராம்.''

''டர்ட்டி வுமன்.''

யாரைச் சொல்கிறாள் என்று செல்விக்குப் புரியவில்லை, விழித்தாள்.

''அவளை மாதிரி கெட்டிக்காரின்னுட்டாரா...'' கிரிஜா வெளியே வந்தாள். ''தலை வச்சுக்கூடப் படுக்காதே. அவ பக்கம் மோதிலால் மோட்டார்ஸ் பக்கம் போனா லேசா நாறும். எதனால தெரியுமா''

''கார்னர்ல கூலிஸ் அசிங்கம் பண்றாங்க.''

''இல்லை... அது பிரேமலதா நாத்தம்.''

சிரித்தார்கள்.

''சேட்டுக்கு இதுவா இருக்கறதால சொல்றீங்களா?''

''சேட்டுக்கு மட்டும் இதுவா இல்லை, நிறைய பேருக்கு இதுவா இருக்கா.''

''ச்சீய்.''

''என்னைச் சொல்றியா, அவளைச் சொல்றியா? கிரிஜா அதட்டினாள்.

''அவங்களைத்தான்'' செல்வி தயங்கி பதில் சொன்னாள்.

''யூ ஆர் கமிங் ஃப்ரம் எ ரெஸ்பெக்டபிள் ஃபேமிலி, அதுதான் முக்கியம். ரெஸ்பெக்ட் ஈஸ் இம்பார்ட்டெண்ட். கிங் ஆறதோ குயின் ஆறதோ இல்லை'' சமத்தா சம்பளத் தோட வீடு போய்ச் சேரு.''

மறுபடி சிரித்தார்கள்.

ஐந்தரைக்கு எல்லோரும் கிளம்ப சலான்களை வாரி உள்ளே போட்டுவிட்டு செல்வியும் ஆபீஸ் விட்டுக் கீழிறங்கினாள்.

இறங்கி,தெருவில் நடந்தாள். பிரேமலதா எப்படி இருப்பாள் என்று யோசித்தாள். ஸ்டேட் பாங்க் கார்னருக்கு வந்ததும் மோதிலால் மோட்டார்ஸ் போர்ட் பார்த்தாள், உள்ளே கண்ணாடி வழியே சிகப்பாய், குள்ள மாய் ஒரு பெண் நின்று யாருடனோ பேசுவது தெரிந்தது. பல் வரிசை ஒழுங்காக இருந்தது. நாற்பது வயதிருக்கும். இளமை நகர்ந்து முதுமை முகத்தில் கவிழத் துவங்கி இருந்தது மறைக்கப் பிரயத்தனங்கள் செய்திருப்பது புரிந்தது. இதுதான் பிரேமலதாவா? செல்வி பார்க்கிற நேரத்தில் கண்ணாடி வழியே அவளும் பார்க்க, செல்வி தலை குனிந்து கொண்டாள். வேகமாய் பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தாள்.

வீட்டுக்குப் போய் அண்ணனிடம் சம்பளக் கவர் கொடுத்து, காலில் விழுந்து கும்பிட வேண்டும். பைக்குள் விரல் நுழைத்து சம்பளக் கவர் தேடினாள். சொடே ரென்றது. கவர் எங்கே... பை பிரித்துப் பார்த்தாள். இல்லே எங்கே? உள்ளே வச்சேனோ துழாவினாள். பைக்குள்ள

வச்சமா? யோசித்தாள். ஐயோ... டிராயர்ல இருக்கு. முதல் சம்பளம். முதல் சம்பாத்தியம்... கடவுளே திரும்ப ஆபீஸ் நோக்கி ஓட... அந்தப் பிரேமலதா வந்த வழியே ஓடுகிற பெண்ணை வியப்போடு புருவம் தூக்கிப் பார்த்தாள்.

21

கதவுகள் விரியத் திறந்து கிடந்தன. உள்ளே நுழைந்து டிராயரைத் திறந்து சிவப்புச் சலான்களை அள்ளி எடுத்து அடியில் பார்த்தபோது பழுப்பு நிறக்கவர் இருந்தது. செல்வி சலான்களை ஓரமாய் ஒதுக்கி, கவர் எடுத்தாள். பிரித்துப் பார்த்தாள். உள்ளே காசு கலையாமல் இருந்தது. எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு படம் நோக்கி கரம் குவித்தாள். திரும்ப டிராயரை மூடினாள்? தன்னுடைய டேபிளும், தன்னுடைய நாற்காலியும் அமைதியாய் அவளை ஏக்கத்தோடு பார்ப்பதாய் உணர்ந்தாள்.

''நாளைக் காலைல வந்துடுவேன்...ஒகே.'' என்று அவைகளிடம் விடை பெற்றாள். வாசலுக்கு நகர்ந்தாள் 'சலங்' என்று கொத்துச்சாவி தரையில் விழுந்தது போல் ஒரு சப்தம் கேட்டது. திடுக்கென்று மனசு அதிர்ந்தது. யாருமில்லாத இந்த மாடியில் இவ்வளவு பெரிய சத்தம் எப்படி வரும்? யாராவது இருக்கிறார்களா? உள்ளே பயம் பரவிற்று.

ஒரு வேளை பிரமையோ. மறுபடி சாவி சிணுங்கும் சத்தம் கேட்டது. யாரோ தரையில் விழுந்த கொத்தை மெல்ல எடுக்கிறார்கள். கம்ப்யூட்டர் கிரிஜா உள்ளே இருக்கிறாளா? இல்லையே, எனக்கு முன்னால் கிரிஜா, மங்களா இரண்டு பேரும் இறங்கிப் போய் விட்டார்களே.

உள்ளே குடம் அசைகிறதா? படத்துக்குப் பின்னே வைத்திருக்கிற குடம் அசைகிறதா? யாரும் இல்லாத நேரத்தில் கை குவித்து கும்பிட்டது சந்தோஷமாகி 'அருகே வா' என்று கூப்பிடுகிறதா? படத்தைப் பார்க்க பயமாய் இருந்தது. பயத்தில் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்று உடம்பு முழுவதும் ஒரு மெல்லிய அலை பரவிற்று. மறுபடி கும்பிடலாமா?

எதற்கு வம்பு? போய் விடுவோம். வரதராஜப் பெருமாள் அறையில் யாரோ எழுந்து நிற்பது தெரிந்தது டிராயர்கள் இழுக்கும் ஓசை கேட்டது. அந்த உருவம் மறுபடி நிமிர, பெரியசாமியின் பக்கவாட்டுத் தோற்றம் நிழலாய்த் தெரிந்தது. அவன் கதவுக்கு அருகே வந்து கைபிடியில் கைவைக்க, செல்வி பாய்ந்து வெளியே வந்தாள். முதல் படியில் விளிம்பிலிருந்து பிரியும் நடை பாதையில் நடந்து, பெண்களுக்கான தனியிடம் போனாள். கதவு ஒருக்களித்துவிட்டு, இடைவெளி வழியே கவனித்தாள். பெரியசாமி இரண்டு நிமிடத்தில் வெளியே வந்தான். கதவு சாத்தினான் பூட்டு திறக்க வாட்டமாய். கையிலிருந்த பொருளை அக்குளில் இடுக்கிக் கொண் டான். சாவி போட்டுப் பூட்டு திறந்து, நாதாங்கி மாட்டி, மறுபடி பூட்டினான். அக்குளில் இருந்த பொருளை எடுத்து உள்ளங்கையில் தட்டிப்பின் பாக்கெட்டில் சொருகி சட்டையை மேலும் இழுத்து விட்டுக் கொண்டான்.

ஒரு கொத்துப் பென்சில்கள், செல்வி தன் இடத்தி லிருந்து பென்சில்களை நன்றாய்க் கவனிக்க முடிந்தது. கறுப்பும் சிகப்பும் பட்டைப் பட்டையாய் போட்ட முழுப் பென்சில்கள் முனை சீவப்பட்டாத பென்சில்கள்.

என்ன இது, இவனுக்கு எதற்கு இத்தனை பென்சில்கள்? இரு திருட்டா, இல்லை எடுத்துவரச் சொன்னார்களா? ஒரு ஆபீசில் பென்சில், பேனா திருட்டு சகஜம். அதிகம்

படித்தவர்கள் கூடி சகஜமாய்ச் செய்யும் விஷயம். ஆனால் உனக்கு பால்பாயிண்ட் பேனா தேவையில்லை என்று அதிகாரம் பண்ணிவிட்டு, இப்படி கொத்துக் கொத்தாய் பென்சில்கள் போக விட்டால் எப்படி...

பெரியசாமி இறங்கிப் போகும்வரை காத்திருந்து படியிறங்கினாள். தெருவில் வேகமாய் நடந்தாள். இது எப்படிக் கணக்கில் வரும்?ஏன் பெருமாள் டிராயரிலிருந்து இவண் எடுக்க வேண்டும்? பின்பாக்கெட்டில் சொருகி சட்டையை இழுத்து மறைக்க வேண்டும்?

இதற்கு எப்படிக் கணக்குக் காட்டுவாள் கிரிஜா? 'கிரிஜாம்மா பென்சில் கொடேன்' என்று பெரியசாமி கேட்க, 'இங்கே வச்சிருக்கேன். எடுத்துக்கோ' என்று கட்டளையிட்டிருப்பாளோ, 'சரி... எனக்கென்ன... யாரோ யார் பொருளோ எப்படியோ போகட்டும்.

தெருமுனையில் அந்தப் பெண்மணி நின்றிருந்தாள். தன் கடை வாசலில் நின்று இடுப்பில் கை வைத்து தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். வேகமாய் நடக்கும் செல்வியைப் பார்த்து மெல்லச் சிரித்தாள். செல்விக்கு ஆச்சரியமாய் இருந்தது, பதிலுக்கு சிரிக்கத் தோன்றியது. பாதி சிரித்து, சட்டென்று அடக்கிக் கொண்டாள். தலையை எதிர்பக்கம் திருப்பி இன்னும் வேகமாய் நடந்தாள்.

அண்ணனுக்குக் கவர் பிரிக்க, சந்தோஷமாய் இருந்தது. அப்பா படத்துக்கு எதிரே வைத்து விட்டு ஊதுவத்தி அது சுடராய் எரிய தீபங்காட்டி மறுபடி எடுத்து செல்வியிடம் கொடுத்தார்.

''உனக்கெதுனா வாங்கித் தரட்டுமா அண்ணே?''

வேணாம் செல்வி. நீ காசு சம்பாதிக்கிற சந்தோஷத்தை விட, தைரியமா வெளியே வரியே, அது பெரிசாப்படுது எனக்கு.

வேலைக்குப் போக வேணாம் போகவேணாம் வேலைக்கின்னுட்டு இப்ப பேச்சு மாத்தறீயேடான்னு உனக்குள்ள தோணும். பொம்பள வேலைக்குப் போறது ஆம்பளைக்கு இழுக்கு இல்லை. வேலைக்குப் போற பொம்பளை வம்புல மாட்டிக்கக் கூடாதேன்ற பயம் தான் மறுப்புக்கு காரணம். சைக்கிள்ல போறவன் பெண்டாட்டி தோள்ல உரசினா சைக்கிள்காரன் மேலே கோபம் வரும். அத பொண்டாட்டி மேலதான் காமிக்க முடியும்.

இழுத்துப் போத்திக்கிட்டு வாடி நாயேன்னு அவளைத் தான் திட்டுவான், ஏன்? சைக்கிள்காரனைத் துரத்திப் பிடிச்சு உதைக்கப் பயம். முடியாது கையாலாகாத்தனம். பொண்டாட்டி வெளியே வரதுனால தானே இத்தினி பிரச்சனையும்னு முடிச்சிடுவான்.''

''ரோட்ல அப்படி யாரும் கேலி பண்றதில்லண்ணே.

நான் பேச்சுக்குச் சொன்னேன். பெருமாள் ஏதாவது என்னைப் பத்தி விசாரிச்சானா?''

''அண்ணன்கிட்ட காசு குடுத்து ஆசீர்வாதம் வாங்கிக் கின்னாரு.''

''பெரிய மனசு, நல்ல குணம். சின்ன வயசுல சாப்பாட் டுக்குக் கஷ்டம். திடீர்னு ஒருநாள் உசந்துட்டாங்க.''

''ஏதோ இடத்துல தங்கம் கிடைச்சுன்னு பேசிக்கறாங் கண்ணே, ஒரு படம் இருக்கு. வரைஞ்ச படம். அம்மன் துலுக்க நாச்சியார்னு போட்டுருக்கு.''

''இருக்கலாம், இல்லாதயும் இருக்கலாம். பழசு மறக் காதே, நன்றியோட வேலை கொடுத்தது பெரிசு. காசு வந்து

கர்வம் காட்டாதது இன்னும் பெரிசு, தெரிஞ்சவங்கள்னு தடலடியா இருந்துராதம்மா. காசுள்ளவன் எப்ப கனிவா இருப்பான், எப்ப கடிஞ்சு பேசுவான்னு சொல்ல முடியாது. உனக்குக் கொடுத்த வேலையைப் பாரு. கை கட்டிப் பேசு. நல்லது கெட்டது நடக்கும். பட்டும் படாததுமா இரு.''

''இன்னிக்கு ஆறு பென்சில் திருடினது பார்த்தேன். ஆறு பென்சில் அவரு டிராயர் திறந்து பின்பாக்கெட்ல வச்சு மறைச்சுக்கிட்டுப் போனான். நான் பார்த்ததை அந்த ஆள் பார்க்கலை''

''கண்ணு மூடிக்கோ. உன்னைக் கேட்கறபோது, தெரியாதுன்னு சொல்லு. நம்ம பிரஸ்ல கூட அச்சு திருடுவான். தினமும் கைப்புடி ஈயம் போயிடும். பென்சில் திருடு போகாத இருக்குமா அவ்வளவு பெரிய ஆபீஸ்ல? யாரு எடுத்தா?''

''சாப்பிட வர்றது... உள் வேலை முடிக்கணுமில்ல.'' அண்ணி குரல் கொடுக்க பேச்சு அறுந்தது.''

மறுநாள் பிரித்த சலான்களை எடுத்து எழுதிய போது பெருமாள் உள்ளே நுழைந்தான். வைத்தியை அழைத்து, போன வாரக் கணக்கு பார்த்தான். பல தடவை போன் பேசினான். தேவராஜனைக் கூப்பிட்டு பேரிங் ஸ்டாக் கேட்டான். கிரிஜாவின் கம்ப்யூட்டரும் தேவராஜன் ஸ்டாக்கும் நிறைய வித்தியாசப்பட்டன. வகைக்குப் பத்துப் பன்னிரண்டு குறைந்தது. செல்வியை பேரிங் சலான் மட்டும் எடுத்து வரச் சொன்னான். பாதி சலானில் கார்பன் காப்பி சரியாவே இல்லை. எண்களே தெரியவில்லை. நல்ல வேலை கம்ப்யூட்டர் சொன்ன எல்லா சலானும் சரியாய் செல்வி அடுக்கியிருந்தாள். இரண்டாவது சலானைப் பார்த்து எல்லா சலானுக்கும் சரியான எண்கள் எழுதி வரச் சொன்னான். செல்வி கோடவுனுக்கு ஓடினாள். இருபத்

தேழு சலானைப் பார்த்துக் காப்பி எடுத்தாள். கூட்டினாள் கம்ப்யூட்டர் கணக்கு சிவப்புச் சலானோடு ஒத்துப் போயிற்று. ஸ்டாக் மட்டும் குறைந்தது.

''ஒரு ஸ்டேட்மெண்ட் போடுங்க பார்ப்போம். தேதி வாரியாய் விற்றவைகளை எழுதுங்க.''

செல்வி பிற்பகல் உணவைப் புறக்கணித்துவிட்டு நாலு பக்க ஸ்டேட்மெண்ட் எடுத்தாள். நேற்று பகல் வரை உள்ள ஸ்டாக் கொடுத்தாள். தேவராஜன் ஓடி வந்து வைத்திக்குமுன் ஸ்டேட்மெண்ட் பார்த்தான்.

''சரியா எடுத்தீங்களா?'' என்று பதறினான். ''டோட் டலா முப்பத்தியொரு பேரிங் குறையுது.'' தலையில் கை வைத்துக் கொண்டான், ''இரண்டு மாசம் முன்ன எடுத்தேன் ஸ்டாக் சரியா இருந்தது. ஒண்ணோ ரெண்டோ ஷார்ட் ஆச்சு. முப்பத்தியொரு பேரிங்... எப்படிப் பதில் சொல்லப் போறேன்?''

''வாரா வாரம் ஸ்டாக் எடுக்கறது விட்டுப் போச்சு. இதோ அதோன்னு ஏமாத்தறீங்க. புடிச்சா 'குறையுது' தெரியலை'ன்னு பேசறீங்க. பேரிங் வரைக்கும் முப்பத்தி யொண்ணு மொத்தமும் கேட்கப் போறான். என்ன செய்வே? எப்படிச் செக் பண்ணுவே?'' வைத்தி கவலைப் பட்டார்.

ஸ்டேட்மெண்ட் எடுத்து செல்வி உள்ளே போனாள்.

போன் சுழற்றிக் கொண்டிருந்த பெருமாள் பென்சில் கேட்டான். பென்சில் வாங்கி டயல் சுழற்றினான். ''கம்ப் யூட்டரோட சரியா வருதா உன் ஸ்டேட்மெண்ட்?''

''வருது சார்.''

''ஒண்ணு செய்யுங்க, எல்லாத்தையும் சீக்கிரம் முடிங்க கம்ப்ளீட்டா ஒரு ஸ்டாக் டேக்கிங் வர சண்டே வைக்க லாம், போல்ட் நட் ஸ்டேட்மெண்ட் தாங்க. அத முடிக்க

லாம். எனக்கு ரொம்ப நாளா சந்தேகம் கொடவுன் மேல. இதை நிறுத்திட்டு நான் சொன்னபடி ஆரம்பிங்க.''

''சரி சார்.''

''போகலாம்.''

''பென்சில் வேணும்.''

''என்ன பென்சில்?''

''இப்ப வாங்கினீங்களே.''

''இதுவா... இது என்னது இல்லையா?''

''இல்லை சார். என்கிட்ட வாங்கினது... என் பென்சில் இது.''

''என் பென்சில்னா?''

''நான் என் காசு கொடுத்துக் கடைல வாங்கினது.''

''ஆபீஸ் வேலைக்கா?''

''ஆமா''

''என் பென்சில் எங்க?''

''தெரியாது சார்.''

''ப்ளீஸ், கீழ் டிராயர் திறங்க.''

டிராயர் திறந்தாள். ''இதுல ஒரு பஞ்ச் பென்சில் இருந்ததே...''

செல்வி மௌனமாய் இருந்தாள்.

''கிரிஜாவைக் கூப்பிடுங்க. ''போனை ஆத்திரத்துடன் கீழே வைத்தான்.

''எஸ் சார்.''

''பென்சில் எங்கே?''

''தரேன் சார்.''

''இதுல இருந்த பென்சில்.''

"ஆறு கொடுத்தோம் போன வாரம்."

"எங்க அது?"

"எனக்குத் தெரியாது."

"இவங்களுக்குப் பென்சில் தரலையா?"

"இல்லை."

"ஏன்?"

"இவங்களுக்கு சலான் அடுக்கற வேலைதானே எதுக்குன்னு..."

"இடியட் இவங்க ஸ்டேட்மெண்ட் போடறாங்க. பார்க்கலை? சலான் அடுக்கினா... அதைத் தவிர வேறு வேலை வராதா?"

"இன்னிக்குத்தானே ஸ்டேட்மெண்ட் போடறாங்க. ஏம்மா, என்கிட்ட பென்சில் கேட்டா தர மாட்டேனா?" ஏன் இவர்கிட்ட வந்து கம்ப்ளெயிண்ட் பண்ற?"

"நான்..." செல்வி தடுமாறினாள்.

"கிரிஜா... என் பென்சில் பஞ்ச் எங்க?"

"தெரியாது சார்."

"நேத்து இருந்தது ஆறு பென்சில்."

"வேற டிராயர்ல இருக்கும் பாருங்க."

கொட்டிக் கவிழ்த்துத் தேடினார்கள்.

"இது உள்ள ஒரு ஃபைவ் ரூபிஸ் காயின் வச்சிருந்தேன். என் ப்ரதர் கொடுத்தது. அதுவும் காணோம். என்ன நடக்குது இந்த ஆபீஸ்ல...? வைத்தியைக் கூப்பிடு."

"வைத்தி உள்ளே வந்தார்.

"வைத்தி நான் இல்லாத போது இந்த ரூமுக்கு யார் வருவாங்க...?"

"நான், கிரிஜா... ஏன் சார்?"

"கம்பெனில நிறைய மிஸ்ஸிங் பென்சில்லேர்ந்து பேரிங் வரைக்கும் மிஸ்ஸிங். நான் டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுக்கப் போறேன். நேத்து இங்க இருந்த ஆறு பென்சில் காணோம்."

"பென்சிலா... பென்சில் யார் எடுக்கப் போறா?"

"தெரியாது. ஆனா வேலை செய்யறவங்களுக்கும் பென்சில் இல்லை. அவங்க சொந்தக் காசு போட்டு பென்சில் வாங்கறாங்க பதினேழாயிரம் ஸ்டேஷனரி காமிக்கிற கம்பெனி இது, நேரத்துக்கு ஒரு பென்சில் இல்லை. ச்சே... ஒரு பென்சில் விஷயத்துக்கே இப்படின்னா, நான் எப்படி உங்க எல்லோரையும் நம்பறது? எல்லோரும் சேர்ந்து என்னை ஏமாத்தறீங்களோன்னு சந்தேகம் வருது."

சகலரும் மௌனமாய் இருந்தார்கள்.

போன் ஒலித்தது.

"ஹலோ." அதே கோபத்தோடு போனில் பெருமாள் இருந்தான். எதிர்பக்கம் யாரோ பேசுவது கேட்டது.

"கோவப்படாம என்ன செய்யறது, பிரேமலதா? பென்சில் காணோம். பேரிங் காணோம். ஆறு பென்சில் நேத்திக்கு இருந்தது இன்னிக்கு இல்லை. முப்பத்தியொரு பேரிங் கேட்டா தெரியாதுன்றாங்க. எப்படி அமைதியா இருக்கறது. அதெப்படி நேத்திக்குப் பார்க்கும்போது இருந்தது. காலைல வந்து பார்க்கறப்ப மாயமா மறைஞ்சு போயிருக்கும்.

எதிர்முனை பேச்சு கேட்டது.

பெருமாள் கூர்ந்து கேட்டான். முகம் சுருக்கினான். கடைசியாய் நின்றிருந்த செல்வியை உற்றுப் பார்த்தான்.

செல்வி முகம் மாறினாள்.

22

"நீங்க நேத்திக்கு ஈவ்னிங் ஆபீஸ் வந்திருக்கீங்களா, செல்வி?'' டெலிபோனைப் பொத்திக் கொண்டு கேட்டான்.

''யெஸ் சார்.''

''ஏன்?''

''என் சம்பளக் கவர் விட்டுட்டேன், அது எடுக்க வந்தேன்.''

''எங்க விட்டுட்டீங்க?''

''என் மேஜை டிராயர்ல.''

''எத்தனை மணிக்கு வந்தீங்க?''

''ஆபீஸ் முடிஞ்சு அஞ்சு நிமிஷம் கழிச்சு.''

''அப்ப இங்க யார் இருந்தாங்க.''

செல்வி பேசாது நின்றிருந்தாள். 'எடுத்தது யாருன்னு எனக்குத் தெரியும், என்னால் சொல்ல முடியாது' என்பதாய் அவள் முகம் பேசிற்று.

''நான் விசாரிச்சுக்கறேன், பிரேமலதா, தாங்க்ஸ்'' போனை வைத்தான்.

''வெளிய போங்க. எல்லாரும். செல்வி, உட்காருங்க.''

சுற்றி நின்றவர்கள் வெளியேறினார்கள். செல்வி அசையாது நின்றிருந்தாள்.

''செல்வி. நீங்க என் ஜாதின்னு வேலை தரலை. உங்க அண்ணனைப் பாராட்ட வேலை தரலை. உங்கப்பா எங்களுக்கு செஞ்ச உதவிக்கு நன்றிக் கடனாகவும் வேலை தரலை. அது உங்கண்ணன் உதவிக்குக் கூச்சப்பட்டப்பறம் கூடாதுன்னு சொன்ன உபசாரம். எனக்கு உங்க படபடப்பு

புடிச்சுது. கோபமா படபடப்பா இருக்கிறவங்க உண்மை யாகவும் இருப்பாங்க. எனக்குத் தெரியும். நிஜம் அப்படித் தான் வரும் வெளிய? ஒரே மாசத்துல அந்தப் படபடப்பு விட்டுட்டீங்க. எப்படி? அமைதியா நிக்கறீங்க. எப்படி? பொய் பழகிடுச்சுன்னு அர்த்தம். அழுத்தம் வந்திடுச்சுன்னு அர்த்தம். ஆன்ா உங்க படபடப்பு உங்களுடைய அஸெட். அதை வுட்றாதீங்க. ஆறுபென்சில் போனது பெரிய நஷ்டமில்லைங்க குப்பை, போவுது. ஆனா ட்ராயர் திறந்து குப்பை பென்சிலை எடுக்கிறவன் எதையும் எடுப்பான். இந்த மேஜைல ஆள் இல்லாத கை வைக்கிறவன். எந்தக் காரியமும் செய்வான். யார் செல்வி அது?''

''செல்வி பேசாது நின்றிருந்தாள்.

''எனக்குக் காசு கிடைத்தது பற்றி இன்னேரம் பல கதை கேட்டிருப்பீங்க. காசு யாருக்கு வேணா கிடைக்கும். அது பெரிசில்லை. அதைக் கட்டிக் காப்பாத்தறதுதான் பெரிய காரியம். நாளைக்கு காலை நான் அழிஞ்சு பாப்பரானாக் கூட நாளை மறுநாள் நிமிர்ந்து நடக்க முடியும், இன்னொரு கடை திறக்க முடியும். அதுக்குக் காரணம் என் உழைப்பு, என் துணிச்சல். பயப்படாதீங்க செல்வி. எதுக்குப் பயப்படறீங்க? உங்களுக்கு நீங்க உண்மையா இருக்கிற வரைக்கும் எதுக்கும் பயப்படாதீங்க. நீங்க சொல்லாதயே கண்டுபிடிக்க முடியும் என்னால. கிரிஜாவா, பெரியசாமியா... இதுல யார்னுதான் சந்தேகம்.

''கிரிஜா எடுத்துதுன்னா வுட்ருவேன். ஏன்னா அதால பென்சில் மட்டும்தான் திருட முடியும். பெரியசாமி எடுத்தா அதுவேற விஷயம். அவன் நினைச்சா என் கடை முழுக்கவே திருட முடியும். பேரிங் காணாமப் போனது தான் எனக்குக் கவலையா இருக்கு. தேவராஜன் திருட மாட்டான். திருட்டுக் குத்தம் வாங்கி வெளியே போனா அவனை எந்தக் கடையிலயும் ஏத்த மாட்டாங்க. இத்தனை

நான் பழகின வேலை அவனுக்குப் புண்ணியமில்லாத போயிடும். கூட சம்பளம் கேட்டு மிரட்ட முடியுமே தவிர, இன்னொரு கடைல கூப்பிடறாங்க கூட சம்பளத்துக் குன்னு அலட்ட முடியுமே தவிர திருட முடியாது, தேவராஜன் இல்லை, யார் எடுத்தது?''

''பெரியசாமி.''

''பார்த்தீங்களா?''

''பின்பாக்கெட்ல பென்சில் அடுக்கிட்டு சட்டையை இழுத்து விட்டுக் கதவு பூட்டினது பார்த்தேன்.''

''என்ன கலர்?''

''ப்ளாக் அண்ட் ரெட்.''

பெருமாள் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

''கிரிஜா கேலி பண்ணுமா உங்களை?''

செல்வி பேசாது இருந்தாள்.

''ஏன் பென்சில் தரமாட்டேங்குது உங்களுக்கு?''

''என் வேலைக்கு பென்சில் தேவையில்லைன்னாங்க நானும் சரின்னுட்டேன்.''

''கம்ப்யூட்டர் ப்ரோக்ராம் படிச்சா என்ன... நீங்க?''

''சார்...''

''மேல படிச்சா என்ன, மத்த பொண்ணுங்க மாதிரி?''

''வீட்ல... ரொம்ப கஷ்டம்.''

''எதுக்கு?''

''காசு... பர்மிஷன்.''

''காசு நான் தரேன்.''

''எதுக்குங்க?''

"மேல் படிப்புக்கு. கிருஷ்ணவேணி மாதிரி கதைப் புஸ்தகமும் கையுமா இருந்திராதீங்கன்னு சொல்றேன். ஆயிரும் ரூபா சம்பளம் போறும், புடைவை வாங்கன்னு இருந்துராதீங்க. கல்யாணி மாதிரி கடனேன்னு வேலை செய்யாதீங்க. கம்ப்யூட்டர் யார் வேணா கத்துக்கலாம் எட்டாம் கிளாஸ் போறும் ஆப்பரேட் பண்ண."

"எனக்குக் காலேஜ் போகணுங்க."

"ஏன்?"

"இங்கிலீஷ் தெரியலை."

"படிக்கவா... பேசவா... பேசறது இரண்டு வருஷத்துல வந்துரும்."

"இரண்டும் சார். டிகிரி மதிப்பு இல்லையா?"

"எப்படிப் படிப்பீங்க?"

கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ்ல. அதுக்கு ஈவினிங் காலேஜ் இருக்கு."

"அண்ணன் அனுமதிப்பாரா?"

"கேட்கணும்."

"கேட்டுட்டு வாங்க."

"விடலைன்னா?"

"நான் பேசறேன். செல்வி, பெரியசாமி பேர் சொன்ன துக்குப் பரிசா இதைப் பேசலை. குப்பையாக் கிடந்த சலான் எடுத்து பேரிங் டாலி பண்ணி கம்ப்யூட்டரோட சரி பார்த்தீங்களே... கரெக்டா நம்பர் சொன்னீங்களே... அதுக்குப் பரிசு. படிங்க செல்வி. ஆனா எந்த நேரத்துலயும் இந்த படபடப்பு விட்றாதீங்க. இப்ப இந்த வயசுல படபடப்பு இல்லைன்னா எப்பவும் படபடப்பா இருக்க முடியாது. இந்தாங்க உங்க பென்சில்."

"உங்களுக்கு?"

"அறுபது பென்சில். இருபது பால்பாயிண்ட். பதினைஞ்சு எரேசர்... இன்னும் என்னென்ன வேணுமோ வாங்கி உங்க கஸ்டடில வச்சுக்கங்க. இனிமே நீங்கதான் ஸ்டேஷனரி இன்சார்ஜ்."

"சார்... கிரிஜா?"

"அவங்க ஸ்டாக் செக்கிங் சூப்பர்வைஸர். பேரிங் ஸ்டாக்செக் பண்ணனும்... வாரா வாரம். இது பிர மோஷன்."

"சார், பெரியசாமி பென்சில் திருடியது..."

"யார்கிட்டயும் சொல்ல வேணாம். அவரை பென்சில்ல மாட்டி அவமரியாதை பண்ணக்கூடாது." பெரிசா மாட்டி வீட்டுக்கு அனுப்பனும். நீங்க போய் கார்டெக்ஸ் முடிங்க."

"தாங்க்ஸ் சார்."

"ஆல் த பெஸ்ட். நார்மலா போங்க, வெளிய போற போது."

செல்வி முகம் மாற்றிக் கொண்டாள்.

சீட்டுக்கு வந்து சலானில் முகம் கவிழ்ந்தாள். அவனுக் குத் தெரிகிறது சகலமும். யார் யார் என்னென்ன தகுதி... தெளிவாய்ப் புரிகிறது. இவன் வேலை தெரிந்தவன். ஈவினிங் காலேஜ் எங்க இருக்கு? எப்ப கோர்ஸ் துவங்கு கிறது...? மேல படிங்க என்கிறான் உன்னிப்பாய்த் தன்னைக் கவனிக்கிறான். சட்டென்று பெரிய உபகாரம் செய்கிறான். ஐயோ, இந்த கிரிஜாவைக் கூட எடை போட்டு வைத்திருக்கிறான். கடனுக்கு வேலை செய்கிற கல்யாணி, இந்த கார்டெக்ஸ் முடிக்க முடியுமா? அண்ணன்

காலேஜ் படிக்க ஒத்துக் கொள்வாரா? அண்ணி கூவாம இருக்குமா?''

''ஏய்... என்ன லஞ்ச்... இன்னிக்கு?'' கதவு திறந்து கிரிஜா சிரித்தபடி கேட்டாள்.

''புளிசாதம்.''

''புளிசாதமா... அப்படின்னா... புளியோதரையா''

''இல்லை. புளிசாதம்.''

''லஞ்சுல இங்க வந்துரு, டேஸ்ட் பார்க்கலாம். வரியா?''

உள்ளே விளக்கெரிந்தது. ஏன் திடீரென்று எதற்கு அழைப்பு? மறுத்தால் என்னவாகும் உள்ள என்ன பேசினாரு பாஸ்ன்னு கேட்பாங்களோ?''

''வாணாம் கிரிஜா... உனக்குப் புடிக்காது.''

''ஏன் நாங்க டேஸ்ட் பண்ணக் கூடாதா உன் லஞ்ச்சை.''

''இல்லை, கொஞ்சம் காரமா இருக்கும்.''

''பரவாயில்லை.''

இது வலை. புரிந்தது. புரிந்த பிறகு பயமென்ன? புரியாமல்தானே ஒவ்வொரு முறையும் விழுந்தோம். இப்போது புரிகிறது. போனால் என்ன?''

''வரியா... மாட்டியா?''

''வித் ப்ளஷர்...'' செல்வி பதில் சொல்ல. கிரிஜா புருவம் தூக்கினாள். கதவு சாத்தினாள்.

என்ன கேட்பார்கள்? என்ன சொல்வது. உண்மை யையா? அந்த உண்மையை விடாதே என்கிற பெருமாள் வாசகத்தையா? தன் இயல்பான படபடப்பையா... முகம் மாறுவது பெருமாள் கண்டு பிடிக்கிறார். வைத்தி பார்த்து விடுகிறார், கிரிஜாவும் கவனித்து விடுகிறாள். அவ்வளவு

வேகமாகவா மாறுகிறது என் முகம்? பட்டென்று சொல்லி விடுகிறதா மனசை?

''நார்மலா போங்க வெளியே... பின்னால் குரல் கொடுத்தான். முகம் மாற்றினோம். சாதாரணமாய் வந்து உட்கார்ந்து கொண்டோம். யாருக்கும் எதும் தெரிய வில்லை. இப்போது தெரிந்து கொள்ள விசாரிக்கிறார்கள். சாப்பிடக் கூப்பிடுகிறார்கள். கேள்வி கேட்டுத் துளைக் கிறார்கள்.

நார்மலாய் இருக்க வேண்டும். அதாவது படபடப்பு காட்டாது இருக்க வேண்டும். 'படபடப்பு விடாதீங்க.'' என்றாரே பெருமாள்.

அது வேலையில் வெளியே அல்ல. கண்ணாடி முன்னே பட்டாம்பூச்சி படபடத்தால் வழி கிடைக்காது. முட்டி முட்டி முறுடித் தலைதான் வீங்கும். வழியிருக்கிற இடத்தில் படபடத்தால்தான் பறக்க முடியும்.

இது வலை. கண்ணாடி வலை. முகம் பார்த்துக் கண்டு பிடிக்க முடியுமா என்கிற வலை. முடியாது தோழி. நார்மலாக இருக்க எனக்குத் தெரியும். அஞ்சு நிமிஷம் முன்னாடி கத்துக்கிட்டேன், இனி நார்மல், நீ என்ன கேட்டாலும் நார்மல்!

''இது எங்க வீட்டு வாழைக்கா கறி. உனக்குப் புடிக்குமா தெரியலை. டேஸ்ட் பண்ணு.''

''புளிக் குழம்பு பிரமாதம். காரம் கொஞ்சம் அதிகம். இது ஒரு மாதிரி வத்தக் குழம்பு இல்லை... நீ சமைப்பியா செல்வி?''

செல்வி சிரித்தாள்.

''நீங்க மட்டன் சாப்பிடுவீங்களா?''

''ம்ம்... நல்லா.''

"வெளியே சொல்லாத கிரிஜா கூட சாப்பிடுவா."

"ஏன் சாப்பிட்டால் என்ன?... வாட்ஸ் ராங்."

"ஒண்ணுமில்லை, இப்பதான் முக்காவாசி ஐயருங்க சாப்பிடறாங்களே."

"ரொம்பதான் வாராதீங்க. எங்க பிரதர் யூரோப்ல செட்டில்ஆனவர். அவரு வர்றபோது நான்வெஜ் பத்தி சொல்வாரு. சாப்பிடு. நல்லதும்பாரு. அப்படியே பழக்க மாயிடுச்சு. சிக்கன் மட்டும் சாப்பிடுவேன் காரமில்லாத இருந்தா."

"பெருமாள் என்ன பேசினார் செல்வி."

"என்னவோ பேசி..." தடேரென்று இழுத்தாள். சறுக்க இருந்தவள் விநாடி நேரத்தில் சமாளித்துக் கொண்டாள்.

"திட்டினாரு."

"எதுக்கு?"

"எப்ப முடிக்கப் போறீங்க கார்டெக்ஸான்னு?"

"பென்சில் திருடினது யாருன்னு கேட்கலையா?"

"கேட்டாரு. தெரியாதுன்னு சொன்னேன். என்ன பார்ட்ஸ் பேரெல்லாம் மனப்பாடமாயிருச்சான்னாரு. ஓரளவுக்குத்தான் தெரியும்னேன். கீழ ஸ்டோர்ல வேலை கத்துக்கறீங்களான்னாரு. இல்ல சார், இங்கேயே நல்லா வேலை தெரிஞ்சுக்கறேன்னேன். ஏனோதானோன்னு இருக்காதீங்க... கிரிஜா பாருங்க. கஷ்டப்பட்டு வேலை செய்வாங்க. இப்ப தேவராஜன் அளவுக்கு ஸ்பேர் பார்ட்ஸ்ல எல்லாம் தெரியும். கம்பெனியோட தூண்... அப்படீன்னெல்லாம் சொன்னாரு."

"ஆமா... தேவராஜனையும் என்னையும் விட்டா இந்தக் கம்பெனிக்கு நாதி கிடையாது."

"ஏன், மங்களா பார்க்க மாட்டாங்களா?"

''மங்களம் இப்பதானே ட்ரெய்ன் ஆனா... என் அளவுக்குத் தெரியாது.''

''அதான் அத்தனை பாராட்டினாரு.''

''அப்புறம்?''

''கிரிஜாவைக் கூட ப்ரமோட் பண்ணப் போறேன்.''

''என்னது ப்ரமோஷனா?''

''ஏதோ ஸ்டாக் செக்கிங் சூப்பர்வைஸர்னு...''

''ஏய்... கங்கிராட்ஸ்'' கிரிஜாவின் கையை மங்களா குலுக்க, பெருமிதம் அங்கே பொங்கி வழிந்தது. செல்வியும் கலந்து கொண்டாள். மனசு வேறாய், முகம் வேறாய் இருந்தாள். வலையில் விழாமல் தப்பித்த முதல் தாவல் சந்தோஷமாய் இருந்தது.

23

யாரோ துரத்திக் கொண்டு வருவது போல் ஒரு காற்று அண்ணா சாலை நெடுக ஓடித் தெருப் புழுதியை ஜனங்கள் மீது வீசிற்று. வெளிர்த்து இருக்கும் மாலை நேரம் சட்டென்று மாறி இருட்டாயிற்று. காற்று பண்ணிய கலவரத்துக்கு சூரியன் பயப்பட்டது போல் இருந்தது.

இன்னிக்கு நேரே தியாகராய நகர் போனா என்ன...? போய் அந்தப் பள்ளிக்கூடத்துல ஈவினிங் காலேஜ் பத்திக் கேட்டா என்ன... எந்த யுனிவர்ஸிடி... என்ன அட்ரஸ்... எவ்வளவு கட்டணும். என்ன சப்ஜெக்ட், எப்ப க்ளாஸ்... கேட்டா என்ன... இருட்டுதே... மழை வருமா...? ராத்திரி தானா வரும். மேகமே காணமே.

செல்வி நகர்ந்து வேறு பஸ் ஸ்டாண்ட் போனாள். கூட்டம் ஏகமாய் இருந்தது. வாசல்படியில் டிக்கெட் வாங்கினாள். உள்ளே நகர்ந்து நாலு பெண்களுக்கு நடுவே நின்று கொண்டாள். சர்ச் பார்க்கில் இன்னும் கொஞ்சம் கும்பல் முட்டியது. ஸ்டாப்பிங்கில் நின்ற ஆள் பஸ் தகடு தட்டி, 'முன்ன போங்க... முன்ன போங்க' என்று கத்தினான். செல்வி நகர்ந்து முன்னேறினாள். பஸ்ஸின் நடுப்பகுதிக்குப் போய் நின்று கொண்டாள் பஸ் நுங்கம் பாக்கம் திரும்பியது.

''ஏங்க இது தி.நகர் போகாதா?'' குனிந்து ஜன்னல் வழியே தெருவைப் பார்த்தாள். யாரோ பின்னால் அழுந்த உரசினார்கள்.

''போவும், வள்ளுவர் கோட்டம் வழியா போவும்.'' பஸ் இடதுபுறம் திரும்பியது. அதிகம் குலுங்கியது. கோடம் பாக்கம் பாலம் அருகே மறுபடி திரும்பியது. திருப்பம் எல்லாம் ஒரு ஆள் தேவையில்லாது மேலே உரசுவது புரிந்தது. திரும்பிப் பார்த்தபோது நடுத்தர வயது ஆள் என்பது தெரிந்தது. நகர்ந்து முன்னேற அவனும் நகர்ந்தான். திரும்பிப் பக்கவாட்டமாய் நிற்க, தூக்கி நிற்கும் புஜத்தில் முகம் உரசினான். இடது கையில் உள்ள ஹிண்டு பேப்பரால் மார்பில் இடித்தான். 'ச்சீ' என்று சொல்லி அதட் டினாள். சிரித்தான், 'முன்னாடி போயிடுங்க' என்றான். முன்னே நகர, சரியாய்ப் பின் பக்கம் நின்று கொண்டான். பஸ் வேகம் குறைந்த போது மேலே சாய்ந்தான். எட்டி அவள் இடுப்பு வழியே கை நீட்டி முன்சீட்டுக் கம்பியைப் பிடித்துக் கொண்டான். செல்வி பையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். பனகல் பார்க் வர இடித்துக் கொண்டு இறங்கினாள். அவனும் பின்னால் இறங்கினான். நாலடி இடைவெளி விட்டுப் பின்தொடர்ந் தான். மரங்கள் அடர்ந்த சாலையில் செல்வி வேகமாய்

நடர்ந்தாள். பார்க் தாண்டிப் போனதும் திரும்பிப் பார்த்தாள். அவன் சிரிப்பது தெரிந்தது.

வர மாதம் கிளாஸ் ஆரம்பிக்கும். பணம் கட்டப் பத்து தேதி இருக்கிறது. இரு நூற்று நாற்பது ரூபாய் காசு அல்லது செக் மைசூருக்கு அனுப்ப. உடனே தபாலில் பாடங்கள் வரும்.

பி காம் ஸீட் கிடைப்பது கஷ்டம். ட்ரை பண்ணலாம். போர்ஷன்ல அதிகம். தினம் படித்தால் புரிபட்டுவிடும். யார் படிக்கிறார்கள். முதல் மாசம் ஜரூராக இருக்கும். அப்புறம் சகலருக்கும் உற்சாகம் குறைந்து விடும். ஆறிலிருந்து எட்டரை வரை கிளாஸ்.

உள்ளே விவரமாய்த் தகவல் தந்தார்கள்.

''லேடீஸ் நிறையப் பேர் வருவாங்களா...?'' தயங்கி செல்வி கேட்டதற்கு ''லேடீஸ்தாம்மா ரெகுலரா வராங்க... பாஸ் பண்ற பர்ஸண்டேஜும் அவங்கதான் அதிகம்.''

வெளியே வந்த போது வகுப்பில் சேர்ந்து விட்டது மாதிரி உற்சாகம் வந்தது. குறுக்கு வழியாக மாம்பலம் டெர்மினல் நோக்கி நடக்க, பின்னால் காலடிச் சத்தம் கேட்டது. பஸ்ஸில் வந்த அதே ஆள். திக்கென்றது செல்விக்கு.

''ஹோட்டலுக்குப் போகலாம் வாரியாடி...'' பல் கடித்துக் கொண்டது போல் அடிக்குரலில் பேசினாள். கூடவே நடந்து வந்தான்.

செல்வி சட்டென்று நின்றாள். அவன் நடந்து, முன்னேறும் வரை காத்திருந்தாள். உடம்பு நடுங்கியது. தொடைகளில் ஒரு பய விதிர்ப்பு ஓடிற்று. வயிறு கலங்கி வேதனைப்படுத்தியது. செல்வி வேகமாய் வந்த வழியே எதிர்பக்கம் நடந்தாள். வியாபாரம் முடிந்துகாலி வண்டி

தள்ளிக் கொண்டு போன கிழவனும் கிழவியும் எதிர்பட நின்றாள். அவர்கள் பின்னால் நடந்தாள்.

"என்னம்மா?" கிழவி கேட்டது.

"முன்னால போற ஆல் வம்பு பண்றான்."

"யார் அது?" கிழவன் குரல் கொடுத்தான். வண்டியை வேகமாய்த் தள்ளிக் கொண்டு முன்னேறினான். தொடர்ந்து வந்தவன் வெகு தூரம் முன்னே போய் இடது பக்கம் திரும்புவது தெரிந்தது.

"இந்த ரோடு பக்கம் வராதே. இந்த இடமே மட்டம். வூட்டுக்கு வூடு ப்ராத்தலு, பங்களா மாதிரி இருக்கும் வெளியே. உள்ளே அசிங்கம்."

"அப்படியா?"

"மெயின் ரோட்டோட போய் மெயின் ரோட்டோட வா. சந்துல நுழையாத."

"பஸ் கிட்டன்னு வந்தேன்."

"கிட்டதான். ஆறுமணிக்கு மேல வேற நடமாட்டம்."

இந்தத் தெரு என்று நினைத்து விட்டானா? அண்ணா சாலையிலிருந்தல்லவா தொடங்கினான், கேஸு என்று நினைத்து விட்டானா...? கேஸ் மாதிரி இருக்கிறேனா? முப்பத்தாறு வயசு இருக்குமா அவனுக்கு. ஏன் அலை கிறான்?

"ஹோட்டலுக்குப் போகலாம் வரியாடி?"

ச்சீய்... ஏன் இடதும் வலதுமாய் அலைந்தேன்? எதற்குப் பயந்து வயிறு கலங்கினேன். 'போடா நாயே' என்று ஏன் பேசாது விட்டேன். எதற்குப் போனாலும் எந்தப் புதிய முயற்சி எடுத்தாலும் ஏதாவது ஒரு உறுத்தல், தடங்கல் ஏன் வருகிறது? படபடப்பாகவே ஏன் வாழ்க்கை இருக்கிறது?

உள்ளே போய் விவரம் கேட்ட சந்தோஷத்தையும் ஐந்தே நிமிடத்தில் அழித்தானே பாவி, தினம் ராத்திரி எட்டரைக்கு இப்படித்தானே போக வேண்டும். இந்த வழியாகத்தான் தானே வர வேண்டும். மடக்கி யாராவது கை வைத்தால் என்ன செய்வது? சினிமாவில் வருவது போல் காரில் தூக்கிக் கொண்டு போனால் என்ன ஆவது?

''இதுக்குதாண்டி சொன்னேன். வேளை கெட்ட வேளைல தெருவுல நடக்காதன்னு. தனியா பொம்பளை போனா பின்னாலதான் வருவான். கூப்பிடுவான். பத்தி னின்னு எழுதியா ஒட்டியிருக்கு உன் நெத்தில.'' அண்ணி கெக்கலிப்பாள்.

எப்படி வித்தியாசப்படுத்தப்படும்? பத்தினியோ பரத் தையோ... எதால் வித்தியாசப்படுத்தப்படும்?

''எல்லாக் கழுதைகளும் ஒரே மாதிரிதான் உடுத்த றாளுவ. பட்டை பிராவும், முதுகு திறந்த ரவிக்கையும் இடுப்புக்குக் கீழே புடைவையையும் தலைப்பை ஒத்தையா விடறாளுங்க... இல்லை... மடிப்பு வைக்கறேன்னு ஒரு பக்கம் முழுவதும் காமிக்கிறாளுங்க... பார்த்தா கூப்புடத் தான் தோணும்.'' -அண்ணி எகத்தாளம் செய்வாள்.

என்னிடம் தவறிருக்கிறதா? இன்று உடையில் ஏதாவது மாறுதலா...? எப்பவும் போடுகிற ட்ரஸ்தானே?

''ஹோட்டலுக்கு வாரியாடி...'' தப்பு என்னிடமா அவ னிடமா? அவனுக்கு வீடு, வாசல் இல்லையா? அத்தனை நேரம் காத்திருந்து பின் தொடர்வதுதான் வேலையா? கேஸு என்கிற பெண் பிள்ளையைக்கூட அப்படிக் கூப்பிட முடியுமா?

அடுத்த வருஷம் காலேஜ் பார்த்துக் கொள்ளலாமா? வெறும் ஆங்கிலம் மட்டும் தபாலில் படிக்கலாமா? நாளைக்கு மறுபடியும் வருவானோ?

வரட்டும், பஸ் ஏறட்டும், ஒரு மிதி. கட்டை விரல் கூழாகிற அளவு ஒரு மிதி மிதித்துவிடுகிறேன். எதிர்த்தால் தான் பயப்படுவார்கள். பயந்தால்தான் பின் தொடர் வார்கள். இவனுக்குப் பயந்து ஏன் ஓட வேண்டும்?

அண்ணனிடம் கேட்க வேண்டும். இரவு சாப்பாடு முடித்து மெல்லப் பேச்சு ஆரம்பிக்க வேண்டும். அண்ணிக் குத் தெரியாமல் பேச வேண்டும்.

'அண்ணே... நான் கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ் சேரப் போகிறேன்.' என்று துவங்க வேண்டும். 'தபாலில் தானே படிப்பு? படியேன்' என்று சொல்லும். பிறகு கிளாஸ் பற்றிப் பேச வேண்டும்.

மாம்பலத்தில் பஸ் பிடித்துத் திரும்பும்போது ஏழரை மணி ஆகிவிட்டது.

''என்ன செல்வி... இத்தினி நாழி?'' அண்ணன் வாச லுக்கு வந்தார். சட்டென்று ரேழியில் நின்றுகேட்டார். ''கடைக்குப் போன் பண்ணலாம்னு கிளம்பினேன். வந்துட்டே ஏன்... பஸ் பிராப்ளமா?''

''இல்லண்ணே... வெளியே போயிட்டு வரேன்.''

''வெளியேன்னா?''

''தி.நகர் வரைக்கும்.''

''சிநேகிதி வீட்டுக்கா?''

''இல்லை, தபால்ல மேல படிக்கலாம்னு விசாரிக்கப் போனேன்.''

''சொல்லிட்டுப் போவக் கூடாதா?''

''ஸாரிண்ணே.''

''என்னவோ ஏதோன்னு ஆயிடுச்சு, போ, போய் முகம், கை, கால் கழுவு.''

முகத்தில் ஜலம் அடித்து அலம்பிய போது உடம்பு படபடப்பு குறைந்தது.

''பெரிய தம்பியாண்டான் வரானாம். லெட்டர் போட்டுருக்கு.''

''ஹைய்... அண்ணனா... துபாய்லேருந்தா...? எப்ப?''

''வர வாரம், வேற இடம் வேலை மாறிட்டானாம். மறுபடி வேலைக்குச் சேர்றதுக்கு இரண்டு மாசம் டைம் வாங்கிட்டு வரானாம்.

''முகம் மறந்து போச்சு எனக்கு.'' ஈரக் கைகளோடு நீலக் கடிதம் பிரித்துப் படித்தாள். அண்ணனுக்கு எழுதப்பட்டிருந்தது. முடிந்தால் விமான நிலையம் வரவும் என்று. விமானம் பெயர், எண், வரும் நேரம் எழுதியிருந்தான். தேதி சொல்லியிருந்தான். செல்வி படிப்பு முடிந்ததா என்று கேட்டிருந்தான்.

சகல துக்கமும் போய் சந்தோஷம் வந்தது. எல்லாரையும் கேட்டதாகச் சொல்லவும். அடிக்கடி கடிதம் எழுதாததற்கு மன்னிக்கவும்' என்று முடித்திருந்தது.

''போலாமாண்ணே, ப்ளேன் வர்றபோது?''

''போவோம். ராத்திரி ஒன்பதரைக்கு வரதாமில்லை. பாம்பேல இறங்கி வேற ப்ளேன் புடிச்சு வரான்... போய்க் கூட்டிக்கிட்டு வரலாம். எங்க போணும். எப்படிப் போணும்னு தெரியலை?''

''கேட்டுட்டு வரேன் ஆபீஸ்ல. போறபோது பஸ்ல போயிடுவோம். வர்றபோது டாக்ஸில வந்துடுவோம். எதுனா வாங்கிட்டு வருமா?''

''எழுதலை, எழுத மாட்டான். போய் வரவங்க எல்லாரும் டி.வி. பொட்டி எடுத்தாறாங்க. இவன் என்னா கொண்டாறானோ?''

"கொண்டாந்து பாதிப் பேர் வித்துடறாங்க."

"எதுக்கு விக்கறது? நமக்கு வேணாமா?"

"எதுக்கு டி.வி. எனக்கு மணி எட்டாவது வர்றதுக்கு, உனக்கு ஆபீஸ் சரியா இருக்கு. யார் பார்க்கறது டி.வி.?"

"ஏன் அண்ணி பார்க்கும். வீட்லயே அடைஞ்சு கிடக்கறதுக்கு டி.வி. சௌகர்யம். நமக்கு வச்சுக்க லாண்ணே."

அண்ணி திரும்பிப் பார்த்து விட்டு, குத்துவிளக்கை அழுத்தித் துடைத்தாள்.

"தபால்ல படிக்கப் போறேன்னியே, என்ன அது?"

"பி.காம்."

"எத்தினி வருஷம்?"

"அதே மூணு வருஷம்."

"நிறைய துட்டு ஆவுமா?"

"ஜாஸ்தி இல்லை. பெருமாள்தான் மேல படின்னாரு. ஒரு பெரிய வேலை முடிச்சுக் கொடுத்தேன். ஒரு திருட்டு..."

"திருட்டா?"

"ஒண்ணுமில்லை."

"சொல்லும்மா."

"பென்சில் திருடிட்டான் ஒருத்தன், அவர் டிராயரைத் திறந்து, நான் பார்த்துட்டேன். கூப்பிட்டு விசாரிச்சாரு... யாரு... எதுன்னு."

"சொல்லிட்டியா?"

"கூட்டமா இருந்தபோது சொல்லலை. தனியே கூப்பிட்டுக் கேட்டாரு சொல்லிட்டேன்."

"வம்பு வரப்போவுது செல்வி. உனக்கேன் கோள் மூட்ற வேலை?"

"மடக்கி மடக்கி கேட்டாரு வேற வழியில்லை நாளை லேர்ந்து ஸ்டேஷனரி இன்சார்ஜ் நானுன்னிட்டாரு."

"தகராறு இடமா இருக்கே... என்னன்னமோ சொல்ற."

"நான் தப்பு பண்ணலையே?"

"மத்தவங்க தப்பும் நம் மேலவிழாத இருக்கணும் செல்வி. இதான் கஷ்டம், வெளியில் வேலைக்குப் போறதுல."

"இதுக்குப் பயந்தா முடியாது அண்ணே."

"நான் பேசட்டுமா பெருமாள் கிட்ட?"

"என்ன பேசுவ... இது என் வேலை. எனக்குத் தெரியும் எப்படி சமாளிக்கிறதுன்னு.

"வேலைக்குப் போறதுல ஒருதெளிவு வந்துடுச்சு உனக்கு. சந்தோஷமா இருக்கிறது தெரியுது. அதேசமயம் சரியா நடக்கணுமே எல்லாம்னு கவலையும் வருதே."

"அண்ணே... மேல் படிப்பு படிக்கட்டா?"

"தபால்லதானே."

"தபால்தான். கொஞ்ச நாள் கிளாஸ் போக வேண்டி இருக்கும். புரியாதது கேட்டுக்கலாம்."

"அது எங்க?"

"தியாகராய நகர்."

"எப்ப?"

"சாயங்காலம். பஸ் ஏறி கிளாஸுக்குப் போயிட்டு நேர வந்துடுவேன்."

"இந்நேரம் ஆவுமா வர?"

"இன்னும் கொஞ்ச நேரம் ஆவும்."

"எத்தினி?"

"ஒன்பதுக்கு உள்ளே நுழைஞ்சுடுவேன்."

"மவுண்ட்ரோட்ல பஸ் புடிச்சு டி.நகர் போய் பிறகு, அங்கு பஸ் புடிச்சு மந்தவெளி வரணும். லீவு நாள்ல கிளாஸ் வச்சுக்கக் கூடாதா?"

"சண்டே கிளாஸ் உண்டு முழுக்க."

"தினம் ராத்திரி ரெண்டு மணி நேரம், ஞாயிறு முழுசாவா?"

"ஆமாண்ணே."

"எதுக்கு வந்திருக்கிற. அப்படிப் படிச்சு என்ன செய்யப் போறே?"

"படிக்கணும்."

"எதுக்கும்மா?"

"நம்ம வீட்ல எந்த லேடீஸும் படிக்கலை. நான் படிக்கணும்."

"படிச்சு."

"நிறைய சம்பாதிக்கணும்."

"சம்பாதிச்சு?"

"எல்லாம்தான்."

"எவனுக்கோ வாழ்க்கைப்பட்டு வேற இடத்துக்குப் போற பொண்ணுக்கு இத்தனை அலைச்சல் தேவை தானா?"

"தேவைதான்."

"ஏன் செல்வி... இந்தப் படிப்புல என்ன லாபம்?"

"எனக்குப் பொறக்கறதை என்னைவிட நல்லாப் படிக்க வைக்கலாமில்லையா? பெரிய உத்யோகம் போக வைக்கலாமில்லையா? எனக்கு நாலு வார்த்தை இங்கிலீஷ் தெரிஞ்சா, என் தலைமுறைக்கும் முன்னுக்கு வர்றதுக்கு

சௌகர்யம் இல்லையா? என் புள்ளைங்க ஐ.ஏ.எஸ்... ஐ.பி.எஸ். ஆவாதா... ஆம்பளை எஸ்.எஸ்.எல்.சி. பொம்பளை எட்டாவது வரைன்னு எத்தினி தலைமுறை இருக்கறது?''

''இருந்தவங்க என்ன அழிஞ்சு போயிட்டாங்களா?'' அண்ணி குரல் கேட்டது.

செல்வி கோபமாகத் திரும்பினாள்.

24

மனிதன் கண்டு பிடித்த ஆயுதங்களில் மிகக் கொடூரமான ஆயுதம் வார்த்தைதான். உடலுக்கு ஊறு செய்வது, உயிரைப் பறிப்பதுமான ஹிம்சையை விட மோசமானது. மனித நம்பிக்கையைக் குலைத்தல் துப்பாக்கி ரவை வயிற்றைத் துளைத்த போதிலும் அழுத்திக் கொண்டு பிழைத்து விடுவோம் என்ற நம்பிக்கையோடு ஓட முடியும், எறிகுண்டு வெடிக்கும் போதும், குப்புறப்படுத்து முழு நெஞ்சும் காயமடையவில்லை என்று தப்பிக்க முடியும். நாளை விடியும் என்கிற நம்பிக்கையைக் குலைக்கிறபோது தாங்கொண்ணா வேதனை வருகிறது, திக்பிரமை வருகிறது. பயம் கௌவிக் கொள்கிறது. வலியை விட பயம் பெரிய வேதனை, மஹா ஹிம்சை, அவநம்பிக்கை. பெரிய சித்ரவதை. அந்தச் சித்ரவதை வன்மம் வளர்கிறது. 'எனக்கா விடியாதுன்ற, உன்னை விடியாம பண்றேன் பார்' என்று ரௌத்திரம் பொங்குகிறது.

''நாங்க தலைமுறை பத்திப் பேசறோம்'' செல்வி சுள்ளென்று அண்ணியை நோக்கிச் சொன்னாள். திருப்பித் தாக்கினாள்.

தாக்குதல் அண்ணிக்குப் புரியவில்லை.

"நானும் அதான் சொல்கிறேன்."

"தலைமுறை பத்திப் பேச உனக்கென்ன யோக்கியதை இருக்கு? உன் வரைக்கும் துண்ணமா தூங்கினமான்னு இரு, உன் பொறுப்பு அதோட முடிஞ்சு போச்சு."

ஏத்தத்தது.

"என்னடி சொன்ன..."

"இவ ஆண்டு ஆறேழு பெத்து நிமிடத்திடப் பொறந் திருக்கா. நாங்க துண்ணவும் தூங்கவும்தான் பொறந்திருக் கமா?"

"ஆமா."

"ஏன்... நீங்க பதினாறும் பெத்துப் பெருவாழ்வு வாழ்ந் துடறதா காரண்டி கார்டோட வந்திருக்கீங்களோ... ஏன், உனக்குப் பொட்டையன் வாச்சிடமாட்டானா? நீங்க மலடா ஆகமாட்டீங்களா? உனக்கு சிலுப்பிக்கின்னு ஊர் சுத்தணும். அத்தச் சொல்லேன், என்னவோ அதிகாரியா பெத்து வுடறதுக்கே பிறவி எடுத்தவ மாதிரி பேசறியே. உனக்கு மாட்டினவன் பிள்ளைபெற வக்கில்லைன்னா ஆள் மாத்திக்குவீங்க, படிப்பு படிக்கறீங்களே..."

"ஏய்... எருமை... போய் உன் வேலையைக் கவனி."

"ஏன்... என்னை எருமைங்கறீங்க. நானா பை மாட்டிக் கின்னு தெருவுல போறேன். அவ அதிகப் பிரசங்கித்தனமா பேசறா. அதைக் கேட்க உங்களுக்கு தில் இல்ல..."

"எழுந்து மிதிச்சேன்னா..." அண்ணன் நாற்காலி உருட்டி எழுந்திருச்சு. செல்வி தோள் பிடித்து அடக்கினான்.

"மிதி... வந்து மிதி மிதிச்சுக் கொன்னுடு. சொல்லு சொல்லா பட்டுச் சாவறதை விட, ஒரேயடியா மிதிச்சுக் கொன்னுடு ஒண்ணு சொல்றேன், இன்னிக்குக் கூடத்துல

உங்கப்பாரு போட்டோ எதிர நின்னு சொல்றேன். எவளைத் தூக்கித் தலைல வெச்சுக்கிட்டு ஆடறியோ, என்னைஎட்டி உதைச்சுட்டு இந்தப் போக்கத்தவளைக் கொண்டாடறியோ உன் கதி அதோ கதி ஆவப்போவுது பார். நாலு பேர் பார்க்க உன் தலைல இவ கரைச்சு ஊத்திக் தலைகுனிய வைக்கலை, என் பேரு மாத்திக்கிறேன்.

''இப்பதான் விளக்கு வைக்கிற நேரத்துக்கு வர ஆரம் பிச்சிருக்கா. இன்னும் போகப் போக ஊரு அடங்கினதும் வருவா. இரண்டு நாள் தங்கிட்டு வருவா. எவனையாவது கூட்டிட்டு வந்து நிப்பா. அன்னிக்குத் தெரியும். பொண் டாட்டி பேச்சு. கேட்காத போனமேன்னு, அன்னிக்கு நான் பேசறேம் பார். இது நடக்குதா இல்லையான்னு பாரு.''

''தெருவுல போறவல்லாம் தேவடியான்னு நினைப்பு உனக்கு'' செல்வி சீறினாள்.

''நாங்களும் தெருவுலதான் போறோம். வானத்துலயா மிதக்கிறோம் உன்னைப் போல. போனா போன வழி வந்தா வந்த வழி உன்னை மாதிரி ஆடலை. உனக்கு என்னவோ கேடு காலம், ஆடற. இந்தாளுக்குக் கெட்ட காலம், தாளம் போடறான். என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டவங்க உருப்பட்டதில்லை.''

''அடச்சி'' செல்வி நொடித்தாள்.

''நீ சீப்படப் போற, அதுக்குத்தான் இத்தினி பேச்சு நடக்குது இங்க.''

''வாயை மூடு முதல்ல'' அண்ணன் மறுபடி கத்தினார். அண்ணி காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''வேலைக்குப் போக ஆரம்பிச்சு மூணே முக்கா நாழிக் குள்ள ஆளும் பேச்சும் மாறிப் போச்சு. கால் மேல கால் போட்டு உட்கார ஆரம்பிச்சுட்ட. இந்த ஒரு மாசத்துல

என்னிக்காவது விளக்கேத்திருக்கியா? சாமி கும்பிட்டிருக்கியா? இடுப்புல கை வெச்சு நிக்கறியே. நான் பார்க்கலைன்னு நினைச்சியா, வேலை பார்த்தா ஆம்பிளை ஆயிட்டதா நினைப்பா? மீசை வளர்ந்துடுமா? நான் நல்லதுக்குத்தான் சொல்றேன். நாளைக்குக் கட்டிக்கப் போற பொண்ணு நீ. கல்யாணம் காட்சி நல்லபடி நடக்கணும்னா வூட்டோட கிட.''

''முடியாது''

''விட்டுதுடி. இன்னியோட சகலமும் விட்டுது. உனக்கும் எனக்கும் இனிமே எதுவும் கிடையாது எப்படியோ போ.''

அண்ணி விளக்கோடு போனாள்.

அண்ணன் தலை குனிந்து தரை பார்த்துக் கொண்டிருந்தார். செல்வி சுவரோரம் சாய்ந்து உட்கார்ந்து யோசித்தாள்.

என்ன உறுத்துகிறது இவளுக்கு? தான் ஒரு நல்ல தலைமுறை வளர்க்கப் போகிறோம் என்று சொன்ன செய்தி ஏன் கோபமாக்கிற்று? இல்லாத குறையா, இது நடக்காது என்கிற எண்ணமா? நடந்துறப்போகுதே என்கிற பயமா? இது அறியாமையா, ஆங்காரமா? கட்டுப்படு. கட்டுப்படு என்று ஏன் கத்துகிறாள், வால் அறுந்த நரி மற்ற நரிக்கு அறுத்துக் கொள்ளச் சொல்லி செய்த உபதேசமா?

'ஹோட்டலுக்கு வரியாடி' வெளியே ஒருவன் வழி மறிக்கிறான். கெட்டுக் குட்டிச்சுவரா போயிடுவ, உள்ளே ஒருத்தி தடுத்து நிறுத்துகிறாள். ஏன் ஹிம்சிக்கிறார்கள்.... எதனால் மடக்குகிறார்கள் இப்படி? ஏன் மிரளுகிறார்கள்.

இது புதுசு, இது மாறுதல். இது வழக்கமில்லாத வழக்கம். இதன் பாதை தெரியவில்லை. இதன் முடிவு புரியவில்லை இதனால்தான்?

பஸ்ஸில் நெருக்கமாய் கை உயரத் தூக்கி இடுப்புக் கரவும் முலைச் சரிவும் நெருக்கமாய்ப் பார்க்கும்படி பெண்

தெரிய, கேஸோ என்று தோன்றுகிறது. முட்டினாலும் முகம் சுளிக்கிறதே தவிர, முரண்டு பண்ணவில்லை. தொட ருவோம் என்று தோன்றுகிறது. இது புதுசு, வழக்கமில்லாத வழக்கம் இந்த அண்மை, பெண் அண்மை- மிரட்சி தருகிறது அவனுக்கு.

இவளுக்குப் பயம் இப்படி உடுத்திக்கிட்டு போவுதே. எதுக்கு என்கிற பயம், இத்தனை நறுவிசு ஏன் என்கிற கேள்வி. இது அதுக்குத்தானா என்கிற அச்சம். அதையும் தவிர எனக்கு இப்படி முடியவில்லையே... இப்படி இவள் வயசில் நானில்லையே என்கிற பொறாமை.

''நாளைலேர்ந்து அண்ணி நீயும் கிளார்க்.''

''ஐயோ எனக்கு வேணாம்மா.''

''வாயேன்.''

''நிசமாவா?''

''வா வந்து வேலை பாரேன்.''

''தப்பா நினைக்க மாட்டாங்க?''

''ஒரு தப்பும் இல்லை வா.''

''இப்படியே வா?''

''இன்னும் கொஞ்ச சுத்தமாய் வா.''

வருவாள். நாலு நாள் வந்த பிறகு அவளும் மாறுவாள், ''கோட்டா சாரிக்கு கஞ்சி போடணுமா?'' கேள்வி கேட் பாள். இவளுக்கு வாய்ப்பே இல்லை. வழியே இல்லை. அதான் கூச்சல். பெருமூச்சு புழுக்கம். என்ன செய்ய... தினம் தினம் இப்படி ஆட்களைச் சந்தித்து மோதி சண்டை யிட்டு...

போ... போ... மேலே மேலே பற...பற இதுதான் வாழ்க்கை. இதுதான் நியதி இங்கே. மாறுதல் தரும் பிணக்கு இது. மாறுதல் நேரத்து மயக்கம் இது. உனக்கு

மயக்கமில்லை. உன் எண்ணம் தொலை தூரம். உன் வழி நெடும் பயணம், பற பற, மேலே... மேலே...

"அண்ணே."

"சேர்ந்துடு செல்வி."

"அண்ணே."

"அண்ணி பேசினது ஞாபகம் வச்சுக்கிட்டுப் போய் வகுப்புல சேர்ந்துடு. நாம மாறணும். நாம வளரணும், நல்ல பேச்சு இது. உலகத்தில் எல்லார் போல நாமும். நம்ம வீடும் இருக்கணும். சரிதான் அது. ஆனா சந்தி சிரிச்சுடப் படாது, உன் தலைமுறை வேற செல்வி. நீ போய்ப் படி. உன் மேலே நம்பிக்கை இருக்கு எனக்கு..."

"அண்ணே காசு... இருநூத்தி நாப்பது."

"நான் கட்டறேன்,"

"பெருமாள் தரேன்னுருக்கார்."

"கேட்காத. கொடுத்தா வாங்கிக்க. அண்ணன் சரின்னு சொல்லிடுச்சுன்னு சொல்லு."

"ரொம்ப தாங்க்ஸ் அண்ணே."

"படிப்பு எதுக்கு உபயோகம் செல்வி?"

"ஒரு நிதானம் வரும் அண்ணே."

"அது வரட்டும்."

"புரியலை."

"நாம பேசற ஒவ்வொரு சொல்லும் எதுக்குச் சொன்னோம், யாரைச் சொல்றோம், இது அவசியம் தானான்னு யோசிக்கறதுதானே நிதானம்."

"ஆமாண்ணே."

"அது வரட்டும் உனக்கு. போய்ச் சாப்பிட்டுப்படு" அண்ணார் எழுந்து உள்ளே போய்க் கட்டிலில் சாய்வது தெரிந்தது."

தான் அடிக்கிறபோதே அண்ணன் மேலும் அடி விழுந் திருப்பதை செல்வி உணர்ந்தாள். 'கடவுளே' என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

"ஸ்டேஷனரி நீயா... உன் இன்சார்ஜா... சொல்லவே யில்லையே எனக்கு" கிரிஜா அவசரமாய்க் கேட்டாள்.

"தெரியாதே" செல்வி அப்பாவியானாள்.

"அவரு சொல்வாரு."

"எவரு?"

"பெருமாள். இனிமே நீதான் ஸ்டேஷனரின்னு."

"அப்படியா, இரு கேட்கிறேன்" எழுந்தாள்.

"வேணாம். உன்னைவிட சீனியர் மங்களம்... கல்யாணி... எப்படி உன்கிட்ட, நீ கேட்டியா."

"இல்லையே... எனக்கு எதுக்கு ஸ்டேஷனரி, இது சலான் அடுக்கற வேலை."

"கேட்காதே... இந்தா லிஸ்ட் இதுல கையெழுத்து போடு."

"என்ன லிஸ்ட்."

"ஸ்டாக். ஸ்டேஷனரி ஸ்டாக்."

"என் ட்ராயர்ல இருக்கு அங்கேயே இருக்கட்டுமே."

"வேணாம்மா. நான் மாட்டேன்னு சொல்லிடறேன்" செல்வி பெருமாள் அறை நோக்கி நடந்தாள்.

"ஏய் இரு... இரு... என் சொல்லப் போற"

"அவங்க டேபிள்ல ஸ்டேஷனரி. என்கிட்ட ஸ்டாக் லிஸ்ட். எப்படி சரி வரும்னு கேட்கறேன்."

"ஏய்... நான் தான் சொன்னேன், என்கிட்டயே இருக் கட்டும்னு. வேணும்னா நீ கொண்டு போய்த் தனியா வச்சுக்க."

"கல்யாணி, இந்த காலி டேபிள் கீ தரீங்களா... இப்ப இதுல சலான் இல்லை, காலியா இருக்கு. ஸ்டேஷனரி வச்சுக்கட்டா?" கல்யாணியிடம் கீ வாங்கினாள். உள்ளே பழைய நியூஸ் பேப்பர் பரப்பினாள். கொண்டாந்துடுங்க எல்லாத்தையும்?"

"வந்து எடுத்துக்கோ, நீயே. இதுல கையெழுத்து போடு."

செல்வி பேப்பர் வாங்கி மேஜையில் வைத்தாள். கிரிஜா அறைக்குப் போய் ஸ்டேஷனரி எடுத்து உள்ளே அடுக்கினாள்.

"கையெழுத்துப் போடலியா?"

"செக் பண்ணிட்டுப் போடறேன்."

ஸ்டாக்குக்கும், லிஸ்ட்டுக்கும் பல வித்தியாசங்கள் இருந்தன. இரண்டு எரேசர்கள், நாலு பென்சில், எட்டு ரீஃபில், ஐந்து பேப்பர் வெயிட் இரண்டு ஸ்டாம்ப் பேட், மூணு பால்பாயிண்ட் பேனா குறைந்தது.

"கையெழுத்துப் போடட்டுமா?"

"போடு."

சகலமும் எழுதி, 'லெஸ் அபெவ், ஐட்டம்' என்று கையெழுத்திட்டாள்.

கிரிஜா கடுப்பானாள்.

"இதை எழுதித்தான் ஆகணுமா?"

"யெஸ்."

"ஏன்"

"நான் எடுத்ததா ஆயிடக் கூடாதே."

"அப்ப நான் எடுத்தேனா?"

"தெரியாது."

"கெட்டிக்காரி ஆயிட்டியா?"

"கீழ போய் நீட்டின ஸ்டாக்குல நீங்க கையெழுத்து போடுவீங்களா... எண்ணாத இருப்பீங்களா?"

"எண்ணுவேன்... மாட்டிவிட மாட்டேன்."

"நான் மாட்டிவிடலையே."

"இப்படி எழுதியிருக்கியே. என்ன அர்த்தம்?"

"சரி பண்ணிக் கொடுங்க. அடிச்சுடறேன்."

"ஓகே. இன்னிக்கு சாயந்திரம் குறைஞ்சது கொடுத்துடறேன். அடிச்சுக் கொடுத்துட்டுப் போ."

"கொடுங்க. அடிச்சு லிஸ்ட்ல கையெழுத்துப் போடறேன்."

"நீ மாட்டாத போயிடுவியா, என்கிட்ட."

"ஏன் கோபப்படறீங்க?"

"ஓகே. இரண்டு பென்சில் கொடு. கீழே ஸ்டாக் டேக்கிங் போகணும்."

"எண்ணி எழுத பென்சில் எதுக்கு? உங்ககிட்ட பால் பாயிண்ட் இருக்கு, அதுல எழுதுங்க. ரீஃபில் தீர்ந்து போச்சுன்னா காலி ரீஃபில் காட்டிட்டுப் புதுசு வாங்கிக்குங்க.

"அவ்வளவு திமிரா உனக்கு... டிட் ஃபார் டாட்டா?"

"இல்லீங்க. எனக்குப் பட்டது சொன்னேன். பெருமாள் கிட்ட ரிப்போர்ட் பண்ணுங்க. அவரு தரச் சொன்னா பென்சில் தரேன்."

கிரிஜா வேகமாய்ப் பெருமாள் அறை போனாள். வாசலில் தயங்கினாள். திரும்பி வந்தாள். அறைக் கதவு

அறைந்து சாத்திக் கொண்டாள். வேகமாய் உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

செல்வி ஸ்டேஷனரி மேஜையைப் பூட்டி சாவியைப் பர்ஸில் வைத்துக் கொண்டாள். பர்ஸைத் தன் டிராயரில் வைத்துப் பூட்டி சாவியை செயினில் கோத்து கொண்டாள். உள்ளே மனசு பெருங்குரலில் சிரித்தது. சிரிப்பு உடனே அடங்கியது. புலியை இடறியாயிற்று. இனி யுத்தம் நிச்சயம். வீட்டில் ஒரு புலி. இங்கே ஒரு புலி. தெருவில் இனி எத்தனை புலிகளோ, எவ்வளவு ரணமோ தெரிய வில்லை.

25

ஜெயித்ததோடு எந்த யுத்தமும் முடிவதேயில்லை. வெற்றிக்குப் பிறகே யுத்தம் கடுமையாகிறது. எதிரி மூர்க்க மாகிறான். கூர்மையாகிறான் பலப் பரீட்சை முடிந்து போய்ப் பழி வாங்குதல் வந்து விடுகிறது. வெற்றி பெற்றவர் அசரவே முடியாது போகிறது.தோல்வியை விட வெற்றி தான் பெரிய வேதனை என்பது பலருக்குப் புரியவில்லை.

கிரிஜா இரண்டு நாள் வேலைக்குப் பிறகு பாதி ஸ்டாக் எண்ணி முடித்திருந்த பிற்பகல் பெருமாள் கோடௌனுக் குள் நாலு ஆடிட்டர்களோடு நுழைந்தான். கிரிஜா எண்ணியவைகளை அவர்கள் மறுபடி எண்ணினார்கள். சிலவகை பார்ட்ஸ்களில் எண்ணிக்கை குறைந்தது. நல்ல வேளையாய் கிரிஜாவின் எண்ணிக்கை சரியாக இருந்தது. ஆனால் கிரிஜா சகல எண்களையும் பென்சிலில் எழுதி யிருந்தாள்.

"ஏன் பென்சில்ல எழுதியிருக்கீங்க கிரிஜா?"

"அதான் கொடுத்தாங்க ஸ்டேஷனரில."

"பால்பாயிண்ட் இல்லைன்னாங்களா?"

"அப்படிச் சொல்லலை."

"செல்வியைக் கூப்பிடு." செல்வி வந்தாள்.

"ஏம்மா... பென்சில் தந்தீங்களா இவங்களுக்கு."

"இல்லை சார். தரமாட்டேன்னேன். ஸ்டாக் செக் பண்ண பால்பாயிண்ட் போறும்... வேணா ரீஃபில் கேளுங் கன்னேன்."

"என்ன கிரிஜா?"

"இல்லை. அது வந்து... ஒரு வேளை டோட்டல் தப்பு வந்தா, மறுபடி செக் பண்ணி அழிச்சு..."

"நீங்க போகலாம் செல்வி."

"இதுதான் ஸ்டாக்னு செக் பண்ண ஒரு எண்ணிக் கையை அழிச்சு எழுத அவசியம் எப்ப வரும்? ஏன் வரும்? ஏன் தேவராஜன், நிறைய குறையுதோ?"

"ஆமா சார்."

"என்ன காரணம்?"

"கண்டுபிடிக்கணும் சார்."

"எப்படி?"

"சார், நான் மட்டும் இருக்கற கோடவுன் இல்லை. ஆறு பேர், ஏழு பேர் இருக்கற இடம். மேல இருக்கிற ஸ்டாஃபும் வர இடம். நான்தான் பொறுப்பு, காணாமல் போனதுக்கு மறுக்கலை. ஆனா யாரு எதனாலன்னு என்னால சொல்ல முடியலை."

"என்ன செய்யப் போறீங்க?"

தேவராஜன் சிறிது நேரம் மௌனமாய் இருந்தான். "நீங்க என்ன சொல்றீங்களோ... அதும்படிக் கேட்கறேன்."

"பேரிங் வகைகள்தான் அநியாயத்திற்குக் குறைந்தது. அதுவும் கையகல சைஸில் உள்ள பேரிங் அதிகம் குறைந்தது.

பெருமாள் பாக்கிங் செக்ஷனுள் நுழைந்தான். மரக் கட்டைகளை எண்ணினான். பெட்டிகளை எண்ணினான், சரியாக இருந்தது.

பெட்டிகளை எடுத்து முற்றம் போல் உள்ள இடத்தில் அடுக்கச் சொன்னான்.

பெரியசாமி எழுந்து தலையாட்டி விட்டு நிற்க. "இங்கேயே அடுக்கு பெரியசாமி."

"பாக்கிங் வேலை இருக்குங்க."

"பரவாயில்லை அடுக்கு. சேகர், தேவராஜு ஹெல்ப் பண்ணுங்க."

சுவரோரப் பெட்டிகள் நகர்த்த, மூலையில் நாலைந்து கனெக்டிவ் ராடுகள் இருந்தன. ஒரு ஸ்டியரிங் வீல் இருந்தது.

"ஏது இது பெரியசாமி...?"

"தெரியலைங்க..."

"யார் வச்சுது தேவராஜு."

தேவராஜ் பேசாது நிற்க, வழக்கமாய் பெரியசாமி உட்கார்ந்து தேய்ந்து போன மரப் பெட்டியை பெருமாள் காலால் புரட்ட, எட்டு பேரிங்குகள் இருந்தன.

தேவராஜ் ஆவலுடன் எடுக்க, எண்ணிக்கையில் குறைந்த பேரிங்குகள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

"யோவ்... உன் எச்ச புத்தியைக் காட்டிட்டியே..." தேவராஜ் கை ஓங்க, பெருமாள் அவனை விலக்கினான். "போய் கௌண்டர்ல உட்காருங்க."

"பெரியசாமி, வாங்க மேல..." தோளில் கை வைத்து ஆதரவாய் மேலே அழைத்துக் கொண்டு போனான்.

கண்ணாடி அறைக்குள் கதவு சாத்திக்கொண்டு பேசினான்.

நான்கு மணிக்கு ராஜினாமா கடிதம் டைப் அடிக்கப் பட்டது. ஐந்து மணிக்கு பெரியசாமி சம்பள பாக்கி செட்டில் செய்யப்பட்டது. ஐந்தே காலுக்குப் பெருமாள் தன் கைப்பட ஒரு சர்க்குலர் எழுதி அனுப்பினான்.

"நேர்மையாகவும் பொறுப்பாகவும் வேலை செய்ப வர்கள் இருக்கலாம். இதில் சிரமம் இருப்பதாய் நினைப்ப வர்கள் உடனடியாகப் போகலாம். இந்த சர்க்குலர் படித்த பிறகு அலுவலக விதிமுறைகளை மீறுவது தெரியவரின் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

"செல்வி... பூனை மாதிரி இருந்துட்டுப் பெரிய விஷயம் பண்றே... வெரிகுட், வெரிகுட்..." வைத்தி உரக்கச் சொன்னார்.

செல்வி திடுக்கிட்டாள்.

"நான் ஒண்ணும் சொல்லலை சார். ஏன் என் மேல பழி போடறீங்க?"

"பழி சொல்லலைம்மா. பென்சிலால குத்தி விட்டே, இப்போ பொத்துண்டு கொட்டறது. நல்லதுக்குத்தான் நடக்கறதுன்னு வச்சுக்கோ.

"நல்லதோ கெட்டதோ, எனக்கு சம்பந்தமில்லை. என்னால இல்லை."

"உதடு மறுத்தாலும் மனசு மறுகிற்று. 'காட்டிக் கொடுத்து விட்டோமோ' என்கிற கலவரம் வந்தது. 'வேலை போனதுக்கு நாம்தான் காரணமோ, என்கிற துக்கம் கிளர்ந்தது, போதும் போதாதற்கு இந்தக் கிழம்

வேறு 'நீதான்' என்று கூச்சல் போடுகிறது. பாராட்டுகிற மாதிரி சொன்னாலும், உள்ளே விஷயம் இருப்பது தெரிகிறது.

எல்லா மனிதருக்கும் எப்போதும் பயப்பட வேண்டியிருக்கிறது. வழி மறிக்கிற அண்ணி, எது கேட்டாலும் அவசியமா என்று ஆயிரம் கேள்வி கேட்கிற அண்ணன், குத்தலாகவே பேசும் கிரிஜா, அடிவொட்டாய் டயலாக் அடிக்கிற வைத்தி, அதிகாரம் பண்ணும் பெருமாள், சுள்ளென்று இரையும் கிருஷ்ணவேணி, கொஞ்சம் கைவீசி உடம்பு குலுங்க நடந்தால் 'வாரியாடி ஹோட்டலுக்கு' என்கிற வழிப்போக்கன் யாரைப் பார்த்தாலும் பயம் வருகிறது.

'ஹலோ' என்று முகம் மலர, பார்த்த உடனே சந்தோஷம் பொங்க, பேச ஆள் யாராவது உண்டோ? மனசு? சுமை இறக்கத் துணை? கிஞ்சித்தும் பயமே இல்லாது சகலமும் பேச, பரிமாற நட்பு உண்டா? இல்லை. ஏன் இல்லை? தினம் தினம் நாள்தோறும் இருபத்து நாலு மணி நேரமும் பயந்து பயந்து... ச்சீ... ஏன் இப்படி சிக்கலாய் இருக்கிறது வாழ்க்கை? வீடு சுகமோ? அண்ணியோடு மட்டும் சண்டை போட்டு, அண்ணனிடம் கெஞ்சிக் கண்ணீர் வடித்து... இரண்டு பேரை ஜெயிக்கிறதுவிட்டு, வெளியே வந்த எல்லோரோடும் துவந்த யுத்தம் செய்கிறேனோ..."

இதில் பெரிய உறுத்தல். கல்யாணி பேசுவதேயில்லை. இல்லை 'ஆமாம்' என்பது தவிர. வேறு வார்த்தைகள் வராது. 'ஏன் பேசறதில்லை கல்யாணி?' என்று கேட்டதற்கு பேசினா சண்டை. ஸோ... யாரோடயும் பேசறதேயில்லை.' பேசி செருப்படி பட்டு நொந்து போய்ப் பேசுவதே தவறு என்று நின்று விட்டாள் போலிருக்கிறது.

யாரோடாவது பேச வேண்டும். மனசுவிட்டுப் பேச வேண்டும். ஏன் இப்படி என்று ஆராய வேண்டும். அந்த ரைட்டர் வீட்டுக்குப் போகலாமா?... இந்த நாலு மாசம் அவன் புத்தகமே தொடவில்லை. அதனால் என்ன?... போகலாமா?... வழியில் அஜந்தாவில் இறங்கி லாயிட்ஸ் ரோடுக்கு நடந்து...

அந்த வீட்டு நம்பர் மட்டும் இல்லை. சட்டென்று கண்ணுக்குப்படவில்லை. விசாரித்தாள். கை காட்டினார்கள். அச்சகம் இருக்கும் சந்தில் நுழைந்து திரும்பிப் படியேறி... என்ன பேசுவது... வாசற்படி மிதித்ததும் சந்தேகம் வந்தது. எப்படி ஆரம்பிப்பது? அலட்சியப்படுத்தி விட்டால்... சரி, பேசலாம்... நேரம் எங்க... அப்புறம் வாங்க என்று திருப்பி விட்டால். இன்னொரு இழிவு தேவைதானா? திரும்பி விடலாமா?

உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. டெலிபோன் பேச்சு போல் பட்டது. காத்திருந்தாள் ஆறு வயதுப் பையன் உள்ளேயிருந்து புயல் போல ஓடி வந்தான். திரும்பினான் இவளைப் பார்த்ததும் தயங்கினான். அம்மா என்று கூவினான். அந்தப் பெண்மணி வெளியே வந்தான்.

''நான் செல்வி. பிரஸ்ல பார்த்தோமே.''

''எந்த பிரஸ்?''

''லெட்டர் ஹெட் அடிக்க...''

''ஆமாம். உள்ள வாங்க.''

''அவர் இல்லையா?''

''வெளியூர் போயிருக்காரு என்ன விஷயம்?''

''நான் வேலைல சேர்த்துட்டேங்க.''

''வெரிகுட். உங்க அப்பா ஏதோ குழம்பிட்டிருந்தார் இல்லை... இதுபத்தி?''

"அப்பா இல்லீங்க... அண்ணன்."

"எங்க வேலை? என்ன வேலை?"

சொன்னாள். அந்தப் பெண்மணி பரபரப்பாய் ஏதோ காரியம் செய்தபடி கேட்டாள்.

"வெரிகுட். ஏதோ ஒரு அனுபவம், புது அனுபவம் இல்லையா? வீட்ல அடைஞ்சு கிடக்கிறதைவிட வேலைக் குன்னு போறது நல்லா இருக்கு இல்லையா."

"நல்லா இருக்குங்க. அங்கேயும் பிரச்சனை. சண்டை அதான்... அவரைப் பார்த்து ஏன் இப்படின்னு..."

"வேலைக்குப் போனா பிரச்னையே இல்லைன்னு யாராவது சொன்னாங்களா?"

"இல்லை"

"நீங்களா ஏதாவது கற்பனை பண்ணிட்டு, இது நான் நினைச்சு மாதிரி இல்லையேன்னு ஏன் கஷ்டப்படறீங்க?" உள்ளே போய் பீன்ஸ் கொண்டு வந்து ஹாலில் உட்கார்ந்து அரிவாள்மணையில் நறுக்க ஆரம்பித்தாள்.

"யாருமே சிநேகமா, அன்பா..." சொல்லி நாற்காலி விட்டு இறங்கி அவளுக்கு எதிரே உட்கார்ந்து பீன்ஸை இரண்டாய்க் கிள்ளி நார் உறித்து அடுக்கினாள்.

"நல்லாதான் இருக்கும்... எல்லாரும் அன்பா சிநேகமா இருந்தா... இல்லையே... என்ன பண்றது?"

"ஏங்க அப்படி?"

"அது அப்புறம் வர கேள்வி. அன்பா இல்லை. என்ன செய்யறது...? அதோட வாழப் பழகிக்க வேண்டியதுதான். எதிர்பார்ப்பு இல்லாது இருக்க வேண்டியதுதான். இத கொடுன்னு, அத கொடுன்னு எல்லார் கிட்டையும் எப்பவும் கேட்கறதே பழக்கமா போயிடுச்சு. கவர் மென்டோ, கடவுளோ, மனுஷாளோ... எல்லார்

கிட்டயும் ஏதாவது நமக்குத் தரமாட்டாங்களான்னு தோணுது. கவர்மெண்ட் வரி போட்டா கோவம் வருது. அப்பா கட்டளை போட்டா எரிச்சல் வருது. அடுத்தவங்க அதே மாதிரி நம்மக்கிட்ட எதிர் பார்த்தா ஆங்காரம் வருது. வரி கொடுத்தாதானே வசதி வாங்க முடியும்? அன்பு கொடுக்காம அன்பு எதிர் பார்ப்பது.''

''ஐயோ... நான் அன்பா...''

''இல்லை, அன்பா நீங்க இல்லை. அன்பா இருக்கற வங்க குறை சொல்ல மாட்டாங்க. எதிர்க்க மாட்டாங்க. எதிர்பார்க்க மாட்டாங்க. உங்களுக்கு உங்க மேலதான் பிரியம். அது மட்டுமில்லை. மத்தவங்க மேல ஒரு அலட் சியம்.''

''இல்லீங்க.''

''ஆமா, 'ஐயோ செல்வியா வா... வா... வா'ன்னு கூப்பிட்டா, உங்க முகம் மலர்ச்சியாயிடும். 'என்னம்மா பேச தானே... அப்புறம் வா'ன்னா செத்துருவீங்க. இவ ரொம்பத் திமிர் பிடிச்சவன்னு சொல்வீங்க. என் வேலை, என் கவலை உங்களுக்குப் புரியாது. ஏன்... என் மேல உங்களுக்கு அக்கறையில்லை. அன்பில்லை...

''ஆறரை மணி. இப்போ காய்கறி நறுக்கி சமையல் முடிச்சாத்தான் எட்டு மணிக்கு டி.வி. பார்க்க உட்காரலாம். உங்களை எவ்வளவு கொண்டாட முடியுமோ அவ்வளவு தான் கொண்டாட முடியும். நீங்க அதிகம் எதிர்பார்த்தீங் கன்னா...''

''உள்ளே வரலாமா...'' வாசலில் சப்தம் கேட்டது. ஓர் இளைஞன் சிறிய ப்ரீஃப்கேஸுடன் நின்றிருந்தான்.

26

ஷுக்களை அவிழ்த்துவிட்டு உள்ளே நுழைந்தான் அந்த ப்ரீப் கேஸ் இளைஞன். சின்னப் பையன் துள்ளிக் குதித்து அவனிடம் போக, வந்த இளைஞன் வாரிக் கொண்டான்.

''ஸ்பேர் பிளக் இரண்டு கேட்டார். கொண்டு வந்திருக்கேன்'' பெட்டி பிரித்து நீட்டினான்.

''எவ்வளவு?''

''ஹை...''

''ஹென்னா?''

''ஒண்ணுமில்லை. இது மார்க்கெட்டுக்குப் புதுசு ஸேல்ஸ் சாம்பிள். காசு ஏதுமில்லை. ஸ்கூட்டர்ல ஏதோ ரிப்பேர் னாரே?''

''ஆமா, இருக்கு முன் சக்கரத்துல ஏதோ மாத்தணும் னார்.''

''நான் எடுத்துண்டு போட்டா? எப்ப வரார்?''

''வர வாரம். பெரிய ஷெட்யூல். போய்ப் பத்து நாளாச்சு போர் அடிக்கிறது. வீட்ல இருந்தா சண்டை, இல்லாது போனா ஏக்கம். எப்ப வருவார்னுதோண்றது.''

''சண்டை போடவா?''

''ஆமா, வேற யாரோட சண்டை போட முடியும்?''

அவரு சண்டை போடுவாரா?''

''ஏன், அவரு சண்டை போடக்கூடாதுன்னு ஏதாவது சட்டமா?''

"இல்லை... இவரு புஸ்தகத்துல அன்பு, காதல், இதம் எல்லாம் பேசறாரு..."

"சண்டையும் போடுவார். மனுஷ ஜென்மம் தானே... என்ன காசிநாதன், சொல்லுங்களேன் அவரு சண்டை போடுவாரான்னு."

"ஏம்மா என்னை இழுக்கறீங்க. ஒரு தடவை பட்டது போறும்... உங்க சண்டைல என்னை இழுத்து."

"கத்துவாரா?" செல்வி கேட்டாள்.

"நல்லா..."

"ஐயோ... அப்ஸெட் ஆகலையா நீங்க?" செல்வி மறுபடி கேட்டாள்.

"ம்... ஒரு நிமிஷம் உள்ளுக்குள்ள சுருங்கும். சில சமயம் கத்தறதுல நியாயம் இருக்கும். இல்லேன்னாலும் ஏதோ மூட் சரியில்லை... இல்லை, ஏதோ ப்ராப்ளம் அதான் கத்தறாருன்னு அமைதியா இருந்துடுவேன்."

"அவரு கோபப்படறாருன்றது கேட்க ஆச்சரியமா இருக்குங்க."

"எல்லார்க்கும் கோபம் வருங்க."

"அப்ப சொல்ற கதை நீதி?"

"அவரும் ட்ரை பண்ற விஷயம். ட்ரயல் அண்ட் ஏரர்ல வர்ற விஷயம்" அந்த பெண்மணி நறுக்கின காய்கறியுடன் எழுந்தாள்.

"இவங்க அவர் பத்தி வச்சிருக்க இமேஜ் உடைஞ்சு போயிருக்கும்."

"ஆமாங்க."

"தப்புங்க." இவரு இப்படி இருப்பார்னு நினைச்சேன். அப்படி இருக்காரேன்னா உங்களுக்குத்தான் கஷ்டம்" அந்தப் பெண்மணி உள்ளே நகர்ந்தாள்.

"அப்ப... எப்படி இருக்கிறது..."

"எல்லாரும் நல்லவங்க. எல்லாரும் கெட்டவங்க நல்லதும் கெட்டதும், சூழ்நிலை அப்பத்திய மூட் பொறுத்தது இது." அந்தப் பெண்மணி உள்ளே நகர்ந்தாள்.

"எம் பேரு நடன காசிநாதன். கோல்டன் ப்ளஸ் மொபைட் கம்பெனில சேல்ஸ்மேன்."

"மொபெட்டா... என்ன விலைங்க?"

"ஒண்ணு வாங்கினா ஒன்பதாயிரம். ஒரு டஜனா வாங்கினா..."

"ஐயோ"

"உங்க பேர் சொல்லலையே."

"திருவளர் செல்வி."

"இவங்க எப்படி...?"

"அவர் கதைங்க எனக்குப் பிடிக்கும்."

"நீங்க எப்படி?"

"அவரு கதை எனக்கும் ரொம்ப பிடிக்கும்."

"ஏங்க... அவரைப் பார்த்திருக்கீங்களா?அவரோட பேசியிருக்கீங்களா?"

உள்ளே குரல் கேட்டது.

"பரண் மேலருந்து வெங்கலபானை எடுத்துக் கொடுக்க முடியுமா?"

"உள்ளே இருந்து ஸ்டூலைக் கொண்டு வந்து போட்டு ஏறிப் பரணில் தேடும் அவனை செல்வி வியப்போடு பார்த்தாள். இவன் யார்...? இந்த வீட்டில் இவன் யார்? வாசகனா? சேவகனா?

செல்வி நேரம், மறந்து, தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருக்க, அவள் அண்ணன் வீட்டு வாசலில் தவித்துக்

கொண்டிருந்தான். எட்டு மணிக்குக் கிளம்பினால்தான் ஏர்போர்ட்டுக்குப் போக முடியும். மணி ஏழு இருபது.

அந்த கோல்டன் ப்ளஸ் லஸ் வழியே மயிலாப்பூருக்குள் நுழைந்தது.

''இப்ப செட்டில் ஆயிட்டீங்களா?'' காசி திரும்பி உரக்கக் கேட்டான்.

''ரொம்ப பயப்படறீங்களே... பின்னால் உட்காரக் கூட, இப்ப வசதியா இருக்கா?''

''நான் பயந்தது உட்கார்றதுக்கு இல்லீங்க. உங்ககூட வரத்துக்கு'' செல்வியும் குரல் உயர்த்திப் பதில் சொன்னாள்.

''ஏன் கடத்திட்டுப் போயிடுவேனோன்னு பயமா?'' சிரித்தான்.

''கடத்திட்டு போயிட்டா பரவாயில்லை. கொண்டாந்து மறுபடி மந்தைவெளில விட்டுட்டீங்கன்னாதான் பயம், கடத்தப்பட்ட இளம் பெண் தற்கொலைன்னு முடிஞ் சிடும்.''

''ஏங்க... கற்பு பெரிசா... சாவு பெரிசா?''

''அது சூழ்நிலை பொறுத்தது. கற்பு போச்சா ஒழியுது போ... இனிமே ஜாக்கிரதையா இருன்னு சொல்லிட்டா வேற விதம். வீட்டு வாசலை மிதிக்காதே சேறுபட்ட நாயேன்னா சாவுதான் வழி.''

''அதாவது கற்பழிஞ்சது தெரிஞ்சுட்டாதான் கஷ்டம்ங் கறீங்க.''

''முட்டாள்தனமா பேசாதீங்க. ரகஸ்யமா கற்பு போனா சந்தோஷமா பொம்பளைக்கு? ஒரு ஆம்பளையால இன்ஸல்ட் பட்டுட்டு எல்லாராலயும் பேச்சும் வதையும்

படற வேதனை அனுபவிச்சாதான் தெரியும். பெண்ணா இருந்தாதான் புரியும்.''

''மந்தவெளில எங்க...?''

''டெர்மினஸ்ல விட்டுருங்க.''

''வீடு பக்கம்தானா?''

''ரொம்பக்கிட்ட, அண்ணன் காத்துக்கிட்டிருப்பாரு. ஏர்போர்ட் போறோம். இன்னொரு அண்ணன் துபாய் லேர்ந்து வரார். இன்னிக்குப் பார்த்து அவர் வீட்டுக்குப் போனேன். லேட்டாயிருச்சு.''

''இங்க இறக்கி விடட்டுமா?''

''தாங்க்ஸ் ரொம்ப தாங்க்ஸ். இதான் நான் முதல் தடவை ஸ்கூட்டர்ல ஏறினது, இன்னொருத்தரோடு வண்டில உட்கார்ந்து வர்றது. இறங்கினாள்.

''இது ஸ்கூட்டர் இல்லை. மொபெட். வாங்கிடுங்க ஒண்ணு.''

''வியாபாரமா... என்கிட்டயா.''

''நாலு நிமிஷத்துல மந்தவெளி வந்துட்டமே. பஸ்ஸுன்னா எத்தினி லேட்டாயிருக்கும். இது சௌகர்யங்க. அப்புறம் எப்பப் பார்க்கலாம்.

''அடுத்த வாரம் அவரு வாராராம். அப்ப போகலாமா?''

''நாளைக்கு வாங்களேன் லாயிட்ஸ் ரோடுக்கு. எனக்கு வேலை கொடுத்திருக்காங்க சின்னம்மா.''

''எப்படிங்க அந்த வீட்டோட அவ்வளவு ஒட்டினீங்க?''

''அவருதான் நட்பானாரு. நிறையப் பேசுவாரு. பல விஷயம்... பல குழப்பம் தீர்த்து வச்சிருக்காரு. என்னவோ, அங்க போய் அரைமணி நேரம் உட்கார்ந்தா பெரிய நிம்மதி. நாளைக்கு வரீங்களா லாயிட்ஸ் ரோடு.''

"பார்ப்பம்."

"போன் பண்ணட்டா உங்க ஆபீஸுக்கு?"

"ஐயோ..."

"சரி, பண்ணலை. நீங்க பண்ணுங்களேன்?"

"ட்ரை பண்றேன். ஆமா... மொபெட் என்ன விலை?"

"எட்டாயிரத்து அறுநூத்து அம்பது."

"ஐயோ..."

"இதுக்கும் ஐயோவா? இனிமே உங்கபேர் ஐயோ செல்வி. போயிடுவீங்களா வீட்டுக்கு?"

"ஓ.எஸ். வரட்டுங்களா."

செல்வி திரும்பி நகர, ஒரு ஆளின்மீது மோதிக் கொண்டாள். அண்ணன் எதிரே நின்று உற்றுப் பார்க்க... பக்கத்தில் உறைந்தாள்.

"மணி என்ன செல்வி. எங்க போயிட்டு வர...?" அண்ணன் குரலில் அதட்டல் இருந்தது.

காசி வண்டி விட்டு இறங்கினான்.

"லாயிட்ஸ் ரோடு ரைட்டர் வீட்டுக்கு அண்ணே. பத்து நிமிஷம் இடம் பார்த்துட்டு வரலாம்னு போனேன். அந்த அம்மா இருந்தாங்க. நம்ம கடைக்கு வரலை அவங்க. லேட்டா... அதனால இவரு வண்டில."

"வணக்கங்க." காசி அண்ணனை நோக்கி கை கூப்பினாள்.

அண்ணன் ஒரு கையில் வணக்கம் சொன்னான்.

"எம்பேரு நடன காசிநாதன். ரைட்டருக்கு சிநேகிதம். அங்க செல்வி மேடம் பார்த்தேன். லேட்டாயிருச்சுன்னு பயந்தாங்க. நான்தான் உடனே போயிடலாம்னு வண்டில கொண்டாந்து..."

"பரவாயில்லீங்க. டாக்ஸி பிடிக்கணும் ஏர்போர்ட் போவணும். இங்க மீட்டர் இல்லை. போக வர இரு நூறு கொடுன்னு பேசறாங்க."

"பி.டி. எடுத்துக்கங்க."

"அப்படீன்னா?"

"ப்ரைவேட் டாக்ஸி. ஏர்போர்ட் போய் காத்திருந்து வரணும் இல்லையா?"

"ஆமா."

"அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணலாமா?"

"ஏங்க...?"

"அடையார் போய் டாக்ஸி பிடிச்சுட்டு வரேன். எங்கக் கம்பெனிக்கு வர டாக்ஸி இருக்கு. சல்லிசா வந்துரும்."

"வாணாங்க. நாங்க பார்த்துக்கறோம்."

"இல்லீங்க. கண்ட ஆளைக் கூட்டிட்டுப் போனா ஏடா கூடமா கேட்பான். எப்ப கஸ்டம்ஸ் முடியும் எப்ப வெளியே வரம்னு தெரியாது. ப்ளேன் லேட்டாட்சுன்னா... இன்னும் சார்ஜ் ஜாஸ்தியாவும். லேடீஸ் கூட்டிட்டுப் போறீங்க. எத்தனை மணிக்கு ஃப்ளைட்?"

"ஒன்பது மணிக்கு ப்ளேன்னு எழுதியிருக்கான். எங்க இறங்கி எங்க வரான்னு உறுதியா தெரியலை."

"செல்வி, அட்ரஸ் சொல்லிட்டு அண்ணனைக் கூட்டிட்டு வீட்டுக்குப் போங்க. பத்து நிமிஷத்துல டாக்ஸியோட வரேன்."

"ஆமாண்ணே, வீட்டுக்குப் போய் அண்ணியைக் கூட்டிட்டு போவோம்."

"இப்பவே லேட்டாயிடுச்சு தம்பி. எட்டு மணிக்கு அங்கே இருக்கணும்."

"எட்டுப் பத்துக்குப் போயிடலாம். என்ன சொல்றீங்க?"

"அண்ணன் தலையசைத்ததும் அவன் வண்டி உதைத்து ஏறினான். பறந்தான்.

"என்ன செல்வி... யாரு இது... என்ன இது... நல்லாவா இருக்கு? நம்ம வீடு எப்படின்னு மறந்து போச்சு உனக்கு."

"மறக்கலேண்ணே. லேட்டாச்சு... நீ தேடுவேன்ற பயத்துலதான்."

"இந்தாளு வாரானா ஏர்போர்ட்டுக்கு?"

"வாணாம்னா கட் பண்ணிடலாம்."

"என்ன ஜாதி?"

"ஐயருன்னு தோணுது பேர் பார்த்தா. நான் விசாரிக்கலை. மொபெட் கம்பெனி சேல்ஸ்மேன்."

"வண்டில உட்கார்ந்து வர்றது எனக்குப் பிடிக்கலை."

"இனிமே வரமாட்டேண்ணே. ரைட்டர் அம்மா பரவாயில்லை, கூட போ. அவசரம்னா தப்பில்லைன்னாங்க..."

"அவங்களுக்குத் தப்பில்லை செல்வி. நம்ம வீடு எப்படி... நம்ம இடம் எப்படி ஒத்துக்கும் இதெல்லாம்?"

"என்ன திரும்பிட்டீங்க அண்ணனும் தங்கையும்" அண்ணி வாசலில் நின்றிருந்தாள். வியப்போடு கேட்டாள்.

"வண்டி வருது. நீயும் கிளம்பு."

"நான் எதுக்கு?"

"வா ஏர்போர்ட் பார்க்கலாம்."

"பார்த்து என்ன ஆகப் போவுது?"

"அறுவத்தி மூவர்னு பத்து நாளும் ஓடறல்ல. அது மாதிரி ஒருநாள் ஏர்போர்ட் போலாம். வா. ஒண்ணும் ஆவாது."

அண்ணி உள்ளே போய் வேறு புடவை உடுத்திக் கொண்டு வந்தாள். செல்வி நகம் கடித்துக் காத்திருந்தாள். முகம் கழுவிக் கொள்ளலாமா? வண்டி வந்து விடுமா? வண்டி வரத் தாமதமானால் அண்ணன் கூவாது இருக்குமா? ஏன் இவன் வண்டியில் ஏறினோம். எதற்கு இவன் உள்ளே புகுந்தான். அண்ணி இவனைப் பார்க்கும். யார் என்று கேட்கும். என்ன சொல்வது. கடவுளே... வீணாய் நான் அவமானப்படப் போகிறேன். எல்லோரும் சேர்ந்து இவனை அவமானப்படுத்துவது பார்க்கப் போகிறேன்.

எட்டிப் பார்க்க, ஒரு வண்டி திரும்பி நாலு வீடு தள்ளி நிற்பது இருட்டில் தெரிந்தது. வெளியே வர முன்னேறி இவள் அருகில் நின்றது.

27

"வண்டில யாரோ இருக்காங்களே" அண்ணி படி இறங்கி அதே வேகத்தில் பின்னடைந்தாள்.

"அட யாருமில்லை... நமக்குத் தெரிஞ்சவங்கதான்..." அண்ணன் கூப்பிட தலையசைத்தாள்.

"ஏன்?"

"மூணாம் மனுஷங்க இருக்கச் சொல்ல, எனக்கு வண்டில வர்றதுக்குப் பிடிக்காது."

"அடச்சே... வா... கோஷா பொம்பளையா நீ... செல்விக்குத் தெரிஞ்சவங்கதான்."

அண்ணி முகம் தூக்கியபடி முணுமுணுப்புடன் வண்டி ஏறினாள். உள்ளே புகுந்து சீட் நுனியில் உட்கார்ந்து கொண்டாள். அண்ணன் உட்கார அடுத்து செல்வி ஏறி அமர்ந்து கொண்டாள்.

"நேரா ஏர்போர்ட்தானே..." காசி கேட்டான்.

"ஆமாங்க."

"நைட் சாப்பாடு..."

"வந்துதான்."

"ஒன்றை அவர் காக்கணுமே... டிபன் சாப்பிட வேணமா... பசிக்காதா... ஏங்க செல்வி."

"பசிதான். போயிடுங்க. அங்க பாத்துக்குவம்."-கார் கிளம்பிற்று.

"மெட்ராஸ் கஸ்டம்ஸ்ன்னா ராத்திரி ஆயிடுங்க. பாம் பேல முடிச்சிருந்தாங்கன்னா நேர இறங்கின ஒன்னவர்ல வீட்டுக்கு வந்துடலாம்."

"ஒன்னவர் ஆவுமா?"

"பெல்ட்ல சாமான் வரவேணாமா?"

"பெல்ட்டா."

"ஆமா... கன்வேயர் பெல்ட். லக்கேஜ் ஏரோப்ளேன் லேர்ந்து தனியா வரும். முதல்ல பாசஞ்சர் வந்துடுவாங்க. டெலிகிராம் குடுங்க."

"அண்ணன் வைத்திருந்தது வாங்கிப் பார்த்தான்.

"இந்தியன் ஏர்லைன்ஸ்... அப்போ பாம்பேல கஸ்டம்ஸ் முடிக்கறாரு. நேத்து ஈவினிங் இறங்கி இருப்பாரு."

"நீங்க ப்ளேன்ல போயிருக்கீங்களா?" செல்வி கேட்டாள்.

"இரண்டு தடவை."

"பயமா இருக்காது?"

"முதல் தடவை கொஞ்சம் கலவரமா இருக்கும்."

"எனக்குக் கூட ப்ளேன்ல போகணும், வாழ்க்கைல ஒரு வாட்டியாவது..."

"தாராளமா போலாம். லாரி டிரைவர், கொத்தனார். யார் யாரோ போறாங்க. மிடில் ஈஸ்ட்ல வேலை வாங்கிட்டா குறைஞ்சபட்சம் வருஷத்துக்கு இரண்டு தடவை போலாம். மிடில் ஈஸ்ட்ல வேலை ட்ரெயினிங் ஆயிட்டா யூரோப்பியன் கண்ட்ரில வேலை கிடைக்கிறது ஈஸி."

"மிடில் ஈஸ்ட்டா? மவுண்ட் ரோடு கம்பெனில வேலைக்குச் சேர நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்."

"உங்களது நல்ல கம்பெனி, பெருமாளை எனக்குத் தெரியும். நம்ம வண்டி ஸ்பேர் பார்ட்ஸ் நிறைய அங்க போவுது. செயினும் கார்பரேட்டரும் நிறையப் போவும், அவங்ககிட்ட. ஆனால் ஸ்பேர் பார்ட்ஸ் நான் பார்க்கலை. வேற ஆள்."

"உங்களது விட டிவிஎஸ் நல்லா போகும்."

"ஆமா... அடிக்கடி மாத்தணும்."

"ஹய்... உடனே அப்படி சொல்லிடறதா. உங்க வண்டி பத்துன்னா. டி.வி.எஸ். நூறு நூத்தம்பது ஓடுது சிடில."

"இந்தப் பக்கம் அவங்க மார்க்கெட்தான். எங்களுக்கு பெங்களூர், மைசூர், பாம்பேல அதிகம்."

"இத்தினி டூ-வீலர் வித்தும் கார் ஸ்பேர் பார்ட்ஸ் விக்கறது குறையலீங்க."

"இப்பப் புதுசா கார் யாரும் வாங்கறதில்லை. பழசு பார்ட்ஸ் மாத்தி ஓட்டறாங்க... உதாரணத்துக்கு."

"வழி நெடுக அவர்கள் வியாபார உலகம் பற்றிப் பேசிக்கொண்டு வந்தார்கள். பின் சீட்டில் சாய்ந்து பேசிக் கொண்டு வந்தார்கள். பின் சீட்டில் சாய்ந்து அமர்ந்து இடக்கையை கார் ஜன்னல் விளிம்பில் ஊன்றி குழல் சரி செய்தபடி, இந்த மாதிரி பல கார்கள் தனக்கு சொந்தம்

என்கிற தோரணையில் சொகுசாய்ப் பேசும் செல்வியை அண்ணி விழி அசையாது பார்த்தாள்.

''நோ... நோ.'' என்று மறுத்து விவாதம் செய்யும் செல்வியைப் பார்க்க அண்ணனுக்கு வியப்பாய் இருந்தது.

''ஸ்பிக் உரக் கம்பெனிதானுங்களே...'' செல்வி கேட்டாள்.

''ஆமாம்... என்ன?''

''இவ்வளவு உயர பில்டிங்கா ஒரு உரக் கம்பெனிக்கு?''

''அட, அவங்க பெரிய க்ரூப்புங்க. உரம்னா மக்கின இலையா... சாணமா, கெமிக்கல்... பெரிய ப்ராஜக்ட்.''

''எங்க கிட்ட ஸ்பேர்ஸ் வாங்கறாங்க.''

''போறுமே... இந்த மாதிரி ஒரு கம்பெனியே போறுமே... பெருமாளுக்கு. பெரிய மரியாதையாச்சே. நூறு கார் சுலபமா இருக்கும் அவங்ககிட்ட.''

''கம்பெனி பார்க்கறதுக்கு நல்லா இருக்கு.''

''உள்ள போய்ப் பார்க்கணும்... ரிசப்ஷன் ஹாலே அசத்திடும்.'' காசி திரும்பி அவளைப் பார்த்தான். காற்று விலகி விலகி ஆட மெர்க்குரி ஒளிபட்டுப் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது. காசி மறுபடி நேரே உட்கார்ந்தான்.

ஸோடியம் விளக்குகள் விடியல் நேரம் போல் வெப்ப மில்லாத ஒரு வெளிச்சம் தர, உள்ளே போனார்கள். டிக்கெட் வாங்கி ஹாலுக்குள் நுழைந்தார்கள். பிளாஸ்டிக் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

''அண்ணே... காபி சாப்பிடறீங்களா...'' -காசி கேட்க அண்ணன் பலமாய் மறுத்தார். ''முக்கா மணி நேரம் முன்னால வந்துட்டம். காபி சாப்பிடறதுல கால் அவர்

போட்டுமே. இன்னொரு கால் அவர் ஏர்போர்ட் சுத்தினா போச்சு.''

காசி ஓடிப்போய்க் கொதிக்கக் கொதிக்க அட்டை டம்ளரில் இரண்டு காபி வாங்கி வந்து அண்ணனிடமும் அண்ணியிடமும் கொடுத்தான்.

''இருங்க செல்வி, உங்களுக்கு ஒரு கப் வாங்கிட்டு வரேன்.''

''ஐயோ வேணாம், எனக்கு எதுக்கு நீங்க காபி கப் தூக்கறீங்க... நான் வரேன்.''

தொலைவில் காபி ஸ்டாலுக்கு அருகே இரண்டு பேரும் பேசிக்கொண்டே காபி குடிப்பது தெரிந்தது. ஸ்பேர் பார்ட் பத்திப் பேசுகிறார்களா? நாலு மாசம் வேலைக்குப் போய் இது என்னென்னவோ பேசுகிறது... விவாதம் செய்கிறது...

நடுநடுவே இங்கிலீஷ் பேசுகிறது. பெயர் சொல்லிக் கூப்பிட்டால், மிரட்சியோடு எழுந்திருக்கிற பெண். காரில் சாய்ந்து கட்டடங்கள் கவனிக்கிறது. இது எந்தக் கம்பெனி தயாரிப்பு என்று கேள்வி கேட்கிறது. இது மாறுதல்தானா... இந்த மாறுதல் நல்லதுதானா... முழங்கை நீள ஸீட்டில் இரண்டு பேர் உட்கார்ந்து வரவேண்டுமெனில் தோள் இடிக்காது வரமுடியுமா... இடுப்பு உரசாது உட்கார முடியுமா... பஸ்ஸில் எல்லாப் பெண்களும் உரசிக் கொண்டு தானே போகிறார்கள்.

இது, நான் பார்த்திருக்கிறவரை பரவாயில்லை'' இவள் பார்த்தால் மறுபடி கூச்சல் கிளம்பும். இவளிடம் இதைச் சொல்லலாமா... மறைக்கலாமா. 'அண்ணிகிட்ட சொல் லிட்டியாண்ணே... நான் ஸ்கூட்டர்ல வந்ததை' -செல்வி கேட்கும். இல்லையென்றால், அண்ணன் நம்ம சைடு என்று நினைக்கும். இப்படிப் போக அனுமதி கொடுத்ததுபோல் ஆகும். இவளிடம் சொன்னால்... அன்னிக்கே சொன்

னேன்... வெளிய அனுப்ப வேண்டாம்னு... என் பேச்சைக் கேட்டாதானே... இப்ப என்கிட்ட வந்து முட்டிக்கினு என்ன பிரயோஜனம்?'' என்று இடிப்பாள்.

ஆணுக்கு இருக்கும் பொறுப்பு, வேதனை பெண்ணுக்குத் தெரிவதேயில்லை. இது காட்டுகிற தோரணை, கெட்டிக் காரத்தனம், ஆர்வம்- சந்தோஷமாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது.

எட்டேகால் மணிக்கு எல்லா கவுண்ட்டரிலும் பெண்கள் இருக்கிறார்கள். எதிரே ஒரு பெண் தனியே பயணப்பட்டிருக்கிறது போலிருக்கிறது. பாம்பேவோ டெல்லியோ... பேண்ட் போட்டு கால்மேல் கால் போட்டுக் கொண்டு இங்கிலீஷ் புத்தகம் படித்துக் கொண் டிருக்கிறது, இது எப்போது வண்டி ஏறும், எங்கே இறங்கும், எப்படி வீட்டுக்குப் போகும் என்று தெரியவில்லை. எதிரே இருக்கிற இந்தப் பெண் மாதிரி செல்வியும் பேண்ட் போட்டு, ஏரோப்ளேனில் போகுமோ... இந்தப் பெண் படிக்கிற ஆங்கிலப் புத்தகத்தில் ஒரு பெண் படம் பின்பக்கம் முழுவதும் துணியின்றிப் போட்டிருக்கிறது.

அண்ணன் திரும்பிப் பார்த்தார். செல்வி வாய்பொத்திச் சிரித்துக் கொண்டிருந்தாள். அந்தப் பையன் மேலே சிந்தின காபிக்கு வெட்கப்பட்டுக் கொண்டிருந்தான்.

''பொம்பளையோட என்னடா பேச்சு.'' என்றுதான் இளவயதில் சொல்வார்கள். இப்படி சிரித்துப் பேசுவது பார்த்தால், 'அலையறான்' என்பார்கள். ஆனால் இப்போது சிரிக்கச் சிரிக்க பெண்களோடு பேசுவதே ஸ்டைலாகி விட்டது. வேண்டுமென்றே காபியை மேலே ஊற்றிக் கொண்டு அவளைச் சிரிக்க வைக்கிறானோ என்று தோன்றுகிறது.

தலைக்கு மேல் காது பிளக்கிற சப்தம் கேட்டது. அறிவிப்பு கேட்டது. நிறைய பேர் ஆவலுடன் எழுந்திருந்தார்கள். கம்பிக்கிராதி அருகே போய் நின்றார்கள்.

விதவிதமான ஆட்கள் வெளியே வர, அண்ணனும் அண்ணியும் ஆவலாய்ப் பார்த்தார்கள். பெருங்கூட்டம் ஒன்று கண்ணாடிக் கதவுகளுடே வந்து கண்வேயர் பெல்ட்டைச் சுற்றிக் கொண்டது.

''அதோ... அதோ... அண்ணன்'' செல்வி கூவினாள்.

செல்வி குரல் கேட்டு அவனும் திரும்பினான். கைப் பெட்டியை வைத்துவிட்டுப் பாய்ந்து வந்து, அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''பெரியண்ணே வந்திருக்காங்க, அண்ணி வந்திருக்காங்க.

அகலமும் உயரமுமாய் நிற்கிற தம்பியைப் பார்த்ததும், 'ஹா...' என்று வியப்பு வந்தது. வெள்ளைச் சட்டை இன் பண்ணி, ஜீன்ஸ் போட்டு கான்வாஸ்ஷூ மாட்டி அடர்ந்த மீசையும், ஒட்ட வெட்டின முடியுமாய் கூடப் பிறந்தவன் உருவம் மனதில் பதிந்து இதுவரை இருந்த பூஞ்சையான உருவம் மறைந்தது.

தம்பி கால் தொட்டு வணங்கினான்.

''தம்பி, நல்லா இருக்கியா?''

''இருக்கேன் அண்ணே... அண்ணி சௌக்கியமா... எப்படி இருக்கீங்க?'' சிரிப்புடன் விசாரித்தான். அண்ணி தலையசைத்தாள்.

''அண்ணே, இது காசிநாதன் என் சிநேகிதர், இது அண்ணன்.''

காசியும் அவனும் கை குலுக்கினார்கள்.

''எப்படி வீட்டுக்குப் போறோம் செல்வி?''

''வெளிய வண்டி இருக்கு. அம்பாஸிடர் பி.டி. எடுத்துட்டு வந்தோம் சார்'' காசி பதில் சொன்னான்.

''வெரிகுட். என்கூட ஒரு ஆள் வருது, அவங்களை கவனமா வீட்டுக்குச் சேர்த்துட்டுதான் நான் போகணும்.''

இரண்டு பெரிய பெட்டிகள், ஒரு அட்டைப் பெட்டி, சுருட்டின பாயில் ஏதோ துணிமணி வெளியே வந்தது. அவனைத் தொடர்ந்து முப்பது வயதுப் பெண்மணி வெளியே வந்தாள். அவளிடமும் இரண்டு பெரிய பெட்டிகள், பாய்ச்சுருள்கள் இருந்தன.

''இவங்க சந்திரலேகா... கோபாலபுரத்துல இருக்காங்க. இவங்க வீட்டுக்காரர் என் கூட வேலை செய்றார். எனக்கு பாஸ் மாதிரி. நான் போறதால என்கூட அனுப்பினாங்க, இவங்களை வீட்ல இறக்கி விட்டுட்டுப் போலாம்...''

வண்டி பின் பக்கம் திறந்து எல்லா சாமான்களையும் டிக்கியில் திணித்தும் இரண்டு கைப்பைகள் எஞ்சின. உட்காரும் இடத்தில் கைப்பை வைத்து, ஆறுபேர் உட்கார வசதி இருக்காது என்று தோன்றியது.

செல்வி, அண்ணி அந்தப் பெண் பின்னால் ஏறிக் கொள்ள இரண்டு அண்ணன்களும் முன்னே உட்கார காசி விடுபட்டான். 'பின்னால் வந்து உட்காருங்க' என்று செல்வி அழைக்க, தயங்கினான்.

''பரவாயில்லை. பின்னால் உட்காருங்க''- காசியை சின்ன அண்ணன் அழைத்தான். இடநெருக்கடி அதிகம் இருக்கும் எனத் தெரிகிறது. 'முன்னால வரீங்களா' என்றான்.

''வேணாம் சார். நீங்க போங்க, நான் பஸ் பிடிக்க வந்துடறேன்.''

''வண்டிக்குக் காசு எவ்வளவு கொடுக்கணும்?''

"இப்ப வேணாம். நாளைக்கு இந்த டாக்ஸி முதலாளியைப் பார்த்துப் பேசிட்டுச் சொல்றேன்."

"பரவாயில்லை, வாங்க சார்."

"இவ்வளவு சௌகர்யமா பிளேன்ல வந்துட்டு இப்ப இடிச்சுக்கிட்டு பிரயாணம் பண்ணா, கடல் தாண்டி ஊருக்கு வந்த சந்தோஷம் காணாத போயிடும். நீங்க சங்கடப் படாம போங்க."

கதவு சாத்திக் கையசைத்தாள்.

வண்டி நகர்ந்தது. செல்வி வருத்தமானாள்.

இரண்டு அண்ணன்களும் பேசிக்கொண்டு வர, பின்னால் உட்கார்ந்த பெண்ணைப் பார்த்து நட்பாய் சிரித்தாள்.

"பாம்டே'ல உன் தம்பியைப் பார்த்தியாடா?"

"ம்ம்... அவன்தான் கஸ்டம்ஸ் கிளியரன்ஸ் ஹெல்ப் பண்ணினான். எட்டாயிரம் ரூபா கொடுத்தான்."

"எதுக்கு?"

"வீடியோ, டிவி இரண்டுக்கும் தீட்டிட்டாங்க.

பட்டுன்னு போய் ரெண்டவர்ல காசு எடுத்தாந்து கட்டி... அவன் ஹோட்டல்லதான் தங்கினேன். ஏ கிளாஸ் ஹோட்டல் அண்ணே அது. நல்ல மதிப்பு அவனுக்கு..."

"பெல் பியூனாதானே இருக்கான்?"

"பெஸ் காப்டன். டிப்ஸே இருநூறு ரூபா வயது ஒரு நாளைக்கு. வீட்டுக்குப் போய் அவனுக்கு செக் அனுப்பணும்."

"வீடியோவாண்ணே..." -செல்வி மகிழ்ச்சியில் குதித்தான்.

"ஆமா செல்வி... உனக்கு நிறைய வாங்கிட்டு வந்திருக்கேன்."

"அது வேலைக்குப் போவுதுடா. மோட்டார் கம்பெனி."

"அப்படியா. வெரிகுட். என்ன சம்பளம்?"

"ஆயிரம் ரூபா."

"ஆயிரம்தானா...? என்கூட துபாய் வந்துடு. ஒரு நாளைக்கு நானூறு ரூபா சம்பாதிக்கலாம்."

"அதுக்குக் கல்யாணம் பண்ணணும்டா..."

"செய்யலாம் அண்ணே, என்ன அவசரம்?"

வண்டி கோபாலபுரம் திரும்பி நிற்க, இதுவரை பேசாது வந்த அந்தப் பெண் இறங்கி விடை பெற்றாள். அவள் பெட்டிகளை எடுத்து வைத்து, அவனோடு கை குலுக்கி நன்றி ஏற்றுக் கொண்டு வந்த அவனை, வண்டியில் உள்ள எல்லோரும் வியப்புடன் பார்த்தார்கள்.

அண்ணி வண்டி கிளம்பும்போது தன்னை பலவீனமாக உணர்ந்தாள். செல்வி, காசி எப்படி வருகிறானோ என்று நினைத்தாள். அண்ணன் தம்பிக்கும் சீக்கிரம் பெண் பார்க்கணும் என்று கவலைப்பட்டார். அவன் கால் பரப்பி நிம்மதியாய்த் தூங்கும் ஆசையோடு வந்தான்.

ஒரே மரபும், ஒரே விதமான வாழ்க்கையும் கொண்ட அந்த வீடு பல்வேறு மரபுகளையும், பல்வேறு வித வாழ்க்கைகளையும் ஏற்றுக் கொள்ளும் அவசியத்தில் இருந்தது.

28

விடிந்து பத்து மணிக்குள் வீடே மாறிப் போயிற்று. வீடியோவும் டி.வி.யும், டேப் ரெக்கார்டரும், வாசனைத்

திரவியங்களும், புடைவைகளும் குடும்ப உருவத்தையே மாற்றியது.

"என்னடா குடிக்கற சமாச்சாரமெல்லாம் வாங்கிக் கின்னு வந்துருக்க." -அண்ணன் கலவரத்துடன் கேட்டார்.

"விக்கிறதுக்கு அண்ணே. நல்ல லாபத்துக்கு விக்கலாம்."

"எல்லாமே விக்கிறதுக்குத்தானா?"

"உங்க விருப்பம் அது. துட்டு முக்கியம்னா வித்துட லாம். இல்லை... எது அவசியமோ அதை வச்சுக்கலாம்."

"செல்விக்குக் கல்யாணம் பண்ணனும்."

"பையன் பார்த்திட்டீங்களா?"

"இல்லை, அது படிக்கறேன்னுது."

"படிக்கட்டும்."

"ஒரு பொண்ணைக் கட்டிக் குடுக்காத வச்சிக்கறதும் தப்பா இருக்கே."

"கூடாதுன்னு சொல்லலையே. அது உரமா நிக்கட்டும் முதல்ல. நல்லா இடமா பார்த்துக்கிட்டே இருங்க. பாக்கு வெத்தலைகூட மாத்தி வச்சுக்குங்க. அது படிப்பு முடிஞ் சதும்..."

"அதெல்லாம் சரியா வராதுடா."

"அண்ணே... ஒண்ணு சொல்றேன். நாம இன்னும் அந்தக் காலத்து ஆளாவே இருக்கறதும் சரியில்லை, பொண்ணு சமைஞ்சதும், பூவோடு சிங்காரிச்சு முறை மாமனைக் கூப்பிட்டு மாலை போட்டு சீர் செய்யச் சொல்லி, உனக்கு அவன், அவனுக்கு நீன்னு கேலி பண்ணி இதெல்லாம் முடிஞ்ச கதை. செல்விக்கு யார் இஷ்டமோ? அது இஷ்டம் முக்கியம்."

''தெருவுல போறவனை இட்டாந்தாலும் தாலி கோத்துக் கொடுத்துடணுமா?''- அண்ணி முகவாயில் இடித்துக் கொண்டாள்.

''அப்படித் தெருவோட போறவனை எந்தப் பொண்ணும் இழுத்துக்கிட்டு வரமாட்டா. அவளுக்கு அவ வாழ்க்கை முக்கியமில்லையா...? என் கூட ரூம்ல நாலு ஐயர் பசங்க... அம்மா எம்.ஏ.ன்றான். அத்தை வக்கீல்ன் றான். அக்கா, தங்கச்சி டாக்டர்ன்றான்... ஒரு ஃபேமில... சொன்னா நம்ப மாட்டீங்க. அண்ணன் தங்கச்சி ஆறு பேரு. எல்லாம் படிச்சு கை நிறைய சம்பாதிக்கறாங்க. டாக்டருக்குப் படிக்கிற தங்கச்சி நாலு வருஷமா ஒரு பையனை லவ் பண்ணுது. அவனும் டாக்டர். ஏண்டா... கட்டிக் கொடுக்கறதுதானேன்னா. சம்பாதிக்கட்டும், காசு சேர்த்துக் கட்டிக்கட்டும்ன்றான்.

''அந்தப் பையனும் துபாய்ல டாக்டர். அடிக்கடி வந்துட் டுப் போவான். 'ஏண்டா, மாப்பிள்ளைனு பழகுறியா... இல்லை, சிநேகிதம்னு பழகுறியா'ன்னா என் தங்கச்சி, எங்கம்மா, எங்கப்பா எல்லாரும் சிநேகிதம் தான்... உறவு என்னா உறவுன்றான். தங்கச்சி லீவ் போட்டுத் துபாய் வருது. டாக்டர் ரூம்ல தங்குது. கண்டுக்கவே இல்லை.''

''கழிசடையா இருக்கும்.''

''இல்லண்ணி. யார் தலைல யாரும் இல்லை. உதவி கேட்கறயா, உதவறேன். மத்தப்படி உன் காரியம் உன் னோட. என் வாழ்க்கை என்னோட. எனக்கு முதல்ல குழம் பிச்சு. சீர் செனத்தி, வரதட்சணை எதுவும் கிடையாது. வரமாசம் திருப்பதில கல்யாணம். அசோகாவுல ரிஸப்ஷன். தங்கச்சியும், தங்கச்சி புருஷனும் சிங்கப்பூர் பரீட்சை எழுதப் போறாங்க. பரீட்சை முடிச்சிட்டு அங்கேயே ஹனிமூன். நாம மாறணும் அண்ணே. நிறைய மாறணும்.''

"உனக்கும் பூணூல் போட்டுவுட்டாங்களா?"

"அவங்களே போட்டுக்கறதில்லை. கேட்டா ஒழுக்கம் பூணுல்ல இல்லேங்கறான். படிப்பு தான் பலம், ஒழுக்கம் தானா வரணும்கறான்."

"சரி... காசு வச்சிருக்கியா?"

"இதெல்லாம் காசுதான். இதைத் தவிர அறுபது ரூபா இருக்கு பைல. நகை கொண்டாந்துருக்கேன். சின்னவனும் துட்டு வச்சிருக்கான். காசுக்குக் கவலைப்படாதே. செல்வி என்னா சொல்லுது... படிக்கணுமா, கல்யாணமா? கேட்டுக் கலாம்."

மீன் குழம்பும், கறி வறுவலும், சாப்பிட்டு விட்டு, ஆறு மணி நேரம் அசையாது தூங்கினான்.

மூன்று மணிக்கு வாசலில் குரல் கேட்டது. கதவு திறக்க, வாசலில் காசி நின்று கொண்டிருந்தான். அண்ணி கதவு ஒருக்களித்து விட்டு செல்வியை எழுப்பினான். "வாசல்ல அந்தப் பையன் நிக்குது" என்றாள்.

செல்வி துள்ளி எழுந்தாள். கதவு விரியத் திறந்தாள். "வாங்க.. உள்ள வாங்க.."

"அண்ணன் இருக்காரா?"

"பெரியண்ணன் இல்லை, சின்னண்ணன் தூங்கறாங்க. உள்ள வாங்க."

"தூங்கறவரை எழுப்பாதே" என்று அண்ணி அடிக் குரலில் கூறினான்.

"ஆறு மணி நேரமா தூங்குது எழுப்பினா என்னா... வண்டி சார்ஜ் குடுக்கணுமில்ல."

"அப்புறம் வரச் சொல்லேன்."

"மளிகைக் கடை ஆளா... கடன் சொல்றதுக்கு அண்ணே... அவர் வந்திருக்கார்."

"பெரிய அவரு... அண்ணி இடித்துக் கொண்டு போனாள். கூடத்தில் உட்கார்ந்து மீன் நறுக்க ஆரம்பித்தாள்.

"அண்ணி அதை எடுத்துட்டு உள்ளே போயேன்."

"எதுக்கு செல்வி... அவங்க பாட்டுக்கு இருக்கட்டும்."

"இல்லை... உங்களுக்குப் பிடிக்காது. ஐயராச்சேன்னு சொன்னேன்."

"சாப்பிடற பண்டம்தானே. எனக்குப் பிடிக்காதுன்னு யார் சொன்னா... எனக்குப் பழக்கமில்லை, அவ்வளவு தான், நீங்க நறுக்குங்க மன்னி."

"வாங்க தம்பி... வணக்கம்." சின்னண்ணன் ஹாலுக்கு வந்தது. லேசாய் தூக்கத்தில் தள்ளாடிற்று. "பேரு மறந்து போச்சு, நேத்து ராத்திரி கொஞ்ச நேரம் பார்த்தது."

"நடன காசிநாதன். மொபெட் கம்பெனில சேல்ஸ் மேன்."

"மோபெட் போவுதுங்களா நல்லா."

"பொறி பறக்குதுங்க."

"துபாய்ல ஒரிஜினல் ஹோண்டா பார்த்தேன், இருபத் தஞ்சு ஸி.ஸி. ராக்கெட் மாதிரி போவுதுங்க."

"நமக்குப் புண்ணியமில்லீங்க அடிபட்டு செத்துருவம்."

"அது சரி. சும்மா பேச்சுக்குச் சொன்னேன்."

"அண்ணே நேத்து கார் வாடகை" -செல்வி நினைவு படுத்தினாள்.

"அடடே... ஆமா, எத்தினி தம்பி?"

"நூறு ரூபா."

"நூறா."

"ஆமாங்க. கூட நாப்பது அம்பது ஆவும். எங்க கம்பெனிக்கு அடிக்கடி வர்ற வண்டி. அதனாலதான்."

"ஒரு நிமிஷம்" அண்ணி காசு எடுத்துத் தர, செல்வி காபி டம்ளருடன் வந்தாள்.

"ஐயருங்களா?"

"ஆமாங்க."

"துபாய்க்கு வந்துருங்களேன், உங்க ஆளுங்க கூட நிறைய இருக்காங்க."

"டெக்னிகல் ஆளுங்க வராங்க. நான் வெறும் பி.எஸ்.ஸி. இந்தக் கம்பெனில ஆறு வருஷம் இருந்துட் டேன். போகப் போக நல்ல நிலைமைக்கு வந்துடலாம். வேற வேலைன்னு தேடினா. இதைவிட உசந்ததா கிடைக் கும் நான்தான் வேண்டாம்னு இருக்கேன்."

"செல்வியை எப்படித் தெரியும்?"

"நேத்துதான் அறிமுகம், இவங்களுக்குக் புடிச்ச ரைட்டர் வீட்டுக்கு வந்தாங்க. அவங்க வீடு ஏற்கனவே அறிமுகம். வீட்ல லேட்டாகும்னு சொல்லாம வந்துட் டாங்க போலிருக்கு. நேரமாயிடுச்சுன்னு கலவரப்பட் டாங்க. வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தேன் என் வண்டில. இங்க வந்தப்புறம்தான் ஏர்போர்ட்டுக்குக் கார் வேணும்னு தெரிஞ்சது... அப்ப நான் கிளம்பறேன் சார்."

"அண்ணே... அவருக்கு ஏதாவது கொடேன்." செல்வி கிசுகிசுத்தது.

"என்னம்மா?"

"ஏதாவது சென்ட்டு, சோப்பு..."

"உள்ள போய் உனக்குப் புடிச்சது எடுத்துக் கொடு.

செல்வி ஓடிப்போய் சின்ன சென்ட் பாட்டிலும், டபுள் ப்ளேடு ஒரு பட்டையும் கொண்டு வந்து அண்ணனிடம் கொடுத்தாள்.

"நீயே கொடேன்."

வெட்கத்துடன் கொடுத்தாள்.

"எதுக்குங்க இதெல்லாம்?"

"வண்டி கொடுத்துட்டு டக்குன்னு ஏர்போர்ட்ல இறங்கிட்டீங்களே... கஷ்டமா போச்சு எனக்கு." செல்வி மெல்லிய குரலில் கூறினாள்.

"ஆமாங்க. இறங்கின களைப்புல எனக்கு யாரு என்னன்னு தெரியலை. உங்களை விட்டுட்டோம்."

"நான் பஸ் பிடிச்சு பின்னாலேயே வந்துட்டேங்க."

"காபி குடிங்க தம்பி."

"மௌனமாய் சிறிது நேரம் இருந்தார்கள்.

"மொபெட் என்ன விலை?"

"ஏழாயிரத்து சொச்சம்... எதுக்குங்க?"

"சும்மா கேட்டேன்."

"செல்விக்கு ஒண்ணு வாங்கித் தரலாமே, ஆபீஸ் போக வர சௌகர்யமாய், நான் நல்ல வண்டியா பார்த்துத் தரேன்."

"ஓட்ட வேண்டாமா?"

"ஏன் ஓட்டாத... ஊர்ல நிறைய லேடீஸ் ஓட்டறாங்க."

"சிடில ஓட்டக் கத்துக்கணும்."

"நாலு நாள் கஷ்டமா இருக்கும். அப்புறம் பழகிடும். ரொம்ப சௌகர்யங்க வேலைக்குப் போற லேடீஸுக்கு."

"பார்க்கலாம்."

"வரேங்க." அவன் விடை பெற, செல்வி வாசல் வரை வந்தாள். "அவரு வந்தா போன் பண்ணட்டுமா."

"யாரு?"

"ரைட்டர் சார்."

"ப்ளீஸ்... பண்ணுங்களேன். உங்களுக்குத் எப்படித் தெரியும்?"

"அவரே போன் பண்ணுவார். இல்லை, மேடம் பண்ணுவாங்க."

"எனக்கு நீங்க போன் பண்ணுங்களேன்."

"நிச்சயம்..." விடை பெற்றுக் கீழிறங்கிப் போனான்.

செல்வி வீடியோவைத் தடவி, ஒரு கேஸட் உள்ளே திணித்தாள். வீடியோ வாங்கியதற்குக் கூடவே கொடுத்த 'மாதிரி' கேஸட் அது. சுழல விட்டாள். ஒளிச் சிதறலாய் பாட்டு கேட்டது. உரத்தகுரலில் ஆணும் பெண்ணும் உதறி ஆடினார்கள். பாடினார்கள் பாட்டு முடிந்து சண்டைக் காட்சி வந்தது. கறுப்புத் தோல் உடையில் ஆணும் பெண்ணும் மோட்டார் சைக்கிளில் ஒருவரை ஒருவர் துரத்தினார்கள்.

அந்தக் காட்சி முடிந்து, பெரிய வயலில் இரண்டாள் உயர மிஷின் கோதுமை அறுவடை செய்தது. தலையில் தொப்பி அணிந்து ஒரு பெண் அதை ஓட்டிக் கொண்டு போனாள். துண்டு துண்டாய் நிறைய காட்சிகள் வந்தன. எதுவும் தொடர்ச்சி இல்லாமல் இருந்தது. எல்லா காட்சியிலும் பெண்கள் வேகமாய் முத்தமிட்டார்கள். முகம் பொத்தி யாரும் நாணப்படவேயில்லை. நகத்தால் தரை கீறவில்லை. வெட்கப்பட்டுப் பின்பக்கம் காட்டி ஓடவில்லை.

'நம்ம ஊர் மட்டும் ஏன் இப்படி இருக்கிறது?' என்று செல்விக்கு ஆச்சரியம் வந்தது.

சின்னண்ணன் 'என்ன படிக்கிறாய்' என்று கேட்காமல் 'படி' என்று சொல்லி விட்டது, 'எங்கே வேலை' என்று கேட்காமல், 'வெரிகுட்' என்று ஆதரித்து விட்டது. இதை இப்போதைக்கு யாரும் எதிர்க்க மாட்டார்கள். அலட்சியம் பண்ண மாட்டார்கள். இதை அதிகம் பேச விட்டு, இங்கு வீட்டில் இன்னும் சௌகர்யம் செய்து கொள்ளலாம்.

'இப்போதைக்கு கல்யாணப் பேச்சே வேண்டாம், என்று முடிவு எடுக்க வைக்கலாம், காசும் நகையும் வந்திருக்கிற சந்தோஷத்தில் மறுபடி கல்யாணப் பேச்சு துவங்கும். அண்ணி ஏதாவது ஆரம்பிப்பாள். தன் வீட்டுப் பெரிய மனிதர்கள் கூட்டி வந்து பேச வைப்பாள்.

அண்ணனிடம் என்ன கேட்க... என்ன பேச... செல்வி யோசித்தாள்.

''எனக்கு நகை வேணாம்.''

''வேற என்ன வேணும்... சென்ட்டா... புடைவையா?''

''வேணாம் அதெல்லாம்.''

''சொல்லு செல்வி.''

''மொபெட் வாங்கிக்குடு அண்ணே... காலேஜ் போக ஆபீஸ் போக.''

சுளீரென்று உள்ளே சந்தோஷம் மின்னியது.

'வாடி ஹோட்டலுக்கு' என்கிற கேவலம் இல்லாது போகும். உரசி ஹிம்ஸிக்குற வேதனை இல்லாது போகும்...

மொபெட் வாங்கினால் என்ன... நடன காசிநாதன் உதவியுடன், அண்ணன் காசில் வாங்கினால் என்ன...?

ஆமா... நல்ல மொபெட். மவுண்ட் ரோடுல ஓட்ட முடியுமா... விழுந்து தொலைச்சா...!

செல்வி நாலு பக்கமும் யோசிக்கத் துவங்கினாள்.

29

"மொபட்டா. இந்த ட்ராபிக்கில வண்டி ஓட்டப் போறியா? ஏன், உன் கைகளால் நல்லா இருக்கிறது உனக்குப் புடிக்கலையா? பத்து வருஷம் பதினைஞ்சு வருஷம் வண்டி ஓட்டற ஆம்பளையே தப்புறான். ஒண்ணுமில்ல, லாரி புக்கிங் சீனுவாசன் என் சிநேகிதம், ராத்திரி ஆட்டம் பார்த்துட்டு வண்டில தம்பியோட வரான்- திருப்பத்துல நாயை அடிச்சுட்டான். அடிச்சட்ட மேன்னு சடன் ப்ரேக் போட்டான். ஸ்லிப் ஆயிடுச்சு. சறுக்கி பிளாட் பாரம் விளிம்புல முட்டினான், பின் மண்டைல அடிச்சு, தம்பி விழுந்து எழுந்திருச்சுத் தூக்கறதுக் குள்ள பிராணன் போயிடுச்சு. இத்தினிக்கும் தம்பிக்குக் கீறல்கூட இல்லை, சொல்றதக் கேளு செல்வி. உனக்கு மொபெட் வேணாம்."

சின்ன அண்ணன் மறுத்தார்.

செல்வி பேசாது நின்றிருந்தாள்.

"இருந்திருந்து கலர் டி.வி. பிடிச்சுக்கிட்டு வந்துருக்கேன். அது வேணாம், மொபெட் வாங்குன்றியே."

"டி.வி.ல முக்கா நாழி ஹிந்தி ப்ரோக்ராம். எனக்கு ஒண்ணும் புரியலை."

"தோ பார் இந்தி வாணாம், வாணாம்னு பேசாதே. அந்தக் காலம் மலையேறிப் போச்சு. உருப்படணும்னா இந்தி படிச்சாவணும்."

"இங்கிலீஷ் படிக்கறதுக்கே வுடலை. இந்திக்குப் போயிட்டீங்களாக்கும். பஸ்ல போறது எத்தினி கஷ்டமா இருக்கு தெரியுமா?"

"ஏன். அங்க பேசிக்கிணு போக. ஜதை ஒண்ணும் கிடைக்கலையாங்கட்டியும்."- அண்ணி தாண்டி அறைக்குப் போனவள் நின்று இடித்து விட்டுப் போனாள்.

"ஜதைன்னா?" சின்னண்ணன் வியக்க.

"அவங்க நடன காசிநாதனைச் சொல்றாங்க." அவரு என் ஜதையாம்."

"ச்சே அந்தப் பிள்ளை நல்ல மாதிரி. ஐயரு பசங்க பழிபாவத்துக்கு அஞ்சினவங்க. மனசுல தப்பு இருந்தா வீட்டுக்குள்ள வந்து பேசுமா. ஜன்னலோட பார்த்துட்டுப் போயிடும்."

"அவருதான் மொபெட் வாங்கிக்கன்னு சொல்றாரு. தவணைல ஏற்பாடு பண்ணலாமாம்."

"யாரு கத்துக் கொடுக்கப் போறது?"

"அ... அவரே. அவரே... ஏற்பாடு பண்றேன்னாரு." செல்வி என்ன சொல்வது என்று தெரியாமல் காசிநாதன் பெயரைச் சொன்னாள்."

"படிப்பு கத்துக்கறதுக்கு எதிரும் புதிருமா உட்கார்ந் தாலே பத்திக்கும். நீங்க இடுப்பு புடிச்சு மோட்டார் பைக் கத்துக்குங்க... உருப்படுவீங்க. சேத்துல காலை வச்சிட்டே. காலைத் தூக்கினா கீழதான் போவியே கண்டி... கரை யேறுவேன்னு எனக்குத் தோணலை."

"ஏன் அண்ணி அதை இத்தனைத் திட்டறீங்க, ஊரு வாசல்ல செய்யாதது என்ன செய்துடுச்சு?"

"அடுத்த தெரு பாப்பாத்தி துலுக்கனைக் கட்டிக்கிட்டு பேரு மாத்திட்டா... போட்டுமே அது மாதிரி."

"என்ன பாப்பாத்தி. என்ன துலுக்கன்... ஏன் ஜாதி பேசுறீங்க? துபாய்ல வந்து பாருங்க... ஐயரு, முஸ்லீம் கிறிஸ்தவங்கன்னு ஒரு தாய் வயித்துப் பிள்ளையா பேசறோம் பழகறோம்... ஊருக்குத் திரும்பிப் போற போது. மயிலாப்பூர், குளத்தண்ட போய் முப்பது புணூல் வாங்கிட்டுப் போகணும். என் கூட வேலை செய்ற முஸ்லிம் தமிழ் புத்தகம் எழுதிக் கொடுத்துருக்கான். இந்த ஊர்ல இருக்கிற வரைக்கும் முஸ்லிம் பசங்க தமிழ் ஜாஸ்தி படிக்க மாட்டாங்கன்னு ஒரு எண்ணம் எனக்கு. தஞ்சாவூர் பக்கத்து பாய் தமிழ்ச் செல்வன்ற பேர்ல கவிதை எழுதறாரு. உடம்பு சிலுத்துப் போவுது. அத்தினி ஞானம் தமிழ்ல. ஜாதி எல்லாம் இந்த மாட்டுக்காரச் சந்துலதான்! வெளிய போனா வேற விதம்"

"கட்டிக் குட்டுத்துடுவியா உன் தங்கச்சியை வேற ஜாதி ஆளுக்கு."

"மறுக்க மாட்டேன். வேற ஜாதிலதான் கட்டுவேன்னு சபதம் போட முடியுமா?"

துட்டு மாத்திடுச்சு உங்களையெல்லாம்.

"இல்லை அண்ணி. துட்டுக்கோசரம் தான் போறோம். கடல்தாண்டி பாலைவனத்துக்குப் போய் உழைக்கிறோம். வாங்க அண்ணாச்சி சௌக்கியமான்னு ஒரு குரல் வேலைக்கு நடுவே கேட்டுருச்சுன்னா துள்ளிடுவோம். அவன் முஸ்லிமா, கிறிஸ்தவனா, நாடாரா... கேள்வியே இல்லை. இந்த ஊர்ல மலையாளத்தாரைப் பார்த்தால்கூட நம்மாளைப் பார்க்கிற மாதிரி இருக்கும். ஒட்டகக்கறி ஒருதுண்டு சாப்பிட்டுவிட்டு செம வயித்து நோவு இனாமா கொடுத்தாங்க ஆஸ்பத்திரில யாரு?... மலையாளத்துப் பெண்ணு, நர்ஸு, எந்தா சுகந்தன்னேனு காலைல

பொண்ணு, நர்ஸு, எந்தா சுகந்தன் தாயே வந்து கேட்கிற மாதிரி இருக்கும். நீங்க என்னடான்னா ஜாதி பேசறீங்க.''

''வுட்டுறணுமா அல்லாத்தையும்... ஜாதி ஜனம். நம்ம மரியாதை எல்லாம் பறக்க வுட்டுறணுமா?''

''பறக்க வுடவும் வேணாம். இறுக்கிப் பிடிச்சுக்கவும் வேணாம். செல்வி நான் துட்டுக்குப் பால் மாறலை, காஞ்ச ரொட்டியும், உப்பில்லாத வெண்ணெயும் சாப்பிட்டு சம்பாக்கிறது உனக்கோசரம் தான். மொபட்டு அவஸ்யமா? ஆபீஸுக்கு சைக்கிள் ரிக்ஷாவுல போக முடியாதா?''

''காலேஜ் போணும்ணே. ஒருநாள் பஸ்ல வந்து பாரு. தாங்கவே தாங்காது உனக்கு. இறங்கி நடக்கணும் கொஞ்ச தூரம், அதுக்குள்ள விஸில் அடிச்சுடறானுங்க.

''பட்டணம் கெட்டுப் போச்சு. முன்னமாதிரி இல்லை.''

''ஏன் வெளியே போவணும்னு கேட்கிறேன்?'' அண்ணி உள்ளேயிருந்து கூவினாள்.

''அதுக்கோசரம் வெளிவாசல்ல போகாம இருக்க முடியுமா மொபட்டு... புரிபடலை எனக்கு. ஐயரு பையனைக் கூப்பிடேன், பேசுவோம். என்னவிலை?''

மாலையில் அச்சகத்துக்கு ஓடி, செல்வி டைரெக்டரியைப் புரட்டி காசிநாதனுக்குப் போன் செய்தாள். போன் செய்யும்போது ஒரு சந்தோஷம் உணர்ந்தாள்.

''வீட்டுக்கு வாங்க, அண்ணன் பேசணுமாம்.''

''ஏங்க. எதுக்கு?''

''ஏதோ விசாரிக்கணுமாம்?''

எதிர் முனையில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

''என்னங்க, ஏதும் தகராறா?''

''ஏன், தகராருன்னா வரமாட்டீங்களா?''

"இல்லீங்க, வரேன்... ஆனா அப்படி எதுவும் செய்யலை யேன்னு பயப்படறேன்."

"இத்தினி பயம் இருக்கிற ஆளு 'ஸ்கூட்டர்ல வாங்க. ஸ்கூட்டர்ல வாங்க'ன்னு கட்டாயப்படுத்தி ஏன் கூப்புட ணும்."

"ஐயோ பயம் என்னைப் பத்தியா? உங்களைப் பத்தி தான். பார்த்துப் பேசின முதநாளே நம்மால ஒரு பொண்ணுக்குத் தொந்தரவான்னு வேதனைதான். அவரு கதைங்களை நம்ம மாதிரியே ஒரு பொண்ணு படிச்சிருக்கு. நமக்குப் பேச ஆள் கிடைச்சதுன்ற சந்தோஷம் கிடைக் காதேன்னு ஏக்கம்தான்."

"ஒரு தகராறும் இல்லை. சின்னண்ணன் கிட்ட மொபட் வாங்கித் தரச் சொல்லியிருக்கேன். அது பேச உங்களைக் கூப்பிடுது. வரீங்களா?"

"சேல்ஸ்மேன் வேலையா? கொளுத்திடறேன் வுடுங்க. நான் வம்பு தும்பாயிடுச்சோன்னு கவலைப் பட்டேன்."

"ஏங்க, நீங்க ஐயருதானே?"

"ஆமா, திடீர்னு ஏன்?"

"எங்க வீட்ல உங்களை வெச்சு சண்டை நடந்தது, அதான் கேட்டேன்."

"தடேர்ன்னு கல்லு போடறீங்களே. சண்டையா சேல்ஸா?"

"இரண்டும்தான்."

"இதோ பாருங்க, நான் தயாரா வரதுக்குதான் கேட் கறேன். சண்டைன்னா காசிநாதன் ஓடிடுவான்னு நினைக் காதீங்க."

"சுருக்கமா சொல்றேன். அண்ணன் மொபட் வாங்கித் தரேன்னாரு. அண்ணி குறுக்கிட்டால் அதுக்கேத்தபடிப் பேசணும்."

"டன்"

"டன்னுனா."

"செய்தாச்சுன்னு அர்த்தம்."

"இங்கிலீஷ்ல சொன்னீங்களா, எப்ப வரீங்க?"

"ஆறு மணிக்குமேல வரட்டுமா?"

"வாங்க" போனை கீழே வைத்தாள். ஏதோ திருட்டுத் தனமாய் சாதித்த சந்தோஷம் மனசுள் மிதந்தது.

"மாலை ஆறு மணிக்கு ஆபீஸுக்கு உடுத்திப் போகும் புடவைகளில் நல்லது ஒன்று எடுத்து உடுத்திக் கொண் டாள். பவுடர் தடவி பொட்டு வைத்துக்கொண்டாள். பதறாமல் இருக்க வேண்டும் என்று தீர்மானித்து கொண் டாள்.

அவன் வண்டி சப்தம் வாசலில் கேட்டது. விலுக் கென்று எழுந்தாள், அண்ணி பார்ப்பது உணர்ந்தும் மெல்ல நடந்து சமையலறைக்குப் போனாள். அண்ணன் கூப்பிடும் வரை மெல்ல பானையிலிருந்து தண்ணீர் எடுத்து மிடறு மிடறாய்க் குடித்தாள்.

"செல்வி, உங்க சிநேகிதரு வந்துருக்காரும்மா." அண்ணன் குரல் கேட்டது. உதடுகளைக் கடித்துக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

"வாங்க, வணக்கம்."

"வணக்கம், அண்ணி இல்லையா?"

"உள்ளே இருக்காங்க."

"கூப்பிட வேணாம். இது முண்டகக்கண்ணியம்மன் பிரசாதம். அண்ணிக்கிட்ட கொடுத்துடுங்க." ஒரு துணுக்

குப் பூவும், விபூதி பொட்டலமும் விரல் படாது கொடுத்தான். அண்ணி அறை வாசலிலிருந்து பார்த்தாள்.

"அண்ணி கார்ல வரும்போது எங்கே கோயில் கண்டாலும் புத்தி போட்டுக்கிட்டாங்க. எனக்கு அந்தப் பழக்கம் உண்டு. சின்ன பிள்ளையார் கோயில் பார்த்தாலும் கும்புடாம இருக்க மாட்டேன். அம்மன் கோயில் நுழைஞ்ச போது இவங்க ஞாபகம் வந்தது."

"செல்வி, கொண்டு போய் கொடுங்க." அண்ணி அசிரத்தையாய் வாங்கினாள்.

"வணக்கம்மா" அவன் கை குவித்தான்.

"இந்த மாதிரி சாமி கும்புடற நல்ல பழக்கமெல்லாம் இதுக்கு சொல்லித்தரக்கூடாதா? அத வுட்டுட்டு மோட்டார் சைக்கிள் ஓட்ட சொல்லித் தரேன்றீங்களே."

"எனக்கும் இஷ்டம் இல்லை. செல்வி வண்டி விவரம் கேட்டாங்க. சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன். ஸிடில மொபட் ஓட்டறது ஈஸி இல்லை. கஷ்டம்தான். ஆனா, பஸ்ல போறதுக்கு இது தேவலாம். என் சிஸ்டர் ரொம்ப பயந்தாங்கொள்ளி. மொபட் ஓட்டினா இடிச்சுடுவோமோ, செத்துருவோமோன்னு பயம். அதுவே வாங்கிடுச்சு ஆறுமாசம் முன்னாடி. பஸ்ல எவனோ தினம் ஃபாலோ பண்றானாம் பயம். இந்த பயத்துக்கு மொபெட் பயம் தேவலைன்னு வாங்கிட்டா."

"வேலை செய்யறாங்களா?"

"இல்லைம்மா, வக்கீலுக்குப் படிக்குது. பெரிய அக்காவை மதுரைல கொடுத்துருக்கோம். அவரு கவர்மெண்ட் ஆபீஸர். அடுத்த சிஸ்ட்ருக்கு போன வருஷம் கல்யாணம் ஆச்சு. அத்திம்பேர் டி.வி. கம்பெனில அக்கௌண்டன்ட். அடுத்து நானும். அப்புறம் தங்கச்சி."

"தங்கச்சி கட்டிக் கொடுக்கலையா?"

"இல்லை, அது எம்.ஏ. முடிச்சு வக்கீலுக்குப் படிக் கணும்னு சொல்லிடுச்சு. சரின்னுட்டம்."

"வீட்ல பெரியவங்க..."

"அப்பா இருக்காரு. அம்மா பத்து வருஷம் முன்னாடி தவறிட்டாங்க, அப்பா எங்கூட இருக்காங்க. பெரிய அண்ணன் எங்கே?"

"ப்ரஸ்ல இருக்காரு."

"செல்வி, இந்த பேப்பரு அவர்கிட்ட கொடேன், இது லோன் அப்ளிகேஷன் பாரம். நாலு பக்க மேட்டர் அஞ்சா யிரம் காப்பி வேணும், என்ன கொட்டேஷன்னு நாளைக்கு போன்ல சொல்லச் சொல்லுங்க. ரேட்டு கட்டுப்பட்டா உடனே ஆர்டர் தரேன். இது சரியா பிரிண்ட் பண்ணிக் கொடுத்தா வேற சிலதும் கிடைக்கும். சொல்லுங்க சார். கூப்பிட்டீங்களா."

"சின்னண்ணன் அவனையே பார்த்துக் கொண்டிருக்க, காசி திரும்பி அவரைப் பார்த்துச் சிரித்தான்.

"ஒரு மொபெட் வேணும்."

"தரலாம், லேனா, காஷ் டவுனா?"

"காஷ் டவுன்."

"ஏ க்ளாஸ் டிஸ்கவுண்ட்ல தரேன்."

"செல்வி வேணுங்குது."

"வாங்கலாம்."

"எப்படி ஓட்டறது, என்ன விஷயம், இதால முடியுமா? ஸிடி பயம்ன்றீங்க. உங்க சிஸ்டர் ஓட்டுதுன்னீங்க, எனக் குப் புரியலை."

"சார், அந்தக் காலத்துல கரி பஸ்ஸுன்னு ஒண்ணு இருந் ததாம். அதுல போறதுக்கு ஆள் சேர்க்க கூவுவாங்களாம்.

ஏன் தெரியுமா? பஸ்ல போக பயம், வனஸ்பதி மிருகக் கொழுப்பு அற்றதுன்னு நாலு வருஷம் விளம்பரம் பண்ண பிறகுதான் ஜனம் துணிஞ்சு வாங்கித்து. மொபெட்டும் அப்படித்தான். இரண்டு நாள் பயமா இருக்கும். மூணா நாள் புடிபட்டுடும். மூணு மாசம் கழிச்சு மொபெட் இல்லேன்னா முடியாது.''

''விவரம் சொல்லாம வேற ஏதோ.''

''விலை விவரமா?''

''அது வேணாம் துரை, எப்படி செல்வி வண்டி ஓட்டும்?''

''நான் கத்துத் தரேன்.''

''அப்ப வேணாம்.''

''ஏங்க?''

''எப்படிங்க வயசு பொண்ணை ஒண்ணா உங்ககூட வண்டில அனுப்பறது''

''என் சிஸ்டருக்கு நான் தான் கத்துக் கொடுத்தேன்.''

''சிஸ்டரு பரவாயில்லை, இது கூச்சமான பொண்ணு. இது தவிர.''

''அண்ணி கூச்சப்படுவாங்க இல்லை, எனக்குப் புரியுது, என் சிஸ்டரை விட்டுக் கத்துத் தரச் சொல்றேன். விவரம் சொல்லிக் கொடுத்துக் கூடவே ஓடினா போதும் இரண்டு தடவை மூணாவது ரவுண்டு வெளியே செய்துடும்.''

''என்ன விலை?''

''ஏழாயிரத்து சொச்சங்க வந்து வண்டி பாருங்க. லேடீஸ் ஓட்டணும்னு பில்ட் பண்ணின வண்டி இது. லைட் வெயிட். ஸ்பீடு. ப்ராப்ளம் ஏதும் வராது. வந்தாலும் ஒரு வருஷத்துக்கு இலவச சர்வீஸ்.''

"அண்ணி என்ன சொல்றீங்க?"

"அவங்களைக் கேட்க வேணாமா?"

"நீங்க சரின்னா அண்ணன் சரின்னுடுவாரு."

"ஓட்டத் தெரியலைன்னா அதே விலைக்குத் திருப்பி வாங்கிக்குவாராம்மா?"

"அது எப்படிங்க?" அவன் வியக்க, செல்வி சரியென்று சொல் என்பதாய் சைகை செய்தாள்.

"சரிங்க, வேணாம்ங்கிறபோது அதே விலைக்குத் திருப்பி வாங்கிக்கிறோம்."

"செக் எடு செல்வி. நீங்க இதை வாங்கிக்கிட்டு வீட்டு வாசலுக்கு வண்டி கொண்டாந்துடுங்க."

"இங்கேயிருந்து ஓட்டப் பழகிக்கட்டும்றீங்களா?" அவன் சோர்வோடு கேட்டான்.

"ஆமாம்."

இரண்டாம் நாள் ஆபீஸுக்கு யாரிடமும் காரணம் சொல்லாமல் அரை நாள் லீவு போட்டுவிட்டு, காசிநாதன் கம்பெனியில் மொபெட் எடுத்தாள். பட்டை உரிக்கிற வெயிலில் காசியோடு ஐலண்ட் கிரவுண்ட் போனாள். காசி அங்கே வண்டி நிறுத்தினான்.

செல்வி மகமாயி என்று வண்டியில் உட்கார்ந்தாள். இயக்கும் விவரம் சொன்னான். மனசு குவித்துக் கேட்டாள். பின்னே ஏறி அவள் தோள் பிடித்துக் கொண்டான். மெள்ள க்ளச் தளரவிட்டு, ஆக்ஸிலேட்டர் கொடுத்தாள். வண்டி முன்னே நகர்ந்து இருவரையும் சுமந்து ஐலண்ட் க்ரவுண்டில் சுற்றிச் சுற்றி ஓடியது.

30

"உனக்குன்னு வண்டி வாங்கின பிறகு கலவரப் பட்டா எப்படி? எதுக்கு பயப்படற? விழுந்து அடிபட்டுக்கு வம்னா... நாலு பேருக்கு முன்னாடி அவமானப் படற மாதிரி ஆயிடும்னா... அவமானம்னு ஒண்ணு உண்டா? ஜெயிக்கிற வரைக்கும் எல்லோரும் சிரிக்கத்தான் சிரிப் பாங்க. எளக்காரம் பண்ணுவாக. ஜெயிச்சிட்ட பிறகு...? எப்ப ஜெயிக்க முடியும்? விழுந்து வர்றப்பதானே? மாட்டிக் கிட்டுத் தவிக்கறப்பதானே? பத்து நிமிஷம் உன் பின்னால உட்கார்ந்து வண்டி ஓட்டக் கத்துத் தர்றேன். பத்தே நிமிஷம். என்னடா இவன் மேல இடிக்கறதுக்கு ரூட் போடறான்னு நினைக்காதே. பொண்ணு மேல இடிக் கறதுக்குன்னே அலையற பையன் இல்லை நான், எனக்கு ஆயிரம் வேலை இருக்கு. நீ ஒரு பொண்ணு மந்தைவெளி மாட்டு சந்துல மொபட் ஓட்டிக்கிட்டுப் போனா இன்னும் நூறு பொண்ணுங்க. மொபட் வங்க வராதாங்கற சுயநலத் துல கத்துத் தரேன்... ப்ளீஸ்... நீ வெட்கப்படாதே. நீ வெட்கப்படற போது எனக்கு கிக் ஜாஸ்தி ஆவுது. சாதாரணமா இரு, இது என்ன காசின்னு கேளு. எப்படி ஓட்டறதுன்னு பேசு."

"என்ன இருந்தாலும் நீங்க ஆம்பிளை, நான் பொம் பளை இல்லையா?"

"ஆமா உனக்காக நான் பொம்பளையா மாற முடியுமா? நீ ஆம்பிளையா மாறு. இப்ப அதுதான் தேவை. உட்கார் பின்னாடி. போட் கிளப் பக்கம் போய்டுவோம். பத்து நிமிஷம்? பத்தே நிமிஷம்."

அவன் முன் சீட்டில் உட்கார்ந்து கிளட்ச் தளரவிட்டு மிருதுவாய் ஆக்ஸிலேட்டர் தர, வண்டி இருவரையும்

சுமந்து இடதும் வலதும் அல்லாடி வேகம் கூடியவுடன் ஒரு நிலைப்பட்டு, போட்கிளப் ரோட்டில் ஓடியது. முதல் சுற்றில் அவன் பின்னால் இருப்பதும், ப்ரேக் அவன் நெஞ்சு முழுவதும் முதுகில் படர்வதும், புஜங்கள் உரசுவதும். அவன் முகவாய் அவள் பிடரியில் மோதுவதும் ஒரு கிளர்ச்சி வேதனையைத் தந்தன. இரண்டாவது நாலாவது சுற்றில் அவன் இருப்பு மறந்து போயிற்று.

''இப்ப நீ மட்டும் போய்ட்டுவா செல்வி. போட் கிளப் ரோட் தாண்டி மெயின் ரோடுக்குப் போ. ஸ்பீட் அட்ஜஸ்ட்மெண்ட் கிளட்சுலதான் இருக்கு. தடக்குன்னு விடாதே.... எவ்வளவு நிதானமா விரல் பார்க்கிறியோ அத்தனை நிதானமா வண்டி கிளம்பும் பயப்படாதே போ. நான் ஜங்ஷன்ல நிக்கறேன்.''

கூந்தல் பறக்க, தனியே போனாள். போட் கிளப் சாலையை வட்டமடித்தாள். எதிரே லாரி வந்த போது மண் தரைக்கு இறங்கி ஏறினாள். ஆள் இல்லாத அபிராம புரம் சாலைக்கு வண்டியைத் திருப்பினாள். அகலமான சாலையில் நூல் பிடித்தாற் போல ஓட வண்டி சொன்ன சொல்லுக்குக் கட்டுப்பட்டது.

சிக்னலில் ஆம்பர் விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்தது, என்ன அர்த்தம் இதுக்கு? 'வேகமாய் கடந்து, போ' என்றா? 'நில்' என்றா...? தடுமாறி கால் ஊன்றி நிறுத்தினான், பச்சை வரும் என்று காத்திருந்தாள்.

பின்னால் கார் ஹார்ன் அடித்தது. காலால் உந்தி ஓரம் வந்தாள்.

''வாட் ஹாப்பண்ட்?''

''ஒண்ணுமில்லை, சிக்னல்.''

''சிக்னலா... இது இப்ப சிக்னல் இல்லை. பார்த்து கிராஸ் பண்ணுன்னு அர்த்தம்.''

"ஓ..."

"காருக்குள் சிரிப்பு கேட்டது."

கிளட்ச் தளரவிட, வண்டி எகிறிக் கிளம்பிற்று விட்ட வேகத்துக்குப் போதுமான ஆக்ஸிலேட்டர் இல்லாமையால் குதித்து நடு கிராஸிங்கில் நின்றது. வண்டியைவிட்டு இறங்கித் தள்ளினாள். கியரில் இருந்த வண்டி அசைய மறுத்தது. மாடு இழுப்பது போல் டயர் தேய இழுத்தாள். வியர்த்துக் கொட்டியது. சைக்கிள் ரிக்ஷா ப்ரேக் போட்டு நின்று வளைந்து தாண்டிப் போனது, ரிக்ஷாக்காரன் ஏதோ திட்டிக் கொண்டு போனான். கார் ஒன்று உரசித் திரும்பியது மோட்டார் சைக்கிள் ஆள்கள் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனார்கள்.

கிளட்ச் அழுத்தித் தள்ளினாள். சற்று சுலபமாய் வண்டி உந்தித் தள்ளும் செயலில் கிளட்ச் தளர்ந்துவிட மறுபடி சிக்கிற்று.

ஒரு ஸ்கூட்டர்காரன் நின்னு ஓரம் கட்டிக் கீழிறங்கி வந்தான்.

"கியர்லே இருக்கே, எப்படித் தள்ள முடியும்?" வண்டியை அசைத்து நியூட்ரலுக்கு மாற்றினான். பைக்கை ஓரம் தள்ளிக் கொண்டு வந்து கொடுத்தான்.

"தாங்க்ஸ்."

"கத்துக்கறீங்களா...? போய்டுவீங்களா ஜாக்கிரதையா?"

"போய்டுவேன்" சந்து திரும்பி வண்டி எஞ்சினை ஓட விட்டு ஏறி அமர்ந்து உதறி கடித்து கிளட்ச் அழுத்தி முதுகு வளைத்து ஆக்ஸிலேட்டர் கொடுக்க, அவன் சிரித்தான்.

"அப்படித்தான் முத இரண்டு நா ஏண்டா இந்தச் சனியனை வாங்கினம்னு இருக்கும். அப்புறம் சரியாயிடும், கிளட்ச் விடுங்க நிதானமா."

விட, எகிறி நின்றது.

''நியூட்ரல் பண்ணிக்குங்க மேடம்... ம்ம்... இப்ப ஸ்டார்ட் பண்ணுங்க. எஞ்சினைக் காது கொடுத்துக் கேளுங்க. கிளட்ச் ரிலீஸ் பண்றபோது எஞ்சின் சவுண்ட் மாறும். மார்ற போது ஆக்ஸிலேட்டர் கொடுத்தா போதும். ஆக்ஸிலேட்டர் கொடுத்து கிளட்ச் வுட்டீங்கன்னா எகிறும்... ம்ம்... செய்யுங்க.''

''வண்டி மெல்ல நகர்ந்தது. 'தேங்க்யூ'' என்று முன் பக்கம் பார்த்தபடியே கத்தினாள். திரும்பிப் பார்க்க பயமாய் இருந்தது.

சிக்னல் தாண்டி இடப்பக்கம் போய், போட் கிளப் சாலையில் நுழைய, காசி நின்ற இடம் காலியாய் இருந்தது. எங்கே போயிருப்பான்... கவலையோடு போட் கிளப் ரோடு சுற்றினாள். மறுபடி அபிராமபுரம் சாலையில் நுழைந்தாள். போன முறை போன ரோடிலேயே போனாள், பஸ் ஒன்று ஸ்டாப்பிங்கில் நின்றிருந்தது. கவன மாய் ஓவர்டேக் செய்தாள். மறுபடி சாலை ஓரமாகவே போனாள். சிக்னலில் வேகம்மட்டுப் படுத்தி காலூன்றி சில விநாடிகள் நின்று மெல்ல வேகம் கூட்டினாள். எதிரே ஒரு பையன் டீ கிளாஸுடன் ஓட பிரேக் போட்டு, மறுபடி வேகம் கூட்டினாள். மறுபடி போட் கிளப்பில் நுழைந் தாள். காசி இப்போது அங்கே இல்லை. வண்டி நிறுத்தி இழுத்து ஸ்டாண்ட் போட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள்.

எதிர் பங்களாவின் வாசலில் நின்ற கூர்க்காவை ''இங்க நின்ன ஆள் பார்த்தியா?'' என்று கேட்டாள், அவன் இல்லையென்று தலையசைத்தான். சிரித்தான்.

''முண்டம், எதுக்கு சிரிக்கறே' மனசுள் திட்டிக் கொண்டு வண்டி ஸ்டார்ட் செய்தாள். மெல்ல ஓட்டிக் கொண்டு போனாள். வேகம் கூட்டினாள். சட்டென்று

நிறுத்தி மறுபடி வேகம் எடுத்தாள். மெல்ல ஓட்டினாள். அப்படியே வட்ட மடித்துத் திரும்பினாள். காலூன்றி ஒருமுறை திரும்பினாள். காலூன்றாமல் ஒருமுறை திரும்பினாள். ஏதோ பிடிபட்டது போல் இருந்தது.

காசி மந்தவெளி போயிருக்குமா? அபிராமபுரம் சாலை வழியே மந்தைவெளி போனாள். இரண்டு மூன்று மொபெட் ஓவர் டேக் செய்தாள். ஒரு பஸ் இரண்டும் கெட்டானாய் நடுவே நின்றிருந்தது. இடப் பக்கம் அதைத் தாண்டுவதா, வலப்பக்கம் தாண்டுவதா என்று யோசித்து இடப்பக்கம் தாண்ட பஸ் கிளம்பிற்று பயந்து அப்படியே ப்ளாட்பாரத்தின்மீது ஏற்றி பஸ் போனதும் கீழிறங்கினாள். மந்தைவெளி டெர்மினஸ் அருகே நின்றாள். நிறைய பேர் அவளையே பார்ப்பதுபோல் பட்டது, இடதுபக்க சேலை முற்றிலுமாய் விலகியிருந்தது. வலக்கையால் இழுத்து மூடிக்கொள்ள, வண்டி நின்று விட்டது. நியூட்ரலுக்கு மாற்றி வண்டி ஸ்டார்ட் செய்து, முன்னே போய் வட்டமடித்துத் திரும்பினாள்.

ஒதுங்கியிருக்கிறது பார்த்துத்தான் கூர்க்கா சிரிச்சானா, கடங்காரன்... மறுபடி ஓரம் நிறுத்தினாள். இழுத்துத் தலைப்பைப் பிரித்து சொருகிக் கொண்டு புடைவையை நீவி விட்டு சற்றுநேரம் நின்றாள். களைப்பாய் இருந்தது. டீ குடித்தால் தேவலை என்றுபட்டது. காசி இல்லாம டீ குடிக்கலாமா... தப்பு, எங்க ஒழிஞ்சுது சனி... என்னைத் தேடிக்கிட்டு சுத்துதா? மறுபடி வண்டி எடுத்துக் கிளம்பி பஸ் ஓவர்டேக் செய்து அபிராமபுரம் சாலையில் போய் இந்த முறை சிக்னலுக்கு நிற்காமல் தாண்டி போட்கிளப் ரோடில் நுழைய, அவன் கூர்க்காவோடு கட்டைச்சுவரில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

"ஏய் காசி... எங்க போய்ட்டீங்க?" அவனைப் பார்த்துக் கொண்டே அருகே போக, கூர்க்காவும் காசியும் ஆளுக்

கொரு திசையாய் சிதறி ஓடினார்கள். வண்டி டொம் என்று மதில் சுவரில் இடித்து சரிந்தது. செல்வி மல்லாக்க விழுந்து உருண்டாள். வண்டி தரையில் சாய்ந்து சுற்றி நின்றது.

''செல்வி... என்ன ஆச்சு? கிட்ட வரபோது ஸ்லோ பண்ண வேணாமா? இத்தினி வேகமாவா ஓட்டறது?'' வண்டி தூக்கி நிறுத்தினான். அவளுக்குக் கை கொடுத்தான்.

''நல்லா ஓட்டினேன் காசி.''

''தெரியுது.''

''நெசமா காசி...''

''பார்த்தேனே. இங்கதான் ஒளிஞ்சுகிட்டு இருந்தேன். நீ வந்தா இல்லைன்னு சொல்லிடச் சொன்னேன். நீ போனதும் ஓட்டறத நின்னு வேடிக்கைப் பார்த்தேன்.''

அப்போ கூர்க்கா விலகின சேலை பார்த்து சிரிக்க வில்லையா? ஏமாற்று சிரிப்பா அது? நானாய் நினைத்துக் கொண்டிருக்கிறேன்... எல்லாரும் விலகின சேலையைத் தான் பார்க்கிறார்கள்... என்று யோசிக்கிறேன்...''

''காசி... நல்லா ஓட்டினேன் காசி. பஸ் எல்லாம் ஓவர் டேக் பண்ணேன். நீ பின்னாலே உட்காறேன். எப்படி ஓட்டறேன்னு பாரேன்.''

''உன் பின்னாடி உட்காரலாமா.''

''பயமில்லாம உட்காரலாம்.''

''பயத்துக்கு சொல்லலம்மா. நா ஆம்பளை, நீ பொம் பளைன்னு ஏதோ சொன்னியே, அதுக்குக் கேட்கறேன்.''

சட்டென்று வெட்கம் வந்தது.

''இப்ப அதெல்லாம் இல்லை. உட்காருங்க,'' அவன் உட்கார, வண்டி கிளம்பியது.

''எங்க போணும் காசி?''

"பீச் ரோடு போ."

வண்டி முழு வேகத்துடன் கடற்கரைச் சாலையில் போயிற்று.

"மொள்ள போ செல்வி, இவ்வளவு ஸ்பீட் வேணாம்."

"ஸ்பீட் போறது நல்லா இருக்கு காசி."

"வண்டி முழுக்க புடிபடட்டும் செல்வி."

"காபி சாப்பிடலாமா?"

"எங்கிட்ட காசில்லை."

"ச்சீ போங்க... யார் துட்டு கேட்டது உங்களை?"

"அப்ப ரெடி. போகலாம்."

அப்படியே அரைவட்டமடித்து வலப்பக்கம் பீச் ரோடில் நுழைய பின்னால் வந்த பியட் கார் பயந்து கிறீச்சிட்டு நின்றது.

31

"செல்வி."

"ஏய் பொம்பளை, சொல்லிட்டு வந்துட்டியா?" கார்க்காரன் கூவினான்.

"சர்தான் போடா" வண்டி மண் சாலையில் குலுங்கி ஓடிற்று. இடது பக்கம் திரும்பி நீச்சல் குளத்துக்கு அருகே உள்ள ஓட்டலுக்குப் போயிற்று. சரக்கென்று நின்றது.

"செல்வி திரும்பறபோது."

"சிக்னல் காட்டணும், மறந்துட்டேன்."

"யம்மா... உன்கூட வரதுக்கு பயம்மா இருக்கு... தடால் தடால்ன்னு திரும்பாதே."

"நான் இருக்கேன்... ஏன் பயப்படறீங்க?"

"நேரம்... என் நேரம்..."

வண்டி இழுத்து நிறுத்திப் பூட்டினாள். ஆசையாய்த் தடவிக் கொடுத்தாள். "நல்ல வண்டி இல்ல இது" என்றாள்.

காசி சிரித்தான்.

"நான் நல்லா ஓட்டினேனா?"

"ஓட்டற."

"தேங்க்யூ காசி."

"எதுக்கு?"

"வண்டி கத்துக் கொடுத்ததுக்கு."

"தேங்க்ஸ் சொல்லிட்டியே..."

"எப்ப?"

"நானும் கூர்க்காவும் பேசிக்கிட்டு இருந்தப்போ என் கால் பார்த்து குறிவச்சு முட்ட வரலை அப்பவே."

"ஏன் ரொம்ப பயந்துட்டீங்க இரண்டு பேரும்?"

"நாங்க பயந்துட்டம்மா... வெரிகுட். மெட்ராஸ் முழுக்க பயப்படப் போவுது இனி. செல்வி வண்டி ஓட்டினா ரோடே காலியாகப் போவுது."

"சும்மா கலாட்டா பண்ணாதீங்க. என்ன சாப்பிட றீங்க... காப்பி."

"காப்பி தானா?"

"கரெக்ட்... ஸ்வீட்லேர்ந்து ஆரம்பிப்போம் யப்பா... ஐயம் வெரி ஹாப்பி. அதை இதைச் சொல்லி வண்டி வாங் கிட்டேன். உங்க புண்யத்துல ஓட்டவும் கத்துக்கிட்டேன்."

"என் புண்யம் எதுவுமில்லை, உனக்குக் கத்துக்கிடற ஆசை இருந்தது."

"நான் ஓட்டறேன் இல்லை?"

"நல்லா ஓட்டறே."

"இந்த வண்டில செங்கல்பட்டு, காஞ்சிபுரம் போலாமா?"

"எதுக்கு?"

"அத்தினி தொலைவுல போலாமான்னு கேட்கறேன்?"

"விட்டா கடல் தாண்டி போய்டுவேன்னு நினைக்கிறேன்."

"போகணும் காசி. சிங்கப்பூர், ஹாங்காங், ஜெர்மனி எல்லாம் போகணும். ஜப்பான் போகணும்."

"இந்த மொபட்லியா?"

"இல்லை, ப்ளேன்ல. ஐயோ... என்னமோ எனக்கு இறக்கை முளைச்சாப்பல இருக்கு காசி. இப்ப காபி மட்டும் சாப்பிடுவோம். வண்டி எடுத்துக்கிட்டு போய் வேற நல்ல ஓட்டல்ல ஸ்வீட்..."

"எப்பவும் வண்டி ஓட்டிக்கிட்டு இருக்கணும் போல இருக்கா."

"ஆமாம்."

"சிறைப்பட்டது வெளியே வந்திருக்கிறது. எல்லா திசையிலும் சிறகடித்துப் பறக்கறது. உச்சிதொட ஆசைப் படுகிறது. உயரத்துக்கு எல்லை உண்டா?"

"ஒண்ணு பண்ணுவியா?"

"என்ன?"

"ஸ்வீட் வாங்கிக்குவம்."

"வாங்கி?"

"ரைட்டர் வீட்டுக்குப் போவோம்."

"அவரு இல்லைன்னா."

"மேடம் பார்த்துட்டு வருவோம்."

"இருக்காரான்னு தெரிஞ்சுக்கிட்டுப்போவோமே..."

"இருப்பார் போலாம்."

"வேணாம் காசி."

"ஏன்?"

"நாம இரண்டு பேர் மட்டும் சுத்திக்கிட்டு இருக்கலாம். பேசலாம்."

"என்ன பேசறது?"

"உங்களைப் பத்தி, என்னைப் பத்தி, அவரு புஸ்தகம் பத்தி, நாம பேசுவோம். அவர் எதுக்கு?"

"அதுவும் சரி?"

"ஒண்ணு செய்வோம், ஸ்வீட் வாங்கிக்கிட்டு வண்டில நேர எலியட்ஸ் பீச்சு போயிரலாம். இருட்டற வரைக்கும் அங்கே உட்கார்ந்து பேசலாம்.

"நேரமாயிடாது?"

"எலியட்ஸ் பீச்சுலேர்ந்து பத்து நிமிஷத்துல வீட்டுக்குப் போயிடலாமே."

"செல்வி."

"என்ன காசிநாதன்."

"ரொம்ப அடக்கமா இருந்த உன்னை, அமைதியா இருந்த உன்னை, ஒரு மாதிரி பண்ணிட்டேனா."

"கடவுளே... யாராவது இப்படி பண்ணமாட்டாங்களான்னு காத்துக் கிடந்தேன். ரொம்ப நாளைக்குப் பிறகு இன்னிக்குத்தான் சந்தோஷமா இருக்கேன்."

"எதுனால சந்தோஷம்?"

"என்னால எதுவும் செய்ய முடியும்னு தோணுது. வண்டி ஓட்டக் கத்துக்கிட்டேன். இனி அசராத காலேஜ்

போவேன். நிறையப் படிப்பேன். லைப்ரரி போவேன். அங்க இங்க மீட்டிங் நடந்தா போவேன். பத்திரிகைக்கு ரிப்போர்ட் எழுதுவேன். நான் கதை கூட எழுதணும் காசி.''

''எதுக்கு?''

''என்னை எல்லாரும் பாராட்டணும். 'செல்வி தி கிரேட்'னு சொல்லணும். மாலை போடணும் சால்வை போர்த்தணும் செல்வி, வெறும் மீன் குழம்பு, ரசம் இல்லை.''

''மீன் குழம்பு கேவலமா செல்வி.''

''இல்லைப்பா. இது மட்டும் தான் பொம்பளைன்றது தப்பு இல்லியா. அவமரியாதை இல்லையா?''

''அப்புறம்?''

''கல்யாணம் கட்டிக் குழந்தை பெத்து அமைதியா உட்கார்ந்துடணும், பசங்க பெரிசானதும் மறுபடி எழுதணும்.''

''கல்யாணம் செய்த பிறகு எழுதக் கூடாதுன்னு யாராவது சொன்னாங்களா.''

''அது இல்லை காசி, அப்ப வீட்டு மேல கவனம் அதிகமா இருக்கணும், வண்டி எடுத்துக்கிட்டுப் போய் நானே மளிகை சாமான். காய்கறி வாங்கிக்கிட்டு வந்து வீட்டு ஆம்பளையைத் தொந்தரவு பண்ணாத என் வேலையை நானே செய்துக்கறதுக்கு வண்டி சௌகர்யம் இல்லை. கல்யாணம் ஆனாகூட?''

''சௌகர்யம்தாம்.''

''ஆனா ஜென்ட்ஸ் லைக் பண்ண மாட்டாங்களா?''

''எதுக்கு?''

''லேடீஸ் பின்னாடி, அதாவது பொண்டாட்டி பின்னாடி மொபட்ல உட்கார்ந்து போறதுக்கு.''

"அப்படியொண்ணும் இல்லையே."

"இல்லை காசி. நீ என்னாடி ஓட்டறது, நான் என்னாடி உன் தோள் பிடிச்சுக்கிட்டு வரதுன்னு யோசிப்பாங்க, வர மாட்டாங்க."

"நான் யோசிக்க மாட்டேன். தாராளமா உன் பின்னால உட்கார்ந்துட்டு வருவேன்."

"இல்லை..." சட்டென்று நிறுத்தினாள். மெல்லிய சிரிப்புடன் உட்கார்ந்திருக்கும் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் சொன்னது மறுபடி யோசித்தாள் வெட்கப் பட்டாள். வேறு பக்கம் பார்த்தாள்.

"ஏன், ஐயர் பையன் வேணாம்னு தோணுதா? நம்ம வீட்டு மீன் குழம்பு, மிளகு ரசமும் இவனுக்குச் சரிப்படாதுன்னு நினைக்கிறியா...?"

"நான் எதுவுமே. நினைக்கலை. காசி."

"நினையேன்."

"உங்களுக்கு இஷ்டம்படுதா மனசு எம்பேர்ல."

"யெஸ்."

"இப்பதான் காசி நான் இங்கிலீஷ் படிக்கவே ஆரம்பிச்சிருக்கேன்."

"ச்சீய்."

"நான் நெறைய கத்துக்கணும் காசி."

"எல்லாம் தெரியும்கிற பொம்பளைய விடக் கத்துக் கணும்னு நினைக்கறவ எனக்கு உசத்தி."

"எங்க வீடு கத்தும் காசி."

"வேலைக்குப் போக, காலேஜ் போக, மொபெட் கத்துக்க எல்லாத்துக்கும் கத்துச்சு, இதுக்கும் கத்துப் அவ்வளவுதானே?"

"உங்களை... உங்களை... கட்டிக்கிட்ட பிறகு நான் காலேஜ் போலாமா? கதை எழுதலாமா...? எதுக்குன்னு கேட்க மாட்டீங்களே."

காசி வியப்புடன்? நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"இப்படி நீ பறக்கறது பார்த்துட்டுத்தான் எனக்கு உன் மேல ஆசையே வந்தது செல்வி."

"இல்லப்பா... பின்னால ... எல்லார் மாதிரியும்."

"காதல் என்பது மதித்தல். பரஸ்பரம் விட்டுக் கொடுத்தல். புடிச்சதில்லையா?"

"அவரு ரைட்டிங் கேட்க நல்லா இருக்கும் காசி, நெஜத்துல..."

"நெஜத்துலயும் முடியும். சாவற வரைக்கும் உன்னைக் காதலிக்க முடியும். அவரு புஸ்தகத்துலதான் இதைக் கத்துக்கிட்டேன்.

"செல்வி முகம் தாங்கி யோசித்தாள், மெல்ல மேஜை மீது சரிந்து கவிழ்ந்து படுத்துக் கொண்டாள்.

"என்ன செல்வி?"

"வண்டி நீ ஓட்டுங்கப்பா. நான் பின்னால உட்கார்ந்து வரேன்."

"நத்திங் டூயிங்? நீதான் வண்டி ஓட்டற மவுண்ட் ரோட்ல, டவுன்ல, எல்லா இடத்துலயும் நான் பின்னால உட்கார்ந்து வரேன்."

செல்வி அவன் கைகளை எடுத்து முத்தமிட்டாள். கன்னத்தில் பொத்திக் கொண்டாள்.

"நிறைய பெண்களுக்கு இதெல்லாம் செய்யணும் ஆசை இருக்கும். ஆனா எனக்குத்தான் கிடைச்சுது. நான் ரொம்ப லக்கி இல்லை?"

"நீ ஆசைப்பட்டதோட நிக்கலியே செல்வி."

"பிறகு?"

"போராடினே விழுந்து வாரி எழுந்து நிக்கறே."

"இல்லப்பா சொல்லித் தரேன்னு எந்த ஆம்பளை வராங்க இந்தக் காலத்துல."

"நிறைய பேர் இருக்காங்க வெளியே தெரியலை. தெரியற அளவு பிடிபடலை."

"இன்னி நிலைமை மாறும்னு நினைக்கறீங்களா?"

"நிச்சயம்?"

"சந்தோஷமா இருக்குப்பா." செல்வி மறுபடி அவன் கையைக் கன்னத்தில் பொத்திக் கொண்டாள்.

வீட்டு வாசலுக்கு வந்து ஹார்ன் அடித்ததும் அண்ணி தான் முதலில் எட்டிப் பார்த்தாள். வாங்கிட்டியா?" என்றாள். அவள் பேசும் குரல் கேட்டு சின்னண்ணன் வெளியே வர, பெரியவரும் வாசலுக்கு வந்தார்.

"என்ன தாயி. ஓட்டக் கத்துக்கிட்டியா?"

"ம்ம்... பார்க்கறீங்களா?"

கிளட்ச் அழுத்தி முதல் கியருக்கு மாற்றி. தளர விட்டு ஆக்ஸிலேட்டர் கொடுக்க, மந்தைவெளி மாட்டு சந்து வியப்புடன் பார்த்தது, 'திருநா தங்கச்சி, திருநா தங்கச்சி" என்று பேசியது. இரண்டு சுற்று முடித்து வீட்டு வாசலுக்கு வந்து ஸ்டாண்ட் போட்டாள்.

அண்ணே... இந்த இடம் இடிச்சு வண்டி ஏத்த வாட்டமா..."

"ஆமா, நீ வண்டி ஓட்டறதுக்கு வீட்டு வாசக்கால இடிக்கணுமா, நல்லா இருக்கே." அண்ணி அதட்டினாள்."

"அப்படிச் செய்யறதுதான் இரண்டு மூணு வீடுங்கள்ள பாத்துருக்கேன்."

"கொண்டாந்து அதை நடுவூட்ல வச்சுக் குளிப்பாட்டு." அண்ணி அலுத்துக் கொண்டாள்."

இரண்டு அண்ணன்களும் ஆளுக்கொரு பக்கமாய்த் தூக்க, வண்டி நடுஹாலுக்கு வந்தது. சின்னண்ணன் ஏறி உட்கார்ந்து பார்த்தான். பெரியவர் சுவிட்சு இரண்டு மூன்று முறை போட்டுப் பார்த்தார். "ஹார்ன் அடிக்கலையே." ஓடற போது அடிக்குமா?" கேட்டார் அண்ணி பொருமலை வீடு சட்டை செய்யவேயில்லை.

32

"உனக்கு புஸ்தகம் வந்திருக்கு செல்வி. போஸ்ட் மேன் நாயுடு கொண்டாந்தாரு. நீதான் கையெழுத்துப் போடணுமாம். கட்டு பெரிசா இருக்கிறதால கொடுத் துட்டுப் போய்ட்டாரு. நாளைக்கு உன்னை போஸ்டாபீஸ் வரச் சொன்னாரு. கையெழுத்துப் போட..."

செல்வி எப்படிப் போய் எப்படித் திரும்புவது என்கிற ரூட் யோசித்தாள். சாப்பிட்டு விட்டு வண்டி துடைத்தாள். வண்டிக்கு அருகே படுக்கை விரித்துப் படுத்துக் கொண் டாள்.

படுக்கையில் படுத்துக் கொண்டே ஆசையோடு வண்டி யைத் தொட்டாள்.

யம்மா... நானும் வண்டி வாங்குவேனா? தெருவுல விடுவேனா? காசின்னு இன்னொரு ஆம்பளைய முதுகுப் பக்கம் ஏத்திக்கிட்டுப் போய்...

அம்மா... அவன் நல்லவன். இடுப்புத் தொடாத, மார் தொடாத வண்டி கத்துக் கொடுத்தான். இரண்டு தரம் தப்பா தொட்டிருந்தா வண்டியும் வேணாம். ஒண்ணும் வேணாம்னு முடிவு பண்ணியிருப்பேன். எதைப் பார்த்து நானும் உன் பின்னால வரேன்னு சொல்லியிருப்பான்? விலகின புடவை பார்த்தா...? வேளாளப் பொண்ணு செம கட்டைன்னு நினைச்சா.''

ஆம்பளைங்க கெட்டவங்களா, நல்லவங்களா... இரண்டும்தான். இரண்டையும் ஏத்துக்க வேண்டியதுதான்.

திட்டற அண்ணன் வேலைக்குப் போன்னு அனுப்பிச்சுது. பெருமாளு தலைல குட்டினாக்கூட வேலை பார்த்துப் பாராட்டினாரு. வைத்தி ஐயரு பொடி வச்சு வாரினாரு, ஆனா காலேஜ் போன்னாரு- எவனோ ஒரு கடங்காரன் ஹோட்டலுக்கு வாடின்னான். இல்லைன்னா மொபட் ஆசை தேவையிருக்குமா? சின்னண்ணன் வண்டி உன்னால ஓட்ட முடியாதுன்னு சொல்லிட்டு செக் கொடுத்தது. கடவுளே... இந்தக் காசி ஓட்டக் கத்துக் கொடுத்தான். நல்லபடிக்கு. ஆனா இன்னி தேதி வரைக்கும் அண்ணி எனக்கு சரிபட்டு வரலை. 'ச்சீ போடி'ன்னு உதறிட்டுப் போலையா? பொம்பளைக்கு பொம்பளை உதவியா இல்லியே, ஆம்பளையாவது எப்பனா உதவி பண்றான். எந்தப் பொம்பளை இன்னொரு பொம்பளைக்கு மனசார உதவி பண்ணியிருக்கு. அல்பம்... பென்சில் ரப்பருக்கு கிரிஜா என்ன சூழ்ச்சி செஞ்சது? பொம்பளையா அது. அழுது புரண்டு ஆம்பளைய ஏமாத்திடலாம். பொம்பளைய? அழுதா... சிரிப்புப் பொத்துக்கிட்டு வரும். அதுங்களுக்கு.

காலேஜ் புஸ்தகம் எடுத்துப் பார்ப்பமா? செல்வி விளக்கு போட்டு புஸ்தகங்களைப் பிரித்துப் பார்த்தாள். பதினாலு பேப்பர் எழுதணும். தினம் படிக்கணும்.

ஞாயித்துக்கிழமை கூட காலேஜ் போகணும். முடியுமா என்னால காசி பின்னால வரேன்னுது. காசியோட சுத்த முடியுமா, இத்தினி பாடம் வச்சுக்கிட்டு, கைய எடுத்து கண்ணத்துல வச்சுக்கிட்டேனே... முடியாது காசி... வுட்டுறுன்னு சொல்லிடலாமா, லவ்வுல மாட்டிக்கறது அவஸ்யம்தானா.

ஆனா நல்லா இருக்கு. மனசுக்குப் புடிச்ச ஆளோட பீச்சுல சுத்தறது சுகமா இருக்கு.

"உன் படிப்பு பார்த்துட்டு கல்யாணம் பண்ணவன் உன் சமையலைப் பார்த்துட்டு அடிச்சுத் துரத்திடுவான். வண்ணமா தின்னத் தெரிஞ்சவன் வந்து வாச்சா அடி பட்டே செத்துருவே நீ" அண்ணி மிரட்டுவாள்.

"அடிபட்டுச் சாவேனா, மாட்டேன். போடா மயி ருன்னு கிளம்பி வந்துடுவேன். காசி சோறு சரியில்லைன்னு கத்துமா, கை நீட்டுமா. இன்னிக்குப் பார்க்கற காசி வேற, நாளைக்குப் பார்க்கிற காசி வேறயோ பேசணும்... பேசிப் புரிஞ்சுக்கணும். தோழா, காலேஜ் முடிகற வரைக்கும் கல்யாணம் பத்திப் பேசாதேன்னு சொல்லிடணும். நாலு வருஷம். இன்னும் நாலு வருஷம்."

காலேஜ் முடிக்கறதுக்குள்ளார பத்து சிறுகதையாவது எழுதணும், ஒரு கூடை ரிப்போர்டிங் செய்யணும். போட்டோ காமிரா கத்துக்கணும். அடுத்த தடவை அண்ணனைக் காமிரா வாங்கிட்டு வரச் சொல்லணும்.

ஐயோ... கனவு, கனவு, கனவு பலிக்குமா? இரண்டு கனவு பலிச்சிருச்சே. மிச்சம் பலிக்காதா? கதை எழுதக் கத்துக்க முடியாதா... காலைல போய் அந்த ரைட்டரைப் பார்த்தா என்ன... காசி கூப்பிட்டுச்சு... வேணாம்னுட் டேன். காசி இல்லாத போனா என்ன? போய்... என்ன

பேசறது? கதை எழுதறது எப்படின்னா... பேசிப் புரிஞ்சுக்க முடியுமா? ட்ரை பண்ணலாம். போய்க் கேட்டுக்கலாம்.

"வா... செல்விதானே உன் பேர்?" அந்தப் பெண்மணி வெள்ளைப் பல் வரிசை தெரியச் சிரித்தாள், வரவேற்றாள்.

"அவரு இல்லைங்களா?"

"வரணும், நாளைக்கோ நாளைன்னிக்கோ, கோபிச் செட்டிப்பாளையம் போயிருக்காரு. என்ன விஷயம்?"

"அண்ணன் மிடில் ஈஸ்ட்லேர்ந்து வந்தாரு."

"அட, சார்லீ வாங்கணும்னு சொல்லிகிட்டே இருந்தாரு. சென்ட் அவருக்கு ரொம்பப் புடிச்ச விஷயம். இது என்ன?"

"மொபட் சாவி நேத்து வாங்கினேன்."

"எனக்கும் கத்துக்கணும் செல்வி."

"நான் கத்துத் தரேங்க ரொம்ப ஈஸி. பதிலுக்கு எனக்கு ஒண்ணு கத்துக்கணும்."

"என்ன?"

"அவர்கிட்ட கதை எழுதக் கத்துக்கணும்."

"அவர் எதுக்கு? நான் சொல்லித் தரேன். நான் எழுதற தில்லை. எப்படி எழுதணும்னு தெரியும். முதல்ல ரிப்போர் டிங் பண்ணு செல்வி. பத்திரிகைல நுழைய அது ஈஸி மெத்தட். ரிப்போர்ட்டிங்கை கதை மாதிரி செய். எதை ரிப்போர்ட் பண்றது? சாதாரண ஜனங்களுக்கு எது தெரி யாதோ, அதைச் சொல்லு. உதாரணமா எங்க வீட்டுக்கு நேர் பின்னாடி ஒரு வீட்ல புறா வளர்க்கறாங்க. பள்ளிக் கூடம் போறபோது நானும் சூர்யாவும் இரண்டு நிமிஷம் நின்னு பார்ப்போம். எங்க வீட்டு மாடியிலகூட சில சமயம் வந்து உட்காரும்."

"தெரியும். அத வச்சு கதை கூட எழுதினாரு."

"ஆமா. போய் அந்தப் புறா வளர்க்கறவறப் பாரு. பேசு. எழுது."

"போவாமா?"

"இப்பயா... நான் கூடவா? இரண்டு தெரு சுத்திப் போகணும்."

"வாங்களேன். வண்டில போய்டலாம்."

"வீடு பூட்டிக்கொண்டு கீழே இறங்கினார்கள் வண்டியில் பின் தெருவுக்குப் போனார்கள்.

"எதுக்கு புறா வளர்க்கறீங்க?"

"புடிக்கும்... வளர்க்கறேன். மனுஷாள் வெறுத்துப் போச்சு எனக்கு. புறாவோட உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கேன். அது தவிர, பந்தயத்துக்கு வருஷா வருஷம் புறா வுடுவோம். நாலு வருஷமா நான்தான் பர்ஸ்ட்."

"எல்லாமே பந்தயத்துக்கான புறாவா?"

"இல்லீங்க. மேல் கூட்டில இருக்கே அதான்." அலமாரி மாதிரி இருந்த மரப்பெட்டியின் மேல் வலைக் கதவு திறந்து வெள்ளையாய் ஒரு புறா எடுத்தார்.

புறா பதட்டமாய் நாலு புறமும் பார்த்துக் கொண்டிருந்தது.

"எப்படிப் பழக்குவீங்க பந்தயத்துக்கு?"

"புடிச்சு உள்ளாற போட்டுறுவோம். இளமையா இருக்க சொல்லவே. நல்ல தீனி காட்டுவோம். நாலு நாள், அஞ்சுநாள் பறக்க விடமாட்டோம். மற்ற புறா வெல்லாம் பறந்துக்கிட்டு இருக்க சொல்ல, இதுமட்டும் கூட்டில் அடைஞ்சு பறக்கிற புறாவைப் பார்த்துக்கிட்டு இருக்கும். பறக்கணும், பறக்கணும் இறக்கையை உதறிக்கிட்டு இருக்கும். அஞ்சா நா, இல்ல ஆறா நா எடுத்துப் பறக்க வுடுவோம். பொழுது அடையற முட்டும் கீழ இறங்காது.

அஞ்சு நாள் ஆத்திரமும் காட்டிப் பறந்துகிட்டே இருக்கும். எது கடைசியா இறங்குதோ அதுதான் ஜெயிச்ச புறா.''

''இது எப்ப அடைச்சீங்க? அந்தப் பெண்மணி கேட்டாள்.

''இன்னியோட அஞ்சு நாள் ஆச்சு.''

''நாளைக்கு விடுவேன்.''

''இப்ப விடுங்களேன். துடிக்குதே.''

''கொஞ்சம் யோசனை பண்ணணும்.''

''எதுக்கு?''

''சில சமயம் புறா இறங்கினாலும் இறங்கும், இறங்காத எங்கனா போய்ட்டாலும் போய்டும். இது குமுறது பார்த்தா போயிடும் போலத் தோணுது.''

''அப்ப விடவே மாட்டீங்களா...''

''விடாத இருந்தா செத்துரும். இருங்க, தண்ணி காட்டிட்டு விட்டுடறேன்.'' அப்படியே பிடித்து தண்ணீர் தட்டுடன் எடுத்துப் போனார். புறா அலகு சரித்து நீர் குடித்தது. கடலைகள் காட்டினார் கொத்தித் தின்றது.

''இந்தாங்க, நீங்களே விடுங்க'' செல்வியிடம் புறா கொடுக்கப்பட்டது.

செல்வி சந்தோஷமாய் ரைட்டர் மனைவியைப் பார்த்தாள்.

ரைட்டர் மனைவி அதன் முதுகு நீவினாள்.

''ஏய்... போ. அப்படியே போய்விடு.''

செல்விக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள்.

புறாவைத் தூக்கி செல்விவிட, சடசடவென்று எகிறி கூரையில் போயிற்று.

''பறக்கலையே?''

"பறக்கும், பறக்கும்."

புறா அலகால் சிறகுகள் நீவிக்கொண்டது. சடசட வென்று சிறகுகள் அடித்துக் கொண்டது. மெல்ல அசைந்து நடந்து கூரை விளிம்புக்குப் போயிற்று. தடதடவென சிறகடித்துப் பறந்தது. சுற்றிச் சுற்றிஉயரம் கூட்டியது. தலையைத் திருப்பிக் கீழே பார்த்தது. பாதை மாற்றி எங்கோ போயிற்று.

அந்த ஆள் வாய் குவித்து விசில் அடித்தான், ரூட் மாறி டுச்சே என்று கவலைப்பட்டான்.

"வருவாங்களா?"

"தெரியலீங்க. வந்தாலும் வரும், வராட்டாலும் இல்லைங்க."

"நாளைக்கு வந்து உங்களைப் போட்டோ எடுத்துக் கட்டுமா?"

"சரிங்க."

"வீடு திரும்பினார்கள்.

வாசலில் காத்திருந்தான்.

"அட, என்று செல்வி பார்த்து அதிசயப்பட்டாள்."

"என்ன இவ்வளவு காலைல?"

"அந்தப் பெண்மணி வெங்கலப்பானை பரண்லேர்ந்து எடுத்து கொடுக்கணும்னாங்க... அதுக்கு செல்வி இடக்காய் கேலி செய்தாள்.

"ஏய்... காசி செல்வியை மிரட்டினான்.

"காசிய கேலி பண்ணாத செல்வி. கதை படிக்க வந்த பிள்ளைதான். என்னவோ வீட்டோட ஒட்டிடுச்சு. அவர்கிட்ட பேசறது கம்மி. என்கிட்டதான் சின்னம்மா சின்னம்மானு பேசிகிட்டு இருக்கும்."

''நான்கூட ஓடிடுவேன்'' செல்வி அவள் கரம் பற்றினாள்.

''செய்யேன். யார் வேணாம்னது. அன்புன்னு ஒரு விஷயம் வந்துடுச்சு. உண்மையா அது? எழுத்துல உண்மையா அது? எழுத்துல மட்டும் இருக்குமா? எல்லாத்துலயும் பரவும். பேச்சுல, செய்கைல எல்லார் கிட்டயும் பரவும் மத்தவங்களோட எப்ப அன்பா இருக்க முடியும்? நாம ஆரோக்கியமா இருந்தா... நாம சந்தோஷம் இருந்தா... அதனால...''

''முதல்ல நம்மை நாம நேசிக்கணும்'' காசி முடித்தான்.

''கரெக்ட். அவரு மறுபடி மறுபடி எழுதறது அதுதான்.''

''ஆரோக்கியமா இருக்க விடமாட்டேங்கறாங்களே, போட்டு அடைச்சிடறாங்களே...''

''போ செல்வி. உதறிட்டுப் பற. அடைச்சு வச்ச ஆத்திரத்தைப் பறக்கறதுல தீர்த்துக்க.''

''எவ்வளவு நேரங்க பறக்க முடியும்?'' காசி மடக்கினான்.

முடிஞ்ச அளவு. அப்புறம் கீழ இறங்கி வந்தே ஆகணும். இறங்கி வந்து 'அப்பா, பத்துமணி நேரம் பறந்தோம்'ன்னு சந்தோஷம் அடையலாம். பறந்தபடியே இருந்துட்டா... பறக்கறதைப் பார்த்து ஆசைப்பட்டுக்கிட்டே இருந்துட்டா... நோயாளியாயிடுவே.''

''புறாக்கு இறக்கை கொடுத்திருக்கிறது பறக்கிறதுக்கு. உனக்குப் புத்தி கொடுத்திருக்கிறது உழைக்கிறதுக்கு. வெறும் நெல்லு பானையைச் சுத்திக்கிட்டு இருக்காதே, சாப்பிட்டு சாப்பிட்டுத் தூங்காதே, பற, பற மேலே மேலே...''

"ரைட்டரு மேல மேல பறக்கறதுக்குக் காரணம் நீங்க தானே..."

"இல்லை செல்வி. நானும் அவரோட சேர்ந்து பறக் கிறேன். இன்னும் பறந்து உசுப்பு விடறேன், உண்மையா... பறக்கறதுக்கு நான் அவர்கிட்ட கத்துக் கிட்டேன்."

"கத்துக் கொடுக்கற ஆம்பளை அதிகமாயிட்டா பொம்பளைக்கு சௌகர்யம் இல்லை?"

"பெரிய சுகம் அது. நிறைய பேர் தயாராயிட்டாங்க. பொம்பளைக்கு உலகம் சொல்லித் தர நிறைய ஆம்பளைங்க முன் வந்துட்டாங்க..."

"காசி எனக்கு மொபட் கத்துக் கொடுத்தாருங்க."

"இன்னும் நிறைய சொல்லிக் கொடு காசி. உலகம் சொல்லிக் கொடு, செல்விக்கு, உனக்குத் தெரிஞ்சதை யெல்லாம் சொல்லிக் கொடு."

"அதாங்க. ஒரு சின்ன அக்ரிமெண்ட் போட்டுக்க லாம்னேன், சரியா பதில் சொல்லலை."

"என்ன?" அந்தப் பெண்மணி திகைத்தான்.

"லவ்வுன்ற மாதிரி சொல்றாங்க."

"ம்ம்..." யோசித்தாள். 'தப்பில்லையே' என்றாள்.

"லவ்வுன்னு செய்துட்டுப் பறக்க முடியுமா?"

"பறக்கறதுக்குத்தான் லவ்."

"நான் அதான் சொன்னேன். நீ மொபட் ஓட்டு நான் பின்னால உட்கார்ந்துட்டு வரேன்னு சொன்னேன். ஆடிப் போச்சு. நீ ஓட்டுப்பா... நான் பின்னால உட்கார்ந்துக் கறேன்னு ஜகா வாங்குது."

"ஆயிரம் வருஷத்துப் பழக்கம் சட்டுன்னு ஒழியுமா காசி. என்னை எழுது எழுதுன்னாரு, எழுத முடியலையே. அவரு எழுதறதுக்கு உதவி பண்றதே பெரிசா போச்சு."

"அப்ப, என்னை மட்டும் முன்னால போன்னு தள்றது நியாயமா?" செல்வி சிணுங்கினாள்.

"நான் போன தலைமுறை கூட நடக்கறேன். எனக்கு முந்தின தலைமுறைப் பொம்பளை ஆம்பளை பின்னால நடந்தா அடுத்த தலைமுறை... முன்னால போ, செல்வி."

"தனியாவா?"

"அவன் பின்னால வருவான். உனக்குத் துணையா உதவியா."

"நிச்சயம்தானா? செல்வி சந்தேகத்துடன் கேட்டாள்.

"ட்ரை..." அந்தப் பெண்மணி பதில்சொன்னாள்.

"நான் கிளம்பறேங்க, ஆபீஸுக்கு டைம் ஆச்சு." செல்வி துள்ளி எழுந்தாள். "நீங்க?" என்று காசியிடம் கேட்டாள்.

"எனக்கு வண்டி இருக்கு. நீ முன்னால போ, நான் பின்னாலேயே ஃபாலோ பண்றேன். மவுண்ட் ரோடு கொஞ்சம் கஷ்டம். நின்னு நின்னு போகணும். கிளம்பு. வரேம்மா."

விடை பெற்றுக் கிளம்பினார்கள். அந்தப் பெண்மணி வாசல் வரை வந்தாள்.

"செல்வி, புறா பத்தி எழுதறதைக் காமிக்கறியா?"

"நாளைக்கு வந்து காட்றேன் மேடம், மத்தியானம் லஞ்சுல எழுதிடுவேன்."

"என்ன தலைப்பு."

"பந்தயப் புறா..." செல்வி வண்டியை மெல்ல நகர்த்திக் கூவினாள். காசி அவளைப் பின் தொடர்ந்தான்.

மேலே சிறு புள்ளியாய் அந்தப் புறா வட்டமடித்துக் கொண்டிருந்தது.

மின்னூல் ஆக்கம்: தமிழ்வாசகன்



மின்னூல் ஆக்கம்: தமிழ்வாசகன்

பறவையியல்

விசா பங்கிகேகவுர்கர்
பாலசுப்ரமணியன்